TNLA Debates

~~II~~ II. NO. 2 of 3

1980

V2N.A1 N80
N81.2.2&3

3/9/80

வெளியீடு 8-10-1980]

[Issued 8-10-1980

1486

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணிமுறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1980 ஜூலை 4—தொகுதி II—எண் 2

Friday 4th July 1980—Volume II—No. 2

©

தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU

1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009

Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்]

[Price 3-15 Paise

123076

## உள்ளடக்கம்

4—7—1980


| | பக்கங்கள் |
|---|---|
| 1. விளாக்கள்—விடைகள். | |
| உடுக்குறியிட்ட விளாக்கள் | 133—137 |
| 2. அறிவிப்புகள். | |
| (அ) உரிமை மீறல் பிரச்சினை | 138 |
| (ஆ) மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான நடைமுறை. | 139—149 |
| (இ) விளாக்களுக்கான விடைகளை பதினைந்து நாட்களுக்குள் துறைகள் அனுப்ப வேண்டுதல். | 149—154 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம். | |
| தமிழக பாலிடெக்னிக்குகளில் உள்ள இட நெருக்கடி | 138—143 |
| 4. தகவல் கோரல். | |
| (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பை எடுத்துக் கொள்ளுதல். | 143—144 |
| (ஆ) புறக்கூடத்தில் (Lobby) தண்ணீர் வசதி | 154 |
| 5 கவன ஈர்ப்புகள். | |
| (அ) கரூர் நகரில் உள்ள கோட்டையம்மன் தெரு தீ விபத்து. | 145 |
| (ஆ) பெரியார் அணையை பலப்படுத்தல் | 146—147 |
| 6. அரசினர் சட்ட முன்வடிவு. | |
| இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1980. | 154 |

7. 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம்—பொது விவாதம்—(தொடர்ச்சி). 155—245

திரு. துரைமுருகன். 155—170

திரு. வி. வி. சுவாமிநாதன். 171—182

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. 182—192

திரு. என். எஸ். வி. சித்தன். 189

திரு. ஜி. கே. சுப்பிரமணியன். 192—196

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். 196—202

திரு. க. இரா. சின்னராசு. 202—207

திரு. மு. அம்பிகாபதி. 208—213

திரு. இரா. சா. முனிரத்தினம். 213—217

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். 217—219

திரு. ஆ. வெள்ளைச்சாமி. 219—223

திரு. கெ. சொக்கலிங்கம். 223—227

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான். 227—231

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 229

திரு. பி. கந்தசாமி. 231—235

திரு. து. புருஷோத்தமன். 236—242

திரு. கு. அ. செங்கோட்டையன். 242—245

8. அறிக்கை அளித்தல்.

(அ) மின்வெடியினைத் தளர்த்தல். 170—171

(ஆ) தீ விபத்தினால் பாதிக்கப்பெற்ற குடிசைகளுக்கு நிவாரணம். 235—236

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 245—247

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

வெள்ளிக்கிழமை, 1980 ஜூலை 4

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

ஒருவர் ஒரு சொல்லைச் சொல்லும்போது மற்றவர்கள் அச்சொல்லை மறுத்துச் சொல்லாத வண்ணம் நன்கு சிந்தித்துப் பார்த்தே சொல்லுதல் வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Nagore hospital building.*

* S.N. Q. No. 3—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) Whether the construction of a building for a 25 bedded hospital in Nagore has been completed;

(*b*) if not, when it will be completed; and

(*c*) when it will be opened

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:**

(அ) இறுதி கட்ட வேலைகளான வெள்ளையடித்தல், வண்ணம் தீட்டுதல், மின் இணைப்பு கொடுத்தல் போன்ற பணிகள் நீங்கலாக கட்டிட வேலைகள் அனைத்தும் முடிவுற்றன.

(ஆ) & (இ) கட்டிடம் அனைத்து வகையிலும் அநேகமாக ஆகஸ்ட் மாத முடிவுக்குள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும்.

**திரு. ஆர். உமாநாத் :** தலைவரவர்களே, இந்த ஆஸ்பிட்டலினுடைய staff strength, estimate, recurring, non-recurring expenditure மற்றும் அதிலே என்னென்ன ஸ்பெசிலிட்டீஸ் கிடைக்கும் என்பதைப் பற்றிய விவரங்கள் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நாகூர் மருந்தகம், கீழ்க்கண்ட பணியாளர்களைக் கொண்டு இயங்குகிறது:

1. உதவி அறுவை மருத்துவர்—1
2. பெண் செவிலியர் உதவியாளர்—1
3. ஆண் செவிலியர் உதவியாளர்—1
4. மருந்தாளுநர்—1
5. துப்புரவுப் பணியாளர்—1

இத்தனை பேர்கள் கொண்ட ஆஸ்பத்திரி, ஏற்கனவே, முனிசிபாலிட்டி உதவி யுடன் நடந்து வருகிறது. அதை விரிவுப்படுத்துகின்ற நேரத்திலே இப்பொழுது இருக்கக்கூடிய சௌகரியத்தைவிட இரண்டு மூன்று மடங்கு அதிகம் எல்லா வகையான சௌகரியங்களும் ஏற்படக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆஸ்பத்திரி பணிகளைப் பற்றி சொல்கிறபொழுது, ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அநேகமாக முடிக்கப்படும் என்று கூறுகிறார். நாகூர் ஏரியாவிலே ஆஸ்பிட்டல் என்று சொல்கிறபொழுது, விசேஷமாக, ஏராளமான முஸ்லிம் பெண்களும் மீனவர்களும் இருக்கக்கூடிய பகுதி என்பதை கணக்கில் கொள்ளவேண்டும். முந்தைய அரசாங்கங்கள் எங்களுடைய வேண்டுகோளை அலட்சியப்படுத்திய நேரத்திலே, எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நம்முடைய இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் பிரத்தியேகமாக கவனம் செலுத்தி, விசேஷ அனுமதி வழங்கி, இதற்குப் பல்வேறு இடைஞ்சல்கள் வந்தும்கூட அந்த இடைஞ்சல்களை நீக்கிக் கொண்டு வந்திருக்கக்கூடிய கட்டிடமாக அது இருப்ப தால். அந்தக் கட்டிடத்தை—ஆஸ்பத்திரியை, வெகு விரைவிலே திறந்து வைக்க வேண்டும், முதலமைச்சர் திறந்து வைக்க வேண்டுமென்று அந்த பகுதி மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, முதலமைச்சரிடம் தேதி நிர்ண யிக்கவேண்டுமென்றால், நிச்சயமாக அமைச்சரவர்கள் கூறினால்தான் முடியும். ஆகவே, ஆகஸ்ட் மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று ஆரம்பிக்கப்படுமா ? நிச்சயமாக ஆகஸ்ட் மாத இறுதியிலே அது 'ரெடி' யாகுமா, அதாவது, ஸ்டாஃப் உட்பட அல்லது, இன்னும் கொஞ்சம் முன்பே படும் என்று ஏதாவது அஷ்யூரன்ஸ் தருவார்களா ? இந்த வாரத்திலே அல்லது சொன்னால், ஸ்டாஃப் அப்பாய்ண்மெண்ட், எக்குவிப்மெண்ட் எல்லாம் வைத்து ஆரம்பிக்கப்படுமா ? நிச்சயமாக ஆகஸ்ட் மாத இறுதியிலே அது 'ரெடி' யாகுமா, அதாவது, ஸ்டாஃப் உட்பட. அல்லது , இன்னும் கொஞ்சம் முன்பே ஜூலை மாத முடிவிற்குள் அல்லது ஆகஸ்ட் மாத ஆரம்பத்திற்குள் ஆரம்பிக்கப்'



படும் என்று ஏதாவது அஷ்யூரன்ஸ் தருவார்களா? இந்த வாரத்திலே அல்லது இந்த மாதக் கடைசியிலே ஆரம்பிக்கப்படும் என்ற வகையில் நிச்சயமாகச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவரவர்களே, இப்பொருளின் முக்கியத்துவத்தை அறிந்துதான் இதைக் குறுகிய கால வினா வாக, ஏற்று விடையளிக்க ஒத்துக்கொண்டிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு வருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அது, நிச்சய மாக நிறைவேற்றப்பெறும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மன நிறைவு தரக்கூடிய பதிலாக இருக்கும் என்று கருதுகிறேன். எல்லா வகையிலேயும், எவ்வளவு துரிதமாக இந்த ஆஸ்பத்திரியைத் திறக்க ஏற்பாடு செய்யவேண்டுமோ, அவ்வளவு துரிதமாக, காலதாமதம் இல்லாமல் செய்வோம்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினரும், நானும், இரண்டு பேரும் சேர்ந்து, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே கேட்டுக் கொள்வோமானால், நிச்சயமாக ஒரு தேதி கிடைக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூரில் மருத்துவமனை ஆகஸ்டு மாதத்தில் திறக்கப்படுமா என்று மாண்பு மிகு திரு. உமாநாத் கேட்டதற்குக் காரணம், முதலமைச்சர் அவர்கள் வருகிற காரணத்தினாலாவது அந்த இலாகா தீவிரமாக வேலை செய்யுமா என்று கேட்டார். அதைப்போல பல்வேறு இடங்களில் சுணக்கம் ஏற்படுகிறது உதாரணமாக மன்னார்குடி மருத்துவமனையிலே உள்ள ராக்கட் மோட்டார் வேலை செய்யவில்லை, அதனால் தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி, நாகூர் மருத்துவமனை திறப்பதற்கு உறுதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்திலே கேட்டது வேறு கேள்வியாக இருந் தாலும், முடிக்கிறபோது திரு. உமாநாத் அவர்கள் கேள்வியில் முடித்திருக்கி றார்கள். அதற்காக நன்றி. ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள் கிறேன், மற்ற ஆஸ்பத்திரிகள் மாதிரி on a par என்பதல்ல. out of public என்கிற முறையில் அங்கே இருக்கக் contribution of Rs. 5 lakhs.

கூடிய பொதுமக்கள் 5 லட்சம் ரூபாய்களை திரட்டி ஏற்பாடு செய்திருந்தா கள். ஆண்டவர் மகப்பேறு மருத்துவ மனை அட்வைசரி கமிட்டி என் ஆரம்பித்து அவர்களும் கொஞ்சம் பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள் பொது மக்கள் அனைவரும் சேர்ந்து திரட்டிய அந்த நிதி நமக்குத் தரப்பட டிருக்கிறது. ஆகவே அதிலே மிகத் துரிதமாக செயல்படும் வகையில் எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, நாகூர் என்பது முஸ்லிம்கள் அதிகம் வாழ்கிற பகுதியாகும். கோஷா பெண்களும் அதிகமான அளவில் வாழ்கின்ற பகுதியாகும். எனவே அவசியம் அங்கே ஒரு பெண் டாக்டர் நியமிக்கப்படுவாரா என்பது என் கேள்வி. அந்த மருத்துவமனை யிலே எக்ஸ்ரே வசதி இருக்குமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பெண் டாக்டர்களைப் பொறுத்தவரையில் நிச்சயமாக நியமிக்கப்படுவார்கள், அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எக்ஸ்ரே வசதியைப் பொறுத்த வரையில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கலந்து கொள்வதால், நாகூர் மருத்துவமனை ஆகஸ்ட் மாதம் நிச்சயமாகத் திறக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். முதலமைச்சர் மற்றும் அமைச்சர் யாரும் கலந்து கொள்ளாவிட்டாலும் மருத்துவமனைகளில் நடைபெறும் வேலைகளை இன்னும் முனைப்பாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எல்லா அதிகாரிகளுக்கும் சொல்லி இருக்கிறேன். இப்போதும் சொல்லுகிறேன். நானோ, மற்ற அமைச்சர்களோ வருவதற்காக எந்த வேலையும் காத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. கட்டிடம் கட்டி முடிந்த உடனே வேலைகள் துவங்குவதற்கான எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். எனவே. அமைச்சர்கள் வருவதற்காக எந்தப் பணியும் காத்திருக்கத் தேவையில்லை என்பதைத் தெரி வித்திருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனையை நாகூரில் திறப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே அங்கு எத்தனைப் படுக்கைகள் இருந்தன? இது போன்று மற்ற மாவட்டங்களில் நிலை என்ன என்பதற்கு அமைச்சர் கையில் பதில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கு மருத்துவ மனை இல்லை. முனிசிபாலிடியின் உதவியில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே அந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நான் திரு. உமாநாத் கேள்வியை ஒட்டிக் கேட்கவில்லை. நான் கேட்கிற விஷயம் என்னவென்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வியை ஒட்டியதாக இருந் தால் கேட்கலாம். அதை விட்டு வேறு கேள்வி கேட்க ஆரம்பிப்பது சரியாக இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களைப் பற்றிக் கேட்பது மரபு அல்ல. அதைப் பற்றித்தான் சொன்னேன். இங்கே வினா. விடைகள் என்று நிகழ்ச்சி நிரலில் இருக்கிறது. குறுகிய கால வினா தவிர வேறு எந்த வினாவும் பேரவைக்கு வரவில்லை. அதை ஏற்கெனவே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். துறைக்கு கேள்விகள் 20, 25 நாட்களுக்கு முன்பே அனுப்பப் பெற்றிருக்கின்றன. நான்கூட அனுப்பி யிருக்கிறேன். அவற்றுக்கு எல்லாம் 41 நாட்கள் கழித்துத்தான் பதில் வருமா ? முன்கூட்டியே பதிலைப் பெறுவதற்கான ஏற்பாடு செய்யக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றிய அறிவிப்பு கொஞ்ச நேரத்தில் வரும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 9-10)

## 2. அறிவிப்புகள்.

### உரிமை மீறல் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் கே. சௌரிராஜன் அவர்க பேரவையின் 246 விதியின்கீழ் அவை உரிமை மீறல் பற்றிய ஒரு பிரச்சினைக் கான அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்து இருக்கிறார்கள். இப்பிரச்சினை பத்திரிகை மீதும், தனி நபர் ஒருவர் மீதும் இருப்பதால் பத்திரிகை பொறுத் வரையில், அந்தப் பத்திரிகைக்கு விளக்கம் கேட்டு எழுதி, விளக்கம் கிடைத் பின் இப் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்பெறும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தமிழக பாலிடெக்னிக்குகளில் உள்ள இட நெருக்கடி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "தமிழகத்திலுள்ள 28 பாலிடெக்னிக் களிலும் மாணவர்களைச் சேர்ப்பதில் இவ்வாண்டு கடும் இட நெருக்கடியின் காரணமாக, அதிக மார்க்குகள் பெற்ற ஏராளமான மாணவர்களைச் சேர்க்க மறுப்பதால் மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க" பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு, திருவாளர்கள் ரா. உமாநாத், பி. கல்யாண மூர்த்தி என்கிற சோரணம், பொ. விஜயராகவன் ஆகியோர் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாக திரு. உமாநாத் அவர்களை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** போரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினை, மக்கள் மத்தியில் இது ஒரு பெரிய நெருக்கடியை உண்டாக்கி இருக்கக்கூடிய பிரச்சினை. தமிழ் நாட்டில் உள்ள 28 பாலிடெக்னிக்குகளில், 9 அரசு பாலிடெக்னிக்காகவும், 19 தனியார் துறை பாலிடெக்னிக்காகவும் உள்ளன. ஒவ்வொரு பாலிடெக்னிக்கிலும் அட்மிஷன் ஸ்ட்ரெங்த் 120 முதல் 180 வரை உள்ளது. அதற்கு மேல் எங்கேயும் அட்மிஷன் ஸ்ட்ரெங்த் இல்லை. ஆனால் வந்து இருக்கக்கூடிய அப்ளிகேஷனைப் பார்த்தால், ஒவ்வொரு பாலிடெக்னிக்கிலும் 2,000, 3,000, 4,000 என்று வந்து இருக்கின்றன. திருச்சியில் உள்ள அரசு பாலிடெக்னிக்குக்கு 130 ஸ்ட்ரெங்த் இருக்கிற இடத்தில் 4,000 அப்பளிகேஷன்கள் வந்து



இருக்கின்றன. ஆனால் சேஷாயி பாலிடெக்னிக்கிற்கு (தனியார் துறை) 180 இடங்கள் அட்மிஷன் ஸ்ட்ரெங்த் உள்ள இடத்தில் 2,000 அப்பளிகேஷன்கள் வந்து இருக்கின்றன.

இந்த அளவிற்கு நிலைமை இருப்பதால், பார்வார்ட் கம்யூனிட்டில் 500-க்கு 407-க்கு மேல் மார்க்கு வாங்கியுள்ளவர்களுக்குத்தான் அட்மிஷன் கிடைத்து இருக்கிறது. 406 மார்க் வாங்கியிருந்தால் கூட அட்மிஷன் கிடையாது. அதாவது 80 சதவிகிதத்துக்கு மேல் வாங்கியுள்ளவர்களுக்குக் கூட அட்மிஷன் இல்லை. பாக்வார்ட் கம்யூனிட்டிஸ் பொறுத்தவரையில், 500-க்கு 386-க்கு மேல் வாங்கியுள்ளவர்களுக்கு அட்மிஷன் அளிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் 77 சதவிகிதத்திற்கு மேல் வாங்கியிருந்தும் அட்மிஷன் பெறாத நிலை இருக்கிறது.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்குக் காரணம், 11 பிளஸ் என்கிற வகையில்தான் முன்பு பி.யு.சி. வரும். இப்போது 10 பிளஸ் 2 என்று வந்து இருப்பதால், பாலிடெக்னிக்கில் சேர்ந்தால் ஒரு வருஷம் குறைகிறது என்கிற காரணத்தால், அதிகமான மாணவர்கள் அதில் சேருவதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள். இதுதான் இன்றைக்கு இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு புதியதாக 546 இடங்கள் பாலிடெக்னிக்குகளில் ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு பாலிடெக்னிக்குகளிலும் 2,000, 4,000 என்று அப்ளிகேஷன் வந்து இருக்கிறபோது, 546 சீட் அதிகரிக்கப் படும் என்று சொல்வது—யானைப் பசிக்கு சோளப்பொறி போட்ட மாதிரி ஆகிறது.

அதனால், நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த விஷயம் அவசியம் டிஸ்கஸ் செய்யப்பட வேண்டும். மேலும், பாலிடெக்னிக்குகளில் ஷிப்ட் சிஸ்டம் ஏற்படுத்தினால் இந்தப் பிரச்சினை சற்று தீருவதற்கு வழி இருக்கிறது. இந்த 546 சீட் அதிகப்படுத்துவதினால் நிச்சயமாகப் பிரச்சினை தீராது. ஆகவே, ஷிப்ட் சிஸ்டம் ஒவ்வொரு இன்ஸ்டிடியூட்டிலும் ஏற்படுத் தினால்—அதே கட்டிடம், அதே டீச்சர்ஸ், அதே எஸ்டாபிளிஸ்மெண்ட் ஆகிய வற்றை வைத்துக்கொண்டு அதிகம் பேர் சேர்த்துக்கொள்ள வசதியாக இருக்கும். ரிக்கரிங் எக்ஸ்பென்டிசர் மார்ஜினலாகத்தான் இருக்கும். இது உடனடியாக முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்று. இந்த ஆண்டே இந்தப் பிரச்சினையை சமாளிக்க வேண்டியிருப்பதால், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக பதில்

பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்க்கை ஒழுங்குபடுத்தப்பட வேண்டியுள்ளமையால், இவைகளை மனதிற்கொண்டு பாலிடெக்னிக்குகளில் சேர விழையும் மாணவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இங்கே மாணவர்கள் சேர்க்கை பற்றி கருத்துக்களைச் சொல்லும்போது 95 சதவிகிதம் மார்க் அல்லது 85 சதவிகிதம் மார்க் வாங்கியவர்களுக்கு மட்டும் தான் இடம் கிடைக்கிறது என்று சொன்னார்கள். மார்க் என்பது நாம் மாணவர்களைச் சேர்ப்பதற்கு எடுத்துக்கொள்கின்ற ஒரு அளவுகோல் என் மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி பார்க்கும்போது 150 இட கள் இருந்தால் விண்ணப்பங்கள் போட்டிருக்கிற மாணவர்களின் வரிசைப்படி அதிகமாக மார்க் வாங்கியவர்களைச் சேர்த்துக்கொள்கிறோம். அதுவும் வகுப்புவாத விகிதாச்சாரப்படி சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்; இடம் தருகிறோம். அந்த அடிப்படையில் பார்த்தால் 150 இடங்களுக்கு மாணவர் களைச் சேர்த்துக்கொள்ளும்போது 85 சதவிகிதம் மார்க்குக்கு கீழே வர வில்லை. ஆகையால் 85 சதவிகிதம் வாங்கினால்தான் இடம் கிடைக்கும் என்ற கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

அதற்கடுத்து இப்போது பெண்கள் பாலிடெக்னிக்குகள் என்று வருகின்றபோது மதுரையிலே ஒன்றும், கோவையிலே ஒன்றும், சென்னையிலே ஒன்றும் ஆக மூன்று பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அது தவிர சென்ற ஆண் நாகப்பட்டினம், தூத்துக்குடியிலே பெண்கள் பகுதி என்று ஆரம்பித்திருக் கிறோம். மேலும் புதிதாக ஆரம்பிக்கின்ற பாலிடெக்னிக்குகள் என்றால் அவை பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்டால் அவற்றுக்கு நாம் முன்னுரிமை தருகிறோம். அல்லது பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தித்தான் இந்த ஆண்டு 3 பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதற்கு நாம் அனுமதித் வழங்கி இருக்கிறோம். அடுத்த ஆண்டும் புதிய பாலிடெக்னிக் களைத் துவங்குவதற்கான வாய்ப்புக்கள் பற்றி நாம் ஆராய இருக்கிறோம்.

அதற்கடுத்ததாக, இத்தகைய தொழில் கல்விக்கான வாய்ப்புக்கள் நாம் புதிதாகத் துவங்கி இருக்கும் மேல்நிலைப் பள்ளிகளில் நிறைய ஏற்படுத்தி இருக்கிறோம். அவைகளில் கிட்டத்தட்ட 24 ஆயிரம், 25 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்து தொழில் கல்வி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வாய்ப்புக்களும் நிறைய இருக்கின்றன. எனவே அந்த அடிப்படையிலே தான் நாம் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அடுத்து ஷிப்ட் சிஸ்டம் என்ற முறையினைப் பற்றிப் பேசுகின்றபோது கல்வி யின் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆகவே அந்த அடிப்



படையிலே ஷிப்ட் சிஸ்டம் என்பதைவிட 3 ஆண்டுக் கல்வியை 4 ஆண்டுகளாக அதிகப்படுத்தி பார்ட் டைம் கல்வி என்ற வகையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த முறையை மேலும் விரிவுபடுத்த முடியுமா என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அந்த முறை மேலும் விரிவுபடுத்தப்பட்டால் மேலும் அதிகமான மாணவர்களுக்கு வாய்ப்புத் தர முடியும்.

அடுத்ததாக புதிய பிரிவுகளைத் துவங்குவது பற்றி ஆராய்ந்து அந்த வகையில் புதிய பிரிவுகளை ஆரம்பிப்பதற்குரிய உத்தேசம் வைத்துக்கொண்டிருக்கிறோம். இதிலே குறிப்பாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அடுத்து இந்தமாதிரி வேலைகள் என்று பார்க்கின்றபோது அதிலே படித்தவர்களுக்கு வெளியே வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. அதே நேரத்தில் புதிய வேலைகள் என்று சொல்கின்றபோது அதிலே சேர்ப்பதற்கு தகுதி படைத்தவர்கள் கிடைக்காத நிலைமையையும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் எத்தகைய புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாகும் என்பதைக் கருத்தில் கொண்டு அந்தப் புதிய பாடங்களை ஆரம்பித்தால் தான் இந்த இரண்டு பிரச்சினைகளையும் நாம் சரியாக ஆராய்ந்து முடிவு எடுத்தவர்களாவோம். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் அதிகாரிகளும், நிபுணர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லாவித முயற்சிகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இது குறித்து சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பை எடுத்துக்கொள்ளுதல்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை, 247-வது விதியின் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்சினை குறித்து நான் தங்களுக்கு அனுப்பினேன். அதாவது தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன்னாலேயே நான் நம்முடைய செயலாளர் அவர்களிடத்திலே

சொல்கிறபோது, இந்த ஷிப்ட் சம்பந்தமான யோசனை குறித்து அவர ரியாக்ஷன் என்ன என்பதையும் எடுத்துச்சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்களே தமிழ்நாட்டில் இருக்கிற பாலிடெக்னிக்குகளில் இன்றைக்கு இருக்கிற இடம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆனால் விண்ணப்பங்கள் மிக அதிகமாக வந்திருக்கின்றன என்ற நிலையை எடுத்துச் சொன்னார்கள். ஆண்கள் மட்டு மல்ல. பெண்கள் கூட ஏராளமானவர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்.

அரசு பாலிடெக்னிக்குகளை எடுத்துக்கொண்டால் பெண்களுக்கு என்று சென்னையிலும் கோவையிலும்தான் பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. மேலும் சில இடங்களில் பெண்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று இருக் கிறது. அவர்களை அங்கே சேர்த்துக்கொள்வதாக இருந்தாலும் மிகக் குறைந்த அளவில்தான் சேர்த்துக்கொள்ள முடியும். இன்றைக்கு ஆண்களுக் குப் போட்டியாக பெண்களும் அதிகமாக விண்ணப்பங்கள் செய்திருக்கின்ற காரணத்தால் பெரும்பாலோருக்கு இடம் கிடைக்க வாய்ப்பில்லை. உதாரணத் திற்குச் சொல்ல வேண்டுமானால் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் மட்டும்தான் ஒரு பாலிடெக்னிக் இருக்கிறது. கல்வி பெற்றிருக்கிறவர்களுடைய விழுக்காட்டைப் பார்த்தால் அங்கே நூற்றுக்கு 58 பேர் பெண்கள் கல்வி பெற் றிருக்கிறார்கள். ஆக, 58 சதவீதம் பெண்கள் கல்வி பெற்றிருக்கிற கன்னியா குமரி மாவட்டத்தில் அவர்கள் அதிகமாக விண்ணப்பம் போட்டாலும்கூட, 85 சத விகிதம், 90 சத விகிதம் மார்க் வாங்கியவர்களுக்கு மட்டும்தான் இடம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் கல்வி பெற்றிருக்கிற விகிதாச் சாரத்தில் பெண்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டிருக் கிறது.

இப்போது 546 இடங்கள் கூடுதலாக ஏற்படுத்தியிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருந்தாலும் ஒரு பாலிடெக்னிக்கில் 20 அல்லது 15 இடங்கள்தான் அதிகமாக இருக்கும். இதையெல்லாம் கருத்திற்கொண்டு இந்த இட நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமானால் இன்னும் அதிகமான பாலி டெக்னிக்குகளைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இருக் கின்ற பாலிடெக்னிக்குகளில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல உடனடியாக ஷிப்ட் முறையைக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்கு மாநிலம் முழுவதும் இந்த நிலைமை, இடம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதிகமான மதிப்பெண்களைப் பெற்ற வர்களுக்குக்கூட கிடைக்கவில்லை. அதனால் இந்த அரசு தொழில் கல்வியைப்





படிக்கும் வாய்ப்பை உருவாக்கித் தரவில்லை என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. இந்த நிலைகளை எல்லாம் விரிவாக விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பாலிடெக் னிக்குகளில் சேருவதற்கான மாணவர்களின் விண்ணப்பங்கள் ஆண்டு தோறும் மிகவும் அதிகரித்து வருவது உண்மையே. இதைக் கருத்திற் கொண்டு, அரசு இவ்வாண்டு முதல் இதுவரை 120 சேர்ப்பு எண்ணிக்கையாகக் கொண்ட 9 பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கையை 180 ஆக அதி கரித்து உள்ளது. இதன் மூலம் கூடுதலாக 540 இடங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

இது மட்டுமின்றி, இதர பாலிடெக்னிக்குகளில் ஏற்பளிக்கப்பட்ட சேர்ப்பு எண்ணிக்கையைவிட 10 சத விகித இடங்கள் கூடுதலாக சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதன் மூலம் மேலும் 340 இடங்கள் அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்ற ஆண்டிலிருந்து ஒரு புதிய அரசினர் பாலிடெக்னிக் திருநெல்வேலியில் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு, தஞ்சா வூரில் ஒரு தனியார் மகளிர் பாலிடெக்னிக் தொடங்கப்பட்டுள்ளது. குமார பாளையத்தில் ஒரு தனியார் சேசவு தொழில் நுட்பப் பயிலகம் தொடங்க அரசு ஏற்பளித்து உள்ளது. கோயமுத்தூரில் ஒரு தனியார் மகளிர் பாலி டெக்னிக் நிறுவும் கருத்துரு அரசாணைகள் பிறப்பிக்கப்படும் தருவாயில் உள்ளது. இவ்வாறு புதிதாகத் தொடங்கப்பட்ட பாலிடெக்னிக்குகளின் மூலம் சேர்ப்பு எண்ணிக்கையில் 190 இடங்கள் அதிகமாகின்றன. இது தவிர, சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்களின் சேர்ப்பு எண்ணிக்கையில் 10 சத விகிதம் இடங்கள் அதிகரிப்பதின் மூலம், 37 இடங்கள் கூடுதலாக்கப்படுகிறது. மேல் நிலைப் பள்ளிகளில் தொழில் பாடம் படித்துத் தேறிய மாணவர்கள் பாலிடெக்னிக்குகளின் இரண்டாம் ஆண்டு படிப்பில் சேர 501 இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக, பாலிடெக்னிக்குகளின் சேர்ப்பு எண்ணிக்கை 1,608 இடங்கள் நடப்பு கல்வியாண்டில் கூடுதலாக உருவாக்கப் பட்டுள்ளன.

இத்தருணத்தில் ஒன்று நினைவுகூற வேண்டியுள்ளது. பாலிடெக்னிக்கு களில் அனுமதி கோரும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி வழங்குவது என்பது இயலாத ஒன்றாகும். ஏனெனில் தொழில் நுட்ப வல்லுநர்களின் வருங்கால மனித சக்தி தேவையை கருத்திற்கொண்டும், தொழில் நுட்ப வல்லு நர்களின் தற்போதைய வேலை வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டும்

பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்க்கை ஒழுங்குபடுத்தப்பட வேண்டியுள்ள
மையால், இவைகளை மனதிற்கொண்டு பாலிடெக்னிக்குகளில் சேர விழையும்
மாணவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இங்கே மாணவர்கள் சேர்க்கை பற்றி கருத்துக்களைச் சொல்லும்போது
95 சதவிகிதம் மார்க் அல்லது 85 சதவிகிதம் மார்க் வாங்கியவர்களுக்கு மட்டும்
தான் இடம் கிடைக்கிறது என்று சொன்னார்கள். மார்க் என்பது நாம் மாண
வர்களைச் சேர்ப்பதற்கு எடுத்துக்கொள்கின்ற ஒரு அளவுகோல் என்
மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி பார்க்கும்போது 150 இடங்
கள் இருந்தால் விண்ணப்பங்கள் போட்டிருக்கிற மாணவர்களின் வரிசைப்படி
அதிகமாக மார்க் வாங்கியவர்களைச் சேர்த்துக்கொள்கிறோம். அதுவும்
வகுப்புவாத விகிதாச்சாரப்படி சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்; இடம்
தருகிறோம். அந்த அடிப்படையில் பார்த்தால் 150 இடங்களுக்கு மாணவர்
களைச் சேர்த்துக்கொள்ளும்போது 85 சதவிகிதம் மார்க்குக்கு கீழே வர
வில்லை. ஆகையால் 85 சதவிகிதம் வாங்கினால்தான் இடம் கிடைக்கும் என்ற
கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

அதற்கடுத்து இப்போது பெண்கள் பாலிடெக்னிக்குகள் என்று வருகின்றபோது
மதுரையிலே ஒன்றும், கோவையிலே ஒன்றும், சென்னையிலே ஒன்றும் ஆக
மூன்று பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அது தவிர சென்ற ஆண்டு
நாகப்பட்டினம், தூத்துக்குடியிலே பெண்கள் பகுதி என்று ஆரம்பித்திருக்
கிறோம். மேலும் புதிதாக ஆரம்பிக்கின்ற பாலிடெக்னிக்குகள் என்றால் அவை
பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்டால் அவற்றுக்கு நாம் முன்னுரிமை
தருகிறோம். அல்லது பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற
வற்புறுத்தித்தான் இந்த ஆண்டு 3 பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதற்கு நாம்
அனுமதித் வழங்கி இருக்கிறோம். அடுத்த ஆண்டும் புதிய பாலிடெக்னிக்கு
களைத் துவங்குவதற்கான வாய்ப்புக்கள் பற்றி நாம் ஆராய இருக்கிறோம்.

அதற்கடுத்ததாக, இத்தகைய தொழில் கல்விக்கான வாய்ப்புக்கள் நாம்
புதிதாகத் துவங்கி இருக்கும் மேல்நிலைப் பள்ளிகளில் நிறைய ஏற்படுத்தி
இருக்கிறோம். அவைகளில் கிட்டத்தட்ட 24 ஆயிரம், 25 ஆயிரம் மாணவர்கள்
சேர்ந்து தொழில் கல்வி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த
வாய்ப்புக்களும் நிறைய இருக்கின்றன. எனவே அந்த அடிப்படையிலே தான
நாம் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.
அடுத்து ஷிப்ட் சிஸ்டம் என்ற முறையினைப் பற்றிப் பேசுகின்றபோது கல்வி
யின் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆகவே அந்த அடிப்





படையிலே ஷிப்ட் சிஸ்டம் என்பதைவிட 3 ஆண்டுக் கல்வியை 4 ஆண்டுகளாக
அதிகப்படுத்தி பார்ட் டைம் கல்வி என்ற வகையில் வைத்துக் கொண்டிருக்
கிறோம். ஆகவே அந்த முறையை மேலும் விரிவுபடுத்த முடியுமா என்று
ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அந்த முறை மேலும் விரிவுபடுத்தப்பட்டால்
மேலும் அதிகமான மாணவர்களுக்கு வாய்ப்புத் தர முடியும்.

அடுத்ததாக புதிய பிரிவுகளைத் துவங்குவது பற்றி ஆராய்ந்து அந்த
வகையில் புதிய பிரிவுகளை ஆரம்பிப்பதற்குரிய உத்தேசம் வைத்துக்கொண்
டிருக்கிறோம். இதிலே குறிப்பாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.
அடுத்து இந்தமாதிரி வேலைகள் என்று பார்க்கின்றபோது அதிலே படித்தவர்
களுக்கு வெளியே வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் வேலையில்லாத்
திண்டாட்டம் ஏற்படுகிறது. அதே நேரத்தில் புதிய வேலைகள் என்று சொல்
கின்றபோது அதிலே சேர்ப்பதற்கு தகுதி படைத்தவர்கள் கிடைக்காத
நிலைமையையும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்
தில் எத்தகைய புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாகும் என்பதைக் கருத்தில்
கொண்டு அந்தப் புதிய பாடங்களை ஆரம்பித்தால் தான் இந்த இரண்டு
பிரச்சினைகளையும் நாம் சரியாக ஆராய்ந்து முடிவு எடுத்தவர்களாவோம்.
ஆகவே, அந்த அடிப்படையிலேதான் அதிகாரிகளும், நிபுணர்களும் ஆராய்ந்து
கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு
எல்லாவித முயற்சிகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே
இது குறித்து சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்
களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து,
இத்தீர்மானம் குறித்து விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்ற காரணத்
தால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பை எடுத்துக்கொள்ளுதல்.

**திரு. து. புருஷோத்தமன்** : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை,
247-வது விதியின் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்சினை குறித்து நான்
தங்களுக்கு அனுப்பினேன். அதாவது தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்
படுவதற்கு முன்னாலேயே நான் நம்முடைய செயலாளர் அவர்களிடத்திலே

அதைக் கொடுத்தேன். அதிலே ஒரு முக்கியமான அறிவிப்பு குறித்து அதாவது ஏறக்குறைய 33 இலட்சம் ரூபாய் பைனான்சியல் கமிட்மென்ட் குறித்து நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினை பற்றிக் கொடுத்திருந்தேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள அறிவிப்பு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பெற்று நான் அதற்கான பதிலையும் அனுப்பி இருக்கிறேன். அந்தப் பதிலைப் பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. து. புருஷோத்தமன் :** தலைவரவர்களே, அதிலே உள்ள ஒரு முறை பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அதற்கான பதிலை உங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அதைப் பார்த்த பிறகு எந்தவிதியின்கீழ் அதைக் கொண்டு வரவேண்டுமோ அந்த விதியின் கீழ் கொண்டுவரவேண்டுமே தவிர இப்படித் திடீரென்று எழுந்து பேசுவது கூடாது.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு ஒழுங்குப் பிரச்சினை. 54-வது விதியின் கீழ், தாம்பரம் தொகுதியிலே இருக்கிற பம்மல் என்ற இடத்திலே நடந்த கலவரத்திலே ஒரு சாராரை கைது செய்திருக்கிற காரணத்தினாலே அங்கு இருக்கிற பெண்களே புகார் கொடுத்திருக்கிறார்கள். அதை விசாரிக்காத காரணத்தினாலே அந்த தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினரே உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒழுங்குப் பிரச்னை என்று சொல்லி இவற்றை எல்லாம் சொல்லக் கூடாது. திருவாளர்கள் துரைமுருகன், இரகுமான்கான் அல்லது அவர்களது கட்சித் துணைத் தலைவர் ஆகியோரை எப்படி, எந்த விதியின் கீழ் இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்புவது என்று தெரிந்து, செயல்படலாம். நீங்கள் எழுப்பிய பிரச்சினை எல்லாம் பட்ஜெட் பொது விவாதத்திலே குறிப்பிடப் பெறலாம்; வேறு பலவிதமான விதிகளின் கீழும் எழுப்பப் பெறலாம். உறுப்பினர்கள் தங்களது உரிமையை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்று தெரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும். ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் எழுப்பக் கூடாது.



## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) கரூர் நகரில் உள்ள கோட்டையம்மன் தெரு தீ விபத்து.

**திரு. பொ. விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "கரூர் நகரிலுள்ள கோட்டையம்மன் தெருவில் 22—6—1980 அன்று நடந்த தீ விபத்தில் குடிசைகள், பள்ளிக் கட்டிடங்கள், தறிகள், சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் சேதமடைந்தது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, 21—6—1980 அன்று இரவு 12 மணியளவில் கரூரிலுள்ள கோட்டையம்மன் தோப்பில் நீலி பேட்டுத் தெருவில் ஏற்பட்ட தீ விபத்தில், 22 கூரை வேய்ந்த குடிசைகளும், 8 ஓட்டு வீடுகளும், ஒரு பள்ளிக் கட்டிடமும் பாதிக்கப்பட்டன. 500 நபர்கள் பாதிக்கப்பட்டனர். 175 கைத்தறிகளும், 21 கைத்தறி பணி இல்லங்களாக பயன்படுத்தும் இடங்களும் சேதமுற்றன. உயிர்ச்சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பீடு ரூபாய் 6.75 இலட்சங்கள்.

2. வருவாய்த்துறை அலுவலர்கள் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்டவர்களை பக்கத்திலுள்ள ஒரு பள்ளியில் தங்க வைத்து அவர்களுக்கு மூன்று நாட்கள் உணவு வழங்க ஏற்பாடு செய்தனர். பாதிக்கப் பட்ட 22 குடும்பங்களுக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிசைப் புனரமைப்பு நிவாரணத்தொகையாக ரூபாய் 100-ம், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண் ணெண்ணெயும், ஒரு வேட்டி, ஒரு புடவையும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொ. விஜயராகவன் :** தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் களுடைய தறிகள் கூட சேதமாகியிருக்கின்றன. அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது 100 ரூபாய், 5 கிலோ அரிசி, புடவை, வேட்டி ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தொழில் செய்கிற தறிகள் சேதமாகி யிருக்கின்றன. அந்தத் தறிகளுக்கென்று ஏதாவது தனியாக உதவிப்பணம் வழங்கியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட இலாக்கா அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது விரைவில் முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1980 ஜூலை 4

## ஆ. பெரியார் அணையைப் பலப்படுத்தல்.

* **திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, "பெரியார் அணையை பலப்படுத்தும் பணி நடைபெற்று வருவதால் நீர் பிடிப்பு மட்டம் பாதிக்கப்படும் என பெரியகுளம், உத்தமபாளையம், கம்பம் பகுதி விவசாயிகளிடையே நிலவும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, கேரள மாநில எல்லைக்குள் இருக்கும் பெரியாறு அணை தமிழ்நாட்டுக்கு சொந்தமானது. அணை அமைந்திருக்கும் இடத்தை கேரள அரசிடமிருந்து குத்தகை முறையில் தமிழ்நாடு எடுத்துள்ளது. சென்ற ஆண்டு கேரள பத்திரிகைகளில் பெரியாறு அணை அபாயமான நிலையில் உள்ளது என வெளியான செய்திகளின்பேரில் இவ்வரசு மத்திய நீர்வளக்குழுவின் Water Commission) தலைவர் அவர்களை அணையைப் பார்வையிட்டு அவரது ஆலோசனையை தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க, மத்திய நீர்வளக்குழுவின் தலைவர் அவர்கள், தமிழக மற்றும் கேரள அதிகாரிகளுடன் அணையைப் பார்வையிட்டார். அணையைப் பலப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துபேசி முடிவுகள் எடுக்கப்பட்டன. இம்முடிவுகளில் ஒன்று அணையைப் பலப்படுத்தும் வேலைகள் முடிவுறும்வரை, அணையின் பாதுகாப்பை கருதி, அதன் நீர்மட்டத்தை வழக்கமாக உள்ள பிளஸ் 145 அடிக்கு பதிலாக பிளஸ் 136 அடியில் வைத்திருக்க வேண்டும் என்பது. இதன்படி, அணையை பலப்படுத்தும் பணிகள் முடிவடையும் வரையில் அணையின் நீர் மட்டத்தை பிளஸ் 136 அடியில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அணையைப் பலப்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. இப்பணிகள் 1981-ஆம் ஆண்டு முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. எனவே, தற்போதைய பாசன காலத்தில் அணையின் நீர்மட்டத்தை பிளஸ் 136 அடியில் வைத்திருக்கப்பட வேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது. அணைக்கு வரும் தண்ணீர் வழக்கம்போல் இருப்பின், நீர் மட்டம் 136 அடிக்கு மேல் போக விடாமல், கிடைக்கும் தண்ணீர் முழுவதையும் எடுத்துக் கொள்ள முடியும். இதற்காக, இவ்வணைக்கான விதிகளைத் தளர்த்தி இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, மின் உற்பத்திக்குத் தேவையான அளவைவிட தேவைப்படும்போது அதிகமான தண்ணீரை மாற்று சுரங்கப்பாதை மூலம் எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய ஏற்பாடுகளால்





பெரியாறு அணையில் கிடைக்கும் தண்ணீரை, எந்த அளவு முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அந்த அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அணையின் கட்டுமானப் பணிகளை கவனிக்கும் மேற்பார்வைப் பொறியாளரிடம் அணையில் தண்ணீரை முறைப்படுத்தும் பணிகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3. அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் வைத்திருப்பதால் கிடைக்கும் உபரி தண்ணீரை சீரிய முறையில் பயன்படுத்துவதற்கு, அரசு எடுத்துள்ள சிறப்பு நடவடிக்கைகளின் விளைவாக பாசனத்திற்குக் கிடைக்கும் தண்ணீரை முழுமையாக பயன்படுத்துவதில் எந்த விதமான சிரமும் இருக்காது.

4. அணையை பலப்படுத்தும் பணிகள் முடிந்தவுடன் அணையின் நீர் மட்டத்தை 145-க்கு உயர்த்திக்கொள்வது சாத்யமாகலாம்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, இந்த கட்டுமானப் பணிகளின் வேலை எப்பொழுது துவக்கப்பட்டது ? எந்த ஒப்பந்தக்காரர்கள் என்று முடிவு செய்யப்பட்டு வேலை விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளிலே கேபிள் பவுண்டேஷன் என்று சொல்லப்படுகிற புதை கம்பி தங்கூரங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா ? கட்டுமான பணி முழுவதும் முடிந்தவுடன் முழு உயரமான 152 அடிக்கும் மேற்பிடிப்பு சுவர் எழுப்பப்படுமா என்று அறியவிரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, மத்திய நீர் வளக் குழுவின் தலைமையில் கேரள அரசோடு 25—11—1979 ஆம் நாளன்று நடைபெற்ற விவாதத்திற்குப் பிறகு, அணையை பலப்படுத்தும் பணியை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, புதை கம்பி நங்கூரங்கள் என்று சொல்லப்படுகிற கேபிள் பவுண்டேஷன் என்ற அந்தப் பணி மிக முக்கியமானது. இத்தகைய பணிகளை 'சன் இந்தியா' என்று சொல்லக்கூடிய கம்பெனி அனைத்து இந்தியாவிலும் மேற்கொண்டு வருகிறது. நிறுவனம் கொடுத்த விவரங்களை பொதுப்பணித்துறைச் செயலாளர், நீர்ப்பாசன தலைமைப் பொறியாளர், மத்திய நீர் வளக் குழுவின் தலைமைப் பொறியாளர் ஆகியோர் ஆராய்ந்த பிறகு இந்தப் பணியை அந்த நிறுவனத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தப் பணி 81 ஆம் ஆண்டிலே முடிவுறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(முற்பகல் 9-30)

## 2. அறிவிப்புகள்

### அ. மானியக் கோரிக்கை மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான நடைமுறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7 ஆம் தேதி மாலை 3-00 மணிக்குள் கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்துள்ளேன்.

| மானியக் கோரிக்கை எண். | மானியக் கோரிக்கைகள். |
|---|---|
| 12 | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் |
| | சின்கோனா |
| 25 | காட்டு வளத் துறை |
| 45 | தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் |
| 4 | காட்டுவள மூலதனச் செலவு |
| 24 | நிலவரித் துறை |
| 3 | தகவல் மாநில ஆயத் தீர்வை |
| 8 | |
| 4 | பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம் |
| 5 | முத்திரைத் தாள்கள் நிர்வாகம் |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் |
| 17 | கல்வி |
| 13 | நீதி நிர்வாகம் |
| 14 | சிறைச்சாலைகள் |
| 23 | கூட்டுறவு |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் |
| 33 | வீட்டு வசதி. |







இதர மானியக் கோரிக்கைகளின் மீதான வெட்டுத் தீர்மானங்கள் ஜூலை 9 ஆம் நாள் மாலை 3-00 மணிக்குள் கொடுக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கின்றேன்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான படிவங்களை சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் 1-வது பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

## பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு

### இ. வினாக்களுக்கான விடைகளை பதினைந்து நாட்களுக்குள் துறைகள் அனுப்ப வேண்டுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பெற்ற வினாக்கள் அனுமதிக்கப்பெற்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதுவரை 166 உடுக்குறியிட்ட வினாக்களும், 92 உடுக்குறியிடாத வினாக்களும் துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பேரவை விதிகளின்படி 42 நாட்கள் என்றுள்ள உச்சகால அளவு வரை காத்திராமல், அதிகபட்சமாக 15 நாட்களுக்குள்ளாக விடைகளைத் தயாரித்து அனுப்ப ஆவன செய்யும்படி மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

**திரு. ரா. உமாநாத் :** தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்பை, வரவேற்கிறேன், 15 நாட்களுக்குள் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதில்கள் அனுப்ப வேண்டும் என்பதை. இதில் ஒரு பிரச்னை எழுகிறது. அவர்கள் அப்படி அனுப்பவில்லை என்று சொன்னால் என்ன செய்வீர்கள் ? இப்போதுள்ள ரூல்ஸ்படி ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டின் என்றால் ஏழு நாட்களுக்குள் தேதி போட்டு தங்களுக்கு அனுப்ப வேண்டும். இன்றைய நடைமுறை என்னவென்றால், இலாக்காக்கள் அவரவர்கள் சௌகரியப்படி இப்போது உங்கள் ஆபீசுக்கு அனுப்புகிறார்கள். அப்போதுதான் தேதி போடப்படுகிறது. இதில் முக்கியமான பிரச்சினை என்னவென்றால், அவை நடக்கும்போது அவையின் தேவைக்கு உட்பட்டு அதற்கு அட்ஜஸ்ட் செய்து அதிகாரிகள் அனுப்புவதா அல்லது அதிகாரிகள் சௌகரியப்படி, அவர்கள் கன்வீனியன்ஸ்படி அட்ஜஸ்ட் செய்து அவை செயல்படுவதா என்ற பண்டமெண்டல் க்வெஸ்டின் எரியில் ஆகியிருக்கிறது.

The Executive is subject to the necessitives and conveniences of this House. The rights of the House are supreme. The Executive Officers must submit themselves to the needs of the House.

...ளமான ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டின்ஸுக்கு பதில்கள் வரவேண்டியிருக்கிறது. சாதாரண க்வெஸ்டின்ஸ் என்றால் 15 நாட்கள், ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டின்ஸ் என்றால் 7 நாட்கள் என்று போட்டிருக்கிறீர்கள். கால் அட்டென்ஷன் நோட்டீஸ் இருக்கின்றன, அவற்றிற்குப் பதில் வர வேண்டும். டிப்பார்ட்மென்ட் குறித்த காலத்திற்குள் அனுப்பவில்லை என்றால் என்ன செய்வது? ஆகவே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, நீங்களே தேதி போட்டு அஜெண்டாவில் போட்டுவிட வேண்டும். அவர்கள் அதற்குள் பதில் அனுப்ப வேண்டும். பார்லிமெண்டில் அப்படித்தான் செய்கிறார்கள். ஆகவே அதேபோல் நீங்கள் தேதி போட்டு அஜெண்டாவில் போட்டு விடவேண்டியது. அவர்கள் உடனடியாக அதற்கு அட்ஜஸ்ட் செய்து பதில் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டபடி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற வினாக்களுக்கு கூடுமானவரையில் 15 நாட்களுக்குள் விடை பெற்று, இந்த அவைமுன் வைப்பதற்கான முயற்சிகளை அமைச்சர்கள் மேற்கொள்வார்கள். ஆனால், அப்படி வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறபோது அதற்கான விளக்கங்களை அதிகாரிகளிடம் இருந்து பெற்றுத்தான் தங்களிடம் தரமுடியும். 15 நாட்களுக்குள் வைத்தே தீரவேண்டுமென்றால் சில வினாக்களுக்கு வைக்க முடியும் என்றாலும், சில வினாக்களுக்கு சரியான விடைகள், முழு விடைகள் பெற மேலும் சில நாட்கள் பிடிக்கக் கூடும். 15 நாட்களுக்குள் வைத்தே ஆகவேண்டுமென்று சொன்னால், அரை குறையான விடை வந்தால், அதன் காரணமாக உங்களுக்கும் ஆபத்து, எங்களுக்கும் ஆபத்து. ஆகவேதான், கூடுமானவரையில் 15 தினங்களுக்குள் விடைகளைத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளக் கூடும். சில வினாக்களுக்கு காலம் அவசியம் தேவைப்படக் கூடும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன், என்றாலும் எல்லா அமைச்சர்களும் தங்களுடைய கட்டளையை ஏற்று, 15 நாட்களுக்குள் விடைகளை அனுப்பிவைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்ற உறுதியை நான் தருகிறேன்.

**திரு. பொ. விஜயராகவன் :** தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் சொல்லுகின்றபோது, 15 நாட்களுக்குள்ளாக பதிலைப் பெற்றுத் தருவதற்கு முயற்சி எடுக்கின்றபோது, சில வினாக்களுக்கு அவசரப்பட்டால் அரைகுறையாக பதில் கிடைக்கும் என்றார்கள். பாராளுமன்றத்தில் அகில இந்திய ரீதியிலே எல்லாப் பிரச்னைகளுக்கும் 10 நாட்களுக்குள் விடை கிடைக்கிறது. ஆகவே, தமிழகத்தில் நம்முடைய சர்க்காரைச் சார்ந்திருக்கின்ற நிர்வாக அமைப்பிற்குள், அதைவிட விரைவாக கிடைக்கவேண்டும். ஆகவே, சாக்குபோக்கு சொல்லாமல் எவ்வளவு விரைவாக விடைகள் தரவேண்டுமோ,



அவ்வளவு விரைவாகத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும். அப்படித் தரவில்லை என்றால், மாண்புமிகு தலைவரவர்கள் அஜெண்டாவில் சேர்ப்பதுதான் முறை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. கி. சட்டநாத கரையாளர் :** அவைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்குள் பதில் தரவேண்டுமென்றால், கேள்வி போட்ட 15 நாட்களுக்குள் பதில் அனுப்பவேண்டும், இல்லையென்றால், அஜெண்டாவில் சேர்க்கப்படும் என்ற நியதி வரவேண்டும். அப்படி வந்தால்தான், இலாகாக்களும் துரிதமாக செயல்படும்; வேலை செய்வார்கள். அதற்குக் குறித்த காலத்தில் பதில் கிடைக்கவில்லை என்றால், அதற்கான காரணத்தை விளக்குவதற்கு அமைச்சர்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கும். அதனால், 15 தினங்களுக்குள் தர வேண்டும். இல்லையென்றால், அந்தக் கேள்வியை அஜெண்டாவில் சேர்க்க வேண்டும். அந்த விதியைத் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் 15 நாட்களுக்குள் எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். சில இடங்களிலே, சில கட்டங்களிலே அவைத் தலைவர் அனுமதியுடன் இப்போது இருக்கின்ற ரூல்ஸ்படி, அந்த ப்ரோவிஷன்ஸ்படி 42 நாட்கள், பின்பு அதற்கு மேல் உங்கள் அனுமதியுடன் இன்னும் 15 நாட்கள் கொடுக்கலாம். ஆக, 42 பிளஸ் 15, மொத்தம் 57 நாட்கள். இந்த 57 நாட்களையும் தாண்டி எத்தனையோ கேள்விகளுக்கு விடைகள் வராமல் இருக்கின்றன. அந்த லிஸ்டைக் கேளுங்கள். அந்த ப்ரொவிஷனைத்தான் நான் சொல்லுகிறேன். தயவுசெய்து ஸ்டிரிக்ட்டாக அந்த 15 நாட்களுக்குள்ளேயே தீர்ப்பது நல்லது. அப்படி வரவில்லை என்றால், நீங்களே அந்தத் தேதியைப் பார்த்து, அட்ஜஸ்ட் பண்ணி அஜெண்டாவில் போடவேண்டும். பார்லிமெண்டிலே 10 நாட்களுக்குள் வரும். அது உங்களுக்குத் தெரியும். பார்லிமெண்டில் இந்தியா முழுவதற்கும், இன்டர்நேஷனல் இஷ்யூக்கள் வரும்போது, அவர்களால் பதில் கொடுக்க முடிகிறது. இந்த மாநிலத்திற்குள் எஸ்.டி.டி. பெசிலிடீஸ் இருக்கிறது; டெலிபிரிண்டர் போன்ற வசதிகள் இருக்கின்றன. ஆக 15 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பது நல்லது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் உமாநாத் அவர்களின் கருத்துப்படி வினாக்களுக்கு 15 நாட்களுக்குள் விடை தரவேண்டும்; அதற்குமேல் காலதாமதம் கூடாது. ஆனால், அதற்கு அவை முன்னவர் அவர்கள் ஒரு காரணம் சொன்னார்கள். நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன், வறுமைக் கோடு என்றால் என்ன? என்று கேள்வி கேட்கப்படுமானால்,

அதற்கு விடையளிக்க இரண்டாவல் ரொம்ப நாளாகும். ஆகவே, 15 நாட் களுக்குள் விடை வரவில்லை என்றால், அஜெண்டாவிலே சேர்க்க வேண்டு மென்ற திரு. உமாநாத் அவர்களுடைய கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : அவைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக் குள் விடை கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பதில் கிடைக்காவிட்டால், அட்லீஸ்ட் ஒரு பிரிலிமினரி ரிப்போர்ட், முதல் அறிக்கை முன்னறை இங்கே வைக்க முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளுக்கு சரியானதாக, முழுமை யானதாகத்தான் விடை அளிக்கப் பெறவேண்டும். அரைகுறையாக அளிக் கலாம் என்று வைத்துக்கொள்ள முடியாது.

(முற்பகல் 9.40)

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபை என்பது தமிழகத்தின் தலைமையான இடம். இதில் இருக்கக்கூடிய உறுப் பினர்கள் மிக உயர்ந்தவர்கள். அதிகாரம் மிகுந்த இந்தச் சபையில் இருக்கும் உறுப்பினர்கள் கொடுக்கக்கூடிய கேள்விகள் ரொம்ப முக்கிய மானவை. இப்போது 15 நாட்களுக்குள் சபையில் வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். பார்லிமெண்டில் தாங்கள் இருந்து, தற்போது சபா நாயகராக இங்கே இருக்கிறீர்கள். பார்லிமெண்டில் பத்து நாட்களுக்குள் பதிலை வைக்கும்போது என் சட்டசபையில் ஏழு நாட்களில் கொடுக்கக் கூடாது? பதினைந்து நாட்களே அதிகம். அந்தப் பதினைந்து நாட்களுக் குள்ளாகவாவது கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு முயற்சி எடுக்கவேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நான் கூடக் குறுகிய கால வினா போக்கு வரத்துத் துறையைப்பற்றிக் கொடுத்திருந்தேன். இப்போது பத்து நாட்கள் ஆகியும் விடை வரவில்லை. மற்றொன்று, நாங்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்கிறபோது சில முக்கியமான கேள்விகள் அவைக்கு வந்தால்தான் விளக்க மான பதில்களைப் பெறமுடியும். அவ்வாறு வராமல் இலாகாவில் புஸ்தக மாக அடித்துக் கொடுத்து விடுகிறார்கள். இதனால் எந்த நோக்கத்தோடு கேள்வி கேட்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது. ஆகவே, கூடுமானவரை அவைக்கு வந்து பதில் அளிக்கும் முறையைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதைப்பற்றிச் சொன்னார்கள். அதோடு நான் தெரிந்துகொள்ள



விரும்புவது, நாங்கள் கேள்விகளை எழுதி அனுப்பி பதினைந்து நாட்களா கியும் அனுமதிக்கப்பட்டனவா இல்லையா என்பதற்கே பதில் வரவில்லை. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பதினைந்து நாட்களுக்குள் வினாவுக்கு பதில் தருவது எங்களைப் போன்ற புதிதாக வந்திருக்கும் உறுப்பினர்களுக்கு உதவி யாக இருக்கும். ஆகவே, பதினைந்து நாட்களானவுடன் அஜெண்டாவில் அவற்றைச் சேர்த்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கேள்விகளுக்குப் பதில் வர அதிக நாட்கள் ஆகிறது என்று தெரிவித்த காரணத்தால் பாராளுமன்ற முறைப்படி அங்கே 10 நாட்களில் பதில் கொடுக்கிறார்கள் என்றாலும் இங்கே 15 நாட்களில் பதில் கொடுக்கலாம் என்ற முறையில் அறிவிக்கப் பட்டிருக்கிறது. இப்போது ஏழு நாட்களுக்குள் வைக்கவேண்டுமென்பது அடுத்த கோரிக்கையாக வந்திருக்கிறது. முடியாத காரியத்தைப் பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. பதினைந்து நாட்களுக்குள் உறுப் பினர்கள் கொடுக்கும் கேள்விகளுக்கான விடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்புகிறேன். அவை முன்னவர்கூட சில சமயங்களில் அவசரத்தின் காரணமாக பாதி விடையாக, அரைகுறை விடையாக வந்து விடக்கூடாதே என்ற வகையில் ஒரு கருத்தைத்தான் தெரிவித்தார்கள். நம்முடைய இலாகாக்கள் கேள்விகளுக்கான பதில்களைத் தயாரிப்பதில் வேகமாகப் பணி யாற்றும். மற்ற மாநிலங்களிலுள்ள அதிகாரிகளைக் காட்டிலும் தமிழ கத்தில் உள்ள அதிகாரிகள் ரொம்பத் திறமையானவர்கள் என்பதை இந்தச் சபை நன்கு அறியும். இந்த நிர்வாகம் சிறப்பாக, திறமையாகச் செயல் படுகிறது என்பதை திரு. உமாநாத் அவர்களும் உணருவார்கள். ஆகவே, பதினைந்து நாட்களுக்குள் பதில்களைப் பெற்றுத் தர என்னென்ன முயற்சி களை மேற்கொள்ள வேண்டுமோ அந்த முயற்சிகளை நான் எடுப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் முடிவு சொல்லிய பிறகு நான் விளக்கம் சொல்லக்கூடாது. இருப்பினும் இங்கே சொன்ன கருத்துக்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறேன். 'சாக்குப் போக்கு' என்ற நிலைமை இந்த அரசிடம் கிடையாது என்பதைச் சொல்லியாக வேண்டும்.

அடுத்து, இந்தச் சபை தமிழகத்திலேயே அதிக அதிகாரம் வாய்ந்த பேரவை என்பதையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினார்கள். ஆகவே, இங்கே விரைவாக, சரியாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். இது மிகப் பொறுப்பு வாய்ந்த பேரவை என்பதால் பதில்

சரியாக வரவேண்டும், தவறுகள் ஏதும் ஏற்பட்டு திருத்தங்கள் தரவேண்டி நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது, சரியாக விசாரித்து விவரங்களை சொல்லவேண்டுமென்பதுதான் இந்த அரசின் நிலைமை என்பதையு தெரிவித்து பேரவைத் தலைவர் அவர்களுடைய கருத்தை தமிழக அரசு பின் பற்ற முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஆ. புறக்கூடத்தில் ( Lobby ) குடி தண்ணீர் வசதி.

**திரு. மு. அம்பிகாபதி :** பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இப்போது நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டு என்று கேட்டுக்கொள்கிறேன். லெப்ட்ஹான்ட் ஸைடில் உள்ள வாட்டர் பைப் வேலை செய்யவில்லை. சட்ட சபைக்குள்ளேயே வேலை செய்யவில்லை என்றால் எப்படி? ஆகவே தக்க நடவடிக்கை எடுத்து அது நன்கு வேலை செய்யும்படிச் செய்ய வேண்டும். எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் போன் சரியா வேலை செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தண்ணீர், போன் என்பதெல்லா சாதாரண காரியங்கள், தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்— பச்சைத் தண்ணீர்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவு.

### இந்து சமய—அறக் கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள் திருத்தச் சட்ட முன்வடிவு, 1980-ஐ அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற் அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** இச் சட்ட முன்வடி பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமு செய்யப் பெற்றிருக்கிறது.



### 7. 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம்—பொது விவாதம்.

* **திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு நிதி லை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்து மன்றத்தின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பிலே நான் பலவற்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆண்டுதோறும் இந்த மாநிலத்தி னுடைய செலவுகளை பரிக்கட்ட நிதிநிலை அறிக்கைகளை வைப்பதும் மன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதும் நடைமுறையில் நடைபெறும் வாடிக்கை தான். ஆனாலும் இந்த முறை வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கைக்குத் தனிச் சிறப்பு உண்டு. காரணம், மிகமிகப் பரபரப்புக்கிடை யிலே ஒரு தேர்தல் நடைபெற்று அந்தத் தேர்தலிலே சமுதாயத்திலே வாழ்கிற எல்லாப் பிரிவினருக்கும் வாக்குறுதிகளை வாரிவாரி வழங்கி, அவர்களே திணறிப் போகிற அளவுக்கு வாக்குறுதிகளைக் கொட்டி, வாக்குகளைப் பெற்று பெரும்பான்மையாக ஆட்சியிலே இன்றைக்கு அமர்ந்திருக்கிற சர்க்கார் இந்த மன்றத்தின் ஒப்புதலுக்காக வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையாகும்.

சமுதாயத்திலே இருக்கிற ஒவ்வொரு பிரிவினரும் நமக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் சட்டமாகத் திட்டமாக வந்திருக்கின்றனவா என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சியிலே இருக்கின்ற வர்கள் பார்த்தீர்களா, எங்களுடைய புரட்சித் திட்டங்கள் இன்றைக்குச் சட்ட மாகப்போகிறது, நாட்டு மக்களுக்குப் பயன்படப் போகிறது என்று சொல்லி மார்தட்டி, நெஞ்சை நிமிர்த்தி வீதியிலே வலம் வரத் துடித்துக்கொண்டிருக் கிறார்கள். ஆனால் எங்களைப் போன்ற எதிர்க்கட்சியிலே இருக்கிற அரசியல் வாதிகள்—நீங்கள் வழக்கமாகச் செய்யமாட்டீர்கள், செய்வது கிடையாது— இப்போதாவது செய்து இருக்கிறீர்களா என்று நுணுக்கிப் பார்த்துக்கொண் டிருக்கிறோம்.

ஆனால் சில பத்திரிகைக்காரர்கள், பாவம், இலவு காத்த கிளி போல நல்ல திட்டம் வரப்போகிறது என்று நினைத்துக் கடைசியிலே—உங்களை ஆதரிக்கிற பத்திரிகைகள் எல்லாம்கூட—கைகொட்டிச் சிரிக்கிற அளவுக்கு நிலைமை உருவாகியிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், பூதாகாரமாக உருவெடுக்கப்போகிறது என்று கருதினார்கள். அதிலே படித்துப் பார்த்தால் ஒன்றும் இல்லாத நிலைமை உருவாகியிருக்கிறது.

எனக்குக்கூட நம்முடைய நாவலர் அவர்கள் வெளியிட்ட நிதிநிலை அறிக்கை ஆயிற்றே இது, ஒரு நாலு வார்த்தை புகழ்ந்து சொல்லவேண்டாமா என்று நான் நினைத்துப் பார்த்தேன். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கை

[திரு. துரைமுருகன்] [1980 ஜூலை

யிலே நல்ல தாளிலே அழகாக அச்சிட்டு இருக்கிறார்கள். நல்ல தாளி வெள்ளைவெளேரென்று அவரைப் போலவே இருக்கிறது. ஆனால் உருவ திலே இருக்கிறதே தவிர உள்ளத்திலே இருப்பதிலே ஏதாவது இருக்கிற என்று கேட்டால் ஒன்றும் இல்லை. சரியான உதாரணம் சொல்லவேண் மானால், தெருக்களிலே கண்ணாடிப் பெட்டிக்குள் பஞ்சு மிட்டாய் விற் கொண்டே ஒருவன் வருவான். ஒரு சிறிய குச்சியிலே அது மொசு மொ என்று இவ்வளவு பெரியதாக இருக்கும், ஆனால் அதைக் கையிலே வைத்தா ஒன்றுமே இருக்காது, கரைந்து போகும். அதேமாதிரித்தான் இது பார் பதற்கு பெரிய புத்தகமாக இருக்கிறது, ஏறத்தாழ 51 பக்கங்கள் இரு கின்றன, ஒன்றேகால் மணி நேரம் நாவலருக்கே படிப்பதற்கு ஆகியிருக் பொழுது, அந்த அளவிற்கு இதிலே ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை.

சரியான வார்த்தைகளிலே, நான் சொல்லவேண்டுமானால் முதலமைச் உதவியைத்தான் நாடுகிறேன். முதலமைச்சரைக் கேட்டார்கள், திராவி முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை வந்திருக்கிறதே படித்துப் பார் தார்களா என்று கேட்டார்கள். முதலமைச்சர் சொன்னார், படித்தேன் ரசித்தேன் என்று. எப்படி இருக்கிறது தெரியுமா, வழவழா, கொழகொழ என்று இருக்கிறது என்று சொன்னார். அதோடு முதலமைச்சர் விட்டா என்றால் இல்லை. மேலும் சொன்னார், வெண்டைக்காய், விளக்கெண்ணெ சோற்றுக்கற்றாழை இந்த மூன்றையும் கலந்து குழப்பினால் எப்ப இருக்குமோ அதுதான் தி.மு.க. வின் தேர்தல் அறிக்கை என்று சொன்னா முதலமைச்சர் சொன்ன அந்த வார்த்தைகளை நான் கடனாகப்பெற் முன்னவருக்குச் சமர்ப்பிக்கிறேன்.

மற்ற சில பத்திரிக்கைகள், அதற்குத் தண்டோரா எடுத்து பட்ட பட்டையாக, கொட்டை கொட்டை எழுத்துக்களிலே எழுதிக்கொண்டிரு கிறார்கள். விவசாயிகள் கடன்கள் 60 கோடி ரூபாய் ரத்து, மகிழ்ச்சியா இருக்கிறது, ரொம்ப வேகமாக இருக்கிறது. ஆனால் நிலைமை என்ன என் கொஞ்சம் நுணுக்கிப் பார்க்கிறபொழுது தெரிகிறது. விவசாயிகளுக்கு 6 கோடி ரத்து, பட்டினி கிடப்போருக்கு 100 ரூபாய், கர்ப்ப ஸ்திரீகளுக்கு 10 வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி—இவைகள் எல்லாம் என்ன மணிமேகலையிலே வருகிற அட்சய பாத்திரமாக இருக்கலாம்—அப்படிப் பார்க்கிறபோது திட்ட கள் பெரிது பெரிதாக இருக்கின்றனவே தவிர, கிட்டே வந்து பார்த்தா என்ன தெரிகிறது தெரியுமா? மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தங் ளுடைய மாவட்டத்திலேதான் பொய்மான் கரடு என்ற ஒன்று இருக்கிறது. அங்கே தொலைவிலே நின்று பார்த்தால் மான் நின்று கொண்டிருப்பது போலவே தெரியும், ஆனால் கிட்டே போய்ப் பார்த்தால் வான்வெளிதா



1980 ஜூலை 4] [திரு. துரைமுருகன்]

இருக்கும். அதுதான் பொய் மான், அந்த இடத்திற்குப் பெயர்தான் பொய் மான் கரடு, பொய்மான் கரடும், அரசியல் மலடும்தான் இந்த நிதிநிலை அறிக்கை.

(முற்பகல் 9-50)

ஆனால் உள்ளே நுழைந்து பார்த்தால்தானே விவசாயிகள் கடன் நிவாரணம் என்ன நிலைமைக்குப் போயிருக்கிறது என்பது தெரியும். ஏற்கெனவே, 1979 ஆம் ஆண்டு தஞ்சை இடைத்தேர்தலை முன்விட்டு, அவர்கள் எமது மகத்தான ரிலீஸ் ஆக வெளியிட்ட 40 கோடி ரூபாய் கடன் ரத்து இருக்கிறதே, அப்பொழுதே நாங்கள் இந்த அவையிலே மிக வெகுவாகப் பேசியிருக்கிறோம். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் 40 கோடி ரூபாய் ரத்து செய்யப்படவில்லை என்பதற்கு ஆதாரங்களை இங்கே எடுத்துக்காட்டியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்பொழுது அனாவாரி சர்ட்டிபிகேட் வந்தால்தான் கடன்களை ரத்து செய்வோம் என்பதற்காகக்கூட அனாவாரி சர்ட்டிபிகேட் என்றால் என்ன என்பதற்காக ஒரு அரைநாள் இந்த மன்றத்திலே விவாதம் நடைபெற்ற காட்சியெல்லாம் எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு திரு. எஸ். டி. எஸ். அவர்கள், அன்றைக்கு எடுத்துச் சுட்டிக்காட்டியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. எனவே, 40 கோடி ரூபாய் அன்றைக்கு ரத்து ஆயிற்றா இல்லையா என்பதற்கு ஒரு பெரிய பட்டிமன்றமே வைக்க வேண்டியது இல்லை; புள்ளி விவரங்கள் சொல்லும். 40 கோடி ரூபாய் அன்றைக்கே ரத்து ஆகவில்லை, சரி போகட்டும்; பழைய கதை வேண்டாம்; புதுக் கதையையே பார்ப்போம். இப்பொழுது என்ன நிலைமை? மத்திய சர்க்காரை நாங்கள் கேட்கிறோம், விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். தேர்தல் காலத்திலே சொன்னார்கள், மத்திய சர்க்காரைக் கேட்போம், கொடுக்காவிட்டால் இந்தச் சர்க்காரே தன்னந்தனியாக நின்று, "என்னை நம்பியே இந்நெடும்பகை தேடிக்கொண்டேன்" என்று சொன்னானே இராவணேஸ்வரன், அப்படி என்னை நம்பியே நான் இந்த வாக்குறுதியைக் கொடுக்கிறேன் என்று நம்முடைய முதலமைச்சர் அன்றைக்குச் சொன்னபொழுது மக்கள் நினைத்தார்கள், இவரல்லவோ கொடைவள்ளல், இவரல்லவோ நாடாள வந்த வல்லவர் என்று. விவசாயிகள் கடன்கள் அத்தனையும் ரத்து என்றார்கள். அடிபட்ட விவசாயி காயத்தைத் தடவிக்கொண்டான், வாழ்க முதல்வர் எம்.ஜி.ஆர். என்று சொன்னான். உதைபட்ட விவசாயி முதுகிலே தட்டிவிட்டான், வாழட்டும் அ.தி.மு.க. என்றான். சிறைக் கம்பிகளை எண்ணிக் காப்பேறியவன் கரங்களில் உங்கள் கொடியைப் பிடித்துக்கொண்டு முன்னாலே வந்தான். அந்த ஏழை விவசாயிகளை நீங்கள் ஏமாற்றினீர்கள்.

பாவம், அடியை மறந்தான், உதையை மறந்தான், சிறைசாலையை மறந்தான், வாகைக்குளத்திலே இந்தியத் துணைக் கண்டத்திலே சுதந்திரத்திற்குப் பிறகு சுட்டு வீழ்த்தினீர்களே பாக்கியத்தம்மாள், வேலம்மாள், அத்தனையையும் மறந்தான், ஆறு பிணங்களை ஒரேயிடத்திலே குழிவெட்டிப்போட்டுப் புதைத்தீர்களே, அந்தக் காட்சியையும் மறந்தான், கடனெல்லாம் ரத்து ஆ வேண்டும் என்ற எண்ணம்தான். ஆமாம், ஏமாந்து போனான்.

இப்பொழுது என்ன சொல்கிறீர்கள் என்றால், மத்திய சர்க்காரைக் கேட் போம் என்று இங்கேகூட நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடிதம் எழுதியிருக்கிறேன், எழுதப்போகிறேன் என்று. என் எழுதப்போகி தீர்கள் என்று பத்திரிகைக்காரர்கள் கேட்கிறார்கள். எழுதவும் என்றும் சொல்கிறார். அவர்கள்தான் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டார் களே என்று சொல்கிறார்கள். சும்மா சொன்னால் எப்படி ? எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டும், எழுத்து மூலமாகக் கேட்கப் போகிறோம் என்று சொல்கிறார். மத்திய சர்க்கார்தான் முடியாது என்று சொல்லிவிட்ட பிறகு ஏன் மாநில சர்க்கார் அதை ரத்து செய்யக்கூடாது என்று கேட்கிறேன்.

இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தால், " இதற்கிடையில் தமிழக அரசு, தம் சொந்த நிதி பொறுப்பிலிருந்து, விவசாயப் பெருமக்களுக்கு மேலும் சில சலுகைகளை வழங்க முன் வந்துள்ளது " என்று சொல்கிறார்கள். எப்படி ? " அரசு அளித்திருந்த தக்காவிக் கடன்களில் சுமார் 21 கோடி ரூபாய் இன்னும் பாக்கி நிற்கின்றது. இதில் ஏறக்குறைய 5 கோடி ரூபாய், டிராக்டர்கள் வாங்குவது, இயந்திரக் கலப்பை வாங்குவது, கிணறு தோண்டுவது போன்ற உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவும் முதலீடுகளுக்கான கடன்களாகும் " என்று சொல்கிறார்கள். 21 கோடியிலிருந்து 5 கோடியைக் கழித்து விட்டார்கள். ஏன் என்றால் இவர்களிடம் டிராக்டர் இருக்கிறது பாருங்கள், எனவே அவன் கட்டாவிட்டால் அதற்கப்புறம் வசூல் பண்ணலாம் அவன்கிட்டே சொத்திருக்கிறது, ஜப்திக்குப் போகலாம். டிராக்டர், கிணறு அதற்கப்புறம் கலப்பை ஆகியவை இருக்கின்றன, எனவே ஜப்திக்குப் போக லாம். ஆகவே, தக்காவிக் கடன் என்றாலே வராத கடன் என்று பொருள். அது ரொம்பப் பேரைப் பார்த்திருக்கிறது. எத்தனையோ பேரைப் பார்த்துவிட்டேன், போடா போ என்று ஒரு சினிமாப் பாட்டு இருக்கிறது. அதைப்போல, இந்தத் தக்காவிக் கடனும் எத்தனையோ சர்க்காரை நான் பார்த்துவிட்டேன் போங்கள் ஐயா போங்கள் என்று சொல்வது ; இது வராத கடன். அதைப்பார்த்து நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் ; இதை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்கிறீர்கள்.



எங்கள் ஊரில் ஒரு ஆள் இருக்கிறார், அவர் சில்லரைக் கடை வைத்திருக்கிறார். அவர் என்ன செய்வார் என்றால், அந்தக் கடையிலே உள்ள செல்லாத காசுகளையெல்லாம் எடுத்து ஒரு டப்பியில் போட்டு வைத்திருப்பார். கடைசியில், ஊரில் திருவிழா வரும்பொழுது, பிச்சைக்காரர்கள் வந்து கேட்பார்கள், இவர் எல்லோருக்கும் இரண்டு இரண்டு காசு போடுவார். ஏனென்றால், செல்லாத காசுகளைச் சேர்த்து வைத்திருக்கிறார் பாருங்கள். அதைப்போல, தக்காவிக் கடன் என்றால் என்றைக்குமே வராது, அந்த வராத கடன் எது எது என்று பொறுக்கி எடுத்துப் பார்த்தீர்கள் ; இந்தத் தக்காவிக் கடனைப் பற்றி ரத்து என்று சொல்கிறீர்கள். விவசாயப் பெருங்குடி மக்களே, எமது புரட்சித் தலைவர் செய்திருக்கின்ற திட்டம் பாரீர் ; 16 கோடி ரூபாய் ரத்து என்று சொல்கிறார்கள். நாவலரே சொல்வார் ; ' சீனி சக்கரை சித்தப்பா சுவற்றிலே எழுதிச் சுவைத்துப் பாரப்பா ' என்று. அதுதான் நடந்ததே தவிர, விவசாயிகளுக்குத் தக்காவிக் கடன் வட்டியும் முதலுமாகச் சேர்த்து 16 கோடி ரூபாய் ரத்து என்ற எமது மகத்தான ரிலீப், 16 கோடி ரூபாய் ரத்து. இது வராத கடன் ; வாங்க முடியாத கடன் ; உங்களாலே வசூல் பண்ணவே முடியாத கடன் ; தாசில்தார், பி.டி.ஓ. கிட்டே சும்மா கடன் வாங்குகிறமாதிரி வாங்கி அந்தக் காலத்திலேயே நின்றுபோன கடன் ; செல்லாத காசைத் தர்மம் பண்ணுவது மாதிரி பண்ண வாரீங்களே புண்ணியவான்களே ; கொடை வள்ளல்களே, இது நியாயமா ? என்றுதான் மனச்சாட்சியிலே கை வைத்துச் சொல்லுங்கள் என்றுதான் நிதியமைச்சரவர்களையும், நாடாள வந்திருக்கிற ஆளுங்கட்சிக்காரர்களையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, அதற்கு மேலே என்ன கடன் ? அதைக் கூட்டுறவுக் கடன் என்று சொல்கிறார்கள் குறுகிய காலக் கடன்களாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் சுமார் 97 கோடி ரூபாய் ' என்று சொல்கிறார்கள். குறுகிய காலக் கடன் என்றால் என்ன ? பயிர்க் கடன். பயிர்க் கடன் என்றால் என்ன ? பூச்சிக் கொல்லி மருந்து வாங்குவதற்கு, எரு வாங்குவதற்கு, விவசாயிகள் வேலை செய்ய வாங்குவதுதான், பயிர்க் கடன், குறுகிய கால கடன். 10 மாதத்திலே, 15 மாதத்திலே திருப்பிக் கொடுக்க வேண்டிய கடனுக்குப் பெயர் குறுகிய காலக் கடன். அந்தக் கடன் என்னவாயிற்றாம் ? ' பல ஆண்டுகளில் பருவ நிலைப் பொய்த்ததன் காரணமாகவும், மழை பொய்த்த காரணத்தாலும், விளைச்சல் பொய்த்ததன் காரணமாகவும், மத்திய காலக் கடன்களாக நீட்டிக்கப்பட்டன '. வாங்கியதோ பயிரிடுவதற்கு. ஆனால், விளைச்சல் இல்லை, பயிர் காய்ந்து போயிற்று. நான்கு மணிகள்கூட, விவசாயினுடைய வீடு நோக்கி வரவில்லை. ஆனால், அந்தக் கடன் என்னவாயிற்று என்று கேட்டால், மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டுவிட்டது. ஐந்து வருஷத்திற்கு. ஆகவே, விளையாததற்கு,

வராததற்கு, காய்ந்து போனதற்கு, பொய்த்துப் போனதற்கு, விவசாயிக்கு நான்கு நெல்மணிகூட இலாபம் கிடைக்காத அதற்காக வாங்கிய கடனை, மத்திய காலக் கடனாக மாற்றி அமைத்துவிட்டார்களாம்—அதாவது நீட்டித்து விட்டார்கள். அது எவ்வளவு என்று கேட்டால், 80 கோடி ரூபாய். அந்த 80 கோடி ரூபாயிலே என்ன செய்யப் போகிறார்கள் ? அதிலே ஐந்து ஏக்கர் வைத்திருக்கிறவன் 50 சதவிகிதம். இந்த ஐந்து ஏக்கர் நிலமுள்ள விவசாயி இருக்கிறானே, அவன் விடப்பட்டிருக்கிறான். ஐந்து ஏக்கர் நிலமும் அதற்குக் குறைவும் என்று ஆங்கில உரையிலே இருக்கிறது. ஆனால், தமிழிலே ஐந்து ஏக்கர் நிலம் என்று மட்டும் போடப்பட்டிருக்கிறது. அந்த ஐந்து ஏக்கர் நிலமுள்ள விவசாயிக்கு பயிர் பாதிக்கப்படவில்லையா ? அவ னுக்கும்தான் பாதிப்பு. அவனுக்கும்தான் நிலம் காய்ந்து போயிருக்கிறது. அவனும்தான் ஏழை விவசாயி. ஆனால், அந்த ஐந்து ஏக்கர்காரனுக்கு 50 விழுக்காட்டைக் கழித்து விட்டார்கள். ஐந்து ஏக்கர் என்றால் என்ன ஸ்டான்டர்ட் ஏக்கரா ? எங்கள் ஊரிலே ஐந்து ஏக்கர் வேறு, தஞ்சாவூரிலே ஐந்து ஏக்கர் வேறு. மானாமதுரையிலே ஐந்து ஏக்கர் வேறு, மதுரையிலே ஐந்து ஏக்கர் வேறு. ஐந்து ஏக்கரா என்றால், ஸ்டான்டர்ட் ஏக்கராவா கிடையாது. அதற்கு விளக்கம் இல்லை. அதற்காகத்தான் விளக்கெண்ணெய் அதற்காகத்தான் சோற்றுகற்றாழை—அவர் நன்றாகச் சொன்னார்? எப்படி வழவழா, கொழகொழா, எப்படியும் வைத்துக்கொள்ளலாம். ஐந்து ஸ்டான் டர்ட் ஏக்கராகவும் இருக்கலாம், வெறும் ஏக்கராகவும் இருக்கலாம். சும்மா ஏக்கரா—சும்மாவாகவும் இருக்கலாம். பினான்ஸ் செக்கரட்டரிக்குத் தெரி யாதா ? ஃபினான்ஸ் செக்கரட்டரி என்ன படித்திருக்கிறார் தெரியுமா ? அடேயப்பா, எம்.ஏ. பொருளாதாரம் படித்தவர், பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுத்தவர். அவருக்கெல்லாம் தெரியாதா ? நமக்கு எதற்கு வம்பு என்று விட்டுவிட்டார். இந்து பத்திரிகைக்காரர் எழுதியிருக்கிறார். இந்தமாதிரி விவகாரத்திலேயெல்லாம் அவர் தலையிடுவதே கிடையாது என்று எழுதியிருக்கிறார். அந்தப் பத்திரிகையிலே ரொம்ப அழகாகச் சொல்லி யிருக்கிறார்கள். இந்து பத்திரிகையோடு ஆயிரம் கருத்து வேற்றுமை எனக் குண்டு. ஆனாலும், அதனுடைய கம்பீரம் தாழாமல் அது தலையங்கம் எழுதியிருக்கிறதே, அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ரொம்ப அழகாக எழுதியிருக்கிறார்கள், இந்து பத்திரிகையினர்,

"The cancellation of farm debts is in fulfilment of the election promise made to small farmers. Neither the Budget speech of Mr. V. R. Nedunchezhiyan, the Finance Minister, nor the accom- panying Budget papers make clear how the funds for this purpose are to be secured . . ."

அதற்கு மேலேதான் ஃபினான்ஸ் செக்கரட்டரியிடம் வருகிறார், அந்தப் பத்திரிகைக்காரர்,





"It is important for the Government to ensure that its intentions in this regard are not defeated by technical obstacles, injuring in the process the goodwill that is sought to be generated by this gesture."

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சொல்லவில்லை. ஏன் ? ஃபினான்ஸ் செக்கரட்டரி பார்த்தார், நமக்கு எதற்கு வம்பு, போடச் சொன்னால், சட்டம் போட்டுவிட்டுப் போவோம், அந்தப் பிரச்னையே வேண்டாம், என்று விட்டுவிட்டார். அவருக்குத் தெரியும் என்ன நிலைமை என்று. பொருளாதாரம் படித்த அவர், சர்க்காரை நடத்துகிறவர். என்னவோ, அப்படிப்பட்ட நிலைமையிலே இருக்கிறவர் 50 விழுக்காடைக் குறைத்து, மீதி இருப்பதிலே 48 கோடி ரூபாய்க்குக் கணக்குப் போட்டிருக்கிறாரே, அதிலே ஏன் இவற்றைச் சேர்க்காமல் விட்டுவிட்டார் என்பதுதான் நான் கேட்கும் கேள்வியாகும். எனவே, ஐந்து ஏக்கர்காரனுக்கு அதைச் செய்ய வேண்டாமா என்று நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

ஆகவே, வராத கடனையும், பயிருக்கு வாங்கி, நெய்ந்து போன கடனையும், விவசாயிகளுக்குக் கொடுத்த குறுகிய காலக் கடனை, நடுத்தர காலக் கடனாக மாற்றி, விவசாயிகளை ஏமாற்றுகிற அளவுக்கு ஒரு திட்டத்தை நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அது ஒரு ஏமாற்று வித்தை. விவசாயிகளை மட்டுமல்ல, உங்களையே நீங்கள் ஏமாற்றியிருக்கிறீர்கள். இந்த நாட்டுப் பொருளாதாரத் தினையே ஏமாற்றியிருக்கிறீர்கள் என்பதைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

அடுத்து, நான் பேச வேண்டிய முக்கியமான இன்னொன்று, மின்சாரம், தொழில் துறை, இரண்டையும் இணைத்தே பேச விரும்புகிறேன், சுருக்க மாகவே. தொழில் வளர்ச்சி எந்நிலையில் இருக்கிறது என்பதைப்பற்றி சர்க்கா ருக்கு அதிக அக்கறை கிடையாது. ஏனென்றால், உங்களுக்கு அதைப்பற்றி அதிகமாகத் தெரியாதோ என்று நான் கருதுகிறேன். உங்கள் ஆட்சியிலே இந்தத் தொழில் துறை என்ன நிலைமைக்குப் போயிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

சித்ரா நாராயணசாமி என்ற தொழில் அதிபர் ஒரு கட்டுரை எழுதினார், மார்ச்சு மாதத்திலே. தி.மு.க. ஆட்சியில் தொழிற் வளர்ச்சியில் இந்தியா விலேயே மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு எம்.ஜி.ஆர். ஆட்சியில் 12-வது இடத்திற்குத் தள்ளப்பட்டது. கோப்புகள் தேங்கிக் கிடந்தன. தொழில் அதிபர்களை சந்திக்க மறுத்தார் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. ஆட்சி எப்படிப்பட்டது ? அதன் காலத்தில் தொழில் துறைகளின் முன்னேற்றம்

என்ன என்பதுபற்றி மார்ச்சு மாதம் வந்துள்ள 'ஷேர் மார்க்கட்' ரிப்போர்ட்டில்
எழுதியுள்ளார். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு
மூன்றாவது இடம் வகித்து வந்தது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில்
எம்.ஜி.ஆர். ஆட்சியில் 12-வது இடத்திற்கு தமிழ்நாடு தள்ளப்பட்டுவிட்டது.
தொழில் வளர்ச்சியில் முன்னேற தனது இடது காலை எடுத்து வைக்க
அ.தி.மு.க. ஆட்சி மறுத்து வந்தது. தொழில்களை துவங்க முன் வரும்
தொழிலதிபர்கள் எவரையும் எம்.ஜி.ஆர். சந்திக்க விரும்புவதில்லை. முதல்
வரின் அறையில் தேங்கிக் கிடக்கும் கோப்புகளுக்கு அளவே இல்லை. உள்ளே
போகும் கோப்புகளுக்கு மீட்சி கிடையாது. அவை மரணத்தைத்தான்
தழுவின. செயலற்ற நிலை—முடிவே எடுக்க முடியாத நிலை—யாரையும்,
எப்போதும் சந்தேகிக்கும் குணம்—இவைதான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்."
என்று குறிப்பிட்டிருந்தார். மூன்றாவது இடத்திலே இருந்த தமிழ்நாடு
12-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. சித்ரா நாராயணசாமி என்ன
மிகப் பெரிய அத்தாரிட்டியா, அவர் சொன்னால் நாங்கள் ஒத்துக்கொள்ள
வேண்டுமா என்று கேட்கக் கூடும். அதனால்தான் உங்களுக்கு மிக வேண்டிய
பத்திரிகை. இந்த நாட்டிலே படித்தவர்களாலே போற்றப்படுகிற இந்துப்
பத்திரிகை அதில் அழகாக எழுதி இருக்கிறது. இந்த நாட்டிலே மின்சார
வெட்டுக்கூட இல்லை என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. மின்சாரம்,
அது இருக்கிறதா இல்லையா என்றே தெரியவில்லை. 'காமாக' இருக்கிறது
கொஞ்ச நாளாக ரொமபக் 'காமாக' இருக்கிறது. அது என்ன நிலைமை
என்றே புரியவில்லை என்ன நிலைமை என்று சொன்னால், மின்சார வெட்டு
என் இல்லை என்று சொன்னால், அழகாக 'இந்துப்' பத்திரிகை எழுதி
யிருக்கிறது.

"If the demand for power is not as acute in Tamil Nadu as
it should be, it is because of the slowing down of industrial develop-
ment in recent years. There is no indication in the Budget of any
fresh thinking in this respect. What the State should do is to
organize the import of materials for fabrication and sale outside on
the Japanese model."

தமிழ்நாட்டிலே என் அதிகமான மின்சாரக் கட்டுப்பாடு தெரியவில்லை
தெரியுமா? அவனவன் தொழிலை, உற்பத்தித் திறனை முடக்கிக்
கொண்டான். அந்த உற்பத்தித் திறனை முடக்கிக் கொண்ட காரணத்தால்
மின்சாரம் வருகிறதா, இல்லையா என்பதை கவனிக்க முடியாமல் போய்
விடுகிறது. ஆகையினாலே தொழில் துறையிலே தேக்கம் ஏற்பட்டிருக்கிறது.
வளர்ச்சி கிடையாது. இந்த நாட்டிலே ஆரம்பிக்க வந்த—ரகுமான்கான்
சொன்னதைப் போல—அசோக்லேலாந்து விஸ்தரிப்புத் திட்டம், கோச்





பேக்டரித் திட்டம் புறக்கணிக்கப்பட்டது. நான் கூட என் தொகுதியில்
25 கோடி ரூபாயில் பெல் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று இரண்டு
முறை மத்திய அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் சொன்ன அந்த 'பெல்'
பாக்டரி ஆரம்பிக்கப்படும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்
படும் என்றும் இந்த அறிக்கையில் கோடிட்டு இருக்கிறார்களா என்றால்,
அதைப் பற்றியும் கிடையாது. நீங்கள் முதலீடு செய்ய வருகிறவர்
களையும் மதிப்பது கிடையாது, அவர்களைப் பார்ப்பதும் கிடையாது.
தன்னுடைய எண்ணத்தை கேலிச் சித்திரமாக இந்துப் பத்திரிகை வெளி
யிட்டிருக்கிறது. ஜப்பான் நாட்டைப்போல் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி, பிட்டப்
பண்ணி, விற்கலாம் என்கிறார்கள். மேனுபாக்சரிங் சைடிலே இருந்தது,
உற்பத்தித் திறனிலே இருந்து வந்தது, எஜென்சி திறனுக்கு வந்திருக்கிறது.
எனவே இந்துப் பத்திரிகை அழகாக கேலிச் சித்திரம் தந்திருக்கிறது.
உங்களுடைய தொழில் துறையிலே நீங்கள் அதிகம் கவனம் செலுத்தவில்லை.
இதை நான் சொல்லவில்லை இந்துப் பத்திரிகை சொல்லுகிறது. ஆனால்
நிதிநிலை அறிக்கையில் தொழில் துறையைப் பற்றி ஒன்றும் பெரிதாகச்
சொல்லவில்லை. தினமணிப் பத்திரிகைக் கூட சொல்லியிருக்கிறது. தினமணிப்
பத்திரிகை உங்களுக்கு ரொம்ப வேண்டிய பத்திரிகை, அந்தப் பத்திரிகை
என்ன சொல்லியிருக்கிறது என்றால் தொழில் துறையிலே நீங்கள் அதிகம்
அக்கறைக் காட்டவில்லை என்று தலையங்கம் தீட்டியிருக்கிறது.
எவ்வளவோ ஆதரித்து எழுதவேண்டும் என்று ஜாடைமாடையாக முயற்சி
செய்தாலும் முடியாமல் தன்னுடைய முடிவை வெளியிட்டிருக்கிறது.
என்ன இருந்தாலும் சிவராமன் சிவராமன்தான், அவருக்கு ஒரு சபாஷ்,
போடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறையைப் பற்றி என்ன நிலைமை? உங்களுக்கு அக்கறை
கிடையாது. மதிப்பிற்குரிய இரண்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த
பெரியோர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இப்போது
36 நூற்பாலைகளை இந்த சர்க்கார் துவக்கப்போகிறது. 36 நூற்பு
ஆலைகள். நூற்பாலைகளின் நிலைமை இந்த நாட்டிலே என்னவென்றால்,
"உற்பத்தித் திறன் சாதகமான விலை இவற்றின் காரணமாக நடப்பு
ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா நூற்பாலைகளும் நன்கு செயல்பட்டு
வருகின்றன." நல்ல முறையில் சாதகமான நிலை இருக்கிறது. நல்ல
பிரைஸ் இருக்கிறது. இதற்கு என்ன செய்ய வேண்டும். இப்போது
தமிழ்நாட்டிலே தனியார் துறையிலே 36 புதிய நூற்பாலைகள் ஆரம்பிக்கப்
படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நல்ல விலை, நல்ல
சாதகமாக இருக்கும் என்றால் என்ன செய்யவேண்டும். 36 தனிப்பட்ட
முதலாளிகளை ஊக்குவிக்கப் போகிறீர்களா இது ஜாயின்ட் செக்டார்—

ஸ்பிக்—போலக் கூட அல்ல. அரசு சர்க்கரை மில்களை எல்லாம் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படித்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டுள்ள நேரத்தில் இப்போது 36 மில்களை தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கொடுக்கிறீர்கள் இது ஏகபோகத்துக்கு வழி வகுக்காதா? நீங்கள் ஏகபோகத்திற்கு வழி வகுக்கிறீர்கள் என்று அவர்கள் சார்பிலே மட்டுமல்ல, எங்கள் சார்பிலும் நான் கேட்க விரும்புகிறேன். இது ஏகபோக முதலாளித்துவம் இல்லையா? எலெக்‌ஷன் நேரத்தில் இந்த 36 பேர்கள் என்ன செய்தார்கள்? இப்போது அதற்குப் பிரதிபலனாக இதைச் செய்கிறீர்களா? இது என்ன தொழில் கொள்கை. இதுதான் சமதர்மமா, இதுதான் அண்ணாயிசமா, இதுதான் பெரியாரிசமா, இது தான் புரட்சியிசமா? என்று கேட்க ஆசைப்படு கிறேன். எதற்காக இந்த 36 நூற்பாலைகளைத் தூக்கி தனிப்பட்ட முதலாளி களிடத்தில் தருகிறீர்கள் என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இதிலே இன்னொன்றையும் சொல்கிறீர்கள். இராணிப் பேட்டை, ஓசூர் ஆகிய இடங்களில் புதிய தொழில் பகுதிகளை சிப்காட் நிறுவனம் அமைந்துள்ளது என்று சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் அந்த நிறுவனங்களை அங்கே ஏற்படுத்தி னோம். யாரோ எங்கேயோ ஆரம்பித்ததை எல்லாம், நாங்கள் தான் செய்தோம் என்று சொல்வதும், நாங்கள் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்வதும் எந்த அளவிற்கு நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. தேங்காய் நார் தொழிற்சாலையை மட்டும் கூட்டுறவு முறையில் சர்க்கார் ஆரம்பித்து விட்டு, நூற்பாலைகளை மட்டும் தனிப்பட்ட முதலாளிகளை விட்டு ஆரம்பிப்பது என்று சொன்னால், இந்தச் சர்க்கார் எந்த அளவிற்கு முதலாளிகள் பக்கம் பாசத்தோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமத் தொழில்கள் என்ற தலைப்பில் பொற்கொல்லர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக வேலையற்று இருக்கும் பொற்கொல்லர்கள் பற்றிய விவரங்கள் உடனடியாகத் தொகுக்கப்படும்; அதன் அடிப்படையில் பொற்கொல்லர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒரு பொற்கொல்லர் சங்கம் அமைக்கப்படும்; அமைத்து என்ன செய்யும்? வேலை இல்லாமல் உள்ள பொற்கொல்லர்கள் பற்றிய ஸ்டாடிஸ்டிக்ஸ் கலெக்ட் செய்து, அதன் அடிப்படையில் பொற்கொல்லர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சரி. அந்தச் சங்கம் மேற்கொண்டு என்ன செய்யும்? ஏழை எளிய மக்களுக்கு மலிவு விலையில் திருமணத் தாலி செய்து தரும். முதலில் யார் யார் வேலை யற்று இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்து, அதற்குப் பிறகு சங்கம் அமைத்து, அதற்குப் பிறகு அவர்கள் மூலமாக ஏழை எளிய



மக்களுக்கு மலிவு விலையில் தாலி செய்து தரப்படும்—இது எப்படி இருக்கிறது என்றால்,—காலையில் எழுந்து குளக்கரைக்கு சென்று நின்று, கொக்கு வருகிறதா என்று காத்துக்கிடந்து, பிறகு கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்து, வெய்யில் வருகிறதா என்று பார்த்திருந்து, அந்த வெய்யில் வந்தவுடன் அந்த வெண்ணெய் உருகி, கொக்கு கண்ணில் வழிந்து, பார்வை மங்குகிறபோது—கொக்கைப் பிடிப்பது என்று சொல்வார்களே அதைப்போல—நல்ல கதை விட்டு இருக்கிறீர்கள்—சார் உள்ளபடியே இதற்கு என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. நானும் எத்தனையோ பட்ஜெட் படித்துப் பார்த்து இருக்கிறேன். இந்த பட்ஜெட் மாதிரி சப்ஜெக்ட் இல்லாத பட்ஜெட் நான் படித்தது கிடையாது—அப்படிப் பட்ட நிலையில் இந்த பட்ஜெட்டை வைத்து இருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையில் தான் இப்படிச் செய்து இருக்கிறீர்கள் என்றால், வேறு துறையில் ஏதாவது செய்து இருக்கிறீர்களா என்று பார்த்தேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்து இருக்கிறார்கள். அதனால் விட்ட குறை தொட்ட குறை என்பார்களே அதைப்போல அது குறித்து ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு மொத்தம் கிட்டத்தட்ட 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர் 12 ஆண்டுத் தேர்வுகளை எழுதியிருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சிறப்பான பணியைச் செய்து இருக்கிறார்கள் என்று நான் பாராட்டுகிறேன். இந்த ஆண்டு 1.20 இலட்சம் பேர் எழுதி இருக்கிறார்கள் என்று சொன்னால், சென்ற ஆண்டு 79,000 பேர்—அதாவது கிட்டத்தட்ட 80,000 பேர் புகுமுக வகுப்புத் தேர்வு எழுதியிருந்தனர். ஆகவே, வித்தியாசம் கிட்டத்தட்ட 40 ஆயிரம் பேர் வருகிறது. இந்த 40,000 பேர்களில் தற்போது புதிதாகத் தேர்வு எழுதிவிட்டு வர இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை என்ன? அவர்களுக்கு மேல்படிப்பு படிக்க என்ன வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு இருக்கிறது. அதிலே சில பேர் டாக்டர் படிப்பு படிக்க வரலாம். இன்ஜினியரிங் படிப்பு படிக்க வரலாம். மற்ற இடங்களில் படிப்பதற்கு வரலாம். அவர்களுக்கு எந்தெந்த இடங்களில் என்ன அரேஞ்ச்மெண்ட் செய்து இருக்கிறீர்கள். இதை நான் கேட்கவில்லை, 'இந்து' பத்திரிகை கேட்கிறது. கொள்கை இல்லாமல் மாட்டிக்கொள்ளப்போகிறீர்கள், சிலந்தி வலையில் மாட்டிக்கொள்வது போல் நிலைமை வந்து விடக்கூடாது என்று 'இந்து' பத்திரிகை தலையங்கமே எழுதி இருக்கிறது. 40,000 பேர் புதிதாக வருகிறார்கள் என்று சொன்னால், ஓட்டல்காரன் கூட இன்றைக்குச் சந்தை என்று தெரிந்தால் அதிகமாக ஆட்கள் வருவார்கள் என்று தெரிந்து இரண்டு படி அரிசி அதிகம் போடுவான்—இந்த அரசாங்கம் என்ன திட்டம் வைத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, போன ஆண்டே கலைக் கல்லூரிகளில் பட்டப்படிப்புப் பிரிவில் 10,000 இடங்கள் காலியாக இருந்தன என்று நான் இந்த அவையிலேயே பல்வேறு முறை சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும் மாணவர்கள் வருவார்கள் என்றால், அதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. துரை முருகன் :** 40,000 பேர் அதிகமாக வர இருக்கிறார்கள் என்கிற போது, ஒரு 500 பேர் வரமாட்டார்களா, 200 பேர் வரமாட்டார்களா, டாக்டருக்குப் படிக்க, இன்ஜினியருக்குப் படிக்க—அதிகம் இல்லாவிட்டாலும் —பாரதக் கதையில் வருவதைப்போல 5 ஊர், 5 வீடு என்பதைப் போல ஒரு 5 சீட் அதிகரிக்கப்பட்டு இருக்கிறதா ? சென்ற ஆண்டு 80,000 பேர் பி.யு.சி. எழுதினார்கள் என்கிற சாதனையைப் பார்க்கிறபோது, இந்த ஆண்டு கிட்டத்தட்ட 1.20 இலட்சம் பேர் 12-ஆண்டு தேர்வு எழுதியுள்ளனர் என்பது மகத்தான சாதனைதான். இதனால் ஏற்படும் விளைவுகளைச் சமாளிக்க என்ன திட்டம் வைத்து இருக்கிறீர்கள் ? உங்களுக்கு ஆதரவாக இருக்கும் 'இந்து' பத்திரிகையும் இந்தக் கவலையைத் தெரிவித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டில் எனக்கு மிகவும் பிடித்தது இரண்டு அம்சங்கள். ஒன்று—வேலைக்கு வாய்ப்புறுதி—மற்றொன்று—நலிந்தோர் நலன். இந்த இரண்டும் அருமையான திட்டங்கள். ஏனென்றால் இது இரண்டும் உங்களுடைய திட்டம் கிடையாது. இந்த இரண்டுக்கும் உங்களுக்கும் சம்பந்தம் கிடையாது. நாவலர் அவர்கள் அடிக்கடி சொன்னார்கள்— சந்திரத்துச் சொத்துக்கு தாத்தையய்யங்கார் உத்தரவு எதற்கு என்று. இந்த இரண்டு திட்டங்களும் உங்கள் திட்டங்கள் அல்ல. மத்திய அரசு பணம் கொடுக்கிறார்கள் வேலைக்கு உணவு என்ற திட்டத்திற்காக. அந்தத் திட்டத்தைத் தூக்கி, பெயரை மாற்றி, வேலைக்கு வாய்ப்புறுதித் திட்டம் என்று சொல்லி இருக்கிறீர்கள். மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்காக கோதுமை கொடுத்தார்கள். அதை நீங்கள் அரிசியாகக் கொடுக்கிறீர்கள். ஆகவே, இதற்கும் உங்களுக்கும் சம்பந்தமே கிடையாது. அப்படி இருக்கிற போது, இந்த பட்ஜெட்டிலே நீங்கள் என்ன செய்து இருக்கவேண்டும் என்று சொன்னால், இந்தத் திட்டத்தைச் சொல்லி, இதற்காக நாங்கள் மத்திய அரசாங்கத்திற்குத் தலைவணங்குகிறோம் என்று சொல்லிவிட்டு, உங்களுடைய திட்டம் என்ன என்பதைச் சொல்லவேண்டும். அதை நீங்கள் சொல்லவே இல்லையே என்று தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



(முற்பகல் 10-10)

இன்னொன்று பாருங்கள், இந்த நலிந்தோர் நலன், யாருடைய திட்டம், யார் செயல்படுத்துவது என்று பாருங்கள். உலக வங்கியின் உதவியுடன் சத்துணவுத் திட்டம் இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும். இது முழுக்க உங்களுடைய திட்டம் அல்ல ; முழுக்க முழுக்க இரவல் வாங்கிக் கொடுக்கிற ஒரு திட்டம். முழுக்க முழுக்க 'வேர்ல்டு ஹெல்த் ஆர்கனைசேஷன்' கொடுக்கிறது ; உங்களுடைய ஆளைப்போட்டு விநியோகிக்கிறீர்கள். அவர்கள் உணவு கொடுக்கிறார்கள், உங்கள் ஆளை வைத்து விநியோகிக்கிறீர்கள் ; அவர்கள் மருந்து கொடுக்கிறார்கள் ; உங்கள் ஆள் கையிலே கொடுத்து விநியோகிக்கிறீர்கள். 'வழிப்பிள்ளையாரை எடுத்து கடைத் தேங்காய்க்கு உடைக்கிற மாதிரி' அவர்கள் கொடுக்கிறார்கள், உங்கள் ஆளை வைத்து விநியோகம் செய்கிறீர்கள் ; இப்படித்தான் தாய்மார்களுக்கு மருந்தும் சத்துணவும் போய்ச் சேருகிறது.

**திரு. மு. அம்பிகாபதி :** வழித் தேங்காயை எடுத்து கடைப்பிள்ளையாருக்கு உடைப்பதா அல்லது கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதா ? (சிரிப்பு)

**திரு. துரை முருகன் :** கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது என்பதுதான் சரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள் ; அரை மணி நேரம் ஆகிறது.

**திரு. துரை முருகன் :** இதை நீங்கள் முதலிலே சொல்லியிருந்தால் நான் வேகமாகச் சொல்லி முடித்திருப்பேன். இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள் ; வேண்டுமானால் எங்களுடைய நேரத்தில் குறைத்துக்கொள்ளுங்கள்.

இந்தத் திட்டத்திலே நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் ? இது முழுக்க முழுக்க 'வேர்ல்டு ஹெல்த் ஆர்கனைசேஷன்'-ஆல் செயல்படுகிற ஒரு திட்டமே ஒழிய உங்களுடைய பங்கு இதிலே ஒன்றும் இல்லை. இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் தாய்மார்களுக்கு அடிப்படை மருத்துவம், சத்துணவு பற்றி பயிற்சி அளிக்கப்படும். அதற்குப் பிறகு 7-வது மாதத்திலிருந்து 4-வது மாதம் வரையில் தாய்மார்கள் உடல் நலம் பரிசோதிக்கப்பட்டு, உணவும் மருந்தும் கொடுக்கப்படும் ; அதற்காக 150 ரூபாய் செலவிடப்படும். ரொம்ப தமாஷாக இருக்கிறது. சந்திரமதியில் சொன்னமாதிரி ஒன்றாம் மாதத்தில் உடல் மெலிந்து, இரண்டாம் மாதத்தில் நடை தளர்ந்து என்று இப்படியே போய், 7-ம் மாதத்திலிருந்து 4-ம் மாதம்

[திரு. துரைமுருகன்] [1980 ஜூலை

முடிய 150 ரூபாய் தாய்மார்களுக்குக் கொடுக்கப்படும் என்பதும் போய்விடும் இந்த 150 ரூபாயை வாங்குவதற்கு தாய்மார்கள் எங்கே வரவேண்டும்? கொட்டாம்பட்டிக்கு வரவேண்டும். அதற்கு ஒரு திட்டம். எந்தத் திட்டத்தைப் பார்த்தாலும் இப்படி பஞ்சு மிட்டாய் போல் குறுக்கிக்கொள்கிறீர்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று, இலவச உணவுத் திட்டம். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும். இந்த வறுமைக்கோடு இப்போது நம்மிடம் மாட்டிக்கொண்டு படாதபாடு படுகிறது. வறுமைக்கோடு, வறுமைக்கோடு என்று சொல்லி, இப்போது அது வறுமைக்கோட்டுக்குக் கீழே போய்விட்டது. அப்படிப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு இலவச உணவு. அன்றைக்கு என்ன சொன்னார்கள்? “வேலையற்ற காலத்தில் பட்டினிக் கிடந்து வாழ்க்கை நடத்த வழியற்று, வேலை கிடைக்காத காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசி அல்லது ஒரு ரூபாய்—அவர்கள் யாராக இருந்தாலும் ஒவ்வொரு ஏழைக்கும், பெண்ணுக்கும்—கிடைக்கச் செய்வோம்” என்று ‘இதனால் சகலவிதமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்’, என்று மார்த்தாண்ட மன்னன் போல அந்த பிரகடனத்தைச் செய்தார்கள். 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாம். போனஸ் மாதிரி கொடுப்பதாகச் சொன்னீர்கள்.

இப்போது என்ன சொல்கிறீர்கள்? வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்க வேண்டும். எல்லோருக்குமா? கிடையாது. ஏழைகளாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல. அவர்கள் முதியோர் உதவித் தொகை, கைம்பெண்கள் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை, கண்ணொளி அற்றோர் உதவித் தொகை, விவசாயத் தொழிலாளர் உதவித் தொகை—இவற்றைப் பெறுகிறவர்களுக்கு மட்டும் தான் ஒரு கிலோ அரிசி வழங்கப்படும் என்கிறார்கள். இப்படி வாரம் எல்லாம் என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. துரை முருகன்:** இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். அந்த நேரத்தை எங்கள் பக்கத்திலே பேசுகிறவர்களுக்குக் குறைத்துக் கொள்ளுங்கள்.

இந்த இலவச அரிசி வாங்கக்கூடியவர்களுக்கு இவ்வளவு தகுதி இருக்க வேண்டும்; எல்லோருக்கும் கிடையாது. ‘சரி பரியாகி’ என்று சொல்வார்களே, இப்படி ஒன்றன்பின் ஒன்றாக எல்லாம் தேய்ந்து போய் கடைசியில் ஒன்றும் இல்லை என்றாகி விடும்,



1980 ஜூலை 4] [திரு. துரைமுருகன்]

இன்னொன்று. முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் மொத்தம் எவ்வளவு பேர்கள் என்றால் 130,000. இந்த 63-வது பாராவில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் இந்த ஒரு கிலோ அரிசி தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் யாரை ஏமாற்ற இந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறீர்கள்?

முதியோர் பென்ஷனை 25 ரூபாயாக்கி இருப்பதாகச் சொல்கிறீர்கள். அதுவும் விவசாயத் தொழிலாளர்களையும் இதிலே சேர்த்துவிட்டீர்கள்; விவசாயத் தொழிலாளர்களைத்தான். வேலை செய்ய இயலாத ஆதாவற்ற விவசாயத் தொழிலாளர்களைத்தான். வேலை

கிராமங்களில் நிலையான வேலையின்றி இருப்பவர்களுக்கு நிலை வாய்ப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ‘ரெகுலர்’ யான என்றால் ‘பெர்மனன்ட்’ என்று வரும். ஆனால் நீங்கள் எவ்வளவு வேலை என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். மேலும், நிலையான வேலை யின்றி, வசதியற்று, ஆதாவு ஏதுமின்றி, ஏழை எளியவராய் வறுமைக் கோட்டிற்குக் கீழும் வாடுபவர்—இப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க முயற்சி செய்யும் நிலைமை இருக்கிறது. அடுத்து பட்டினிச்சாவு. பட்டினிச்சாவு எப்படி வருகிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துவிடுங்கள். நேரம் ஆகிவிட்டது. அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. முடித்து விடுங்கள்.

**திரு. துரை முருகன்:** இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். முடித்து விடுகிறேன். எங்கள் கட்சியிலிருந்து வேண்டுமானால் ஒருவர் பேசுவதைக் குறைத்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறையபேர் பேச வேண்டி இருக்கிறது. நீங்கள் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. துரை முருகன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அடுத்து பட்டினிச் சாவு .... (குறுக்கீடு) பட்டினிச்சாவு ஏற்படாமல் தடுக்கும் வகையில் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது, என்றும், ஏழை எளியவர் வகை ஏதுமின்றி பட்டினியால் மிகவும் வாடும் நிலை ஏற்பட்டால் அத்தகையோருக்கு 100 ரூபாய் கொடுப்பதாகவும் கூறுகிறார்கள். அவ்வாறு கொடுப்பதற்கு பணம் ஏதாவது ஒதுக்கி இருக்கிறீர்களா? கிடை யாது. அதற்கு ரெவின்யூ எக்ஸ்பெண்டிச்சரும் கிடையாது. கேப்பிட்டல் எக்ஸ்பெண்டிச்சரும் கிடையாது. ஆகவே அந்தத் திட்டத்தால் ஒரு பயனும் கிடையாது. யாருக்கு 100 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது?

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட நாவலர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை படித்தபோது, "கள்ளிருக்கும் மலர் கூந்தல் ஜானகியின் காந்த காதல் உள்ளிருக்கும் என கருதி ஊடுருவியதோ ஒருவன் வாள்" என்று சொன்னது போல ஒவ்வொரு பக்கமாகவும் ஒவ்வொரு வரியாகவும், படித்துக் கொண்டிருக்கும்போதே உள்ளிப்பாக நமக்கு ஏதாவது கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டே வந்தார். அவர் வெளியிலே செல்கிறபோது பத்திரிகை யாளர்கள் அவரை அபிப்பிராயம் கேட்டதற்கு 'பொதுமக்கள் பாராட்டினால் எனக்கு சரிதான்' என்று சொன்னார். கலைஞர் அவர்களே கூட போற்ற வில்லை என்றாலும் தூற்றவில்லை. அந்த விதத்தில் நிச்சயமாக இது ஒரு நல்ல பட்ஜெட். இதில் ஏதாவது குறைகள் இருக்குமானால், ஓட்டை உடை சல்கள் இருக்குமானால் அதை விமர்சிக்காதவர் அல்ல எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். கலைஞர் இதை தூற்றாததிலிருந்தே இது நியாயமான பட்ஜெட், நிதர்சனமான பட்ஜெட் என்று சொல்லவிரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் இதை பொய்மான் காடு என்று சொன்னார். அது பொய்மான் காடு அல்ல. அவர் கண்ணுக்கு அப்படி தெரிகிறது. அவர் காவல் நிலையை பார்க்க வேண்டியது இல்லை. அழகிய சித்திரம் எழுதியது போல், வெள்ளை செதுக்கியது போல் உள்ள 'கொல்லிப் பாவை' என்று சொல்வார்களே அது போன்ற மிக அழகு நிறைந்த பொற் சிலை இது என்பதை நான் பணிவோடு அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொன்னார்கள். விவசாயக் கடன்களை ரத்து செய்தது பற்றி மிக வேடிக்கையாகச் சொன்னார்கள். "கடந்த காலத்தில் இந்த அரசு டிஸ்மிஸ் செய்யப்படுவதற்கு முன்பு, புரட்சித் தலைவர் அவர்கள் ஏற் கெனவே கூட்டுறவு வங்கிகளின் கடனை திருப்பிக் கொடுக்காதிருந்த விவசாயி களுக்காக, திரும்பவும் கடன் கொடுக்க இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு 43.5 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள்.

எற்கெனவே நமது புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் காலத்தில் விவ சாய கடன்கள் ரத்து செய்யப்படும் என்று சொன்னார்கள், அதன்படியே செய்திருக்கிறார்களே தவிர வேறல்ல. தமிழ்நாட்டிலேயே சொன்னதை செய்வதும், செய்வதை சொல்வதும் புரட்சித் தலைவர் ஒருவர்தான் என் பதை நான் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆளுநர் உரைமீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். "ஏழைகளுக்கு 1 கிலோ அரிசி, மலிவு விலையில் தாலி தருகிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். விவசாயக் கடன்களை நானே முன்னின்று ரத்து செய்வேன் என்று சொல்கிறார். கர்ப்பிணிகளுக்கு



சத்துணவு கொடுக்கப்போகிறேன் என்று சொல்கிறார். இதெல்லாம் நடக் கிற காரியமா? இதிலே வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்கள், வறுமை யினால் சாகிறேன் என்று சொன்னால், அந்த சாவை தடுப்பதற்கு 100 ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். நடைபெறுகிற காரியமா இவைகள் எல்லாம்? பார்க்கத்தான் போகிறேன், அப்படி நிறைவேற்றினால், பாராட்டு வோம்" என்று சொன்னார்கள்.

ஆனால் நிதிநிலை அறிக்கையை கொடுக்கிறபோது, ஆளுநர் உரையில் வாக்களித்திருப்பவைகளுக்கெல்லாம் நிதி அமைச்சர் இதில் எழுத்து வடிவம் கொடுத்திருப்பது மாத்திரம் அல்ல, எப்படியெல்லாம் செய்வோம் என்று மிக விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். வறுமைக் கோடு என்றால் என்ன என்று எதிர் கட்சித் தலைவர் கேட்டார்கள். நகரத்திலே உள்ளவர்கள் தினம் 2½ ரூபாய் வருமானமும், கிராமங்களிலே உள்ளவர்கள் தினம் 2 ரூபாய் வருமானமும் உள்ளவர்கள் தான் வறுமைக் கோட்டிலே உள்ளவர்கள். அதற்கு குறைவாக வருமானம் உள்ளவர்கள் தான் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் என்று மத்திய அரசால் சொல்லப்படுகிறார்கள். இந்த பட்ஜெட்டை எதிர்க்கட்சியிலே உள்ள சிலரும், எல்லாப் பத்திரிகைகளும், அநேகமாக 90, 92 சதவித பத்திரிகைகளும், மற்றும் எல்லா தரப்பினரும் விவசாயிகளும், வியாபாரிகளும், தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் பாராட்டியிருக் கிறார்கள். அதை வைத்துக்கொண்டு பார்த்தால், இந்த பட்ஜெட்டைப்போல் புரட்சிகரமான பட்ஜெட்டை எந்த மாநிலமும் இதுவரை தயார் செய்ததில்லை. பம்பாயில் கூட மராட்டிய மாநில அரசு சிறு விவசாயிகளுக்கென, வட்டி இல்லாமல் அசலில் 49 கோடி ரூபாய்தான் ரத்து செய்வதாக அந்த மாநில முதல்வர் அந்துலே சொன்னார். ஆனால் தமிழக பட்ஜெட், சுதேசமித்திரன் பத்திரிகையின் தலையங்கத்தில் உள்ளது போல், வேறு மாநிலத்திற்கு மட்டும் அல்ல, மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சமர்ப்பித்த மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டிற்கு கூட ஈடுகட்ட கூடிய பட்ஜெட் என்று சொல்கிறேன். இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய பத்திரிகை சுதேசமித் திரனே அதை புகழ்ந்து எழுதியிருக்கிறது.

எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஏதோ தெரியாமல், எதிர்காலத்தில் எப்படி நிறைவேற்றுவோம் என்று பொறுப்பு உணராமல் தேர்தல் காலத்தில் வசீகரமான வாக்குறுதிகளை அள்ளி வீசியிருக்கிறார்கள், அவை எப்படி நிறைவேற்றப்படும் என்று நினைத்தார்கள். அத்தனை வாக்குறுதிகளையும் புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள அரசில் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அவற்றிற்கு எழுத்துவடிவம் தந்திருக்கிறார்கள். விவசாயிகள் கடன்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ரூ. 43.5 கோடி அளவிற்கு நிவாரணம் கொடுத்ததோடல்லாமல் இப்போது மேற்கொண்டு ரூ. 60 கோடி

வரை அசலும் வட்டியுமாகச் சேர்த்து கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். அதேநேரத்தில் மத்தியில் உள்ள அரசாங்கத்தின் நிலை என்னவென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திட்டங்களை புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்துவிட்டு மத்திய அரசிடம் விண்ணப்பம் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லவில்லை. இதற்காக ஏராளமான தொகை ஆகும், நாங்கள் மத்திய அரசிடம் இதைக் கேட்போம் என்றுதான் நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு உதவுகிற கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு உணர வேண்டும். பணவீக்கம், விலைவாசி உயர்வு இவை அதிகமாகி வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு உயர்ந்திருக்கும் சூழ்நிலையில் அதிகவருமானம் வருகிற வரிவிதிக்கிற அதிகாரம் பெரும்பாலும் மத்திய அரசின் கையில் இருக்கும்போது மத்திய அரசு இதுபோன்று பேசாமலாவது இருக்கவேண்டும்; மத்திய அரசில் உள்ளவர்கள் மாண்புமிகு R. V. சாமிநாதன் போன்றவர்கள் மாநில அரசு தீர்க்கவில்லை என்று சொன்னால் நாங்கள் தீர்ப்போம் என்று சொன்னார்கள். ஆட்சிக்கு வந்தால் நாங்கள் தீர்ப்போம் என்று தேர்தலின்போது அன்றைக்கு சொன்னார்கள், ஆனால் புரட்சித் தலைவர் அவர்களும் தேர்தலின்போது சொன்னார்கள், சொன்னபடியே இன்று ஐந்து ஏக்கர்களுக்கு குறைவாக உள்ள விவசாயிகளின் கடன்களை, அசலையும் வட்டியையும் சேர்த்து, இப்போது தீர்த்திருக்கிறார்கள், ரத்து செய்திருக்கிறார்கள். இதை உண்மையில் விவசாயிகள் பாராட்டுவார்கள். 'மார்ஜினல் பார்மர்ஸ்', 'ஸ்மால் பார்மர்ஸ்' என்று சொல்கிறார்கள். எல்லா விவசாயிகளுக்கும், அவர்கள் யாராக இருந்தாலும் சரி பரவாயில்லை, அவர்கள் கடன்களை எல்லாம் தீர்க்கவேண்டும், ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால் அது நடக்கமுடியாத காரியம். ஸ்மால் பார்மர்ஸ் அல்லது சிறு விவசாயி என்று சொன்னால் மூன்று ஏக்கர்களுக்கு குறைவாக உள்ளவர்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள இந்த அரசு தனது நிதிநிலை அறிக்கையில் ஐந்து ஏக்கர்களுக்குக் குறைவாக உள்ள அத்தனை பேர்களுடையவும் கடன்களை ரத்து செய்திருக்கிறது, அசல் வட்டி உட்பட. ஆகவே இப்படி விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிவாரணம் உண்மையான நிவாரணமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றும் சொன்னார்கள் வாகைக்குளத்தை நினைவு படுத்தினார்கள். மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர் அவர்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது கோவையில் 19 பேர்களைச் சுட்டுக்கொன்றதும், அப்படி சுட்டுக்கொன்றவர்களின் நினைவு நாள் சென்னையில் கொண்டாட நாளைக்கு வர இருக்கிறது என்பதையும் நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதை எதிர்கட்சித் தலைவர் அவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். மலிவு விலையில்



ஏழை எளியோருக்கு திருமண காலத்தில் தாலி தருவது பற்றி சொன்னோம். அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில், வேலை இல்லாதிருக்கும் பொற்கொல்லர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைத்து தாலி கிடைக்க வழிவகை செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் காலத்தில் இதைத்தான் சொன்னோம். வேலை இல்லாத பொற்கொல்லர்களுக்கு சங்கம் அமைத்து மலிவு விலையில் தாலி கொடுப்போம் என்றுதான் உறுதி கொடுக்கப்பட்டது. அதே உறுதிதான் இப்போது எழுத்து வடிவமாக நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் யார் வேலையில்லாத பொற்கொல்லர்கள், எப்படியெல்லாம் கொடுப்போம், யார் யாருக்குக் கொடுப்போம் என்பதுபற்றிய பட்டியல், விளக்கங்கள் எல்லாம், அதுபற்றிய ஏற்பாடுகள் எல்லாம் பிற்பாடு தனியாகச் சொல்லப்படும். ஆதரவற்ற விவசாயிகளுக்கு ஓய்வூதியம் கொடுப்போம் என்று சொன்னோம். நிதிநிலை அறிக்கையில் கொடுத்திருக்கிறோம். அதேபோல் வறுமைக்கோட்டின் கீழே உள்ளவர்களுக்கு, அவர்கள் தான் திக்கற்றவனாக நிற்கிறேன், எனக்கு வேறு வழி இல்லை சாகப்போகிறேன் என்று சொன்னால், வறுமை சாவை தடுப்பதற்கு அவர் ரூ. 100 பெறலாம் என்று சொன்னதற்கு யாரிடம் செல்வார்கள், எப்படி கொடுப்பார்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆளுநர் உரையின்போது, தெளிவாக நிதிநிலை அறிக்கையில், கிராம சேவக்கிடம் ரூ. 100 பெறலாம் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது ஹரிஜனக் குடும்பங்களில் உள்ளவர்கள் யாராவது இறந்து போனால், ஏழையாய் இருந்தால், ரூ. 50 கிராம சேவக்கள் மூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மூலம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் வறுமையால் சாவதைத் தடுப்பதற்கு ரூ. 100 கிராம சேவக் மூலம் பெறுவது என்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அடுத்து, கர்ப்பிணிகளுக்கு ஏழு மாதம் என்று சொன்னவுடன்—சந்திரமதியை நினைவுபடுத்தினார் எதிர்க்கட்சி உறுப்பினர். 'நான் டாக்டர்கள் வல்லுநர்களை சாட்சிக்கு அழைக்கிறேன். ஒரு கர்ப்பிணிக்கு, ஏழு மாதத்திலிருந்து தான் குழந்தை வளரும். பிறந்து மூன்று மாதங்களுக்கு பிறகுதான் மூளை நல்ல வளர்ச்சி அடைகிறது. அப்படி மூளை வளர்ச்சியடைவதற்கும், எதிர்காலத்தில் கண் பார்வைக் கோளாறு, வேறு நோய்களுக்கு ஆளாகாமல் இருக்க மூளை வளருகிற பருவத்தில்—இந்தியாவிலேயே என்று கருதுகிறேன், நம் மாநிலத்தில்தான் புரட்சித் தலைவர் ஆட்சியில் இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது—சத்துணவு கொடுக்கும் திட்டம் திட்டப்பட்டிருக்கிறது. ரூ. 150-க்கு குறையாமல் செலவு செய்வதற்கு நல்ல திட்டம் திட்டப்பட்டிருக்கிறது. அதை நாம் அனைவரும் வரவேற்க வேண்டும். எதிர்கட்சித் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சி என்றில்லாத முறையில் அவர்களும் இதை வரவேற்க

வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அ... மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் இந்து பத்திரிகையில் ... ஆதாரம் எடுத்துக்காட்டினார்கள். நானும் இந்துபத்திரிகையை ஆ... அழைக்கிறேன். நான் பாராளுமன்றத்தில் இருந்தபோது சென்ற ... குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டிற்காக பட்ஜெட் ... போது இந்து பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. தமிழ்... அதிகமாக வேலை வாய்ப்பின்மை இருப்பதற்கும், அதிகமான ... வறுமையில் வாடுவதற்கும் அதிகப்படியான தொழிற்சாலைகள் இல்லை... தாகும் என்று இந்து பத்திரிகை சொல்லியிருக்கிறது. இது ... நாட்டிற்கு மட்டும் சொன்ன உபதேசம் அல்ல. அதை மத்திய அர... குறிப்பாக மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்க... சொன்ன அறிவுரையாகும். தமிழ் மாநிலம் மற்ற மாநிலங்களில் ... மூலப்பொருள்களை வரவழைத்து அவைகளை பாப்ரிகேட் செய்து ... மாநிலங்களுக்கு அனுப்புகிற தொழிற்சாலைகளை ஊக்கப்படுத்தி, ... படுத்த வேண்டும் என்று 'இந்து' பத்திரிகை அன்று எழுதியிருக்கிறது.

(முற்பகல் 10-30)

இன்னொன்றையும் சொன்னார்கள். முன்னுக்குப் பின் முரண் ... சொல்லுகிறார்கள். ஒரு இடத்திலே சொல்லுகிறார், தொழில் அதிபர் ... தொழில் முதலாளிகளைப் புரட்சித் தலைவர் அவர்கள் பார்ப்பதில்லை ... புகாரை, அப்படிக் குறிப்பிட்டு 2, 3 நிமிடங்களுக்குப் பிறபாடு அ... கூறுகிறார். 36 நூற்பு ஆலை தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக ... முதலாளிகளைச் சந்தித்து அவர்களுக்காக திட்டம் தீட்டப்பட்டிருக்கின் ... தென்று. இப்படி அவர் சொல்வது முன்னுக்குப் பின் முரணாக இரு... கின்றது.

முதலமைச்சர் பைலைப்பற்றி மலை மலையாக தேங்கிக் கிடந்தது என் ... புகார் செய்தார். கவர்ன்மெண்ட் டிஸ்மிஸ் செய்யப்பட்டபோது எத் ... பைல்கள் கையெழுத்திடப்படாமல் இருந்தன என்று யாராவது புள்ளிவிவர ... கொடுங்கள் எந்த நடவடிக்கைக்கும் கட்டுப்படத்தயார் என்று பு... தலைவர் அவர்கள் சொன்ன பிற்பாடும், எதிர்க் கட்சியிலே இருப்பவர் ... மீண்டும் மீண்டும் ஏராளமான பைல்கள், கும்பல்கும்பலாக தேங்கி இருந் ... என்று பேசுவதெல்லாம் அழகல்ல என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள் ... கிறேன்.

தமிழ்நாட்டிலே எங்கள் காலத்திலே ஏற்பட்ட தொழிற்சாலைகளைத் ... புரட்சித் தலைவர் அவர்கள் தன் காலத்திலே ஏற்படுத்தியதாகச் சொல் ... கிறார் என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டது. அரியலூரிலே ஒரு ...



சிமெண்ட் ஆலை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் அந்த ஆலை வெகு விரைவிலே, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இது வரை நிகழாதவகையில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு உற்பத்தி துவங்கியது புரட்சித் தலைவர் காலத்தில்தான் என்பதை நான் எதிர்க் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொன்னார். நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட சில திட்டங்களுக்கு உலக வங்கியின் பணமும், மத்திய சர்க்காரின் பணமும் உபயோகப்படுத்தப்படுகிறது என்றார். இது உலக வங்கியின் ஆர்கனைசேஷனால் கொடுக்கப்பட்ட பணமா, மத்திய சர்க்கார் பணமா என்றெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. எந்தப் பணமும் யாருடைய சொந்தப் பணமும் இல்லை. நாம் வாங்குகின்ற பணமும் நம்முடைய பணம் அல்ல. மத்திய சர்க்கார் கொடுக்கின்ற பணமாக இருந்தாலும் சரி, உலக வங்கி கொடுக்கின்ற பணமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராவது கொடுத்தாலும் அல்லது மக்கள் வரிப் பணமாக இருந்தாலும் அல்லது எந்த அமைப்புப் பணமாக இருந்தாலும் அதெல்லாம் முக்கியமல்ல. எப்படி அந்தப் பணம் செலவு செய்யப்படுகிறது என்பதுதான் முக்கியம். அப்படிக் கிடைக்கின்ற பணத்தில் திட்டங்கள் நல்ல முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா? தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்ட பயன்பெறத்தப் படுகின்றனவா என்று பார்ப்பதுதான் முக்கியமாகும்.

நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய தமிழ்நாட்டிலே, தொழில் துறை பின்நோக்கிப் போய் இருப்பதற்கான காரணம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே, 51-வது, 52-வது பக்கங்களிலே மிகத் தெளிவாக இது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசு வழங்கும் நிதி தமிழ் நாட்டிலே எப்படி குறைந்திருக்கின்றது, 4.1 சதவிகிதமாக குறைந்திருக்கின்றது என்பதையும், நபர் வாரி திட்டச் செலவு எவ்வாறு குறைந்திருக்கின்றது என்பதையும் எடுத்துக் காட்டி இருக்கிறார். ஆகவே, மத்திய சர்க்கார் வேலை வாய்ப்பைப் பெருக்குகின்ற அளவிற்கு, வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் எண்ணிக்கை மேலே போகாத அளவிற்கு முதலீட்டை அதிகமாகத் தரவேண்டும். அதை விட்டுவிட்டு, இந்த அரசின்மேல் குற்றம் சாட்டுவதில் எந்தவிதமான பயனும் இல்லை.

...எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் இராணிப்பேட்டை... ஒரு தொழிற்சாலை வருமென்று எதிர்பார்த்தேன் என்று சொன்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1980 ஜூலை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிக நிறுவனம் மூலமாக தமிழ்நாட்டில் முக்கியமான அத்தியாவசியமான பொருள்களும் புரட்சித் தலைவர் ஆட்சியில் விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்த ஸ்தாபனத்தை வலுப்படுத்தி விநியோகத்தை அதிகரிக்க 6.84 கோடி ரூபாயை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கி யிருக்கிறார்கள். இதுவும் பாராட்டுக்குரியது. ஆனாலும் மத்திய சர்க்கார் இந்த இன்றியமையாப் பொருள்களை நுகர்பொருள் வாணிப நிறுவனத்தின் மூலம் விநியோகிக்க எல்லா மாநிலங்களிலும் அந்த ஸ்தாபனம் வலுவடைய 500 கோடி ரூபாயை மூலதனமாகச் செலவு செய்ய வேண்டும். அத்தியா வசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசு ரிசர்வ் என்று சொல்லப்படுகிற அந்நியச் செலாவணி ஒதுக்கப்பட்டிருப்பதில் ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேவையான அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய வழி செய்வதோடு, காய்கறி, சர்க்கரை, இறைச்சி போன்ற அத்தியாவசியப் பொருள்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் சில பொருள்களுக்கு பலமுறை விற்பனை வரியாக இருந்ததை ஒருமுறை வரியாக ஆக்கியிருப்பதோடு சில பொருள் களுக்கு வரியையே ரத்து செய்திருக்கிறார்கள். இதனால் 1.6 கோடி ரூபாய் இந்த சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏழைகள் உபயோகப் படுத்தும் சைக்கிள்களுக்கு வரியை பாதியாகக் குறைத்திருக்கிறார்கள். அதே போன்று உதிரி பாகங்கள்—ஸ்பேர் பார்ட்ஸ்—வெளிமாநிலங்களுக்குச் செல்லும் போது அதற்கும் வரியைக் குறைத்திருக்கிறார்கள். அதனை பல வியாபாரச் சங்கங்களும் வரவேற்றிருக்கின்றன. தமிழ்நாடு வியாபாரச் சங்கங்களுக்கு வியாபாரிகள் நலக் குழு ஏற்படுத்த தேர்தல் காலத்தில் வாக்குறுதி கொடுத்

(முற்பகல் 10-40)

தோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வியாபார நலக்குழு ஒன்று நிறுவப்பட்டு, இன்றைக்கு வியாபாரிகள் சங்கம் அதை ஒரு வரப் பிரசாதம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, காய்கறிகள், அழுகும் பொருட்கள் வீணாகாமல் இருப்பதற்காக —பாராளுமன்றத் தேர்தலின்போது திடீரென்று வெங்காயத்தின் விலை ஏறி விட்டது, ஆனால் தேர்தல் முடிந்து நான்கு ஐந்து நாட்களுக்குள்ளாக திரும்பவும் வெங்காயம் கடைகளிலே உலாவியது எல்லோருக்கும் தெரியும்— வெங்காயம் 4, 5 நாட்களுக்குள் விதைத்து அறுவடை செய்து மார்க்கட்டுக்கு கொண்டு வர முடியாது; சில சதிகாரர்கள் பதுக்கி இருக்கிறார்கள்; உண்மையில் சிலசமயம் வெள்ளத்தால், அடைமழையால் வெங்காயம் அழுகிவிடும். அந்த



1980 ஜூலை 4] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

குறையை போக்க குளிர் சாதன சேமிப்புக் கிடங்குகள் மேலும் மாநிலத்தில் நான்கு இடங்களில் அமைக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும், அதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பதும் வியாபாரிகளுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் அத்தியாவசியப் பண்டங்களைப் பயன்படுத்துவோருக்கும் பயன் அளிப்பது ஆகும், அவர்கள் எல்லாம் வரவேற்கக்கூடியதாகும்.

அது மட்டுமல்ல, மீன்களை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய முறை யிலே 50 இலட்சம் ரூபாய் மீன்களை வளர்த்து நீர்நிலைகளில் விடுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள 25 ஆயிரம் டன் மீன்கள் கூடுதலாக உற்பத்தியாகும் என்று தெரிவித்திருப்பது மீனை உணவாகப் பயன்படுத்துகின்ற ஏழைகளும் மத்திய தர வகுப்பினரும் வரவேற்கக்கூடியதாகும்.

அடுத்து, சர்க்கரை ஆலைகளைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சர்க்கரை ஆலைகள் நாட்டிலே இன்றைக்கு அதிகமாக இருந்தாலும் சர்க்கரை தட்டுப்பாட்டை, கட்டுப்பாட்டைப் போக்கக்கூடிய முறையிலே மினி சுகர் பேக்டரிகள்—மகாராட்டிரத்திலே தினம் நூறு டன்கள் கரும்பை ஆட்டி சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய மினி சுகர் பேக்டரிகள் ஏற்படுத்தப்பட்டிருப் பதைப்போல—தமிழ் நாட்டிலேயும் தொடங்க வேண்டுமென்றும், அதை முதலிலே சிதம்பரம் தாலுகாவிலே ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே சிமிண்ட் தட்டுப்பாட்டைப் போக்குகின்ற முறையிலே பெரிய சிமிண்ட் தொழிற்சாலைகளை உருவாக்குவதோடு, சிறிய மினி சிமிண்ட் பேக்டரிகளையும் தமிழ்நாட்டில் துவங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, சாலைப் போக்குவரத்து சம்பந்தமாக சொல்ல விரும்பு கிறேன். பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் உள்ள பல சாலைகளை சர்க்காரே எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு பஸ்களை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற முறையிலே 1979-80-ல் 6 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தது, 1980-81 ஆம் ஆண்டிலே 10 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. நிச்சயமாக 1800 புதிய பேருந்துகள் வரும் என் பதற்கு நல்ல அத்தாட்சியாக இது அமைந்திருக்கிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1980 ஜூலை 4

மாநில சர்க்கார் நன்றாக வருமானத்தைப் பெருக்க முடியாத அளவுக்கு நிதி நிருவாகக் கொள்கைகளையும் வரி விதிப்புக் கொள்கைகளையும் வகுக்கும் அதிகாரம் பெரிதும் மத்திய அரசிடமே உள்ளது என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். அதைப்பற்றி நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

Additional Duties on Excise (Goods of Special Importance Act) இந்தச் சட்டத்தின் கீழ் மாநில சர்க்கார், புகையிலை, சர்க்கரை, துணி போன்றவைகள்மீது வரி விதிக்க முடியாமல் இருக்கிறது. இதுபற்றி மேற்கு வங்க அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறது. அந்த வழக்கு சாதகமாக முடிந்தாலும் அல்லது மத்திய சர்க்காரே கருணையுடன்—நாம் மாநில சர்க்காருக்கு அதிகாரம் தரவேண்டுமென்ற நல்ல எண்ணம் அதற்கு இருக்குமானால் மாநில அரசுகள் வரி விதிக்கும் அதிகாரத்தை கொடுக்க—முன்வந்து ஏற்பாடு செய்யவேண்டும். மாநில சர்க்கார் ஒரு சிகரெட்டுக்கு ஒரு பைசா விதம் போட்டால் ஒரு பாக்கெட்டுக்கு பத்து பைசா கிடைக்கும். விலை உயர்ந்த ஒரு சிகரெட்டுக்கு இரண்டு பைசா விதம் போட்டால் பாக்கெட்டுக்கு 20 பைசா கிடைக்கும். மாநில சர்க்கார் இப்படி வரி போட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே மாண்புமிகு சித்தன் போன்றவர்கள் மத்திய அரசிடம் இதைச் சொல்லி வரி விதிப்புக் கொள்கைகளில் அதிகமான அதிகாரத்தை நம்போன்ற மாநில அரசுகளுக்கு வழங்குவதற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே ஏற்கெனவே ஒரு வழக்கு கேரளத்தைப் பொறுத்த வரையில் நடத்தப்பட்டு தீர்ப்பும் ஆகியிருக்கிறது. உ வருமானத்தில் தற்போது 40 சதவீதம் மத்திய சர்க்காரே வருமான வரி போடுகிறது. அதை மாற்றி 100 சதவீத வரியை மாநில சர்க்காரே போடுவதற்கான ஏற்பாடுகளையும் நாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது மிக அருமையான, நிதர்சனமான, புரட்சிகரமான, துணிச்சலான நிதிநிலை அறிக்கை, நாங்கள் சொன்னதைச் செய்பவர்கள், நினைத்ததை முடிப்பவர்கள் என்பதை எடுத்துக்காட்டும் இந்த பட்ஜெட்டை நான் மனதாரப் பாராட்டி, வரவேற்கிறேன். இதை எல்லோரும் பாராட்ட வேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே மீண்டும் ஒலிக்கின்ற வாய்ப்பினை அளித்த என்னுடைய திருமங்கலம் தொகுதி மக்களுக்கு என்னுடைய கனிவான நன்றி



1980 ஜூலை 4] [திரு. என். எஸ். வி. சித்தன்]

யைக் காணிக்கையாக்கிக் கொள்ளுகின்றேன். 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய உரையைத் துவங்குவதற்கு முன்னால் இந்த பட்ஜெட் மிகவும் சாமர்த்தியமாகத் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுகின்ற கட்சிக்கு ஆதரவாக இருக்கின்ற பத்திரிகைகள் வெளியிடத்தக்க அளவிற்கு, மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்ற நேரத்தில், ஏதோ சமுதாயத்தில் உள்ள எல்லாத் தரப்பினருக்கும், எல்லா நன்மைகளையும் செய்கின்ற பட்ஜெட் போலத் தோற்றமளிக்கும் முறையிலே மிகு சாமர்த்தியத்தோடு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் தேர்தல் நேரத்தில் தமிழகத்திலுள்ள வாக்காளப் பெருமக்களுக்கு இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் கொடுத்த பல்வேறு கவர்ச்சிகரமான வாக்குறுதிகளால்தான், அதை அந்த மக்கள் நம்பிய காரணத்தால் தான் இன்றைக்கு அந்த வரிசையிலே இத்தனை அதிகமான பேர்களுக்கு வெற்றி கிடைத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அப்படிக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகத்தான் உளப்பூர்வமாக முயற்சி செய்திருக்கிறார்களா, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்த முயற்சி எடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் அவர்கள் எடுத்த முயற்சிகள் நிச்சயமாகத் திருப்தி அளிக்கவில்லை என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. ஆக, இந்த ஒரு நிதிநிலை அறிக்கை இப்படியிருக்கிறது; வருகின்ற நான்காண்டுகளில் அவர்கள் கொடுக்கின்ற நிதிநிலை அறிக்கைகள் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறை என்று வேற்றும் முகத்தான் இருப்பதற்கான செயலில் அவர்கள் ஈடுபடுவார்கள் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையானது தமிழகத்திலுள்ள பெருமக்கள் பெரிதும் எதிர்பார்த்த நிதிநிலை அறிக்கையாகும். பொதுவாக, தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட தொழில் நோக்கோடு தயாரிக்கப்பட்ட பட்ஜெட் டாக இது இல்லை என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். ஏதோ சரிக்கட்டும் வருகின்ற வருவாயையும், இருக்கின்ற பணத்தையும் கொண்டு பட்ஜெட்டாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறதே தவிர, Development வளர்ச்சித் திட்டத்தை அடிப்படையாகக் oriented budget பிள்ளை கொண்ட பொருளாதார பட்ஜெட்டாக இல்லை; இது கணக்குப் பட்ஜெட்டாக—அக்கவுண்டென்ட் பட்ஜெட்டாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஜூலை 4

சமுதாயத்தில் இருக்கின்ற அடித்தளத்து மக்களை, பொருளாதாரத்தில் அடித்தளத்தில் இருக்கின்ற மக்களை வாழ்விக்கும் பட்ஜெட்டாக இது இல்லை. பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்த, சமுதாயத்தில் இருக்கின்ற, மிகக் குறைவாக இருக்கின்ற நலிந்தோர், வறியோர் ஆகியவர்களுக்குச் செய்வது, தேர்தல் கால வாக்குறுதிகளில் ஓரளவுக்குப் பயன்படுகிறதே தவிர பெரும்பாலானவர்களுக்குப் பயன் அளிப்பதாக இல்லை. கிலோ அரிசி தருவதாகச் சொல்வது, மானியம் கொடுப்பதாகச் சொல்வது, ஊதியம் கொடுப்பதாகச் சொல்வது ஆகிய அத்தனையும் சமுதாயத்தில் உள்ள ஒரு சதவீதத்தினருக்குத்தான் கிடைக்கின்ற முறையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறதே தவிர, தேர்தல் நேரத்தில் இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருப்பவர்கள் சொன்னதைப்போல் இல்லாமல் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே திட்டங்கள் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே இன்றைக்கு 54 சதவீதம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களில் 56 சதவீதம் என்ற அளவிற்கும், குறைந்த மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய், 35 ரூபாய் வருவாய் பெறும் அளவில் இருக்கின்ற மக்களுக்குத் திருப்தி அளிக்கும் விதத்தில் இந்த பட்ஜெட் இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன். ஏழை எளிய மக்களுக்கு நீண்ட கால அடிப்படையிலே வாழ்வு அளிக்கின்ற வளமான திட்டங்களுக்கு முறையான முயற்சிகள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அரசு அறிவித்த திட்டங்கள் போதுமானவையாக இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது தமிழகத்தில் இருப்பவர்களுக்கு தொழில் துறையைப் பொறுத்த அளவில், (Industrial stagnation) போக இந்த பட்ஜெட் வருவதாக இல்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன்.

எலக்ட்ரானிக்ஸ், கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் போன்ற நல்ல ஊதியம் தரத்தக்க வேலைவாய்ப்பு தரத்தக்க முன்னேற்றகரமான தொழில்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான குறிப்பும் இல்லை, முயற்சியும் இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

தொழில்துறை முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு சிலபல மாதங்களுக்கு முன்பு மத்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்கள்; அதை அடுத்து தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைச் சீரமைக்கவும், முன்னேற்றவும் நாயுடம்மா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்தார்கள். இந்த இரண்டு குழுக்களும் கொடுத்த அறிக்கைகள் என்ன ஆயிற்று? அதன்மீது இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா? அல்லது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா? அந்த அறிக்கையின் விவரங்கள் என்ன என்பதை இந்த நிதிநிலை அறிக்கையில் காணப்படவில்லை. மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதில் அளிக்கின்றபொழுது அந்தக் குழுவின் அறிக்கைகளைப் பற்றியும், குழுவின் சார்பில் அரசு எடுத்த நடவடிக்கைகளைப்பற்றியும் அல்லது எடுக்கப் போகும் நடவடிக்கைகளைப்பற்றியும் குறிப்பிடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.



1980 ஜூலை 4] [திரு. என். எஸ். வி. சித்தன்]

(முற்பகல் 10.50)

தேர்தல் கால வாக்குறுதியாகச் சொல்கிற நேரத்திலே, நலிந்தோருக்கு, வறுமைக் கோட்டுக் கீழே உள்ளவர்களுக்கு 5 கிலோவுக்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். வேலையில்லாதவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 1 கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு பெரும்தவாரியாகப் பார்க்கிற நேரத்திலே, அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று ஆளுகிற கட்சிகளுடைய பத்திரிகைகள் பாராட்டுகின்ற அளவிலேதான் இருக்கின்றனவே தவிர, உள்ளபடியாகவே அவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிறவர்களுக்கு, ஒரு கிலோ அரிசி திட்டம் பாவலாக்கப்படவில்லையென்பதை நான் மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏழ்மை, வறுமை ஒழியுமேயானால், புதிய தொழில்கள், முன்னேற்றமான தொழில்கள், பெரிய தொழில்கள் தொடங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் உற்பத்திப் பன்மடங்காகப் பெருகும் என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். அதற்கான முனைப்பான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென்பதை வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மின்சாரத்திற்கான பற்றாக்குறை தமிழகத்திலே மிகக் கடுமையாக இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறையமைச்சர் அவர்கள் சில மின்வெட்டுச் சலுகைகளை அறிவித்தார்கள். ஆனாலும் கூட, தமிழகத்தில் தற்போதுள்ள ஆலைகளுக்கு மின்சாரம் தங்கு தடையின்றி, போதுமான அளவு கிடைக்கவில்லை. இது அப்படியிருக்கிற நேரத்தில், தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் மின்சாரத் தேவை 14 சதவிகிதம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தற்பொழுது உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு தற்பொழுது

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஜூலை 4]

இயங்குகின்ற தொழிற்சாலைகளுக்கு தங்கு தடையின்றி கொடுக்க முடிய வில்லையென்பது ஒரு புறமிருக்க, தற்பொழுது ஆண்டொன்றுக்கு 14 சதவிகிதம் மின்சாரத் தேவை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அப்படித் தேவைப்படுகின்ற மின்சாரத்தை ஈடுகட்டுகின்ற முறையிலே இந்த அரசாங்கம் என்ன திட்டத்தை இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறது என்பதைப் பார்த்தோமானால், ஏற்கெனவே இருக்கிற புனல் மின் திட்டங் களுக்குச் சிறுசிறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்களே தவிர, அனல் மின் நிலையங்கள் புதிதாக ஏற்படுத்த எந்தவிதமான குறிப்பும் இல்லையென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே வேளையிலே, தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற தூத்துக்குடி, என்னூர், பேசின் பிரிட்ஜ் போன்ற அனல் மின் நிலையங்களில், முழுத் திறனுக்குத் தக்கவாறு நாம் உற்பத்தியைப் பெருக்கவில்லை. சில ஆண்டு களுக்கு முன்னாலே, நாட்டிலே அவசர நிலை இருந்த காலத்திலே, அவர்கள் உச்ச நிலையிலே மின் உற்பத்தி செய்ததை நாம் அறிவோம். ஆனால், இப்பொழுது அந்த மின் நிலையங்கள் உச்ச நிலைமையை முழுமையாக எய்தவில்லை என்பதால், தொழில்கள் மிகவும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக் கின்றன. எனவே, யுத்த கால அடிப்படையிலே, புதிய அனல் மின் திட்டங்களை, அரசு முனைந்து செயல்படுத்தவில்லையென்றால், புதிய தொழில்களைத் தமிழகத்திலேத் தொடங்க, நிறையத் தொழில்களைத் தொடங்க, வாய்ப்பு குறைவாக, தமிழகம் தொழில் துறையிலே மேலும் பின் நோக்கி தாழக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

அதேபோல், பாசன வசதியைப் பொறுத்தவரையிலே, ஏற்கனவே செயல்பட்ட திட்டங்களைத் தவிர, புதிய திட்டங்கள் எதுவும் குறிப்பிடப் படவில்லை. குறிப்பாக, மேற்கு தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி, அரபிக்கடலில் கலந்து வீணாகிவிடுகின்ற தண்ணீரை, கிழக்குப்புறமாகத் திருப்பி, மேற்கு தொடர்ச்சி மலையைக் குடைந்து, தமிழகத்திற்குக் கொண்டு வருவார்களானால், வறட்சியால் பாதிக்கப்பட்ட, மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அந்தத் திட்டம் அமையும். அது ஏற்கனவே, பல சமயங்களில் பேசப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்த முனைப்பான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தென்மாவட்டங்களிலே வறட்சி கண்டிருக்கிற பகுதிகளில், வசதியும் வளமும் பெறும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மாதிரியான திட்டத் திற்கான குறிப்பு எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1980 ஜூலை 4] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அடுத்தபடியாக, இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள், தேர்தல் சமயத்தில் கொடுத்த கவர்ச்சிகரமான வாக்குறுதிகளில் தலையாய இருப்பது, விவசாயக் கடன்கள் ரத்து என்பதாகும். அன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருக்கிற முக்கிய தலைவர்கள், முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டவர் கூட, விவசாயக் கடன்களை முழுமையாக ரத்து செய்வோம் என்று சொன்னார்கள். அன்றைக்கு, எங்கள் காங்கிரஸ் கட்சி சார்பிலே, விவசாயி களுக்குக் கடன் ஜப்தி தொல்லை இருக்காது என்று சொன்ன நேரத்திலேகூட அவர்கள், சொன்னார்கள். எங்கள் ஊருக்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர்கூடச் சொன்னார்கள், இன்றைக்கு அந்தக் கட்சியிலே இருக்கிறவர்கள் ஜப்தி இல்லையென்றுதான் சொன்னார்கள். அப்படி யானால், கடன் இருந்துகொண்டு தானிருக்கும். நான் உறுதியாகச் சொல்கிறேன், நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகள் கடன் அத்தனையையும் ரத்து செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே, அவர்கள் ரூ. 21 கோடி தக்காவிக் கடன் இருக்கிறது என்று சொல்லி, அதிலே ரூ. 5 கோடியைப் பாகுபடுத்த நண்பர் துரைமுருகன் அவர்கள் சொன்னதைப் போல், பாகுபடுத்த வேண்டிய அவசியமே கிடையாது. அதிலே கிணறு தோண்டிய விவசாயிகளைக்கூட ஒதுக்கியிருக்கிறார்கள். கிணறு வைத்திருக்கிறவர்கள் எல்லாம் ரொம்ப வசதி யானவர்களா? அல்லது 5 ஏக்கருக்கு அதிகமானவர்கள் என்று கணக்கு எடுத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. ஆகவே, அந்த ரூ. 11 கோடியும், குறுகிய காலக் கடன்—அதாவது பயிர்க் கடன். அது மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டுள்ளது. அந்த ரூபாய் 80 கோடியிலே, சிறு விவசாயிகள் பெற்ற கடன், ரூபாய் 35 கோடி. வட்ட ரூபாய் 7 கோடியைச் சேர்த்து, இந்த அரசு ரூபாய் 42 கோடி மட்டும் தள்ளுபடி செய்ய முன் வந்துள்ளது. ஆக, விவசாயக் கடன் பளு இன்றைக்கு அதிகமாகியிருக்கிறது. எனவே, அரசு அறிவித்துள்ள சலுகைகளை நிறைவேற்ற, மாநில அரசுக்குக் கணிசமான உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, மத்திய அரசுக்கு நாம் எழுதி இருக்கிறோம் என்று மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் பக்கம் 7-லே குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால் நேற்றையதினம் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து அவர்கள் பேசிய நேரத்தில் மத்திய அரசாங்கத்திற்கு இதுவரை முறைப்படி எழுத வில்லை; அங்கே இருந்து எந்த பதிலும் வரவில்லை என்று சொல்லியிருக் கிறார். ஆக, நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதற்கும், நேற்றையதினம் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசியதற்கும் மாறுபாடு இருக்கிறது. அதை அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் அதே நேரத்தில், இந்த அரசு நிதி நிலை அறிக்கையிலே தன்னுடைய சொந்த நிதிப் பொறுப்பிலே

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஜூலை 4

விவசாயிகளுக்கு 60 கோடி வரையில் ரத்து செய்ய முன்வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 60 கோடி சொந்தப் பொறுப்பிலே இருந்து தள்ளுபடி செய்கின்றோம் என்று அறிவித்தும், அந்த 60 கோடி ரூபாய்க்கான நிதி ஒதுக்கீடு எங்கேயாவது இருக்கிறதா என்று துருவித் துருவிப் பார்த்தேன். 60 கோடி ரூபாய்க்கான நிதி ஒதுக்கீடு எந்த இடத்திலேயும் காணவில்லை. என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன், நிதி அமைச்சர் அவர்கள் எந்த இடத்தில் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று சொன்னால் இந்த மாமன்றம் பெரிதும் பாராட்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. முசிறிப்புத்தன் :** இந்த 60 கோடி ரூபாயை மாநில சர்க்கார் தன்னுடைய சொந்தப் பொறுப்பில் தள்ளுபடி செய்யும் என்று சொல்லு கிறார்கள். அது எந்த இடத்தில் இருக்கிறது என்பதை கேட்க ஆசைப் படுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** "இதற்கிடையில் தமிழக அரசு தம் சொந்த நிதி பொறுப்பில் இருந்து, விவசாயப் பெருமக்களுக்கு மேலும் சில ச கைகள் வழங்க முன் வந்துள்ளது", என்று தெளிவாகச் சொல்லியிருக் கிறார்கள். இந்த அரசாங்கம் நிச்சயமாக அந்தக் கடனை ரத்து செய்யாது என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா.

**திரு. பி. முசிறிப்புத்தன் :** நிச்சயமாக ரத்து செய்கிறது. மத்திய சர்க்காரைக் கேட்கிறோம் என்பதற்குத் தங்கள் கட்சியின் சார்பில் என்ன சொல்லுகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் ஒரே வரியிலே இதற்குப் பதில் சொல்லிவிட முடியும். நீங்கள் மத்திய சர்க்காரைக் கேட்டு, மத்திய சர்க்கார் கொடுப்பதாக இருந்தால்தான் ரத்து செய்வோம் என்று தேர்தல் காலத்தில் வாக்குறுதி கொடுத்தீர்களா என்று ஒரே வரியில் பதில் சொல்லிவிட முடியும். என்றாலும் கூட, மத்திய சர்க்காரை எதிர்பாராமலேயே, மராட்டிய மாநிலத்திலே, காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலத்திலே விவசாயக் கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசாங்கத்தைச் சுட்டிக் காட்டி மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை என்று காரணம் காட்டி, நிச்சயமாக நீங்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. இந்த மன்றத்திலே பேசுகின்ற பேச்சுக்களை விவசாயப் பெருங்குடி மக்கள் நன்றாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1980 ஜூலை 4]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே நாடாளு மன்றத் தேர்தலின்போது, இன்றைய தினம் மத்திய விவசாய அமைச்சர் ஆக இருக்கிற ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் எங்கள் மாவட்டத்திலே, புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒரு பகுதி மக்களின் வாக்குகளைப் பெற்று இன்றைய தினம் அமைச்சராகியிருக்கிறார்கள். அந்தப் பகுதி யிலே அவர்கள் வந்து, நாடாளுமன்றத் தேர்தல் நேரத்திலே பேசுகிற போது, எங்கள் கட்சி ஆட்சிக்கு வருகிறபோது—இந்திய நாடு முழுவதும விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பிரித்துக் காட்டி, நாங்கள் வந்தால் விவசாயக் கடனை ரத்து செய்வோம் என்று சொன்னார்கள்.

அதுமட்டும் அல்ல. ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, விவசாய அமைச் சராகவே வந்தார்கள். விவசாய அமைச்சராக ஆனதற்குப் பின்னாலே தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். தமிழ்நாட்டுக்கு வந்தபோது பத்திரிகை யாளர்களைச் சந்தித்து இதே கருத்தைத் திருப்பிச் சொல்லி வந்திருக் கிறார்கள். எங்களுடைய மத்திய அரசு விவசாயிகள் கடனை ரத்துச் செய்யும் என்று எடுத்துச் சொன்னார்கள். இன்றையதினம் மத்திய அரசு சென்ற பட்ஜெட்டிலே இருந்தும் சரி, அதற்குப் பின்னாலே இருந்தாலும் சரி, மத்திய அரசு என்ன நடவடிக்கைகளை தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகள் கடனை ரத்து செய்வதற்கு, எடுத்திருக்கிறது என்பதை அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் விளக்குவார்களா ?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மத்திய விவசாய அமைச்சர் அவர்கள் (மணி அடிக்கப்பட்டது) பெங்களூரில் நம்முடைய விவசாயச் சங்கத் தலைவர் அவர்களை சந்தித்து விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் நோத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுதியிலே இருந்த காரணத் தினாலே அதை அதிகம் படித்து இருக்க மாட்டார்கள் என்று நான் கருது கிறேன். விவசாயிகள் பிரச்சினையைப்பற்றி இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் சொல்லி பரிசீலிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று தான் அவர்கள் பெங்களூரில் சொல்லி இருக்கிறார்கள். அது வெளிவந்திருக் கிறது. விவசாயிகளுடைய கடன் சுமையை குறைப்பதிலே மத்திய-மாநில அரசுகள் பங்கேற்கவேண்டும் என்ற கருத்திலே எங்களுக்கு மாறுபாடு கிடை யாது. ஆனாலும்கூட, விவசாய அமைச்சர் சொன்னதற்குப் பின்னாலே, மத்திய நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்தக் கடன் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ரிசர்வ் வங்கிக்கும் அந்த மாநிலத்துக்கும் இருக்கிற பிரச்சினை. இதிலே மத்திய அரசாங்கம் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்படி சொன்னதிலேதான் எங்களுக்கும்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஜூலை 4

(முற்பகல் 11-00)

பாதிப்பு என்றுகூட ஒரு கருத்து இருக்கிறது. மத்திய அமைச்சர் சொன்னார் என்று காரணம் காட்டி மறுக்க மாட்டீர்கள் (மணி அடிக்கப்பட்டது) நீங்கள் தேர்தல் காலத்திலே வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே வினாவை டெல்லி ராஜ்ய சபையில் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன், எம்.பி. அவர்கள் எழுப்பியபோது—அதாவது மாண்புமிகு திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் விவசாயக் கடன்களை முழுவதுமாக ரத்து செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்களே என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைக் கேட்டபோது, அவர்கள் பதில் சொன்னார்கள்—திரு. ஆர். வி. சுவாமிநாதன் அப்படிச் சொல்லியிருந்தால், அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை, அரசுக்கும் அதில் சம்பந்தம் இல்லை என்று சொல்லியிருப்பது உண்மை. மீண்டும் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சரை விளக்கம் கேட்டபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 'சம்பந்தம் இல்லை' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் ஆளும் கட்சி சார்பில் மத்திய சர்க்கார் கருத்துக்கும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் கருத்துக்கும் வேறுபாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*** திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. சோமசுந்தரம் அவர்கள் ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மாநில அரசு விவசாயக் கடன்களை நிச்சயமாகத் தள்ளுபடி செய்யும் என்று குடந்தையில் பேசுகிறபோது அறிவித்து இருக்கிறார்களே, அதற்கும் இந்த அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று இருந்தால், அந்த அரசாங்கத்திலும் சம்பந்தம் இல்லாத கருத்துக்கள் இருக்கக் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவர் அவர்களே, முதற்கட்டமாக 60 கோடி ரூபாய்க்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு இருப்பதாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதனாலே அவருடைய கருத்துக்கும் இந்த அரசாங்கத்தின் கருத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதை அது எடுத்துக் காட்டுகிறது. தள்ளுபடி செய்வோம் என்று வாக்குறுதி தந்து இருக்கிறோம். திரு. ரகுமான்கான் சொன்னதைப் போல், இடைவேளைக்குப் பிறகு படம் ஆரம்பம் ஆகி இருக்கிறது. இது முதல் ஷோ. எத்தனை ஷோ என்பது முக்கியமல்ல. இன்னும் பல ஷோக்கள் இருக்கின்றன. அதைத்தான் நான்காண்டு காலத்தில் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் சொல்லி



1980 ஜூலை 4]

யிருக்கிறார்கள். நான்கு ஆண்டு காலம் நிச்சயமாக இந்த ஆட்சி இருக்கும் என்று அச்சாரம் கொடுக்கும் முறையில் அவர்கள் சொல்லி இருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** ஆளும் கட்சி சார்பில் பல ஷோ காட்டுவீர்கள். அதில் இப்போது எந்த ஷோ நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த ஆண்டில் 60 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து இருக்கிறீர்கள். அதற்குமேல் தள்ளுபடி செய்வது பற்றி குறிப்பிடப்படவில்லை என்பது விவசாயப் பெருங்குடி மக்களின் வாதம். அதற்கு விளக்கம் நிதியமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று நம்புகிறேன்.

(திரு. என். எஸ். வி. சித்தன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்கு 10 நிமிடம் ஒதுக்கியிருந்து, 15 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கிடு) சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** விவசாயக் கடன்களைப்பற்றி பேசியுள்ளேன். இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைச் சொன்னார். நான் அதை எதிர்த்துக்கொண்டு இருந்தேன். முதல் கட்டமாக 60 கோடி ரூபாய் செய்கிறோம் என்று சொன்னார்கள். முதல் கட்டமாக தள்ளுபடி செய்தது இந்தக் கட்டத்தில் இருக்கிறது. வரும் ஆண்டுகளில் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் நான் சுட்டிக்காட்ட விரும்புவது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லிவிட்டார்கள். இவ்வளவுதான் கடன் தள்ளுபடி, இதற்கு மேல் இல்லவே இல்லை என்று 9-ம் பக்கத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "இச்சலுகைகளுக்குப் பின்னும் செலுத்தப்படவேண்டிய கூட்டுறவுக் கடன்களை விவசாயப் பெருமக்கள், தங்கள் சமுதாயப் பொறுப்பை உணர்ந்து, உடனடியாகச் செலுத்தி கூட்டுறவுக் கடன் இயக்கம் தீவிரமாகவும், செம்மையாகவும் நடப்பதற்கு வழி வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்னும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 17-வது பக்கத்தில் "இந்நிலையில் மின் கட்டணத்தைப் பாக்கி எதுமின்றி, விவசாயிகளும் மற்றவர்களும் மனமுவந்து செலுத்துவதன் வாயிலாக, மின் வாரியம் தனது பணிகளைத் தடங்கலின்றி செய்ய உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்". ஆகவே, மின்சாரக் கட்டண பாக்கியும் ரத்து இல்லை என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள்.

ஆகவே நான் கேட்டுக்கொள்கிறேன், தேர்தல் காலத்தில் கொடுத்த வா குறுதிப்படி இந்த அரசாங்கம் விவசாயக் கடன்களை முழுமையாக ரத் செய்யவேண்டும் என்று கேட்டு, இப்போது தள்ளுபடி செய்துள்ள 60 கோடி மிகவும் கொஞ்சம்—யானைப் பசிக்கு சோளப்பொறி கொடுத்ததுபோல் இரு கிறது என்று சொல்லி, விவசாயிகளின் மொத்தக் கடன் 500 கோடி ரூபாய், அதிலே கடன் நிலுவை 230 கோடி ரூபாய். ஆகவே அந்த 500 கோடி ரூபாயை முழுமையாக ரத்துச் செய்கிறேன் என்று சொல்லி ஆட்சிக்கு வந்துள்ள நீங்கள், இப்போது அளித்திருக்கும் சலுகை மிகவும் கொஞ்சம் என்று சொல்லி, விவசாயக் கடன்கள் முழுமையாக ரத்து செய்யவேண்டும் என்று கேட்டு, இன்னும் பல பிரச்னைகள் இருந்தபோதிலும், என்னுடைய தொகுதியான திருமங்கலத்தைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தொகுதியைப்பற்றி முதலிலே சொல்லியிருக்கலாம் அல்லவா ? முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்ல வேண்டாமா ? என்னுடைய திருமங்கலம் தொகுதி யில் திருமங்கலத்தில் சுமார் 30,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தண்ணீர் பற்றாக் குறையால், குடிதண்ணீர் கிடைக்காமல் அல்லல்படுகிறார்கள். ஏற்கெனவே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேலக்கால் நீர்த்தேக்கத் திட்டம் ஒன்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்டது. இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியத்திடம் அந்தத் திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதை உடனடி யாக நிறைவேற்றி, குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

* **திரு. ஜி. கே. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே முதன் முறையாக கன்னிப்பேச்சை நல்குவதற் கான வாய்ப்பை பெற்றமைக்காக பவானி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் விவாதத்திலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் குறிப்பிடும்போது அழகாகச் சொன்னார்கள். இந்த பட்ஜெட் தமாஷான பட்ஜெட் என்று குறிப்பிட்டார்கள். அதை அடுத்து கதை விட்டிருக் கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அவர் பேசும்போது ஒரு நல்ல 'காமடி டிராமா' பார்ப்பதைப்போல் இருந்தது.

அதுமட்டுமல்ல. ஒரு பழமொழி சொன்னார்கள். 'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பார்கள்' என்ற பழமொழியை 'வழித் தேங்காயை எடுத்து கடைப்பிள்ளையாருக்கு உடைப்பார்கள்' என்று நிலை தடுமாறி பேசியிருக்கிறார்கள். அவர்கள் கதை விடுகிறார்களா அல்லது 'ரீல்' விடுகிறார்களா என்று தெரியவில்லை.





அது மட்டுமல்ல. இலட்சியத்தின் பெயரால் இலட்சங்களை வைத்து சில * * வாக்குறுதிகளை நாடாளுமன்ற தேர்தலிலே தந்தார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தாங்கள் கவனித்துக்கொண்டிருப் பீர்கள் என்று கருதுகிறேன். * * வாக்குறுதிகளை நாடாளுமன்ற தேர்தலிலே தந்தார்கள் என்ற சொற்றொடர் வந்தது. அவர் சொல்லுகின்ற கருத்துக்களைப்பற்றி நான் வருத்தப்படவில்லை. ஆனால் அந்த சொற்றொடர் வரலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்ற வார்த்தையை நீக்கிவிடுகிறேன். இனிமேல் பொய் என்பதை உண்மைக்கு மாறாக என்று குறிப்பிடலாம்.

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன் :** உண்மைக்குப் புறம்பான வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் திருத்திக்கொள்கிறேன். ஒரு பட்ஜெட் என்று வருகிறபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன்' என்ற அடிப்படையிலே 'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் ; இல்லாமை எல்லோருக்கும் இல்லாமையாக வேண்டும்' என்று தெளிவாகச் சொன்னார்கள். பேரவைத் துணைத் தலைவரவர்களும் அதை அறிந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு ஒரு உதாரணத்திற்காக ஒரு எடுத்துக்காட்டை அண்ணா அவர்கள் எப்படிச் சொன்னார்களோ அப்படியே இங்கே சொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

"என்னைப் பொறுத்தமட்டிலும் ஒழுகாத வீடு, கிழியாத உடை, சூடான உணவு—இந்த அடிப்படைத் தேவை எல்லா மக்களுக்கும் என்றைக்கு கிடைக் கிறதோ அன்றைக்குத்தான் நாம் உண்மையிலேயே ஏழையின் சிரிப்பிலே இறை வனை பார்க்க முடியும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப் பிட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பொற்காலம் என்று குறிப்பிட்டார்கள். பொற்காலம் என்று குறிப்பிடுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஏமாற்று வித்தை என்றும், விவசாயிகளை ஏமாற்றியிருக்கிற பட்ஜெட் என்றும் குறிப்பிட்டார்கள். நான் அவர் குறிப்பிடும்போது மேலும் சில வார்த்தைகளைக் குறிப்பிட்டார். நான் ஏற்கெனவே நாடாளுமன்ற தேர்தலிலே உண்மைக்குப் புறம்பான வாக்குறுதி களைக் கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேனே, அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக தங்கம்பற்றி இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

---

* * மாண்புமிகு துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அப்போது கலைஞர் பெருமான் அவர்கள் தங்கத்தைப்பற்றி வாக்குறுதி அளித்தார்கள். எம்.ஜி.ஆர். ஆட்சியிலே தங்கம் கிடைக்காது; வேண்டுமென்றால் கடைசியாகப் பெறுகிற பிள்ளைக்கு தங்கம் என்று பெயர் வைத்து, வா தங்கம், வந்து விளையாடு தங்கம், அன்பு தங்கம், அரவணைப்பேன் தங்கம் என்றெல்லாம் தங்கமோ தங்கம் என்று நாடாளுமன்றத் தேர்தலின்போது அவர்கள் சொன்னார்கள். ஆனால் அப்போது புரட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையாளர்கள் கேட்டபோது அழகாகச் சொன்னார்கள். 'தங்கம் இல்லாமல் வாழலாம்; தங்கம் இல்லாமல் எந்த மனைவியும் கணவனோடு வாழ மறுக்கமாட்டார்கள்; ஆனால் இலட்சக்கணக்கான மக்கள் தங்குவதற்கு இடம் இல்லாமல் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லி, இன்றைக்கு கிட்டத்தட்ட 30,000 அரிசன மக்களுக்கு வீடுகட்டித் தரும் நல்ல திட்டத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

அடுத்து விவசாயிகள் கடன்பற்றிக் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் கடன் பற்றிக் குறிப்பிடுகிறபோது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் மத்தியிலே விவசாயத் துறையிலே அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். தேர்தல் நேரத்தில் அவர்கள், விவசாயக் கடன் 350 கோடி ரூபாயையும் ரத்துச் செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் பிறகு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு பிறகு உடனடியாக அவர்கள் சொன்னது என்ன? ரிசர்வ் வங்கியிலே இருந்துதான் அதைப் பெறவேண்டும், ஆகவே எங்களால் ரத்துச் செய்ய இயலாது என்று கூறிவிட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு கதை சொன்னார்கள். அந்தக் கதையைக் கேட்டபோது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு ஊரிலே ஒருவன் பக்கத்திலே இருக்கின்ற ஒரு மலையை நாளை சுமக்கப்போகிறேன் என்று குறிப்பிடுகிறான். உடனே எல்லோரும் போய் அவனிடம் அதுபற்றிக் கேட்டவுடன் அவன் நாளைக் காலையில் நான் நிச்சயமாகச் சுமப்பேன் என்று கூறுகிறான். மறுநாள் காலையில் எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், அவன் மலையைச் சுமப்பான் என்று. அப்படி எதிர்பார்த்த மக்கள் எல்லோரும் ஒன்று கூடி 'எங்கே மலையைச் சுமங்கள் பார்க்கலாம்' என்றார்கள். அப்போது அவன் நேரம் வரும்போது சுமப்பேன், ஆனால் அதற்கு முன்னாலே எனக்கு வரவேண்டிய உணவு எல்லாம் வரவேண்டும் என்றானாம். ஊர் மக்கள் வேண்டிய உணவு எல்லாம் கொண்டு வந்து கொடுத்த பிறகு அவற்றை உண்டுவிட்டு பேசாமல் இருந்தாராம். அப்போது ஊர் மக்கள் எப்போது சுமக்கப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு அந்த மலையைத் தூக்கி என்னுடைய தலையில் வையுங்கள் நான் சுமக்கிறேன்



என்று சொன்னானாம். அதேமாதிரி ரிசர்வ் வங்கியிலே இருந்து வந்தால்தான் விவசாயக் கடன் ரத்து செய்ய முடியும் என்று தேர்தலுக்குப் பின்னால் மாற்றிப் பேசியதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக அண்ணாயிசம், பெரியாரிசம் என்றெல்லாம் சொல்லப்படுகிறதே அது என்ன என்று திரு. துரைமுருகன் அவர்கள் கேட்டார்கள். அண்ணாயிசம் என்பது நீங்கள் கேலி பண்ணுவதைப்போல ஒரு பாயாசம் அல்ல. 10-லே இருப்பவன் 1-க்கு வரவேண்டாம், 1-லே இருப்பவன் 10-க்குப் போகவேண்டாம், 1-லே இருப்பவன் 5-க்கு வரவேண்டும். இதிலே இருந்து நீங்கள் அண்ணாயிசத்தைப் புரிந்துகொள்ளலாம். மேலும் அண்ணாயிசம் என்கிறபோது எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. சாலையோரத்திலே வேலையற்றதுகள் சில, அந்த வேலையற்றதுகளின் மனதில் விபரீத எண்ணங்கள் பல, அந்த விபரீத எண்ணங்கள் காலக்குறி வேந்தே என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு)

இன்றைக்கு யாருமே செய்ய முடியாத ஒரு பெரிய சாதனையை புரட்சித் தலைவர் அவர்கள் இந்த பட்ஜெட்டிலே நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். வறுமைக்கோடு வறுமைக்கோடு என்று சொன்னார்கள். அந்த வறுமைக்கோட்டுக்கு கீழே இருக்கின்ற 53 சதவீத மக்களைப்பற்றி யாருமே கவலைப்பட்டது இல்லை. காங்கிரஸ்காரர்களும் திராவிட முன்னேற்றக்காரர்களும் ஆட்சியிலே இருந்திருக்கிறார்கள். பொருளாதார நிலையிலே மிகவும் பின்தங்கிய அந்த 53 சதவீத மக்களுக்குத்தான் இன்றைக்கு இலவச அரிசி கொடுக்கின்ற வகையில் பட்ஜெட்டில் திட்டம் தீட்டி இருக்கிறார்கள். இந்த மக்கள் பற்றித்தான் அண்ணா அவர்கள் சொன்னார்கள். சாலையோரத்திலே வேலையற்றதுகள் சில, அந்த வேலையற்றதுகளின் மனதில் விபரீத எண்ணங்கள் பல, அந்த விபரீத எண்ணங்கள் காலக்குறி வேந்தே என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட காலக்குறியை நன்கு சிந்தித்து இந்த ஆட்சியின் திட்டங்களிலே புகுத்தி ஒரு நல்ல நிலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த பட்ஜெட்டை நான் மனதார ஆதரித்துப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதிகளை பொருத்தமட்டிலும் ஒரு சில வேண்டுகோளை இங்கே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். பவானி சாகர் சட்டமன்றத் தொகுதிக்கும், மீதி இருக்கிற 10 தொகுதிகளுக்கும் சேர்த்து இங்கே இருக்கிற ஆற்றிலிருந்து தண்ணீர் பாய்கிற அளவுக்கு ஒரு அணைகட்டு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் இல்லாத வேளையில் ஜெனரேட்டரும் இல்லாத நிலை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் மிக அபாயமான இடர்களையும் கட்டங்களையும்கூட நாங்கள் தாண்டி வந்தாகக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இருளில் இருக்கும் அந்த பகுதிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இது என்னுடைய கன்னிப் பேச்சு. இதில் ஏதாவது குறை இருந்தால், அவைகளை சுட்டிக்காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவைக்கு புதியவன் என்பதால் ஒதுக்க வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, நாங்கள் இந்த அவைக்கு புதியவர்களாக இருந்தாலும், ஊழலுக்கு பழமையானவர்களாக இல்லாதிருக்கிறோம் என்று சுட்டிக்காட்டி, இந்த வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே சில பிரச்னைகளை சொல்வதற்கு முன் வந்திருக்கிறேன். நான் சொல்லியது போக மீதியுள்ளவைகளை என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையின் நான்காவது பாராவிலே ஒரு வாதத்தை நிதியமைச்சர் அவர்கள் விளக்கமாக சொல்லியிருக்கிறார்கள். அதை இங்கே பேசிய நண்பர்கள் படித்தார்களோ, படிக்கவில்லையோ எனக்குத் தெரியாது, ஆனால் அதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியது என்னுடைய கடமை என்று நம்புகிறேன்.

பேசுகிறபோது ஒரு நண்பர் குறிப்பிட்டார். மேற்கே பாய்கிற நதியை கிழக்கே கொண்டு வருவதற்கு இந்த திட்டத்தில் ஒன்றும் இல்லை என்றார். மேற்கே பாய்கிற நதியை கிழக்கே கொண்டு வருகிற அதிகாரம் இந்த மாநில அரசுக்கு இருக்கிறதா என்று யோசித்து சொல்லவேண்டும். ஒவ்வொரு பிரச்னையிலும் அதற்கு ஒதுக்கவில்லை, இதற்கு ஒதுக்கவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதனால் நான் ஏதோ ஒதுக்க வேண்டாம் என்று எண்ணி சொல்லவில்லை. ஒதுக்குவது நல்லதுதான். மாநிலத்திற்கு அதற்கான அதிகாரங்கள் எவ்வளவு இருக்கிறது. வருமானம் எவ்வளவு வருகிறது. அந்த வருமானத்தின் அடிப்படையில் என்னென்ன செய்ய முடியும் என்பதுபற்றியெல்லாம் யோசிக்கவேண்டும். கேட்க வேண்டும்.

ஆனால் இவைகளைப்பற்றியெல்லாம் அந்த நான்காவது பாராவிலே நிதியமைச்சர் அவர்கள் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். 'மாநில அரசாங்கத்திற்கு இருக்கிற அதிகாரம் மிக மிக குறைவு. இன்னும் அதிகாரங்கள்



வேண்டும்'. இதை தெளிவாக சொல்லியிருப்பதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டும் அல்ல, தொழில் வளர்ச்சியில் தமிழகம் பின்னடைந்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். தொழில் துறையில் தமிழகம் முன்னேற வேண்டாம் என்று யாரும் விரும்பமாட்டார்கள். தொழில் துறை வளர்ச்சி வேண்டும் என்று சொன்னால், ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பிரச்னையிலும் தொழில் வளர்ச்சிக்காக மத்திய அரசாங்கத்திடம் நிதியையும், அனுமதியையும் வேண்டுகிற நிலைமைதான் மாநில அரசுகளுக்கு இருக்கிறது. நிதியமைச்சர்கூட இதை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தொழில் துறை பணிகளைப்பற்றி சொல்கிற நேரத்தில் இப்பொழுது 80 தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அனுமதி கோரிய விண்ணப்பங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் இருக்கின்றன. இவைகளுக்கு விரைவில் முடிவு எடுத்து தீர்வு காணப் பெறும் என்று நினைக்கிறேன், என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு தமிழகத்தில் தொழில் வளர்ச்சி செய்ய முடியவில்லை என்று சொல்வதும் இதற்கு மாநில அரசுகள்தான் காரணம் என்று சொல்கிற வாதத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஆகவே மாநிலங்களுக்கு அதிகாரம் இன்னும் அதிகம் வேண்டும். இந்த கொள்கையை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி அதிக அதிகாரங்கள் பெற வேண்டும் என்ற முறையிலே இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குரல் எழுப்பி போராட முன்வரவேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிச் சொல்கிறபோது, இன்னொன்றும் சொல்ல வேண்டும். குறிப்பாக சொல்லப்போனால், முக்கியமான பெரும்பாலான வரிகளை எல்லாம் மத்திய அரசாங்கம்தான் வசூலிக்கிறது. அவற்றை மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களாக பகிர்ந்து கொடுக்கும்போது, தன்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்ப முதலிடம் கொடுத்து பகிர்ந்தளிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் மாநில அரசாங்கங்கள் தங்கள் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலையில் கூட சில கட்டுப்பாடுகளை மத்திய அரசாங்கம் வைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயக் கடன்கள் ரத்து என்று வருகிறபோது நமது மாநில அரசாங்கத்தார் கடன்களில் சில பகுதிகளை ரத்து செய்தார்கள். அவர்கள் முழுவதுமாக ரத்து செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் அரசு சிறிய விவசாயிகள் கடன்கள் முழுவதும் ரத்து செய்திருக்கிறது. இதனால் 42 கோடி நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று. தக்காவி கடனையும் சேர்த்து ஆக ஏறத்தாழ 58 கோடி அல்லது 60 கோடி பெறுமானமுள்ள கடன் நிலுவைகளை சிறு விவசாயிகளுக்கு ரத்து செய்ய தமிழக அரசு முன்வந்திருக்கிறது.

(முற்பகல் 11-20)

மத்திய அரசிடம் வாதாடிப் போராடி பெற முயற்சிப்போம். கிடைக்
கிட்டால் மாநில அரசு நிதியிலிருந்தே நிதி ஒதுக்க முன்வந்திருக்கிறது. அ
நாம் பாராட்ட வேண்டும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் மாநில சர்க்காரின், குறிப்பாக நிதி அமைச்சர் அவர்களின் கவன
திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். ஐந்து ஏக்கர்களுக்கு ஐ
யுள்ளவர்களுக்கு கடன்களை ரத்து செய்திருக்கிறீர்கள். எல்லோருக்கு
கடன்களை ரத்து செய்யவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனா
ஐந்து ஏக்கரிலிருந்து பத்து ஏக்கர்வரை உள்ளவர்களுக்கு குறைந்தபட்ச
வட்டியை மட்டுமாவது ரத்து செய்து திருத்தம் கொண்டு வரவேண்டும் என்
பணிவன்போடு மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல பிரச்னைகள் இருக்கின்றன. விலைவாசிப் பிரச்னை
இருக்கிறது. இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படி
கட்டுப்படுத்தும் அதிகாரம் யார் கையில் இருக்கிறது? மத்திய அரசாங்கத்தின்
கையில் இருக்கிறது. விலைவாசி உயர்வைக் குறைப்போம், அதற்காக எங்க
ளுக்கு வோட்டு போடுங்கள் என்று சொன்னார்கள். சட்டமன்றத் தேர்தல்கள்
நடைபெற்று முடிவதுவரை அவர்கள் அமைதியாக இருப்பதுபோல் இருந்
தார்கள். வோட்டுகள் எண்ணி முடிப்பதற்கு முன்பாகவே பெட்ரோல் விலை
உயர்வு டீஸல் விலை உயர்வு. கேட்டால், அரேபியாவிலிருந்து வருகிறது என்று
சொல்கிறார்கள்.

இப்போது உரத்தை எடுத்துக்கொள்வோம். என் அனுபவத்தில் சொல்
கிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஒரு உர மூட்டை ரூபாய் 88-க்கு
விற்றது, இன்று ரூபாய் 128 ஆக உயர்த்தப்படுகிறது. அது சமீபத்தில் மத்திய
அரசு அறிவித்த அறிவிப்புகளின் விளைவு. அதன் காரணமாக ரூபாய் 40
ஏறியிருக்கிறது. விலையை கூட்டிக்கொள்ளலாம் என்று மத்திய அரசு
போட்ட உத்தரவின் விளைவாகத்தான் ரூபாய் 40 உயர்ந்திருக்கிறது. கிட்டத்
தட்ட 50 சதவிகிதம் விலையேற்றம் இதில் ஏற்பட்டிருக்கிறது. இதுபோல்
ஒவ்வொன்றிலும் ஏற்பட்டிருக்கிறது. பெட்ரோல், டீஸல் விலை உயர்வு
குறித்து மத்திய அரசு மாநில அரசுகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறது.
டீஸல், பெட்ரோல் விலையை உயர்த்திவிட்டு, கட்டணத்தை உயர்த்த மாநில
அரசுகள் எல்லாவித உதவிகளையும் செய்யவேண்டும் என்று மத்திய அரசு
மாநில அரசுக்குக் கட்டளையிட்டிருக்கிறது. அவர்கள், விலைவாசியைக்
குறைப்போம் என்று சொன்னார்கள். அதை நிறைவேற்றியிருக்கிறார்களா?
விலைவாசிகள் உயர்வதற்கு மத்திய அரசுதான் எல்லாவித வழிவகைகளையும்
இருக்கின்றது. அதன் விளைவாகத்தான் உர விலை உயர்ந்துவிட்டது.





நேற்றுமுன்தினம் மத்திய அரசிடமிருந்து ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. அதாவது மத்திய அரசின் அமைப்பிலுள்ள கமிட்டியிலிருந்து வந்திருக்கிறது. நெல்லுக்கு விலை ரூபாய் 5 உயர்த்தி உள்ளது. ஏற்கனவே மத்திய அரசு நிர்ணயித்திருப்பது கொடுப்பது ரூபாய் 95, மாநில சர்க்கார் கொடுப்பது ரூபாய் 10, ஆக ரூபாய் 105. இப்போது மத்திய சர்க்கார் நிர்ணயித்திருப்பது ரூபாய் 100. நாம் இப்போது கொடுப்பதைவிட ரூபாய் 5 குறைவாக நிர்ணயித்திருக்கிறது. விலையை உயர்த்த வேண்டும் என்று சொல்லவில்லை. உர விலையை உயர்த்தியதற்கு மானியமாவது கொடுக்கவேண்டும் அல்லவா? அதைக்கூட கொடுக்கவில்லை. சிறிய விவசாயிகளுக்கு இப்போது கடன்களை ரத்து செய்திருக்கிறது மாநில அரசு. சிறிய விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் உரத்திற்கு மானியம் கொடுப்போம் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறதா என்றால் சொல்லவில்லை. ஆக, விலைவாசி உயர்வைக் குறைப்போம் என்று சொன்னவர்கள், விலைவாசியேற்றத்தைப்பற்றி மூச்சுவிடாமல் இருந்துவிட்டு மாநில சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்று நண்பர்கள் சொல்வதைப் பார்த்தால் அவர்கள் சட்டசபையிலிருந்து பேசுகிறார்களா அல்லது பாராளுமன்றத்திலிருந்து பேசுகிறார்களா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எங்கேயோ உட்கார்ந்து பேசுவதைவிட்டு இங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பின்னணியைப் பார்க்கும்போது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாடாளு மன்றத்தில் பேசவேண்டிய பேச்சை இந்தச் சட்டமன்றத்தில் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் எங்களைப் பார்த்து நாடாளுமன்றத்தில் பேசவேண்டியதை சட்டமன்றத்தில் பேசுவதாகச் சொல்கிறார்கள்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** நீங்கள் சட்டமன்றம் என்பதை மறந்துவிட்டு பாராளுமன்றத்தில் பேசுவதுபோல் விலைவாசியை சொல்லும்போது பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையை தட்டும் ஒலி) அடுத்து, பட்ஜெட்டைப் பற்றி பேசுகிறோம். நமக்கு முன்னால் இரண்டு பட்ஜெட்கள் உள்ளன. ஒருபக்கம் மத்திய அரசின் பட்ஜெட், இன்னொரு பக்கத்தில் மாநில அரசின் பட்ஜெட். இங்கே நமது மாநில அரசின் பட்ஜெட்டில் எந்தவிதமான புதிய வரி விதிப்பும் வரி உயர்வும் இல்லை என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற பட்ஜெட்டில் எல்லா இனங்களிலும் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. ரெயில்வே கட்டணத்தைப் பார்த்தால் அது ஒரு வேடிக்கையான விஷயம். ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டிவிட்டு அடுத்த பிரச்னைக்குப் போகிறேன். ரெயில்வே இலாகாவில், ப்ளாட்பார்ம் டிக்கட் விலை ஏறியிருக்கிறது. அரேபியாவிலிருந்து டிக்கட்ஸ் வருகிறதா என்று புரியவில்லை.

பெட்ரோல் விலை ஏற்றத்திற்கு அரேபியாவிலிருந்து பெட்ரோல் வருவதாக காரணம் சொல்கிறார்கள். ப்ளாட்பாரம் டிக்கட்ஸ் கூட அரேபியாவிலிருந்து வருகிறதா என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது அதை 30 பைசாவிலிருந்து 50 பைசாவாகக உயர்த்தினார்கள். இந்நிலையில் மத்திய அரசு பட்ஜெட்டினால் விலைகள் ஏறியிருக்கும்போது எந்த வரியும் விதிக்காத மாநில பட்ஜெட்டை எதிர்த்துப் பேசும் நண்பர்களைப் பார்க்கும் போது நாம் எப்படி தமிழ்நாட்டை முன்னேற்றப் போகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று தோழமை முறையில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் சைக்கிள் வரியை ஒரு பகுதியை குறைத்திருக்கிறோம். பலமுனை வரி என்றிருந்ததை, ஒரு முனை வரியாக திருத்தியிருக்கிறோம். இப்படியெல்லாம் ஓரளவுக்கு நம்முடைய அதிகாரத்தை வைத்துச் செய்திருக்கிறோம். இந்த அதிகாரத்திற்கு உட்பட்டு, இன்னும் கொஞ்சம் அபிவிருத்தி செய்யுங்கள் என்று ஆக்கபூர்வமான விமர்சனம் செய்திருந்தால், அதன் அடிப்படையிலே கருத்துக்கள் தெரிவித்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும். சில பிரச்னைகளுக்கு நான் வர விரும்புகிறேன்.

உற்பத்தியைப் பெருக்குவதைப் பற்றி வேளாண்மையிலே கொண்டு வந்திருக்கிறீர்கள். சர்க்காரை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், பல இடங்களிலே இந்த விதைகளை உற்பத்தி செய்கின்ற பணி பல தனியார்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான் கேட்டுக் கொள்வது, அரசாங்கமே இந்த விதைப் பண்ணைகளை ஆரம்பிக்கவேண்டும் என்பது. பல இடங்களிலே அரசாங்க விதைப் பண்ணைகள் இருக்கின்றன. சில இடங்களிலே இருப்பது எனக்குத் தெரியும். தனியார் துறையில் நெல்லையே விதையாக மாற்றி விடுகிறார்கள். பல விஷயங்கள் இப்படி நடக்கின்றன. அரசாங்கப் பண்ணைகள் மூலமாக விதைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்கிற அடிப்படையிலே முயற்சிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, சில இடங்களில் பெண்டிங்காக இருக்கிறது. மணிமுத்தாறிலே விதைப் பண்ணைக்காக சர்க்கார் வாங்கிப் போட்ட இடம், இப்போது காடாகி இருக்கிறது. இன்னும் அந்த இடம் அப்படியே இருக்கிறது ; பண்ணை ஆரம்பிக்க முடியவில்லை. எனவே, தனியார்களை நம்பாமல், அரசாங்கமே விதைப் பண்ணைகளை ஆரம்பிக்க முன்வரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, உற்பத்தியைப் பெருக்குவது அவசியம். உற்பத்திக்காக விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படுகிறது. உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கொடுக்கப்படுகிறது ; இது அதிகரிக்கப்





பட வேண்டும். உண்மையிலேயே உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்கு நில சீர்திருத்தம் செய்வதன் மூலமாகத்தான். அடிப்படை சீர்திருத்தத்தின் மூலம்தான் இதைச் செய்யமுடியும். இதை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, அதற்கு ஆதரவாக 75—25 என்ற விகிதத்தை உடனடியாக அமுல்படுத்துவதற்கு முன்வர வேண்டும். அதற்கான விதி திருத்தத்தை இந்த சர்க்கார் உடனடியாக கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பழ உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அது அவசியம்தான். கல்ராயன்மலையிலே சர்க்கார் தாப்பிலே பழத் தோட்டம் ஆரம்பிக்க இருப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். இதிலே நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கல்ராயன்மலைப் பகுதியிலே பல பழங்குடி மக்கள் தோட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அரசு பழத் தோட்டம் போட வேண்டுமென்று கூறி, அவர்களைப் அப்புறப்படுத்துகின்ற முயற்சி நடைபெறுவதாக புகார் வந்திருக்கிறது. எனவே, பழங்குடி மக்களை பாதுகாக்கின்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்வதற்காக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக விநியோகம் செய்வதற்கு முயற்சிகள் செய்து வருகிறோம். இதிலே இரண்டுவிதமான கண்காணிப்புகள் இருக்கவேண்டும். சமீபத்திலே திண்டுக்கல்லுக்குப்

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

பக்கத்திலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்த சீனியை கூட்டுறவு ஸ்தாபனம் மூலமாக விநியோகம் செய்ததில், 8 மூட்டையில் 4 மூட்டையை விநியோகம் செய்துவிட்டு 4 மூட்டையை பிளாக் மார்க்கெட்டில் விற்கப்பட்டது. அது மக்களால் பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்யும்போது, மக்களுக்கு அவைகள் ஒழுங்கான முறையில் கிடைப்பதற்கு, அதைக் கண்காணிப்பதற்கு சர்வ கட்சியினரைக் கொண்ட மக்கள் கமிட்டி போட்டு, அதைக் கண்காணிக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் பணிபுரிகின்றவர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் கிடைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதேபோல், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக நகரங்களில் காய்கறிகள் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். கிராமங்களில் ஒரு கிலோ தக்காளி

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்] [1980 ஜூலை

10, 15 பைசாவிற்கு வாங்கி, நகரங்களிலே 2, 3, 4 ரூபாய்களுக்கு விற்கப் படுகின்றது. ஆகவே, காய்கறிகள் நகரங்களுக்குக் கிடைக்க சிவில் சப்ளை மூலம் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், காடுகளைப் பற்றிய பிரச்னை ஏற்கனவே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்த முயற்சி வரவேற்கத்தக்கது. ஆனால், அதை வரவேற்கும் அதேநேரத்தில், ரொடேஷன் வகையில் நீர் பிடிப்பு இல்லாத பகுதிகளில், காடுகளை வளர்த்து, அவைகளை ரொடேஷன் முறையில் வெட்டி, அதன் அடிப்படையிலே விறகு மக்களுக்குக் குறைந்த விலையில் விநியோகம் செய்கின்ற முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல்வேறு திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற வாய்ப்பு விட்டுப் போய் இருக்கின்றது.

(முற்பகல் 11-30)

ஏற்கனவே பல திட்டங்கள் மத்திய சர்க்காரின் ஒப்புதலை எதிர் நோக்கி யிருக்கின்றன. அப்படிப்பட்ட முறையில் சேர்வலாறு நீர் மின் திட்டமும், மணிமுத்தாறு, மேல் தாம்பிரபரணி மின் திட்டமும் ஆகும். மத்திய அனுமதியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. சீக்கிரம் வேலையை ஆரம்பிக்க அரசு முயற்சிக்க வேண்டும்.

மின்சாரத்தைப் பற்றிச் சொல்லும்போது மத்திய சர்க்கார் எந்த அளவுக்கு மாநில அதிகாரத்திற்குள்ளே குறுக்கிடுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரளத்திலிருந்து மின்சாரம் பெறுவதற்கு ஒரு ஒப்பந்தம் செய்யும்போது பெறும் மின்சாரத்திற்கு நம்மிடமுள்ள அலுமினியம் கொடுப்பது என்ற முறையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மத்திய சர்க்கார் தடுத்து அந்த அதிகாரத்தைப் பறிக்கும் முயற்சியில் மத்திய சர்க்கார் போய்க்கொண்டிருக்கிறது. இந்த நிலையை மத்திய சர்க்காருக்குச் சுட்டிக்காட்டி தடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வேண்டிய பல விஷயங்களைப் பின்னால் இருக்கும் நண்பர்கள் பேசுவார்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம், நன்றி.

*** திரு. க. இரா. சின்னராசு:** பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1980-81 ஆம் வருஷத்திற்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வாக்காளர் பெருமக்கள் மீண்டும் இந்த சட்ட மன்றத்திற்கு அனுப்பி வைத்ததற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஜூலை 4] [திரு. க. இரா. சின்னராசு]

1980-81 ஆம் வருஷத்திற்கான நிதிநிலை அறிக்கையிலே 982.66 கோடி ரூபாய் வரவு, 967.27 கோடி ரூபாய் செலவாகும். மீதம் 15.39 கோடி ரூபாயாக இருக்கும் வகையில் இந்த பட்ஜெட்டை நிதியமைச்சர் அவர்களும் புரட்சித் தலைவர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை ஒரு நல்ல அறிகுறியாகக் காணப்படுகிறது. இதற்கு முன்னாலே எத்தனையோ அரசுகள் இருந்தாலும் அந்த அரசுகள் பற்றாக்குறை பட்ஜட்டைத்தான் கொடுத்திருக்கின்றன. இன்றைக்கு நாவலர் அவர்கள் அளித்திருக்கும் நிதிநிலை அறிக்கை உபரி பட்ஜெட்டாக இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி உபரி பட்ஜெட்டாக அறிவிக்கப் பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டை பாராட்ட மனம் இல்லாமல் தூற்றுகிறார்கள். அப்படித் தூற்றுகிற நிலையில் கொஞ்சம் உள்ளே புகுந்து எந்த அளவுக்கு ஏழை சமுதாயத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நல்ல வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று எதிர் வரிசையில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் மற்றவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, வேளாண்மைத் துறையில் நல்ல பயன் தரக்கூடிய திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். நெல், பருத்தி போன்ற விதைகளை உற்பத்தி செய்வதற்கும், மற்றும் தென்னை நாற்று கன்றுகளை அதிகப்படுத்துவதற்கும், 13 லட்சம் நாற்று கன்றுகள் இருந்ததை 31 லட்சம் அதிகமாக உற்பத்தி செய்கின்ற வகையில் நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இது உண்மையில் பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும். அழுகும் பொருள்களை சேமித்து வைப்பதற்காக நான்கு குளிர் சாதன கூடங்களைக் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் கடனைத் தள்ளுபடி செய்வதில் இந்த அரசு சொன்னதைச் செய்யவில்லை என்று பலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன். செய்யவேண்டிய நேரத்தில் ஒவ்வொன்றாகச் செய்யக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்கி இந்த அரசு ஏற்கனவே இருந்த நேரத்திலேயே 40 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகள் கொடுக்க வேண்டிய கடன்களை தள்ளுபடி செய்திருக்கிறது. அதற்கு அடுத்து இந்த நிதிநிலை அறிக்கையில் தக்காவிக் கடன்களை பதினாறு கோடி ரூபாய் அளவுக்கும் [illegible] ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு மற்றக் கடன்கள் 42 கோடி ரூபாய் அளவுக்கும் இந்த அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. ஆக, இந்த அரசு [illegible] ஆட்சி செய்த காலத்தில் மொத்தம் 100 கோடி ரூபாயை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்திருக்கிறது என்று சொன்னால் அதை நல்ல மனம் [illegible]வர்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். இது விவசாயிகள் மீது

இந்த அரசு எவ்வளவு நல்ல பற்றும் பாசமும் வைத்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை மன்றத்தின் மூலமாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் வளர்ச்சி பெறுவதற்காக கால்நடைப் பண்ணைகளுக்கும், தரமான கன்றுகள் வளர்ப்பதற்காகவும் இந்த ஆண்டு நிதி 5 [illegible] பட்டிருக்கிறது. காங்கேயம் காளைகளையும், ஓங்கோல் மாடுகளையும் வளர்க்க திட்டம் தீட்டியிருப்பதைக் கண்டிப்பாகப் பாராட்டியாக வேண்டும். இது விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்யப்பட்டிருக்கிற நல்ல [illegible] யாகும். அதே நேரத்தில் விவசாயிகள் பணியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் வைத்திருக்கும் மாடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டு நஷ்டம் ஏற்படுமானால் அதை ஈடு செய்யும் வகையில் இந்த அரசு நல்ல திட்டம் தீட்டியிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

உண்மையிலேயே அது பாராட்டவேண்டிய ஒரு திட்டமாகும். அதே நேரத்திலே அத்தனைத்திலே இருக்கிற எல்லா மக்களுக்கும் [illegible] கட்டைகள் இல்லாததால் வகையில் காட்டு இலாகாவிலே எரிபொருளுக்கு, தேவையான கட்டை மரங்களை அவதிப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, நல்ல மரங்களை வளர்ப்ப வளர்ப்பதற்கும் உலக நாட்டின் உதவியோடு நல்ல திட்டங்களை தற்கும் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றம் உணரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தர்மபுரி மாவட்டத்திலே பாசன வசதிகளைப் பெருக்கு வதற்காக அரசு சில திட்டங்களைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. [illegible] ஆகிய [illegible] நிதி ஒதுக்கம் அணைக்கட்டுத் திட்டங்களைக் கட்டிக் கொடுப்பதற்காக தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பாக அரசைப் செய்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நாச்சிருப்பம் ஆற்றின் குறுக்கே [illegible] திட்டம் அரசு [illegible] சேர்த்து கட்டி பரிசீலனையில் உள்ளது. இத்திட்டங்களோடு [illegible] முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு என ரூ. 22.74 கோடி ஒதுக்கி யிருப்பதைப் பாராட்டுகிறேன். சிறிய பாசனத் திட்டத்தைப் பொறுத்த வரையில் தர்மபுரியில் பல திட்டங்கள் இருந்[illegible] என் தொகுதியான



கிருஷ்ணகிரி பகுதியில் [illegible] கிராமத்தில் புதிய ஏரி ஒன்றும் ஆலப்பட்டி கிராமப் பகுதியில் புதிய ஏரி ஒன்றும் குடுக்கனஹள்ளி, மந்திரி கவுண்டன் கொட்டாய் வரும் காட்டாற்றில் ஏரி ஒன்றும், எட்டிக்கல் அகரம் [illegible] அலே ஏரித் திட்டத்தின் [illegible] குந்தாணி கிராமப் பகுதியில் ஏரி ஒன்றும் கட்டுவதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அவைகளை நிறைவேற்றித்தர அரசு மனமுவந்து நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியில், மார்க்கண்டேய ஆற்றில் இருந்து பட்ட தல்லாப் ஏரிக்கு ஒரு கால்வாய் வருகிறது. அந்தக் கால்வாய் 25 ஆண்டு [illegible] இன்னும் 5 அடிக்கு களுக்கு முன்பு [illegible] அதன்மூலம் தண்ணீர் அகலப்படுத்தி பக்கத்திலே உள்ள ஏரிகளுக்கு பாசன வசதி பெறும். கிடைக்கச் செய்தால் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் ஏரிகளுக்கும் அந்தக் அதோடு, ஜிஞ்சுபள்ளி, புளியரசி ஆகிய இரண்டு ஏற்ற முறையில் கால்வாய் கால்வாயிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு தரவேண்டுமாய்க் கேட்டுக் வெட்டி ஒரு திட்டத்தை நிறைவேற்றித் பகுதியாக இருக்கின்ற கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலமாக [illegible] என்பதைத் தெரிவித்துக் அந்தப் பகுதி [illegible] கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இன்னும் பல கிராமங்கள் சாலை வசதிகளைப் பெறாமல் இருக்கின்றன. பாதைகள் அமைக்கப்பட்டிருந்தும், அவைகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையிலே 1,800 புதிய பேருந்து வழித்தடங்கள் உருவாக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, அதை நான் பாராட்டி, என்னுடைய தொகுதியிலேயும் கிராமப் பகுதிகளிலே உள்ள சாலைகளை சீர்படுத்தி பேருந்துகள் விடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியைச் சேர்ந்த சிந்தகம் அலே குந்தாணி, தாணி சந்தை, குருபரப்பள்ளி, கல்லூர், நட்டவார் வழியாக புதிய பேருந்துகளைவிட ஏற்பாடு செய்ய நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் இன்றைக்கு போக்குவரத்து வசதியில்லாமல் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எங்களுடைய கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் கே.ஆர்.பி. டேம் [illegible] சோக்காடு, போரமொடுக்கு, கொட்டாய், வழியாக மந்திரிகவுண்டன், [illegible] TO [illegible] ஒரு பேருந்து விட பாலகுறி வழியாக [illegible] மேலும் கிருஷ்ணகிரியிலிருந்து வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. இரா. சின்னராசு] [1980 ஜூலை

(முற்பகல் 11-40)

மாதய்யப்பட்டி, செட்டியமுத்தூர், பெரியபுதூர், சாலியபாளையம், செல்லம்பள்ளி வழியாக ஒரு பேருந்தைவிட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டத்திற்கு நல்ல முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்கு நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சில கிராமங்களுக்கு இன்னும் சரியானபடி தண்ணீர் வசதியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதையும் சீர்செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். நல்லூர், வெப்பாலநாய்க்கி, இடையம்பட்டி, வேடம்பட்டி, பாலனாம்பட்டி ஆகிய கிராமங்களில் குறைந்தது ஒரு கிலோமீட்டர் தூரத்திலேதான் தண்ணீர் கிடைக்கிறது. அந்தத் தண்ணீரை எடுத்து வருவதற்கு அந்தப் பகுதியிலுள்ள தாய்மார்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதனால் அந்தத் தண்ணீர் ஊருக்கு மத்தியிலே கிடைப்பதற்கு குடிநீர்த் தொட்டியைக் கட்டி தண்ணீர் கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். ஒருகாலத்திலே மகாகவி பாரதியார், "தனி மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று சொன்னார். பாரதியாரின் அந்தப் பாட்டிற்கேற்ப வறுமையால் வாடி, பட்டினியால் வாடுகின்ற ஏழை மக்களுக்கு உடனடியாக நூறு ரூபாய் உதவித் தொகை கிடைக்க வேண்டுமென்று நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருப்பதை எந்த நல்ல மனம் படைத்தவர்களும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்.

கிராமங்களில் வயது முதிர்ந்தவர்கள் விவசாயப் பணி செய்ய முடியாத அளவிற்கு 60 வயதிற்கு மேற்பட்டு, வசதி வாய்ப்பற்றிருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு முதியோர் திட்டத்திலே உதவித்தொகை வழங்குகின்ற ஒரு நல்ல திட்டத்தையும் கொடுத்திருக்கிறார்கள். கண்டிப்பாக அதைப் பாராட்ட வேண்டும். கிராமப்புறங்களுக்குச் சென்று பார்க்கின்றவர்களுக்குத் தான் தெரியும். வசதி வாய்ப்பற்ற ஏழை சமுதாய மக்கள், தோட்டம், வயக் காடுகளுக்குச் சென்று உழைத்து உழைத்து, 60 வயது நிறைந்து நலிந்து கிடக்கின்ற அந்தச் சமுதாயத்திற்கு இந்த மாதிரி திட்டங்கள் மிக அவசியம் என்பதைப் புரட்சித் தலைவரவர்களும், நிதியமைச்சரவர்களும் உணர்ந்து செயல்பட்டு இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே



1980 ஜூலை 4] [திரு. க. இரா. சின்னராசு]

அந்த மக்களின் சார்பாக இந்த அரசுக்கும், மதிப்பிற்குரிய மாண்புமிகு நிதியமைச்சரவர்களுக்கும், புரட்சித் தலைவரவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பின் தங்கியோருக்கும், அவர்களுடைய வளர்ச்சிக்குமாக நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். பின்தங்கிய மக்களுக்காக 30,000 வீடு கட்ட கடன் உதவி தருவதற்கு நிதிநிலை அறிக்கையில் வாய்ப்பு தந்திருக்கிறார்கள். ஏற்கனவே, கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை ஏற்படுத்தி, அதிலே 5,000 ரூபாய் கடனைக் கொடுத்து வந்ததைக் குறைத்து, 3,000 ரூபாயாகக் கொண்டு வந்தார்கள். மானியமாக 600 ரூபாய் கொடுத்தார்கள், அதை நிதிநிலை அறிக்கையிலே 1,000 ரூபாய் மானியமாக உயர்த்தி யிருப்பதைப் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் 3,000 ரூபாய் கடனாகக் கொடுக்கப்படுவதை, இன்றைக்கு இருக்கின்ற பொருள்களின் விலைவாசி ஏற்றத்தைப் பார்த்து 3,000 ரூபாயிலே வீடு கட்ட முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அதை ஏற்கனவே கொடுத்ததுபோல் 5,000 ரூபாய் ஆகக் கொடுத்தால் ஓரளவுக்கு அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அந்த அடிப்படையிலே அந்தக் கடனை, 5,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே நிதியமைச்சரவர்களையும், மற்ற அமைச்சர்களையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவு சிரமங்களுக்கு இடையே இத்தனை நல்ல திட்டங்களையும் தந்து, ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தவிதமான வரியையும் போடாமல், வரியையும் உயர்த்தாமல், வரியைக் குறைத்திருப்பது பாராட்டு வதற்குரிய ஒன்றாகும். இதை இந்த நாட்டிலுள்ள அத்தனை எதிர்க் கட்சித் தலைவர்களும், சர்வ கட்சித் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, பெரியவர் முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள்கூடப் பாராட்டியிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை, அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பாராட்ட மனமில்லாமல் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரைக்கும் நான் பாராட்டி, வரவேற்று, இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கை இதற்கு முன்னாலே இருந்த எந்த அரசும்—இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கொடுக்காததை இந்த அரசு இதிலே கொடுத்திருக்கிறது, அந்த நல்ல திட்டங்கள் அனைத்தும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழை சமுதாயத்தினுடைய வாழ்வு மலர்வதற்குக் கொடுக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்று, பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன், வணக்கம்.

**திரு. மு. அம்பிகாபதி :** மதிப்பிற்குரிய சட்டமன்றப் பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இன்னும் ரூ. 17.44 கோடிக்கு இந்த பட்ஜெட்டில் இணைத்திருப்பார்களானால், ஆயிரம் கோடிக்கு பட்ஜெட் கொடுத்த அவை முன்னவர் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம். வரவு ரூ. 982.66 கோடியாகவும் செலவு ரூ. 967.27 கோடியாகவும் இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், 50 ஆம் பக்கத்திலே. வருங்காலத்தில் நம்முடைய பட்ஜெட் இன்னும் உயர்ந்து கொண்டே செல்லும்.

மத்திய சர்க்காருடைய பட்ஜெட்டில் பல்வேறு பொருள்களுக்கு வரி போடப்பட்டிருக்கின்றது. அருமை தோழர், திரு. பொன்னம் அவர்கள் சொன்னதைப் போல், பிளாட்பாரம் டிக்கெட்டைக் கூட விடாதவர்கள் வரியே இல்லாத இந்த பட்ஜெட்டை குறை சொல்கிறார்கள். சொல்ல வேண்டுமென்பதற்காக பல்வேறு விஷயங்களைக் கூறியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பொதுவாக, இந்த பட்ஜெட்டை நாங்கள் வரவேற்கிறோம். விவசாயிகளுடைய கடன் தள்ளப்பட்டிருப்பதும், புதிய பஞ்சாலைகள் 36 திறப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருப்பதும், 16 பஞ்சாலைகளை விரிவு படுத்துவதற்கான நடவடிக்கையில் அரசு இறங்கியிருப்பதும், கிராமப்புற தொழிலை வளர்ப்பதற்காக நிதியை ஒதுக்கியிருப்பதும், மின்சாரத் துறைக்கு கிட்டத்தட்ட ரூ. 150 கோடி அளவுக்கு ஒதுக்கி, மின்துறையை மேம்படுத் தினால்தான் தொழில் துறை வளர்ச்சிபெறும் என்கிற விவரத்தைப் புரிந்து இந்த அரசு மின்சாரத் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும் நாங்கள் வரவேற்கத்தக்கது.

இந்த நிதிநிலை அறிக்கையில், மத்திய அரசாங்கம் நம்முடைய தமிழகத்தைப் புறக்கணித்திருப்பதற்கு பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை மிகவும் முக்கியமான விஷயங்கள். அருமை காங்கிரஸ் நண்பர்கள் அதைக் கேட்கவில்லை. மிகவும், அமைதியாக இருந்துவிட்டார்கள். 1969-74-ல், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்திய முழுமையும் இருக்கக் கூடியவர்களுக்கு தலா ரூ. 133 கிடைக்கும் என்று சொன்னால், தமிழகத்திற்கு ரூ. 114—விகிதாச்சார, பிரிவு அடிப்படையிலே— கிடைத்திருக்கிறது என்கிற விவரத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அதே விகிதாச்சாரம், 1974-78 இந்த ஆண்டுகளுக்கிடையில், இந்தியா முழுவதும் ரூ. 345 என்று சொன்னால், தமிழகத்தில் ரூ. 272 என்ற அளவில் தானிருக்கிறது. அனைத்து மாநிலங்களில் நம்முடைய இடம் 10-வது இடம். **இதற்குக் காரணம்** யார்? மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை, மத்திய



அரசாங்கத்தினுடைய செயல்பாடு. அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிற விவரத்தையும் நாம் பார்த்தால், மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கியிருக்கக்கூடிய பங்கு 1951-56-ல் 10.8 சதவிகிதம்; 1956-61-ல் 9 சதவிகிதம்; 1961-66-ல் 7.4 சதவிகிதம்; ஆண்டுத் திட்டங்களான, 1966-69-ல் 6.8 சதவிகிதம்; 1969-74-ல் 6.8 சதவிகிதம்; 1974-78-ல் 4.1 சதவிகிதம். அதன் விளைவாக நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சித் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது, வேலையில்லா திண்டாட்டம் வளர்ந்திருக்கிறது. இன்றைக்கு மத்தியிலே இருக்கிறவர்களை, மாநில அரசு கேட்கிறதா, கேட்கவில்லையா என்பதல்ல பிரச்னை. மத்தியிலே உள்ளவர்கள் மாநிலத்திற்கு எந்த அளவு ஒதுக்கவேண்டும்? பாதிக்கப்பட்ட மாநிலம், பிற்படுத்தப்பட்ட மாநிலம், என்று ஒதுக்கும்போது, மத்தியிலே இருக்கிறவர்கள் புத்திசாலித்தனமாகச் செய்யவேண்டும். அழுதால்தான் பால் கொடுப்பது—அழுத பிள்ளைக்குத்தான் பால் கொடுப்பது என்பது வாதம். ஆனால், அழாமலே பால் கொடுப்பவள்தான் புத்திசாலித்தனமான தாயாக இருக்கமுடியும். குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுக்கக் கூடாது. குழந்தை சிறுநீர் கழித்துவிட்டால் அழும், எறும்பு கடித்தால் அழும், உடனே பால் கொடுப்பதா? வயிற்று வலி வந்தால் அழும். எனவே, பிள்ளை அழுகிறது என்று அதற்குப் பால் கொடுத்தால், குழந்தை செத்துப் போகும். எந்தப் பிள்ளைக்கு எப்பொழுது பால் கொடுக்கவேண்டுமென்பதைத் தெரிந்தவள் தான் தாய், தெரியாதவள் பேய் என்பது உலகத்திலே உள்ள பழமொழி.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அழாமலே குழந்தைக்குப் பால் கொடுப்பவள் தான் தாய். பிள்ளைக்கு எப்பொழுது பால் கொடுக்கவேண்டுமென்று தெரிந்தவள்தான் தாய், தெரியாதவள் பேய், தாயாக இருக்க முடியாது என்று சொன்னார். 1977 ஆம் ஆண்டிலேயிருந்து 1980 ஆம் ஆண்டு வரை மத்தியிலேயிருந்த அரசாங்கத்தையும் சேர்த்துத்தானே சொன்னார்.

**திரு. மு. அம்பிகாபதி :** நான் பால் கொடுக்கின்ற தாயைப் பற்றிச் சொன்னேன், மத்தியிலே உள்ளவர்களைப் பற்றிச் சொல்லவில்லை.

(முற்பகல் 11-50)

எனவே, இப்படி ஒரு பழமொழி எங்கள் கிராமத்திலே இருக்கிறது. மாநிலங்களுக்கு அதிகமான அளவில் நிதி ஒதுக்கம் அளிக்கப்படவேண்டும் . . .

* **திருமதி தா. இராசாம்பாள் :** பாயின்ட் ஆப் ஆர்டர், தயவு செய்து பெண்களைத் தனிப்பட்ட முறையில் அவமானப்படுத்துவது போல் அவர்கள் பேசுவது சரிதானா என்பதைத் தங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

பெருங்குடி மக்களின் கடன் சுமையில் ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ள 40 கோடி போக மீண்டும் தற்போது சுமார் 60 கோடி ரூபாய்களுக்கு அரசு தக்காவிக் கடன் மற்றும் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்துள்ளமைக்கு மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

ஐந்து ஏக்கர் நில உச்சவரம்பு அளித்து, சிறு விவசாயிகளும் மாண்புமிகு புரட்சித் தலைவரை மனதாரப் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

மத்திய அரசின் எந்த உதவியும் இன்றி தமிழக அரசே பொறுப்பேற்று ரூ. 60 கோடிக்குத் தள்ளுபடி செய்ய முன்வந்துள்ளதற்குக் கழக அரசிற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் விவசாயிகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளோம் என்று சொல்லுகின்ற, இன்றைக்கு மத்திய அரசிலே ஆட்சி செய்து வருகின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இம் மாமன்ற உறுப்பினர்களுக்கு மைய அரசிற்கு எடுத்துக்கூறி, மேலும் விவசாயிகளின் சுமைகள் குறைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இம் மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நாட்டின் அவசியத் தேவைகளில் ஒன்றாக விளங்கும் மின்சார உற்பத்திக்குக் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டு, தமிழகத்தை ஒளிமயமாக்கும் வகையிலும் எதிர்காலத்தில் மின்சார பற்றாக்குறையே இருக்கக்கூடாது என புதிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டி இருப்பதும் வரவேற்கத்தக்கது. பாமர மக்களின் நலனில் அக்கறைக் கொண்ட மைய அரசு இத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து நிதி உதவியும் செய்ய வேண்டும் என இம் மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக ஆளுநர் ஆட்சியின்போது மின்சாரப் பற்றாக் குறையின் கொடுமையால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலைமை இருந்து வந்தது. ஆங்காங்கே மின்சார தட்டுப்பாடு காரணமாகப் பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலையின்றிப் பாதிக்கப்பட்டனர் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். ஆனால் தருமத்தின் தளநாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற சில தினங்களுக்குள்ளாகவே மின்சார கட்டுப்பாடு அறவே நீங்கியது மட்டுமல்ல; இருண்ட சூழ்நிலையில் இருந்து வந்த தமிழகம் ஒளிமயமாக விளங்கியது என்பதை எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



மேலும் தெருவிளக்குகள் பராமரிக்கும் முறை மீண்டும் மின்சார இலாகாவிற்கே அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இன்னும் தெரு விளக்குகளின் பல்புகள் மாற்றப்படாமல் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, இக்குறைகளைப் போக்கத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் ஏற்கெனவே கொண்டுவந்த குடிசைகளுக்கு மின் ஒளி வழங்கும் திட்டம் சீரிய முறையில், செம்மையாக நடைபெற்று வந்ததை, ஆளுநர் ஆட்சியின்போது மந்த நிலையில் இருந்து வந்த நிலைமையை மாற்றி துரிதப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டு மல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகத் தீட்டப்பட்ட இத் திட்ட மானது ஆங்காங்கே அதிகாரிகளால் குடிசைகளுக்கு மட்டும்தான் என்றும், அதே தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் வாழும் ஓட்டு வீடுகளுக்கு இல்லை என்றும் கூறும் நிலைமையை மாற்றி அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இன்றைக்கு மின் ஒளியை அனுபவித்து வருகின்ற குடிசைகளில் வாழும் ஏழை எளிய மக்கள் கழக அரசையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரையும் உளமார வாழ்த்துவதைக் கண்கூடாகக் காண முடிகிறது. அதைப் போன்று மின்சாரம் கம்பிகளின் வழியாக அனுப்பப்படும்போது ஏற்படும் இழப்பு—கடந்த 1974-75 ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக குறைக்கப்பட்டு 18.10 சதவிகிதமாக இருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது. இருப்பினும் மின்சார இழப்பே சிறிதும் ஏற்படா வண்ணம் நிலைமையை உருவாக்க வேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என்ற முதுமொழிக்கு ஏற்ப நமது கழக அரசு கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் சுமார் 130 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகச் சிறந்தது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அதிலும் குறிப்பாகக் கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இன்றி கீற்றுக் கொட்டகைகளிலும் மரத்தடிகளிலும் நடைபெற்று வரும் பரிதாப நிலையை அறவே மாற்றி, அனைத்துப் பள்ளிகளுக்கும் மூன்றே ஆண்டுகளில் கட்டிடங்கள் கட்டித் தருவதற்கு நல்ல திட்டமொன்றை மேற்

[திரு. இரா. சா. முனிரத்தினம்] [1980 ஜூலை 4

கொண்டுள்ளதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவருக்கும் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலருக்கும் என் நன்றியை இம் மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். நானும், நான் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள கும்மிடிப்பூண்டித் தொகுதியில் பல இடங்களில் பள்ளிகளுக்குக் கட்டிடங்களே இல்லை என்ற அவல நிலை இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவரின் புகழிற்கு மேலும் சிகரம் வைத்தாற்போல இன்னும் ஓராண்டிற்குள் தமிழ் பல்கலைக் கழகம் அமைக்கப்படவிருப்பது மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழ், தமிழர், தமிழ்ச் சமுதாயம் என்று மூச்சுக்கு மூச்சு வாய்கிழிய பேசுகின்ற பெரிய மனிதர்கள் தன் ஆட்சிக் காலத்தில் செய்ய முடியாததை புரட்சித் தலைவரின் கழக அரசு செய்ய முன்வந்துள்ளதை நல்ல மனம்கொண்ட அத்துணைபேரும் வரவேற்பார்கள் என்பதை இத்தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவத் துறையிலே தனிக் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவரின் கழக அரசு அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களுக்கு பாரபட்சமற்ற முறையில் மருத்துவம் கிடைக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்தில் திட்டங்களைத் தீட்டி உள்ளது. கிராமப் புறங்களிலே மருத்துவர்கள் மனங்கோணாது சென்று மருத்துவம் செய்ய அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் வரவேற்கத்தக்கது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு மக்களின் முக்கியப் பிரச்சனையாக இருந்து வருகிறது குடிநீர்ப் பிரச்சினை. நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற கும்மிடிப்பூண்டி தொகுதியைப் பொறுத்தவரையில் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் ஒரு வறண்ட பகுதியாக இருப்பதால் அரசாங்கம் அந்தப் பகுதிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். குழாய் மூலம் போர் போடுவதற்கு, அங்கே கூழாங்கற்களும் பாறைகளும் நிறைந்திருப்பதால், மிகவும் கடினமாக இருக்கிறது; அந்தப் பகுதி மக்கள் குடிநீர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அந்தக் குறையை மாற்ற வேண்டும். பாறைக்கு அடியிலே தண்ணீர் இருப்பதைக் கண்டு பிடித்து, குழாய்கள் மூலம் அதை வெளியேக் கொண்டுவதற்கு ஏற்ற கருவி அரசாங்கத்திலே இருக்கிறது. அந்தக் கருவியைப் பயன்படுத்தி, அந்த வறண்ட பகுதியிலே குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று நம்முடைய அரசை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே சக்தி பைப்ஸ் என்ற ஒரு தொழிற்சாலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மூடப் பட்டது. அதிலே ஏறத்தாழ 700 குடும்பங்கள் பணிபுரிந்து வந்தனர்.



1980 ஜூலை 4] [திரு. இரா. சா. முனிரத்தினம்]

அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டதால் அந்தக் குடும்பங்கள் இன்று மிகவும் பாதிக்கப்படுகின்ற அவல நிலை இருக்கின்றது. ஆகவே அந்தத் தொழிற் சாலையை மீண்டும் திறப்பதற்கோ அல்லது அந்த மக்களின் வாழ்வு மலரு கின்ற வகையிலேயோ மாண்புமிகு, எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் ஒரு நல்ல நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள பெரியபாளையம் கிராமத் தின் அருகில் ஆரணி ஆற்றின் குறுக்கே ஒவ்வொரு வருடமும் வெள்ளத்தால் போக்குவரத்து பாதிப்பும் உயிர் சேதமும் உடைமை சேதங்களும் ஏற்படு கின்றன. மழைக் காலங்களில் தண்ணீர் வீணாகப் போய் விடுகின்றது. எனவே நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள அப்பகுதியில் ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுவதற்குத் தகுந்த மேல் நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கும்மிடிப்பூண்டி மிகவும் பின்தங்கிய பகுதி யாக இருப்பதால் என்னுடைய தொகுதியின் மீது நம்முடைய அரசு ஆழ்ந்த கவனம் செலுத்தி அந்தத் தொகுதி முன்னேறுவதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வாயார சொல்பவர்கள் சிலர், ஆனால் நெஞ்சார செய்து காட்டியவர் புரட்சித்தலைவர், பேசினால் மட்டும் போதும் என்று திருப்தி அடைந் தவர்கள் சிலர், செய்தே காட்ட வேண்டும் என்றும் உழைத்து நிறைவேற்றி யவர் புரட்சித் தலைவர். அதிகம் சொல்லி எதையும் செய்யாதவர்கள் சிலர், எதையும் செய்வேன், அதையும் நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக செய்வேன் என்று செய்பவர் புரட்சித்தலைவர் என்பதைக் கூறிக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை நான் ஆதரித்து வரவேற்று நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மரியாதைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே வரவேற்று பேசுவதிலே நான் பெருமைப்படுகிறேன். சாலைப் போக்குவரத்தில் பேருந்து செல்லும் ஒன்றியச் சாலைகளுக்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதும், 1500 மக்கள் தொகை கொண்ட ஊர்கள் அனைத்துக்கும் சாலைப் போக்குவரத்துக்காக ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதும் 1,800 புதிய பேருந்துகள் விடத் தீர்மானித்திருப்பதும் மிகவும் பாராட்டத் தக்கதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

அதேநேரத்தில் சுதந்திரம் கிடைத்து கிட்டத்தட்ட 33 வருடங்கள் ஆகியும் இன்னும் பேருந்துகளை பார்த்தே அறியாத மக்களைக் கொண்ட ஊர்கள் என்னுடைய தொகுதியிலே உள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். எனவே தாயுள்ளம் கொண்ட நமது முதலமைச்சரவர்கள் எனது தொகுதியிலுள்ள ஒன்றியங்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று குடிதண்ணீர் வசதிக்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய் திருப்பதை வரவேற்பதோடு இதிலே பெரும்பகுதி கிராமப்புறங்களுக்கு செல விடப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியில் கிராமப்புறங்களில் குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் சங்கடப்படு கிறார்கள். இந்த நிலை எல்லாத் தொகுதிகளிலும் காணப்படுகிறது. என்னுடைய ஆலங்குளம் தொகுதியிலே இந்த நிலையில் பல கிராமங்கள் இருப்பதால் இந்த நிதியினை கிராமப்புறங்களில் குடிநீர் வழங்குவதற்காக செலவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராம வளர்ச்சித் திட்டம் என்ற வகைக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்பதோடு அவை பெரும்பாலும் வெவ்வேறு ஒன்றியங்களை இணைப்பதற்குச் செலவிடப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இணைப்புச் சாலைகள் இல்லாத காரணத் தினால்தான் பல தொகுதிகளில் பல ஊர்கள் தீவுகள் போல் காட்சி அளிக் கின்றன. ஆலங்குளத்தில் பல ஊர்கள் தீவுகள்போல் இருக்கின்றன. ஏழ்மை நிலையில் உள்ள கருவுற்ற மகளிர்க்கு ஏழாம் மாதம் முதல் குழந்தை பிறந்த நான்கு மாதம் முடியும் வரை சத்துணவு வழங்கப்படும், அவர்கள் உடல் நலம் பரிசோதிக்கப்பட்டு தக்க அடிப்படை மருந்துகளும் வழங்கப் படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதுதான் என்றாலும் பேருகால நோங்களில் வெளியே அழைத்துச் செல்வதற்குக் கட்டை வண்டிகள் கூட போக முடியாத ஊர்கள் பல உள்ளன. அந்த நிலையை மாற்றும் வகையில் இணைப்புச் சாலைகள் போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

பற்பல பண்டங்களின் மீது விதிக்கப்படும் பலமுறை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாக மாற்றம் செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதிலே அரிக்கன் விளக்கு, ஸ்டவ் போன்றவைகளுக்கு வரி விலக்களித்திருப்பதுபோல் எபனைட் என்கிற மரக்கட்டைப் பேனாவிற்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





ஏனென்றால் இந்தக் கட்டைப் பேனாவை குடிசைத் தொழில் முறையில் கையினால் செய்கிறார்கள். ஒரு தொழிலாளி நாள் முழுக்க உழைத்தாலும் மூன்று டஜன் பேனாக்கள்தான் உற்பத்தி செய்யமுடியும். இதற்கு ஏறத்தாழ நாள் ஒன்றுக்கு எட்டு ரூபாய் கூலியாகக் கிடைக்கும். இந்தப் பேனாவிற்கு வரி போடப்படும்போது அது இந்தத் தொழிலாளர்களிடமிருந்துதான் வசூலிக்க வேண்டியிருக்கும். அதனால் இந்தத் தொழிலாளி தன் வருமானத்தில் 2 3/4 ரூபாயை இழக்கிறான். தொழிலாளியினுடைய வருமானம் பாதிக்கப்படு கிறது என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த வரிவிலக்கு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எபனைட் என்கிற இந்தக் கட்டைப் பேனாவை செய்கிற தொழிலாளர்கள் நாடு முழுவதிலும் சுமார் 400 குடும்பங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க, அவர்கள் மீது பரிவு கொண்டு அரசு இந்த கட்டைப் பேனாவிற்குரிய வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதிகளுக்கு விளக்குப் போடுவதில் ஊராட்சி பகுதியில் உள்ள குடிசைகளுக்கு மட்டும்தான் என்றிருக்கிற தற்போதைய நிலை மாற்றப்பட வேண்டும். நகர்ப்புறங்களிலே குடிசையிலே வாழ்ந்தாலும் சரி, பேரூராட்சி உள்ள குடிசையாக இருந்தாலும் சரி, நகராட்சியிலே உள்ள குடிசையாக இருந்தாலும் சரி, குடிசையிலே வாழ்கிறவர்கள் ஏழைகள்தான். அவர்கள் எல்லோரும் ஏழைகள் என்று கணக்கில் எடுத்துக்கொண்டு ஊராட்சிகளில் போடப்படுவதைப்போல பேரூராட்சி நகராட்சி குடிசைவாழ் மக்களுக்கும் குடிசை விளக்குப் போட ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன்.

மொத்தத்தில் எல்லா மக்களையும் திருப்திப்படுத்துகின்ற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று கூறி வர வேற்று இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பேசுகிற வாய்ப்பினை மீண்டும் ஏற்படுத்திக் கொடுத்த வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆத்தூர் தொகுதி மக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை தொடங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மீது பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களில் சிலர் பாராட்டி பேசியிருக்கிறார்கள், சிலர் குறை கண்டு பேசியிருக்கிறார்கள்.

குறை காண்பதுதான் எதிர்க்கட்சியினுடைய நோக்கம் என்று இருந்தாலும் கூட நல்ல பல திட்டங்களைக்கூட பாராட்டக்கூடிய மன வளம் பெற வில்லையே என்று கூறுகிற நேரத்தில் மிக வருத்தமாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசும்போது, விவசாய கடன்களை ரத்து செய்ததை குறிப்பிட்டு பேசும்போது, 'யானை பசிக்கு சோளப் பொறி' என்று சொன்னார்கள். அப்படி பேசும்போது, அவருடைய கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே எப்படி நடைபெறுகிறது என்று பார்த்து, விவசாய கடன்கள் ரத்து செய்வதைப் பொறுத்தவரையில் அந்த மாநிலங்களில் என்ன நிலைமை கையாளப்படுகிறது என்று எண்ணிப் பார்த்து பேசும்படி கேட்டுக் கொள்கிறேன். சோளப் பொறியை கொடுத்தாவது யானையைக் காப்பாற்ற வேண்டும் என்று கருது கிறோம் நாங்கள். ஆனால் அந்த யானையை அடித்து நொறுக்கிவிட வேண்டும் என்று எண்ணுகிறீர்கள் நீங்கள் என்பதை சொல்லிக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

டீசல் என்ணெயினுடைய விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. உரத்தி னுடைய விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் விவசாயி களுடைய கடனைப் பற்றி, அவைகளை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டதைப்பற்றி, பாராளுமன்றத்திலே உதவி நிதியமைச்சர் திரு. பராட் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். "விவசாயிகளுக்கு தரப்பட்டிருக்கிற கூட்டுறவுக் கடன்களை குறைப்பதோ, முழுவதும் ரத்து செய்வதோ அவசியம் அல்ல" இது மட்டும் அல்ல, அவர் மேலும் கூறுகிறார். "பொதுப் பணத்திலிருந்து வாங்கிய கடனை திரும்பச் செலுத்த வேண்டாம் என்று சொல்வது நாமானது அல்ல" என்று சொல்கிறார். விவசாய கூட்டுறவு கடன்கள் மீது நிலுவையாக இருக்கும் ரூபாயை வட்டியான சுமார் 40 கோடி ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்து எழுதியது, அதற்கு அந்த கோரிக்கையை ஏற்க இயலாது என்றும், விவசாய கடன்களை ரத்து செய் வதில் மாநில அரசுக்கு எந்த உதவியும் மத்திய அரசு செய்வதற்கு இல்லை என்றும் பதில் அனுப்பியதாக நாடாளுமன்றத்தில் 20-ம் தேதி கூறியதாக, "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை குறிப்பிலிருந்து வெளிவந்த செய்தியை 'மக்கள் குரலிலே' செய்தியாக காண்கிறோம்.

இந்தஅளவிற்கு விவசாயிகள் பிரச்னையில் அக்கறை செலுத்தாமல் அவர் களை நசுக்குகிற முறையில் நீங்கள் திட்டம் தீட்டிவிட்டு இங்கே வந்து விவ சாயிகளுக்கு நாங்கள் கடன்களை ரத்து செய்திருக்கும்போது இதைப்



பார்த்து யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டிருப்பதாக கிண்டலும் கேலி யாகவும் பேசுவது வேதனைக்குரிய செயலாக இருக்கிறது. நாட்டு மக்கள் உங்களை தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நீங்கள் மத்தியில் என்ன செய்கிறீர்கள், மாநிலத்தில் எந்த வேடம் போடுகிறீர்கள் என்பதை மக்கள் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நாட்டு மக்களிடம் எடுத்துக் கூறும்போது நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள், விவசாயி களுக்காக மத்திய அரசு என்ன சாதித்திருக்கிறது, என்ன சலுகைகள் செய்திருக்கிறது என்பதை எடுத்துக்கூற வேண்டும். இன்றைய தினம் தமிழக அரசு விவசாயிகளுக்காக தக்காவி கடன் ரூபாய் 16 கோடியும், குறுகிய காலக் கடன்களாக வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 42 கோடியும் ஆக மொத்தம் ரூ. 58 கோடி அளவிற்கு இந்த அரசு தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு தள்ளுபடி செய்திருக்கிறது. அதைப் பாராட்டுவதை விட்டுவிட்டு யானைப் பசிக்கு சோள பொறி என்று சொல்வது வேதனைக்குரியதாகும்

அடுத்து, நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது மின்சாரம். மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் இந்த அரசு நாட்டம் கொண்டு எந்த அளவிற்கு மின் உ*பத்தியைப் பெருக்க முடியுமோ அந்தஅளவிற்கு நல்ல திட்டங்களைத் தீட்டியிருப்பது கண்டு அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடலி லிருந்து மின்சாரத்தை எடுக்கிற திட்டத்தை இந்த அரசு ஆராய்ந்து நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிற அரசுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், எந்தஅளவிற்கு தர மான கல்வியை அளிக்கமுடியுமோ, அதேநேரத்தில் எந்தஅளவிற்கு படிக்கிற வர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியுமோ அந்தஅளவிற்கு சீரிய முறை யில் செயலாற்றுகிற கல்வித் துறையையும் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம். கடந்த ஆண்டு புகுமுக வகுப்பில் 75,000 பேர்கள் தேர்வு எழுதி னார்கள். இந்த ஆண்டு 12-வது ஆண்டுத் தேர்வில் 1.18 இலட்சம் பேர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள் என்பதை அறிக்கையில் காணும்போது பெருமிதம் கொள்கிறோம். இதுபோல் பல திட்டங்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் உள்ளன. ஏழை மக்களுக்கு நன்மை பயக்கிற திட்டங்கள் இதில் இருப்பதைக் காண்கிறோம். வாழ்க்கையில் வறுமையால் வாடுகிற ஏழை எளிய மக்கள் முன்னேற வேண்டும், அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டும், அவர் கள் வயிறார உண்ண வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பட்டினிச் சாவு ஏற்படாமல் இருக்க ரூபாய் 100 கொடுக்கிற திட்டம், சத்துணவுத் திட்டம் இவற்றை நடைமுறைக் குக் கொண்டு வந்து ஐந்தாண்டு களுக்குள்ளாக தமிழகம் எங்கு நடைமுறைப்

[திரு. ஆ. வெள்ளைச்சாமி] [1980 ஜூலை 4

படுத்தக்கூடிய விதத்தில் திட்டங்கள் கொண்டு வந்திருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், வறுமையில் உள்ளவர்களுக்கு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கும் திட்டம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதியைப் பெருக்கும் திட்டம் இவற்றை பெரிதும் பாராட்டுகிறேன். பாராட்டுகிற அதே நேரத்தில் எனது தொகுதியில் உள்ள ஒன்றிரண்டு பிரச்னைகளை உங்கள் மத்தியில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எட்டு தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் நல்ல முறையில் தென்னை மரங்கள் வளரும் இடம் ஐயம்பாளையம். ஐயம்பாளை யத்தில் ஒரு தென்னை நாற்றுப் பண்ணை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என் பகுதி கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி கைத்தறி நெசவாளர் அதிகமாக வாழ்கிற பகுதி சின்னாளம்பட்டி. அங்குள்ள நெசவாளர்கள் மிகவும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது. நெசவுத்தொழிலில் முடக்கம் ஏற்பட்டிருக் கிறது. ஆகவே கைத்தறித் துணிகளை துரிதமாக கொள்முதல் செய்கிற சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த சட்டமன்றத்தில் சித்தயன் கோட்டையில் ஒரு அரசு மருத்துவமனை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கூறினேன். இந்த நிதிநிலை அறிக்கை யில் அது சேர்த்துக்கொள்ளப்படும் என்று நம்புகிறேன். என் பகுதியில் கிழ் கோம்பை என்ற இடத்தில் ஒரு சிறிய அணை கட்டும் திட்டம் ஆய்வில் இருந்து வருகிறது. அதை இப்போது நடைமுறைக்குக் கொண்டு வந்து அத்திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

என்னுடைய ஆத்தூர் தொகுதியிலே, ரெட்டியார்சத்திரம் என்கிற பின் பின்தங்கிய ஊராட்சி ஒன்றியம் ஒன்று இருக்கிறது. அங்கே சம்பளம் கூட கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த ஒன்றியத்தின் பணிகளைச் செயல் படுத்த போதிய நிதி வசதி இல்லை. ஆகவே, அரசு தரு கின்ற மானியத்தில் அந்த ஒன்றியத்திற்கு அதிகமான நிதி கொடுத்து, அங்கே சாலைகள் நல்ல முறையிலே போடுவதற்கும் இன்னும், பல்வேறு கிராமங்களுக் குச் செல்லும் இணைப்புப் பாதைகள் இல்லாமல் இருக்கின்றது; அதற்கு ரோடு வசதிகள் செய்வதற்கும் நிதி வசதிகள் செய்யப்பட வேண்டும்; அதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றையதினம் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்திருக் கின்ற இந்த நிதி நிலை அறிக்கை ஏழையெளிய மக்கள் முன்னேறுகின்ற வகையிலும், அவர்கள் தங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ளுகின்ற வகை



1980 ஜூலை 4] [திரு. ஆ. வெள்ளைச்சாமி]

யிலும், வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுகின்ற வகையிலும் இருப்பதால், இந்த அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று, வாழ்த்தி நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கெ. சொக்கலிங்கம் :** பெருமதிப்பிற்குரிய மாமன்றத்தின் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், என்னுடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சார்பாகவும் திருப்போரூர் தொகுதி மக்கள் சார்பாகவும், இரண்டாவது முறையாக என்னைத் தேர்ந்தெடுத்திருக்கும் தொகுதி மக்களுக்கும் நன்றி செலுத்தி, இங்கே 1980-81 ஆம் ஆண்டு நிதி நிலையைப் பற்றி நமது நாவலர் அவர்கள் இங்கே தாக்கல் செய்திருக்கிற நிதி நிலையைப் பற்றி நான் பேச விழைகிறேன்.

நாவலர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற நிதி நிலை அறிக்கை சிறப்பான முறையில் இருக்கும் என்று நான்கூட எதிர்பார்த்தேன். நாவலர் அவர்கள் அதிக பக்கங்கள் கொண்ட நிதி நிலை அறிக்கையை இங்கே இன்றைய தினம் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த 1980-81 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக் கையை நான் படித்துப் பார்த்தேன். நீங்கள் அரைத்த மாவையே அரைக்கி றீர்கள். 54 பக்கங்கள் கொண்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நமது நாவலர் அவர்கள் அதை அழகாக வர்ணித்திருக்கிறார்கள். அழகாக போடப் பட்டிருக்கிறதே தவிர, கருத்துக்கள் உள்ளதாக இல்லை என்பதை நான் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். சென்றமுறை இப்படி ஒரு பட்ஜெட்டை தாக்கல் செய்தார்கள். அப்போதுகூட நான் சொன்னேன், இந்த பட்ஜெட் வெறும் பட்ஜெட்டாக இருக்கிறதே தவிர, இது ஒரு வெளிப்படையான எண்ணத்தையோ, கருத்தையோ தெரிவிக்கவில்லை என்றேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால், எல்லா விவசாயிகளுக்கும் விவசாயக் கடன் களை ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். ஆனால், அந்த விவசாயக் கடன் ரத்து செய்யப்பட்டிருக்கின்றதா என்று சொன்னால், இங்கே உறுப் பினர் திரு. சித்தன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல்தான் இருக்கிறது. நாங்கள் விவசாயக் கடனை 60 கோடி ரத்து செய்து விட்டோம் என்று சொன்னார்கள். அதைத் தான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். ஒரு பக்கத்திலே விவசாயக் கடனை ரத்து செய்துவிட்டோம் என்று சொல்லி யிருக்கிறீர்கள். ஒரு பக்கத்திலே விவசாயிகள் வங்கிகளில் பெறுகின்ற கடன் களை அவர்கள் மனமுவந்து திருப்பிக் கட்ட வேண்டுமென்று நீண்ட ஒரு உரையை நிகழ்த்தியிருக்கிறீர்கள். ‘கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையிலே, ரிசர்வ் வங்கியிலிருந்து பெறும் நிதி உதவியையும், பொது மக்களிட

மிருந்து பெறும் வைப்புத் தொகைகளையும் கொண்டுதான் கடன் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. கடன்கள் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தப்படா விட்டால், ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் நமக்கு கிடைக்காது. கூட்டுறவுக் கடன் திட்டம் செவ்வனே செயல்பட வேண்டுமென்றால், வாங்கிய கடன்களை விவசாயிகள் செலுத்துவது இன்றியமையாததாகும்' என்று இந்த நிதி நிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறீர்கள். ஒன்றை மட்டும் நான் சொல்ல விழைகிறேன். அதாவது விவசாயக் கடனில், இந்த குறுகிய கால கடனைத்தான் நீங்கள் ரத்து செய்திருக்கிறீர்களே தவிர, வங்கிகளிலே வாங்கிய கடனை நீங்கள் ரத்து செய்யவில்லை, நிலவள வங்கியிலே கிணறு கன் எடுப்பதற்கும், விவசாய நிலங்களை செம்மைப்படுத்துவதற்கும் விவசாய கருவிகள் வாங்கியிருந்தாலும், அப்படி வாங்கப்பட்ட இந்த நிலவள வங்கிக் கடன்களை நீங்கள் ரத்து செய்யவில்லை என்பதை நீங்கள் இதில் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். நீங்கள் ஒட்டு மொத்தமாகச் சொல்கிறீர்கள்—நாங்கள் விவசாயிகள் கடனை ரத்து செய்து விட்டோம் என்று. எந்த அடிப்படையில் விவசாயக் கடன்கள் முழுவதும் ரத்து செய்து விட்டோம் என்று சொல்லுகிறீர்கள்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சங்கங்கள் சரிவர இயங்குகின்றனவா என்பது சந்தேகமாக இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் மண்ணி வங்கம், மாம்பாக்கம் கிராமங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாக மூடப்பட்டிருக்கின்றன. இதுபற்றி ஏற்கெனவே கூட்டுறவு அமைச்சராக இருந்த மாண்புமிகு கிருஷ்ணசாமி அவர்களிடத்திலே கூறி இருக்கிறேன். அந்தச் சங்கத்தில், நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்பட்ட புழுத்துப் போன துவரம்பருப்பை துணைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு இந்தச் சபையில் காண்பிக்கிறேன். (துவரம்பருப்பு பாக்கட் ஒன்றைக் காண்பித்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அங்கு வாங்கியது தானா என்பதை முதலில் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. கெ. சொக்கலிங்கம்:** இதை மக்கள் சாப்பிட்டால் என்ன ஆகும். ஏற்கனவே இந்த மன்றத்தில் அரிசி காட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சர்க்கார் இதையெல்லாம் கண்காணிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. முத்தையா:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது இரண்டு கூட்டுறவுச் சங்கங்களைச் சொல்லி அந்த இரண்டு கூட்டுறவுச் சங்கங்களும் தன்னுடைய தொகுதியில் பூட்டியே கிடக்கிறது என்று சொல்லி விட்டு அங்கிருந்து கொண்டு வந்த புழுத்துப் போன அரிசியையோ,



பருப்பையோ காட்டுகிறேன் என்று சொன்னால் அதை எப்படிக் கொண்டு வந்தார்கள்? அப்படியானால் அவர் வேறு இடத்திலிருந்து அதை எடுத்து வந்தாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பருப்பு அங்கிருந்துதான் கொண்டு வரப்பட்டதா என்பதையே ஆராயவேண்டுமென்று நான் முதலிலேயே சொன்னேன்.

**திரு. கெ. சொக்கலிங்கம்:** அதைப் பற்றி விசாரணை வைத்தாலும் நான் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். மண்ணிவாக்கம் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து எடுக்கப்பட்டதுதான் என்பதை ஆதாரத்தோடு சொல்லத் தயாராக இருக்கிறேன்.

வாட்சி ஒன்றியப் பள்ளிகள் நாலாயிரம் பள்ளிகளுக்கு மேல் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக 5.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதே நேரத்தில் அது ஒழுங்காகச் செலவழிக்கப்படுமா? என்னுடைய பகுதியில் காட்டாங்குளத்தூர், திருப்போரூர் ஒன்றியங்களில் பல பள்ளிக் கட்டிடங்கள் இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. அதை சீர்படுத்திக் கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்றவர்கள் இதையாவது நீங்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக குடிதண்ணீர்ப் பிரச்சினை. நமது மாண்புமிகு மரியாதைக்குரிய அமைச்சர் ராகவானந்தம் அவர்கள் இதிலே அதிகக் கவனம் செலுத்துவார்கள் என்ற வகையிலே நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன். குடிநீர் வடிகால் வாரியம் செங்கற்பட்டு மாவட்டத்தில், குறிப்பாக செங்கற்பட்டு வட்டத்தில் ஒழுங்காகச் செயல்படுவதில்லை. கடந்த இரண்டரை ஆண்டு காலமாக அது சரிவரச் செயல்படவில்லை. என்னுடைய தொகுதியில் பல கிராமங்களுக்குச் சென்றபோது அங்கே குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பது தெரிந்தது. குடிநீர்க் கிணறுகள் பஞ்சாயத்து மூலம் எடுக்கப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் யூனியன் மூலமாக ஒழுங்காகச் செயல்பட்டு வந்தது. குடிநீர் வடிகால் வாரியம் அந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு பல பகுதிகளில் குறிப்பாக குருவன்மேடு, புலிப்பாக்கம் போன்ற பல பகுதிகளில் அறவே குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. இது தொடரக் கூடாது என்று குடிநீர் வடிகால் அமைச்சருக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான்] [1930 ஜுலை 4

நீங்கள் விவசாயிகளுக்குக் கடனை ரத்து செய்திருக்கிறோம் என்று சொல்லி யிருக்கின்றீர்கள். அது வரவேற்கத் தக்கது. இன்னும் பல நல்ல காரியங்களைச் சொல்லியிருக்கின்றீர்கள். அதுவும் வரவேற்கத் தக்கது. ஆனால் அதே நேரத்திலே, இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்பொழுது, நீண்ட காலத் திட்டங்களைக் கொண்ட பட்ஜெட்டாக இருக்கிறது என்று நாங்கள் சொல்ல மாட்டோம். ஏதோ குறுகிய காலத்திற்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்திருக்கின்றீர்கள் என்றுதான் நாங்கள் சொல்வோம்.

உதாரணமாக, இதிலே 'ஹெவி இன்டஸ்ட்ரீஸ்'ஐப் பொறுத்தவரையில் நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எதையும் காண்பிக்கவில்லை. ஒரு மாநிலத்திலே 'ஹெவி இன்டஸ்ட்ரீஸ்' ஏற்பட்டால்தான், அந்த மாநிலத்திலே வேலை வாய்ப்புக்கான திட்டங்களை நீங்கள் அமல் படுத்த முடியும். வேலை வாய்ப்புத் திட்டங்களை இந்த நாட்டிலே கொண்டு வர வேண்டுமென்றால் பெரிய பெரிய தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும். அதை இந்த நிதி நிலை அறிக்கையிலே நீங்கள் எடுத்துக் காண்பிக்காதது எங்களுக்கு ஒரு ஏமாற்றமாக இருக்கிறது என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் தேர்தல் அறிக்கையிலே அல்லது தேர்தலின்பொழுது வாக்குறுதி கொடுத்தீர்கள். விவசாயிகளுக்கான கடன்களை ரத்து செய்கிறோம் என்று சொன்னீர்கள். இப்பொழுது ஐந்து ஏக்கராவிற்குக் குறைவான விவசாயி களுக்குக் கடன்களை ரத்து செய்திருக்கின்றீர்கள். ஆனால் நீங்கள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று ஐந்து ஏக்கரா வரை உள்ள விவசாயி கள் மட்டும்தானா கடன் பட்டிருக்கிறார்கள். 5 ஏக்கர், 10 ஏக்கர், 15 ஏக்கர் வரை உள்ள விவசாயிகள்கூட இந்தக் கடன்பட்டிருக்கக்கூடிய ஒரு நிலையைப் பார்க்கிறோம். அவர்களுக்கு சேர்த்து இந்த நேரத்திலே நீங்கள் கடன்களை ஏன் ரத்து செய்யவில்லை என்றுதான் நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். விவசாயிகள் என்று எடுத்துக்கொண்டால், எல்லா விவசாயிகளும் கடனாளி யாகத்தான் இருக்கிறார்கள். அவர்களைக் கடனாளிகளாகத்தான் நான் பார்க்கிறேன். காரணம், இந்த நாட்டிலே இந்தப் பகுதியிலே அவர்கள் விளைவிக்கின்ற பொருட்களுக்கு, விற்கக்கூடிய மார்க்கெட்டிங் சொசைட்டி . .

**திரு. செ. சிவசாமி:** பேரவைத் தலைவாவர்களே, டிராக்டர் வாங்கிய விவசாயிகளின் கடன்களையும் ரத்து செய்யச் சொல்லி காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறதா என்று தெரிய விரும்புகிறேன்.



1980 ஜுலை 4]

(பிற்பகல் 12-40)

**திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேர்தலுக்கு முன்னால் எல்லாக் கடன் களையும்தான் ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். அதைத்தான் நான் கூற விரும்புகிறேன்.

**திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாடாளுமன்றத்தில், மத்திய துணை நிதியமைச்சரவர்கள், கூட்டுறவுக் கடனை ரத்து செய்வது என்பது கூட்டுறவு சங்க அமைப்புக் களையே கெடுத்து விடும் என்று சொல்லிய செய்தி, 23—6—1980 ஆம் தேதிய இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தக் கருத்தை மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா, மறுக்கிறாரா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, மன்றத்திலே ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, மற்ற உறுப்பினர்களுக்கு ஐயப்பாடு எழுந்தால், பேசுகின்ற உறுப்பினர் இடம் அளிப்பாரானால், மற்ற உறுப்பினர் ஐயப்பாடு எழுப்ப இடம் உண்டு. ஆனால், அந்த பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினரிடம்தான் மற்ற உறுப்பினர்கள் விளக்கம் கேட்கலாமே தவிர, ஒருவருக்கொருவர் பதில் சொல்வது என்று அவையிலேயிருக்கிற அத்தனை பேர்களும் எழுந்து கொள்வார்களானால், முடிவே இருக்காது. எனவே, பேசுகின்ற உறுப்பினரிடம், அவர் அனுமதித் தால், ஐயப்பாடு கேட்கலாம் என்று அந்த முறையைக் கையாண்டால்தான் அவை ஒழுங்காக இருக்குமே தவிர, பின்னால், சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படு கின்றபொழுது, அவரவர்கள் திறமையாக, கருத்து விளக்கங்களை, செம்மை யாகச் சொல்லலாம். ஆக, பேசுகின்றவரைத்தான் மையமாக வைத்து விளக்கம் கேட்கலாம். பேசுகின்றவரை விட்டுவிட்டு, விளக்கம் கேட்கின்றவரிடத்திலே விளக்கம் கேட்டு, அதைத் தொடர்ந்து மற்றொருவர் இவரிடம் விளக்கம் கேட்டு என்கிற நிலை வந்தால், அது தொடர்ந்து போய்க் கொண்டேயிருக்கும் என்பதை மாண்புமிகு அவைத் துணைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான்:** நான் இந்த மன்றத்திலே கேட்பதெல்லாம், நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றுகிறீர்களா என்றுதான் கேட்கிறேனே தவிர, வேறொன்றும் இல்லை.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். 'கோல்ட் ஸ்டோரேஜ்' இந்தத் தமிழகத்திலே கொண்டு வரப் போகின்றோம் என்று. நான் வரவேற்கின்றேன். ஆனால், அதிலே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றுதான் நான் கூறுகின்றேன். பஞ்சாபிலேயும், உத்திரப் பிரதேசத்திலேயும், இன்னும் வங்காளத்திலேயும் இந்த 'கோல்ட் ஸ்டோரேஜ்' கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கு கொண்டு வந்து நாளாகிறது. ஆனால், இன்று அது கம்ப்ளீட் ஃபெயிலியூர் ஆகியிருக்கிறது. அங்கு அவை இயங்க வில்லையென்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். நமக்கு மின்சாரம் போதவில்லையென்ற காரணத்தால்தான் அந்த 'கோல்ட் ஸ்டோரேஜ்' இயங்க வில்லை. இங்கு 'கோல்ட் ஸ்டோரேஜ்' கொண்டு வரும்போது, நமக்கு மின்சாரம் போதுமா, போதாதா என்று பார்த்துக்கொண்டு, அதற்கு மேல் 'கோல்ட் ஸ்டோரேஜுக்கு' செலவழிக்க வேண்டிய பணத்தைச் செலவழிக்க வேண்டுமென்றுதான் அரசாங்கத்தை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், 5 ஏக்கருக்குள்ளாக நிலம் வைத்திருப்போர்களின் சில கடன்களை நீங்கள் ரத்து செய்து விட்டீர்கள். இன்று விவசாயிகள் கரன்ட் சார்ஜ் கட்டாமல் இருக்கின்றார்கள். அதைப்பற்றி எதுவுமே சொல்ல வில்லை. கரன்ட் சார்ஜை வசூலிக்கப் போகிறீர்களா அல்லது கரன்ட் சார்ஜை வெய்வ் பண்ணப் போகிறீர்களா அல்லது ரத்து செய்யப் போகிறீர்களா. இந்த நிதிநிலை அறிக்கையிலே எதுவும் கூறவில்லையென்று தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், நம்முடைய மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் டெல்லிக்குச் சென்று, பாசன அமைச்சர்கள் மாநாட்டிலே கலந்து கொண்டார் கள். அங்கு பேசும்பொழுது, தென் மாநிலத்திலே இருக்கக்கூடிய நதிகளை எல்லாம் ஒன்றுசேர்த்து, இங்கு பாசன வசதியை விரிவுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன முயற்சி எடுத்தது என்று தெரியவில்லை. அதற்கு இந்த மாமன்றத் திலே ஒரு அறிக்கை வைத்தால் நன்றாக இருக்கும். ஆகவே, ஒரு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பாசன வசதி செய்து கொடுக்கிற நேரத்திலே, புதுக் கோட்டைக்கு நாங்கள் பலகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், காவிரி ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு வரவேண்டும் என்று. மாண்புமிகு அமைச்சர்



அரசாங்கம் நிச்சயமாக முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒரு சில மில்கள் தான் இருக் இன்றன. சில பேர்கள்தான் அதிலே வேலை பார்க்கிறார்கள். சில நேரத் தில்தான் வேலை கிடைக்கிறது. சில நேரங்களில் வேலை இல்லை. பாதி நேரம் மூடப்பட்டிருக்கின்றது, மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக காவேரி மில் என்று ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு மாதத்திற்கு 9 நாட் கள்தான் வேலை நடக்கிறது. சில நேரங்களில் 3, 4 நாட்கள்தான் வேலை நடக்கின்றது. இது ஒரு சிக் மில். அதனால் மின் தட்டுப்பாட்டை ரத்து செய்து பூராவாக ஓடக்கூடிய அளவுக்கு அமைத்துக் கொடுத்து தொழிலாளர் அனைவரும் வேலை செய்ய அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரிசனங்களுக்கும் மற்றவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுப்பதற் காக பணம் கொடுக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேபோல ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும் வீடுகள், காலனிகள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அவர்கள் ரிட்டையராகி ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மானியம் அல்லது கடன் கொடுத்து ஆவன செய்யவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவை உதவித் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையின் கீழ் அமைந்துள்ள ஆட்சி, ஏற்றத் தாழ்வுகள் இயற்கையின் நியதி என்று விட்டுவிடாமல் இம்மாநிலத்தின் வருமானத்தை வைத்து, ஏழைகளின் வாழ்வு மலர தீட்டியுள்ள திட்டங்கள் இந்திய நாட்டிற்கே ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

முதியவர்களுக்கும், விதவைகளுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், கண்ணொளி அற்றோர்க்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை யும், அதோடு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசியும் இலவசமாக வழங்குதல் போன்ற சிறப்பு அம்சங்கள், சமுதாயத்தில் கேட்பாரற்றுக் கிடக்கும் மக்கள் பிரிவினருக்கு ஒரு மன்னவனாக அமைந்துள்ளதால் இந்த நிதிநிலை அறிக்கையை உளமாற வரவேற்கிறோம்.

[திரு. பி. கந்தசாமி] [1980 ஜூலை 4

விவசாயிகள் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாமல், உபயோகிக்கும் மின் சாரத்திற்கும் மின் கட்டணம் செலுத்தப்படாமல் ஒரு வரிகொடா இயக்கத் தையே விவசாயிகள் நடத்தி வருகிறார்கள் என்பதையும் நாடறியும். அப்படிப் பட்ட வரிகொடா இயக்கத்தை நடத்தி வந்தாலும், அதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து—

" ஆவின மழைபொழிய வில்லாம் விழ
அகத்தடியான் மெய்நோவ, அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கே நிற்கப்
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்
பாவி மகன் படுந் துயரம் பார்க்கொ ணாதே "

என்று விவேகசிந்தாமணியில் வரும் பாடலின் கருத்துக்கேற்ப விவசாயிகளின் இன்னல்களை நன்குணர்ந்த நீங்கள் ஒரு ரட்சகராக மாறி அவர்களுக்கு 60 கோடி ரூபாய் கடனை ரத்துச் செய்திருப்பதில் உள்ள உங்கள் உள்ளத் துணிவைக் கண்டு பெருமைப்படுகிறோம். மேலும் புதிய வரியிடாமல், இருக் கும் வரிகளையே குறைத்து உபரி நிதி நிலை அறிக்கையை அளித்திருப்பது புரட்சித் தலைவரின் திறமைக்கு சான்றாக விளங்குகிறது என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(பிற்பகல் 11-50)

மேலும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்ட கருத் துக்கள்—இங்கே தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு உரிய திட்டங்களை இந்த அரசு சரியாகச் செய்யவில்லை என்பதாகும். தொழிற்சாலைகளை உருவாக்குவது என்று சொன்னால், தொழிற்சாலைகளைப் பற்றி நினைக்கிற போது மேஜர் இன்டஸ்ட்ரீஸ்—அதாவது ஹெவி இன்டஸ்ட்ரிஸ். மீடியம் இன்டஸ்ட்ரிஸ், ஸ்மால் இன்டஸ்ட்ரிஸ், காட்டேஜ் இன்டஸ்ட்ரிஸ் என்று நான்கு வகையாகப் பிரிக்கலாம். அப்படி 4 வகைகளாகப் பிரிக்கிறபோது,



1980 ஜூலை 4] [திரு. பி. கந்தசாமி]

மேஜர் இன்டஸ்ரிஸ் பொறுத்தவரையில், அதாவது ஹெவி இன்டஸ்ட்ரிஸ் பொறுத்தவரையிலும்—இதுவரையில்—அதாவது சுதந்திரம் வாங்கிய 38 ஆண்டு காலமாக—மத்திய அரசாங்கம்தான் பெரிய பெரிய தொழிற்சாலை களை உருவாக்கியிருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அதிக நிதி தேவைப்படுகிறது என்ற காரணத்தால், நமக்குள்ள வருமானம் குறை வாக இருக்கிற காரணத்தால், நாம் அதை ஆரம்பிக்காமல் இருக்கிறோம். இருப்பினும் இந்த நிதி நிலை அறிக்கையில் 150 கோடி அளவிற்கான மின்சார திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீட்டை நமது தமிழக அரசு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மிகவும் பாராட்டத்தக்க, போற்றத்தக்க ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நான் மனதார வரவேற்கிறேன்.

பொதுவாக தமிழகம் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்று எல்லோரும் கூறுகிறோம். மத்திய அரசு தமிழக அரசுக்கு 4 சத விகிதம் மட்டுமே ஒதுக்கி யுள்ளது என்பதைக் கேட்க இந்த மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் வருத்தப்படுகிறோம். அதற்குக் காரணம் என்ன என்று ஒருபடி மேலே சென்று யோசனை செய்யவும் கடமைப்பட்டுள்ளோம். ஏன் இந்த உதாசீனம்? ஏன் இந்த மாற்றாந்தாயின் மனப்பான்மை? எதனால் இந்த விளைவுகள்? நமது மாநில அரசாங்கமும், மத்தியிலே இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நமது மாநிலத்திற்காக வாதாடத்தானே செய்கிறார்கள். அப்படி இருந்தும் நமக்கு ஏன் இந்தப் புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலை. பிரிவினை கேட்கிறோமா? திராவிட நாடு கேட்கிறோமா? இல்லையே. அதுதான் அப்போதே அண்ணா அவர்களால் கைவிடப்பட்டதே. இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் போர் மூண்டபோது நாம் இந்தியத் துணைக் கண்டத்தோடு தோளோடு தோள் கொடுத்து நிற்கவில்லையா? வங்காளத்திலிருந்து அகதிகள் வந்தபோது நாம் ஆதரவு தரவில்லையா? வடபகுதியில் வாழும் மக்கள் இயற்கையின் சீற்றத்திற்கு அதாவது புயலாலும், மழையாலும், வெள்ளத்தா லும் பாதிக்கப்பட்டபோது ஓடோடிச் சென்று ஆதரவு தரவில்லையா? நாம் இன வேற்றுமை கொண்டவர்களா? தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடேன் என்று கூறும் நாம் தமிழே, தாயைப் பழித்தால் என்ன செய்வோம் என்ற நிலையையும் உணர்ந்து நடந்து கொள்ளக் கூடியவர்கள்தான் என்பதை இந்திய அரசாங்கம் கவனிக்க மறந்து விட்டார்களா? அல்லது கவனிக்க மறுக் கிறார்களா? நாம் இந்தியப் பிரஜைதானே, எதனால் இந்த உதாசீனம். ஜன ஜனநாயக முறைப்படி ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தக் கட்சியாகினும் சரி, ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால் மத்திய அரசாங்கம் தனது

கடமைகளை ஒழுங்காகச் செவ்வனே செய்ய வேண்டியதுதானே முறை, அதை விடுத்து நமக்கு இவர்கள் பாராட்சம் காட்டுகிறார்கள என்றால் அதற்குக் காரணம் என்ன ?

இருபது அம்சத் திட்டத்திலிருந்து எந்த ஒரு நல்ல திட்டத்தையும் கொண்டு வந்தபோது நாம் ஆதரவு தந்து இருக்கிறோம். மத்திய அரசு கொண்டு வரும் நல்ல திட்டங்கள் அனைத்தையும் நாம் ஆதரித்துக் கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் அவர்கள் தான் நம்மை ஆதரிக்கின்ற அறிகுறியே தெரியவில்லை. மொழிக்கொள்கை ஒன்றில் மட்டுமே வேறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளோம் என்பதை இந்த மத்திய அரசாங்கம் சுதந்திரம் வாங்கிய காலம் முதலே புரிந்து கொண்டிருக்க வேண்டும். மொழியைப் பற்றி நாம் கூறுவதில் என்ன தவறு இருக்கிறது. இந்தி பேசாதவர் ஏறக்குறைய சதவீதம் இருக்கிறார்கள்.

ஏதோ மிகச் சிறுபான்மையினராக இருந்தால் கூட பரவாயில்லை, இந்தி பேசாத எங்கள் மீது இந்தியைத் திணிக்காதீர்கள், உலகப்பொது மொழியாம் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்காவிட்டால் இரு மொழிக் கொள்கை திட்டத்தில் ஏற்றத்தாழ்வுக்கே இடமில்லாமல் இருக்கும் என்று தானே கூறுகிறோம். ஆங்கிலத்தைத் தொடர்ந்து பொது மொழியாக நீடிக்க வைக்கவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அவர்களோ எப்படியும் இந்தியை இந்த நாட்டின் பொதுமொழியாகக் கொண்டு வந்தே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு தீவிரமாக இருக்கிறார்கள். இதன் விளைவு தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது. இனியும் இதைப் பொருட்படுத்தாமல் இருந்தால் தமிழர்களுக்கு நல்லதல்ல.

மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி, உறவுக்குக் கை கொடுப் போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்றெல்லாம் பிரிவினைக்கு வித்திடா மல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருந்த பெயரைகூட மாற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயரிட்டு இந்தியர்களுக்கு முதலிடம் கொடுத்துள்ளோமே, இந்திய ஒருமைப் பாட்டிற்கு நமக்குள்ள உணர்வுகளை வெளிப்படுத்த இதய தெய்வமாம் அண்ணாவிற்கு கொடுக்கும் இடத்தை விட முதலிடம் இந்தியாவிற்குக் கொடுத்தும் ஏன் இந்தச் சந்தேகம் ? இதற்கு ஒரு முடிவு கட்டாமல் தொடர்ந்து சென்று கொண்டு இருந்தால் நம்மை அவர்கள் நம்புவதாகத் தெரியவில்லை. இப்படித்தான் என்று தெள்ளத் தெளிவாக எடுத்துக்





கொள்ளப்பட்டாலொழிய வேறு வழி இடையாது. நாம் இரு மொழிக் கொள்கை என்கிறோம். மத்திய அரசாங்கமோவெனில் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் பொது மொழியாக நீடிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அப்படியானால் என்றாவது ஒரு நாள் இந்த நாட்டின் பொது மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற கட்டாயம் தெரிகிறது. கடந்த 33 ஆண்டுகளாக ஒரு தென்னிந்தியன் பிரதம மந்திரியாகவில்லை. இனிமேலாவது சந்தர்ப்பம் உண்டாவெனில் சந்தேகமாகவுள்ளது என்றுதான் கூற முடியுமே தவிர நிச்சய மாக வரமுடியும் என்று கூறுவது என்பது இன்றைய ஜனநாயக முறைப்படி முடியாது. ஆந்திராவில் தெலுங்கானாவும் ஆந்திராவும் சேர்ந்ததுதான் ஆந்திரப் பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது. தெலுங்கானாவைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராக இருந்தும் கூட இன்றைய முதல்வர் மாபெரும் போராட்டத்தையே நடத்தி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தெலுங் கானாவைச் சேர்ந்தவர் முதல் அமைச்சராக ஆகவேண்டும் என மத்திய அரசை ஒத்துக்கொள்ள வைத்தவர். அதைப்போன்று 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இல்லாவிட்டாலும் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையாகிலும் ஒரு தென்னிந்தியன் இந்த நாட்டின் பிரதமர் ஆக வரவேண்டும் என்பதை இந்திய மக்கள் உணர வேண்டும். பண்டித ஜவகர்லால் நேரு கூறிய உறுதி மொழியில் காலவரை யின்றி என்பதை மாற்றி நிரந்தரமாக ஆங்கிலம் இந்நாட்டின் ஆட்சிமொழியாக இருந்தாக வேண்டும் என்பதையும் இந்நாட்டு மக்கள் உணரவேண்டும். இது நடைபெறாவிட்டால் இனிமேலும் நாம் மொழிப் பிரச்சனையின் காரணமாக ஒதுக்கப்படுவதை, உதாசீனம் செய்யப்படுவதை பொறுத்துக்கொள்ள முடி யாது. ஆகவே, உலகை உய்விக்க வந்த ஏசுபிரானைப் பார்த்து ஜான் என் பவர், 'வரவேண்டியவர் நீங்கள்தானா, வேறு ஒருவருக்காக காத்திருக்க வேண்டுமா' என்று கேட்டதை சிறிது மாற்றி திண்டுக்கல் தேர்தல் மாநாட் டிலே கொங்குதங்கம் சி. சுப்பிரமணியம் புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து தீர்க்கதரிசி என்று கூறியதை உறுதிப்படுத்தும் வகையில் வரவேண்டி யவர் நீங்கள்தான் வேறு ஒருவருக்காக காலம் காத்திருக்காது என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

## 8. அறிக்கை அளித்தல்.

**(ஆ) தீ விபத்தினால் பாதிக்கப்பெற்ற குடிசைகளுக்கு நிவாரணம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து வருவாய்த் துறை அமைச்சரவர்கள் விதி 106-ன் கீழ் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 ஜூலை 4

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நி விபத் தில் முழுவதுமாக பாதிக்கப்படும் குடிசைகளுக்கு இதுவரையில் குடிசை ஒன்றுக்கு 100 ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இந் நிவாரணத் தொகையை குடிசை ஒன்றுக்கு 200 ரூபாய் என்று உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இந்தப் புதிய அரசு பதவியேற்ற நாளான 9—6—1980 முதல் இது நடைமுறைப்படுத்தப் படும்.

(7) 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்— பொது விவாதம் (தொடர்ச்சி).

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது மீண்டும் இந்த அவையிலே பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை பெற்றமைக்காக என்னுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் சைதை தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே அவையிலே இருக்கிற பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இங்கே பேசுகின்றபோதுகூட ஆளும் கட்சியினர் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை நம் முடைய எதிர்க்கட்சித் தலைவர் எதிர்க்கவும் இல்லை ; வரவேற்கவும் இல்லை என்று சொன்னார்கள்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறும்போது, 'தேர்தலின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நம்பி வாக்களித்தார்கள் ; அந்த தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்தால் நானும் மகிழ்ச்சியடைவேன்' என்று சொன்னார்கள். அந்த வகையிலே, விமரிசனம் செய்யாமல் கண்டிக்கத்தக்க பல்வேறு அம்சங்கள் இந்த அறிக்கையிலே இருந்தாலும் பெருந்தன்மையோடு சொன்னதன் காரணத்தால்தான் இன்றையதினம் 'இந்து பத்திரிகை' கூட உள்ளதை உள்ளபடியே எடுத்துவைக்கின்ற யதார்த்த நிலையில் இருக்கிறது. அதே நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அதிலே இருக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டி, நிதிநிலை அறிக்கையை கண்டித்திருந்தால் இந்து பத்திரிகை எப்படி எழுதியிருக்கும் என்று என்னால் யூகிக்க முடிய வில்லை. ஆகவே, பெருந்தன்மையோடு இந்த நாட்டு மக்கள் இன்னும் எவ்வளவுகாலம்தான் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை அமைதியாக உட் கார்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1980 ஜூலை 4] [திரு. து. புருஷோத்தமன்]

(பிற்பகல் 1-00)

பொதுவாக எனக்கு முன்னாலே பேசிய அத்துணைபேரும் விவசாயிகளுக் காகக் கொடுக்கப்பட்ட சலுகைகள்பற்றியும் கடன்கள் ரத்துபற்றியும் வெகு வாகப் பேசினார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், விவசாயிகள் சொல்லி இருக்கின்ற ஒன்பது அம்ச கோரிக்கைகளில் மிகவும் முக்கியமானது விளைபொருள்களுக்கு உரிய நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்பதுதான். நீண்டகாலமாக இந்தக் கோரிக்கையை விவசாயிகள் எடுத்து வைத்து வருகிறார்கள். அந்தத் திட்டம் செயல்படக்கூடிய வகையிலே அதற்கான வடிவம் கொடுக்கின்ற அள வுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றுமே காணப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் வெற்றி பெற்றதற்காக கேரள எல்லை யிலே அவரை வாழ்த்தி வரவேற்று பேனர்களும் சுவரொட்டிகளும் ஒட்டப் பட்டிருக்கின்றன. அந்த கேரள மாநிலத்திலேகூட மத்திய சர்க்கார் நிர்ண யித்த கொள்முதல் விலையைவிட அதிகமாகக் கொடுத்ததை எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி இருந்தபோது மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையைவிட கொள்முதல் விலையை நெல்லுக்கு மட்டும் அதிகமாக கொடுத்ததை எண்ணிப்பார்க்க வேண்டும். நியாயமான விவசாயிகளின் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றக்கூடிய நிலையிலே உங்க ளுடைய பதில் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் தரப்படும் என்று நீண்ட நாட்களாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித் திருக்கிறார்கள். ஆனால் காலத்தாலே முதுமை பெறுகின்ற வகையிலே உழைத்து உருக்குலைந்து போய் வேலை செய்ய முடியாத நிலையிலே இருக் கின்ற விவசாயத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெறத்தக்கவர்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற பல்வேறு தொழிலாளர்கள் பல்வேறு வகையான சலுகைகள் பெறுகிறார்கள். அவர் களுக்கு ஓய்வூதியம் என்றும், ப்ராவிடன்ட் ஃபண்ட் என்றும் பல்வேறு சலுகைகள் இருக்கின்றன. ஆனால் விவசாயத் தொழிலாளிக்கு அப்படிப் பட்ட எந்த சலுகைகளும் இல்லை என்பதை இன்றையதினம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு நிச்சய மாக ஓய்வூதியம் அளிக்கப்படவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு ரத்து செய்யப்பட்டிருக்கின்ற 60 கோடி ரூபா
யிலே தக்காவிக் கடன் என்று 16 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.
இந்தத் தக்காவிக் கடன்பற்றி அதிகமாக எனக்குத் தெரியாவிட்டாலும் இந்த
மன்றத்திலே உள்ள மாண்புமிகு முதலமைச்சரவர்கள், பெரியவர் அவர்கள்
நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நம் நாடு சுதந்திரம்
அடைவதற்கு முன்னாலே வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் கொடுக்கப்
பட்டது அந்தக் கடன் என்று சொல்கிறார்கள். நான் அறிந்தவரையில் அது
உண்மை என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட பழைய நிலைகளை எல்லாம்
நம்முடைய முதலமைச்சரவர்கள் நிச்சயமாகக் கண்டிருப்பார்கள் என்று கருது
கிறேன். அந்தத் தக்காவிக் கடன் உள்ளபடியே வசூலிக்க முடியாத ஒன்று.
அந்தப் பணத்தைப் பெற்றவர்கள்கூட இறந்து விட்டிருப்பார்கள். காமராஜ்
அவர்கள்கூட இந்தத் தக்காவிக் கடன்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இது
வசூலிக்கப்பட முடியாத கடன் என்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள்.
ஆகவே இன்றையதினம் மக்களை ஏமாற்றுவதற்காக குறிப்பாக விவசாயிகளை
ஏமாற்றுவதற்காக ஒட்டுமொத்தமாக 60 கோடி ரூபாய் தள்ளுபடி செய்கிறோம்
என்று சொல்வது உள்ளபடியே வருந்தத்தக்கது என்று நான் இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல தொழிலாளர் நலன்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில்
எதுவும் காணப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்
நாட்டிலே பல தொழிற்சாலைகளிலே காஷுவல் லேபர் என்றும், பதிலித்
தொழிலாளர்கள் என்றும் பல தொழிலாளர்கள் எட்டு ஆண்டு முதல் பத்து
ஆண்டுகள் வரையிலே நிரந்தரம் அற்ற நிலையிலே வேலை செய்துகொண்டு
வருகிறார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்னாலே நம்முடைய தொழிலாளர்
நலத் துறை அமைச்சரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இரண்டாண்டு
களுக்கு மேல் நிரந்தரமற்ற தொழிலாளியாக வேலை செய்கிறவர்களை நிச்சய
மாக நிரந்தரமான தொழிலாளியாக ஆக்குவேன் என்று சொன்னார்கள். ஆனால்
இன்னும் ஆக்கப்படவில்லை. அதற்கு மாறாக நம்முடைய தொழிலாளர்
நலத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் நிரந்தரமாக தொழிலாளர் நல
அமைச்சராக வந்திருக்கிறார் என்ற மகிழ்ச்சியான செய்திதான் நமக்குக்
கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல பஸ் தேசியமயமாக்குகிற பிரச்னையிலும் ஏன் எந்தவிதமான
சொல்லுமற்ற முறையைக் கையாளுகிறார்கள் என்று தெரியவில்லை. தேசிய
மயமாக்கப்போகிறோம் என்று அண்ணாவின் கொள்கைப்படி நடப்பதாக
சொல்லிக்கொண்டிருந்தவர்கள், ஏன் சில இடத்திலே மூன்று பேருந்துகளை
வைத்துக்கொள்ளலாம் ஐந்து பேருந்துகளை வைத்துக்கொள்ளலாம் என்று
சலுகை காட்டியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைகூட ஒட்டுமொத்த





மாக எல்லா இடங்களுக்கும் கொண்டு வருகிறார்களா என்றால், தேர்தலுக்குப் பின்னால் அறிவிப்பு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் பேருந்துகளை தேசியமயமாக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள், ஏன் ? இந்த தேர்தல் காலத்தில் அங்குள்ள பஸ் முதலாளிகள் ஆளும் கட்சிக்கு எதிராக வேலை செய்தார்களா ? அல்லது வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு தொகுதியிலே நின்ற ஆளும் கட்சி வேட்பாளரை எதிர்த்து, பஸ் முதலாளி ஒருவர் பிரசாரம் செய்ததினால்தான் ஆளும் கட்சிக்காரர் தோற்றுவிட்டார் என்ற காரணத்தை வைத்து, அந்த பஸ் முதலாளியை பழி வாங்குவதற்கு இதுபோல் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறீர்களா. அதே போல் இராமநாதபுரம் மாவட்டத்திலும் அங்குள்ள பஸ் முதலாளிகளை பழி வாங்குவதற்காக அந்த மாவட்டத்திலுள்ள பஸ்களை தேசியமயமாக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்களா. எப்படி இருந்தாலும் அப்படிச் சொல்வது உள்ளபடியே தவறான கொள்கை. அதை நாட்டு மக்கள் தெரிந்து கொண்டு விடுவார்கள் என்ற ஒரு எச்சரிக்கையை உங்களுக்கு கவனப்படுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் தேசியமயமாக்குகிற பிரச்னையைப் பொறுத்தவரை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எல்லா பஸ்களையும் தேசியமயமாக்கியபோது பஸ் முதலாளிகள் அதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்திற்கு சென்று தடை உத்தரவு வாங்கிவிட்டார்கள். ஆனால் அடுத்து வந்த இந்த அரசு அந்த தடையை நீக்குவதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆனால் அதற்கு மாறாக கர்நாடக மாநிலத்தில், இதேபோல் அந்த அரசாங்கம் தேசியமயமாக்கியபோது, அங்குள்ள பஸ் முதலாளிகளும் உச்ச நீதி மன்றத்திற்கு சென்று தடை உத்தரவு வாங்கினார்கள். ஆனால் அந்த அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி, மக்கள் நலனைக் கருதி, முயற்சி செய்து அந்த வழக்கில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தேசியமயமாக்குதலுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை ரத்து செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த முறையை நீங்களும் கையாண்டு இங்கே தேங்கிக் கிடக்கிற அந்த தடையை ரத்து செய்ய முயற்சி செய்ய வேண்டும். மக்கள் நலனைக் கருதியாவது முயல வேண்டும் என்றும், அதற்குப் பின்னால், குறிப்பிட்ட இடங்கள் என்று இல்லாமல் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அதைபற்றி நமது கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் யாருமே எதுவுமே குறிப்பிடாதது எனக்கு கொஞ்சம் வருத்தம்தான். அவர்கள் இப்பொழுது எதுவும் பேசமாட்டார்கள். அதை பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

அடுத்து அதேபோல 36 நூற்பு ஆலைகளை தனியார்களுக்கு கொடுக்க
அனுமதி கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த நூற்பு ஆலைத்
தொழில் எந்த அளவுக்கு நடைபெறுகிறது என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.
தனியார்களின் கையில் போனால் இன்னும் பல கைத்தறி தொழிலாளர்கள்
பாதிக்கப்படுவார்கள். இப்பொழுதே அவர்கள் என்ன பாடுபடுகிறார்கள்
என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நூலின் விலை எவ்வளவு ஏறியிருக்
கிறது. இந்த நிலையில் தனியார்கள் கையில் போனால் தொழிலாளர்கள்
நசுக்கப்படுவார்கள். ஒரு காலத்தில் இந்த நூல் நல்ல நியாயமான விலையில்
தாராளமாகக் கிடைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த வழிமுறை
களை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரும் லாபம் வருகிற இந்தத் தொழிலை
தனியார்களுக்கு கொடுப்பது நிச்சயமாக நன்மை தராது. இனிமேல் பேச
விருக்கிற கம்யூனிஸ்ட் நண்பர்கள் இதையொட்டியாவது கருத்து தெரிவிப்
பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து இன்றையதினம் சென்னையிலே நடைபெறுகிற சில சம்பவங்களை
பார்த்தால் வேதனை கொடுப்பதாக இருக்கிறது. பிறந்த குழந்தையை
திருடிச் செல்கிறார்கள், பள்ளிச் செல்கிற சிறுவர்களை பிடித்துப் போகிற
கூட்டம் இருக்கிறது. பிள்ளை பிடிக்கிற கூட்டம் என்று சொல்வார்கள்.
நமது சட்டமன்ற உறுப்பினர்களைகூட பிடிக்கிற வேலைகள் நடைபெறுவதாக
தெரிகிறது. பிள்ளை பிடிப்பது போலவே சட்டமன்ற உறுப்பினர்களை பிடிப்
பதும் பெரிய குற்றம், தவறாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து சென்னை நகர அபிவிருத்திப் பணிக்கு நிதி ஒதுக்கும் செய்கையில்,
சென்ற ஆண்டு ஒதுக்கிய பணத்தைவிட 72 லட்சம் குறைவாக ஒதுக்கி
யிருக்கிறார்கள். சென்னை நகரம் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள்
இல்லாத காரணத்தினால் சீர்குலைந்து இருக்கிறது. இலாக்காக்கள் பல்வேறு
பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நிர்வாகம் சீர்குலைந்து போயிருக்கிறது. மாநகராட்சி
தேர்தலை விரைவில் கொண்டுவந்து இவற்றை சீர்திருத்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னையிலே என்னுடைய சைதாப்பேட்டை தொகுதியிலே
தான், கழிவு நீர் இணைப்பு குழாய் பகுதி இல்லாத தொகுதியாக இருக்கிறது
ஈக்காட்டுத்தாங்கல், கோட்டூர் புரம் ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதிகூட
இல்லாத நிலை இருக்கிறது.

(பிற்பகல் 1-10)

அதேபோல் குடிநீர் இல்லாததும் வேதனையாக இருக்கிறது என்றும்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து, கோட்டூர்புரத்தில் ஒரு பாலம்
கட்ட வேண்டுமென்று அவசர நிலை இருந்த காலத்தில், மூன்றாண்டுகளுக்கு





முன்னால் ஜனாதிபதி ஆட்சி இருந்தபோது அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்குப் பின்னால் இந்த அரசு வந்து வேண்டுமென்றே அங்குள்ளவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர்கள் என்ற கருத்தைத் தவறாகக் கொண்டு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அந்தப் பாலத்தைக் கட்டாமல் அப்படியே விட்டிருக்கிறார்கள். அதற்காக நான் பலமுறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைப் பார்த்திருக்கிறேன். இப்போது அந்தத் துறை அமைச்சர் இல்லாத காரணத்தால் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பாலம் மிகவும் இன்றியமையாதது, அந்தப் பாலத்தைக் கட்டினால் நம் அரசுப் போக்குவரத்துக்கு அந்த அளவிற்கு டீசல் செலவைச் குறைப்பதால் பல லட்சம் ரூபாய் லாபம் வரும் என்பதை எண்ணிப் பார்த்து அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் குடிசைமாற்றுத் திட்டங்களுக்கு பணம் ஒதுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சென்ற ஆண்டு குடிசைமாற்று வாரியம் வீடுகள் கட்டியதற்குப் பின்னால் 80 லட்சம் ரூபாய் அடிப்படை வசதிகளுக்காக செலவு செய்திருக்கிறார்கள். சென்னையில் ஒட்டுமொத்தமாக குடிசைமாற்று வாரியப் பகுதிகளில் எல்லாம் அடிப்படை சுகாதார வசதி கெட்டுப்போயிருக்கிறது. கழிவுநீர் சரியாக அகற்றப்படுவதில்லை. குப்பைகூளங்கள் நிறைந்திருக்கிறது. அதை எடுக்க வேண்டும் என்று சொன்னால், அதை அகற்ற வேண்டும் என்று சொன்னால் அதிகாரிகள், எங்களுக்கு சம்பந்தமில்லை மாநகராட்சியிடம் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். மாநகராட்சியிடம் சொன்னால், அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை, குடிசைமாற்று வாரியத்திடம் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கேவலமான நிலையில் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இன்று பல்வேறு அத்தியாவசியப் பொருள்களுக்கு வரி குறைத்திருக்கிறார்கள். அதேபோல் படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் பலர் டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டில் ஜாப் டைப்பிங் செய்து பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். பழைய டைப்ரைட்டிங் மெஷின் வாங்கினால்கூட—புதிதாக ஏற்கனவே வாங்கப்பட்ட மெஷினுக்கு 15 சதவிகிதம் வரி செலுத்தியிருக்கிறார்கள். பின்னால் பத்தாண்டுகள் உபயோகித்த பிறகு வாங்கப்படும் டைப்ரைட்டிங் மெஷினுக்கு மீண்டும் 10 சதவிகிதம் வரி என்று போட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அது தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. செ. சிவசாமி :** ராமநாதபுரம் ஜில்லாவில் பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்று சொன்னதை ராமநாதபுரத்தைச் சேர்ந்த நாங்கள் வரவேற்கும் நேரத்தில் நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு அதை ஒப்புக்கொள்ள மறுக்கிறீர்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை.

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1980 ஜூலை 4

வேண்டும். ஆனால் சொல்கிறீர்கள். விவசாயிகளுக்கு என்ன திட்டங்களை
இந்த அரசு செய்திருக்கிறது என்று. ஆனால் மத்தியிலே இருக்கின்றவர்கள்
606 கோடி ரூபாயை கோதுமை லெவிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.
ஆனால் நான் கேட்கிறேன், உழைத்து நெல் உற்பத்தியைச் செய்யும் விவசாயி
களுக்கு, லெவி கொள்முதல் செய்வதற்காக தென் மாநிலத்திலே இருக்கின்ற
வர்களுக்கு இன்றைக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை காங்கிரஸ் கட்சி
உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள் கோதுமை லெவி கொள்முதலுக்
காக 600 கோடி ரூபாய் வட மாநிலத்திலே இருக்கின்றவர்களுக்கு ஒதுக்கப்
பட்டிருக்கிறது. என் தென்மாநிலத்திற்கு தமிழகத்திற்கு ஒதுக்கப்பட
வில்லை என்று அன்றையதினம் நாடாளுமன்றத்திலே ஒலி யெழுப்பப்பட்டி
ருக்குமானால், நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.
நிதி நிலைமைக்கு ஏற்ப, இந்த அரசு முடிந்த அளவில் விவசாயிகளுக்கு
நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே, விவசாய பெருங்குடி
மக்களுக்கு வாக்குறுதி அளித்த அடிப்படையிலே முதற்கட்டமாக 60 கோடி
ரூபாய் வரிச் சலுகை செய்திருக்கிறார்கள்.

என்னுடைய பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு
பின்தங்கிய மாவட்டமாக மாற்றியமைக்க வேண்டும். அப்போதுதான் அந்த
மாவட்டத்தில் தொழில் மையங்கள், தொழிற் கூடங்கள் அமைப்பதற்கான
வாய்ப்பு ஏற்படும். எனவே, இந்த பெரியார் மாவட்டத்தை ஒரு பின்
தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே
தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், இன்று இருக்கின்ற நீதித் துறையில்
நடுவர் 5,000 ரூபாய் என்று இருக்கின்ற கடனை மட்டுமே, அப்படி 5,000
ரூபாய் மதிப்புள்ள தொகையை மட்டுமே அங்கே ஏற்றுக்கொள்ளு
கிறார்கள். 5,001 ரூபாய் என்று சொன்னால்கூட அங்கிருக்கும் மேல்
கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய கொடுமையான நிலைமை இருந்து வரு
கிறது. அதை பத்தாயிரம் ரூபாய் வரை உயர்த்திக் கொடுக்கும் நிலைமையை
சட்ட அமைச்சர் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

நல்லபல திட்டங்களை அனைத்திந்திய அண்ணா தி. மு. க. அரசு தீட்டி
யிருக்கிறது. ஏழை எளிய தொழிலாளர்கள் சைக்கிள்களைப் பயன்
படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அதன் மீதான விற்பனை
வரி 6 பைசாவிலிருந்து 3 பைசாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வறுமை
யின் எல்லைக் கோட்டில் இருப்பவர்களுக்கு 100 ரூபாய் கொடுக்கப் பட
வேண்டும். ஒரு கிலோ அரிசி கொடுக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தை
உருவாக்கித் தந்திருக்கிறார்கள். தீயினால் குடிசைகள் எரிந்துபோனால்



1980 ஜூலை 4] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

100 ரூபாய் கொடுத்து வந்ததை 200 ரூபாயாக உயர்த்தி வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அன்றையதினம் 50 ரூபாய் தான் கொடுத்து வந்தார்கள். அதனால் அந்தக் குடிசைவாசிகள் ஒன்றும் செய்ய முடியாத நிலைதான் இருந்து வந்தது. ஏழைத் தொழிலாளர்கள் வீடு கட்ட வேண்டுமென்றால் ஒன்றரை சென்ட் நிலம் இருந்தால்தான் லோன் தரப்படும் என்பதை மாற்றி ஒரு சென்ட் இருந்தாலும் நிலம் தரும் திட்டத்தைக் கொண்டுவர அரசு பரிசீலிக்க வேண்டும். அரிசனங்கள், பிற்பட்ட மக்களுக்கு நிலம் இல்லையென்று சொன்னாலும் ஆங்காங்கு இருக்கின்ற நிலங்களை ஆர்ஜிதம் செய்து அங்கிருப்பவர்களுக்குக் கொடுக்கும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்கித் தரவேண்டுமென்று சொல்லி வாய்ப்பைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 106-இன் கீழ் நான் அளித்த அறிக்கையில் உயர் அழுத்த தொழில்களுக்கு மின் தேவையில் 20 சதவிகிதம் வெட்டு என்றும், மின் சக்தியில் 15 சதவிகிதம் வெட்டு என்றும் குறைக்கப்படுகின்றது என அறிவித்தேன். அதைத் திருத்தி, மின் தேவையில் 20 சதவிகிதம் வெட்டு என்றும், மின் சக்தியில் வெட்டு இல்லையென்றும் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உயர் அழுத்தத்தில் மின்சாரம் பெறும் மற்ற இணைப்புகளுக்கு மின் சக்திக்கான வெட்டு நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 5—7—1980 சனிக்கிழமை காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

25. சென்னையிலுள்ள, சோவியத் ஐக்கியக் குடியரசின் தொழிற்பிரதிநிதித்துவத்திற்குச் சொந்தமான டி. எம். இசட். 2994 ஆம் எண் மோட்டார் வண்டிக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து- I) துறையின் 29—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 864 ஆம் எண்

[1980 ஜூலை 4

அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தில் தொழில் நுட்பமல்லாத சார்நிலைப்பணி விதிகளில் உள்ள தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளுக்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கும் முறை தொடர்பான விதிகளில் திருத்தம் ஒன்றும் செய்வது குறித்த வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1834 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

27. சென்னை வட்டாரத்திலுள்ள சர்ச்சஸ் ஆக்சிலரி பார் சோசியல் ஆக்‌ஷனுக்கு புயல் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகள் தொடர்பாக விற்பனை செய்யப்படுகிற கட்டுமானப்பொருள்கள் மற்றும் அலுமினியப் பாத்திரங்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 28—3—1980 ஆம் [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தேதியிடப்பெற்ற 278 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

28. கோயம்புத்தூர் மாவட்டம் போத்தனூரில் உள்ள பார்வையற்ற முதியோர் மறுவாழ்வு இல்லத்தில் தங்கி உள்ளவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனையின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 10—3—1980 ஆம் தேதியிடப் பெற்ற 210 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 1. தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதி நிலை விவரம் (வரவு-செலவுத் திட்டம் 1980-81 (ஆங்கிலம், தமிழ்).

* 2. 1980-81 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி II திட்டங்கள்) (ஆங்கிலம், தமிழ்).



1980 ஜூலை 4]

* 3. 1980-81 ஆம் ஆண்டுத் திட்டம் நிதிநிலைக் குறிப்பு திட்ட இணைப்பு, 1980-81 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு (ஆங்கிலம், தமிழ்).

* 4.(நிதிநிலைக் குறிப்பு 1980-81. (1980 ஜூலைத் திங்களில் சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபடி) (ஆங்கிலம், தமிழ்).

* 5. 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள் (1980 ஜூலைத் திங்களில் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபடி) (ஆங்கிலம், தமிழ்).

* 6. வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் 1980-81 (ஆங்கிலம், தமிழ்).

** தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை சட்ட மன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (ஆங்கிலம், தமிழ்).

** 8. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (ஆங்கிலம், தமிழ்).

1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் தேதி வரை தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புரை (ஆங்கிலம்).

@ 10. 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் தேதி முதல் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் தேதிவரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி தொகுப்புரை (ஆங்கிலம்).

@@11. 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980).

---

* 2—7—1980 அன்று பேரவையின் முன் வைக்கப்பெற்றன.

** 2—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப் பெற்றன.

@27—6—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

@@ 1—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

# உள்ளடக்கம்

5-7-1980


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 249-263 |
| 2 | ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| | கும்பகோணம் நகர காவல் நிலையத்தில் விசாரணைக் கைதி மரணம். .. .. | 263-267 |
| 3 | ஒழுங்குப் பிரச்னை— | |
| | விடுதியிலிருந்து கோட்டைக்கு வரும் உறுப்பினர்கள் பேருந்து .. .. | 268-271 |
| 4 | தகவல் கோரல்— | |
| | (அ) உரவிலை உயர்வைத் தடுத்தல .. | 271 |
| | (ஆ) உறுப்பினரது கவனஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு .. .. .. .. | 271-272 |
| 5 | அரசினர் சட்ட முன்வடிவு— | |
| | நிலம் கையகப்படுத்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980 .. .. | 272 |
| 6 | 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் விவாதம்—தொடர்ச்சி. | 272-284 |
| | திரு. என். வி. என். சோமு | 277 |
| | மாண்புமிகு திரு. ஆர். எம், வீரப்பன் | 280-281 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 284-289 |
| | திரு. கே. சௌந்தரராஜன் | 289-298 |
| | திரு. எல். இளையபெருமாள் | 299-305 |
| | திரு. க. பாலசுப்பிரமணியன் | 305-308 |
| | திரு. ஜி. மூர்த்தி | 309-313 |
| | திரு. செ. செம்மலை | 313-813 |
| | திரு. என். பழனிவேல் | 319-32 |
| | திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 ...thaaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-2.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company 20. Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35. Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1. Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 28–11–1980] [Issued 28–11–1980

78181
1486
25 JUL 1981

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1980 ஜூலை 5—தொகுதி II—எண் 3
Saturday 5th July 1980—Volume II—No. 3

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

| | |
|---|---|
| திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன் | 324-33 |
| திரு. மூ. அப்பாதுரை | 332-337 |
| திரு. எஸ். அரங்கநாதன் | 337-339 |
| திரு. த. வேணுகோபால் | 339-345 |
| திரு. எம். ஆர். கோவேந்தன் | 345-349 |
| திரு. சி. பழனிமுத்து | 319-352 |
| திரு. ப. தீர்த்த ராமன் | 353-356 |
| திரு. வ. சத்தியமூர்த்தி | 356-360 |
| 7 அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 360-361 |




## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### சனிக்கிழமை, 1980, ஜூலை 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து ”

ஒருவர் ஒரு சொல்லைச் சொல்லும்போது மற்றவர்கள் அச் சொல்லை மறுத்துச் சொல்லாத வண்ணம் நன்கு சிந்தித்துப் பார்த்தே சொல்லுதல் வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகியகால வினா எண் 4

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரத்தில் ஒழுங்கு பிரச்சினை எழுப்பக்கூடாது. வினா நேரம் முடிந்தபிறகுதான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஒழுங்குப்பிரச்சினை எந்த நேரத் திலும் எழுப்பப்படலம். நான் விதியைப் படிக்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படியுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் :

“ A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as to regulate the business of the House........

என்று விதியில் இருக்கிறது. இன்று வந்துள்ள குறுகியகாலவினா ‘வேலைக்கு உணவுத் திட்டம்’ என்பதுபற்றி நானும் கேள்வி கொடுத்து பத்து நாட்கள் ஆகிவிட்டன. அதையும் இதிலே சேர்த் திருக்க வேண்டும். இதை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, 73,000 டன்களில், கடந்த 31-5-80 வரையிலும் ஏறக்குறைய 64,130 டன்கள் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள கேள்விகள் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டைமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத்திட்டத்தை மேற்பார்வை பார்ப்பதற்கு அந்தந்த தாலுக்கா அளவிலும், ஜில்லா அளவிலும் 'பீப்பிள்ஸ் கமிட்டி' என்று ஒன்றைப்போட்டு அது சரியான முறையில் நடக்கிறதா என்று மேற்பார்வை பார்ப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கடந்த பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதியன்று நீக்கப்பட்டது. அதற்குப் பின்னால் ஏறக்குறைய 112 நாட்கள் கவர்னர் ஆட்சி நடந்தது. கவர்னர் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற குழு அமைக்கவில்லை என்பதைநான் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் உங்களுடைய யோசனை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது பரிவோடு கவனிக்கப்படும்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை மேலும் விரிவாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ? கொடுக்கின்ற அரிசியை அதிகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மிக நல்ல முறையிலே தமிழகத்தில் தான், இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களிலேயும் தமிழ்நாட்டில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. என்பதால் மேலும் அதிக அரிசியைப் பெற்று அதன் மூலம் இங்கே வேலை வாய்ப்பு வேண்டியவர்களுக்கு கொடுத்து அதன் மூலமாகப் பசிப் பிணியை அறவே போக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு செயல்பட்டு முதன்முதலாக இந்த ஆண்டு 27,000 டன் அரிசி மத்தியஅரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், அதிகமாகப் பெறுவதற்கு வழிவகைகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த திட்டத்தின் கீழ் ஆரம்பத்திலேபெரும்பகுதி அரிசியாகவும்,ஒரு ரூபாய் ரொக்கமாகவும் சிறுபகுதிரொக்கமாகவும்கொடுக்கப்பட்டுவந்தது. ஆனால் அந்த ரொக்கத்தைப் பஞ்சாயத்துக்கள் கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை இருப்பதால் பஞ்சாயத்துக்கள் கொடுக்கமுடியாமல் தஞ்சை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் நூற்றுக்கு நூறு



அரிசியாகவே கொடுக்கின்ற முறை கொண்டு வந்தாகிவிட்டது. அவர்கள் பருப்பு, புளி, மிளகாய் வாங்க வேண்டும். ஆகவே மீண்டும் எல்லா இடங்களிலும் ரொக்கம் கொடுக்கப்படுகிறதா? கொடுக்கின்ற அந்த பெஷனரி பிராம்ப்ட் ஆகக் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத்தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 75—25 என்ற கணக்கில் கூலி கொடுக்கப்பட்டு வந்தது. அதாவது முக்கால்பாகம் அரிசியாகவும், கால்பாகம் பணமாகவும் தரக்கூடிய முறையில் இந்தத் திட்டத்தை நாம் நடத்தி வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருசில பஞ்சாயத்துக்களில் பணம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் என்னிடத்தில் அது போன்றதகவல் இல்லை. ஆனாலும் சில இடங்களில் நானே நேரில் பார்த்த அளவிற்கு அங்கிருக்கின்ற மக்கள் முழுவதும் அரிசியே வேண்டும் என்று கேட்கின்ற நிலைமையும் கூட இருக்கிறது. ஆகவே முழுவதும் அரிசியாகவே கேட்கும் அந்தப் பகுதி மக்களுக்கு முழுவதும் அரிசியாக நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல நிலைமை இருந்தால் அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

[முற்பகல் 9–10]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் ஒழுங்காக நடைபெறுகின்றதா என்ற ஆய்வு செய்யப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :பேரவைத் தலைவரவர்களே, ஒழுங்காகத்தான் நடைபெற்று வருகிறது. அதற்காகத் தனி கமிட்டி எதும் இதுவரையிலே போடவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் கால்வாய்கள் வெட்டுதல், பாசன வரத்துக் கால்வாய்களைப் பழுதுபார்த்தல் போன்ற பணிகள் தான் செய்யப்படுகின்றன. பாலங்கள் கட்டுவது, மற்றும் சுண்ணாம்பு, சிமெண்ட் போன்ற பொருள்களை வைத்து செய்யக்கூடிய வேலைகளை அந்தத் திட்டத்திலே சேர்ப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதனாலேயும் ஊராட்சி ஒன்றியங்களிலே பணம்இல்லைஎன்றகாரணத்தினாலும் பணிகளை முடிக்க முடியவில்லை. ஆகவே பாலங்களைக் கட்டுவது போன்ற திட்டங்களை எடுத்துச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, பாலங்கள் கட்டுவது போன்ற பணிகள் இல்லாமல் இல்லை. ஆனால் கால்வாய்களை வெட்டுதல், பாசனவரத்துக்

கால்வாய்களைப் பழுதுபார்த்தல், ஏரிகளைத் தூர்வாருதல்,
மண்வளப் பாதுகாப்பு போன்ற பல்வேறு பணிகளை நாம்செய்து
வருகிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களது யோசனையும்
கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவரவர்களே,
என் தொகுதியைப் பொறுத்த வரையில் 3ஊராட்சி ஒன்றியங்
களில் தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையீட்டால்
அரசு அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்று எனக்குப்
புகார் மனு கொடுக்கப்பட்டதைப் போல் அரசுக்கும் புகார்மனு
கொடுக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து அரசு நடவடிக்கைஎடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல
புகார்கள் வந்ததாக என்னிடத்திலே தகவல் இல்லை. ஆயினும்
புகார்கள் வந்தால் கவனிக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே,
வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழே அரிசனக் காலனி
பாதைகள், அதாவது ஊருக்கும் காலனிக்கும் பாதைகள்,
சுடுகாட்டுக்கும் காலனிக்கும் பாதைகள், ஊருக்கு இடையே
யுள்ள மக்கள் பயன்படுத்தும் குளங்கள், கால்நடைகள் பயன்படுத்
தும் குளங்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படுமா? ஏற்கனவே
உணவுக்கு வேலை திட்டத்தின்கீழ் செய்த வேலைகளுக்குப்பணம்
பட்டுவாடா செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.
ஆகவே அவைகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு பரிந்துரை
செய்யுமா ? அளிக்கப்பட்ட தொகைகளை நல்ல முறையிலே
பயன்படுத்துவதற்கு இனி மக்கள் குழு அமைக்கப்படுமா என்ப
தைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்
களே, அரிசனக் குடியிருப்புக்கள் பகுதியிலே அந்த வேலையைத்
துவங்குவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆராயும்
அதே சமயத்தில், புகார்கள் வந்ததாக எனக்குத் தகவல் இல்லை.
மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் பட்டு
வாடா செய்யப்படவில்லை என்ற புகார் இதுவரையிலும்
அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரிடத்திலே தகவல்
இருந்தால் தயவு செய்து என்னிடத்திலே கொடுக்கலாம்
என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தொடங்கி, பாதியோடு
நிறுத்தப்பட்ட வேலைகள் சம்பந்தமாக அரசுக்குத் தகவல் வந்
...க்கின்றதா ? அப்படி நிறுத்தப்பட்ட வேலைகளுக்கு வருங்
...லே முன்னுரிமை கொடுக்கப்பட்டு செயல்படுத்தப்படுமா?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, ஆரம்பித்து பாதியோடு நிறுத்தப்பட்ட வேலைகள்
இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. பாதியோடு நிறுத்தப்
பட்ட வேலைகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தயவு செய்து என்னிடத்திலே தகவல் கொடுக்கலாம். அவை
களைப் பரிவோடு கவனிப்போம்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தில் கொடுக்கப்படுகிற
அரிசி நல்ல அரிசியாகக் கொடுக்கப்படுமா ? மேலும், வேலைக்கு
உணவுத் திட்டத்தில், அரிசியாகவும், பணமாகவும், கேட்பவர்
களுக்கு பணமும் சேர்த்துக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, கொடுக்கப்படுகின்ற அரிசி நல்ல அரிசியாகத்தான்
கொடுக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் அரிசி சரியில்லை
என்று கூடச் சொல்லப்படுகிறது. ஆனால், ஆளுநருடைய ஆட்சிக்
காலத்தில் அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்ததாகவும் என்
னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனடியாக,
நல்ல அரிசி கொடுக்கும்படி நான் அதிகாரிகளைக் கேட்டுக்
கொண்டிருக்கின்றேன். பணமாகவும் கொடுத்துக் கொண்டிருக்
கின்றோம். அரிசியாகவும் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, நான் இந்த
அவையிலே பேசும்போது, புதுக்கோட்டையிலே, 8 மாதங்
களுக்கு முன்பாக நடைபெற்ற வேலைக்கு இன்னமும் அரிசி
வழங்கப்படவில்லை என்று சொன்னேன். முதலமைச்சரவர்கள்
இந்த அவையிலே அதற்கான அறிக்கையைப் படித்தார்கள்.
ஆனால், பழைய வேலைக்கு இன்றைய தினம் அரிசி வழங்கப்
பட்டிருக்கின்றது என்பதற்கான சான்றுகள் என்னிடம் இருக்கின்
றன. ஆகவே, அமைச்சரவர்கள் அங்கே நடைபெற்ற வேலைகள்
ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதை ஆராய, நேரடியாகக்
கண்காணிக்க விசாரணை குழு போடுவார்களா என்று அறிய
விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, 8 மாதங்களுக்கு முன்பாக நடந்த நிகழ்ச்சியை
மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சுட்டிக் காட்டு
கிறார்கள். நான் அவரைப் பணிவோடு கேட்டுக் கொள்வ
தெல்லாம், கவர்னர் ஆட்சி ஏறத்தாழ 4 மாதங்கள் நடை
பெற்றுக் கொண்டிருந்தது. அப்போது மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுந்தரராஜ் அவர்கள் என்ன செய்துக் கொண்டிருந்தார்
என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும், இந்தக் குறையை
அந்த ஆட்சியிலேயே—அந்த 4 மாத காலத்திற்குள்ளாகவே நீக்கி

இருக்க முடியும். அதை. ஏன் செய்யவில்லை என்பதற்கு அவர் பதில் சொல்ல மாட்டார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட கவனக் குறைவுகள் இனி ஏற்படாது, இந்த அரசு அதைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

## பெரியாற்றிலிருந்து புதிய கால்வாய்.

கு. கா. வி. எண். 5—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மதுரை மாவட்டம் பெரியாற்றிலிருந்து சுத்தகங்கை, கட்டமலையான்பட்டி, நாகலாபுரம், டொம்புச்சேரி வழியாக புதிய கால்வாய் வெட்டும் திட்டம் ஏதும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், அந்தப்பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அண்டு (ஆ) : இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பெனிபிட் காஸ்ட் ரேஷ்யோ பார்க்காமல் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு, செலவு செய்வதற்கு தக்கபடி விவசாய உற்பத்தி இருக்குமா என்பதை கவனத்தில் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால், வறட்சி அதிகம் உள்ள பகுதிகளில், அதையும் தாண்டி அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதை "செலக்டிவ் ஸ்கீம்" என்ற முறையில் பரிசீலனை செய்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதி வறட்சிப் பகுதியாக இருக்குமானால் "பெனிபிட் காஸ்ட் ரேஷ்யோ" எதையும் நாங்கள் பார்க்காமல் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்வோம்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எந்தெந்த அடிப்படையில் புதிய திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் புதிய திட்டங்கள் எத்தனை இருக்கின்றன என்பதை இந்த அவையில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.



திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பெரியார்—வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மிஞ்சுகின்ற உபரி நீர் எத்தனை ஆயிரம் ஏக்கருக்குக் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, "மதுரை மாவட்டம், பெரியாற்றிலிருந்து சுத்தகங்கை, கட்டமலையான்பட்டி, நாகலாபுரம், டொம்புச்சேரி வழியாக புதிய கால்வாய் வெட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா" என்பதாகும். பரிசீலனையில் இருக்கிறது என்பது என்னுடைய பதில்". அதற்கடுத்து, "பெனிபிட் காஸ்ட் ரேஷ்யோ பார்க்காமல் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா ?" என்பது இன்னொரு கேள்வி. அதையும் பரிசீலிப்போம் என்று பதில் சொல்லிவிட்டேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் கொடுக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இது போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்ளுகிறபோது அரசு வருவாயை எதிர் நோக்காமல் பரிசீலிக்கும் என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தார்கள். இப்போது என்ன கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அமைச்சர் என்ன கொள்கை அறிவித்து இருந்தாரோ அதே கொள்கைதான் இப்போதும் கடைபிடிக்கப்படுகிறது. கொள்கையிலே குழப்பம் இல்லை. பெனிபிட் காஸ்ட் ரேஷ்யோ பார்க்காமல் இருக்கும் நிலைமை ஏற்படுகின்றபோது நிச்சயமாக அரசு அந்தத் திட்டங்களைப் பரிசீலிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்தப் பெரியார் மேம்பாட்டுத் திட்டத்திற்காக உலக வங்கியில் இருந்து கடன் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படியானால் எத்தனை கோடி அவர்கள் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் கொடுக்கவில்லை என்றால், "அன் எக்கனாமிக்" என்று பார்க்காமல் நாமே அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை என்றாலும், பெரியார் அணைத் திட்டத்தை ஒட்டி வந்து இருப்பதால் சொல்கிறேன். 41 கோடி ரூபாய் அளவிலே உலக வங்கி மூலமாகக் கடன் பெறப்பட்டு, பெரியார்—வைகை கால்வாய் சீரமைப்புப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

[1980 ஜூலை

## மேற்கு நோக்கிச் செல்லும் நதிகளின் நீரைத் திருப்பிவிடுதல்.

கு. கா. வி. எண். 6—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

மேற்கு நோக்கிச் செல்லும் நதிகளின் நீர் வீணாவதை திருப்பி
தமிழ்நாட்டில் பயன்பெறுவதற்கான திட்டங்கள் ஏதும் அரசு
பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஆம். இத்திட்டம்
மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஆய்வில்
உள்ளது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே,
எந்தெந்த நதிகளைத் திருப்ப அரசு முயற்சி எடுத்துக் கொண்டு
உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்
களே, பாண்டியாறு, புன்னம்புழா, சோழத்திபுழா, பங்கி
ஹள்ளா, ஆனைமலையாறு, பம்பையாறு, அச்சன்கோவில் ஆறு,
இடுக்கி கோவில் ஆறு, கள்ளிடா, ஆட்டின்கால், கரணமனாறு,
என்று 8 வகையான நதிகள் மேற்கு நோக்கி ஓடிக் கொண்டு இருக்
கின்றன. அவைகளை கிழக்கே நோக்கித் திருப்பி விட வேண்டும்
என்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
இந்ததிட்டத்தை உண்மையிலேயே விரைவில் செயல்படுத்தினால்
மதுரை, இராமநாதபுரம்
திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு
வரப்பிரசாதமாக இருக்கும். இந்த 8 நதிகளையும் சேர்த்து
இந்தத் திட்டம் செயல்படுத்தும் வேளையில் எத்தனை ஆயிரம்
இதனால் பாசன வசதி பெறும் என்ற விவரம் இருக்கிறதா,
இதற்கான மதிப்பீடு செலவு என்ன, தமிழ் நாடு அரசாங்கம்
மத்திய அரசாங்கத்திடம் இதை விரைவில் எடுத்துக்கொள்ள
வேண்டும் என்பதற்காக இதுவரைக்கும் ஏதாவது முயற்சி
எடுத்து இருக்கிறதா, இல்லையென்றால், இனியாவது எடுத்துக்
கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்
களே, கடந்த மார்ச் மாதம் கூட இறுதியாக கூட்டம் நடை
பெற்று இருக்கிறது. வல்லுநர் குழுவால் இத்திட்டங்கள் பரி
சீலிக்கப்பட்டு வருகின்றன. சுமார் 60,000 ஏக்கர் நிலங்கள்—
மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி
ஆகிய மாவட்டங்களில் பயன் அடையலாம். 82 டி.எம்.சி.
தண்ணீர் இந்தத் திட்டத்தினால் நமக்குக் கிடைத்தால் போது



1980 ஜூலை 5]

மானது என்று சொல்லி, இன்றைக்குக்குறைந்த பட்சம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். எனவே சுமுகமாக இந்தப் பிரச்னை தீர்க்கப்படும் என்று அரசு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும்படியான நதிகளுடைய மொத்த நீரின் அளவைப் பார்த்து, தமிழ்நாட்டிற்கு எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை ஆராய மத்திய சர்க்கார் ஒரு ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பது உண்மையா, அல்லது தமிழக அரசே நேரடியாக அண்டைமாநிலம் என்ற முறையில் அவர்களோடு கலந்து பேசி இதில் முடிவுக்கு வருவார்களா? இந்த முடிவு ஏற்பட்டு நமக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு முன்னதாக, ஏற்கனவே நாம் முடிவு கட்டியுள்ள—அதாவது கட்டி முடித்துள்ள, பெரியார் திட்டம், அதே மாதிரி ஆளியாறுதிட்டம், ஆகியவற்றில் இருந்து இவ்வளவு நீர்தான் தமிழ்நாட்டிற்குக் கொடுக்க முடியும் என்பது இறுதிப்படுத்தப்பட்டு விட்டதா, இல்லையா அப்படி இறுதியாக்கப்பட்டால் அதிக நீர் கிடைக்க வாய்ப்புண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 10 தினங்களுக்கு முன்பு நடைபெற்ற அனைத்து மாநிலங்களுடைய தலைமைப் பொறியாளர் மாநாட்டில், மத்திய நீர்ப்பாசன ஆய்வுக் குழுவின் தலைவரும் கலந்து கொண்டு ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். எந்தெந்த மாநிலங்களில் அதிகமாக உபரி நீர் இருக்கிறதோ, அதை எப்படிப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்கு மத்தியஅரசே ஒரு கமிட்டியை அனுப்பி, அவர்கள் பரிசீலித்து, அந்தக்கூடுதல் நீரை எந்தெந்த மாநிலங்களுக்கு அளிக்கலாம் என்று சொல்லி பங்கீடு செய்வதற்கான ஒரு சாத்தியக் கூறுகளை அவர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இதற்கு மேல் நாம் அதிலே கருத்துக்களை அதிகமாக தெரிவிப்பது நல்லது அல்ல என்ற காரணத்தால் இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடலாம். பொதுவாக, இந்த 8 நதிகளிலே 5 நதிகளைப் பற்றிய பிரச்னைதான் இன்னும் தீராமல் இருந்து வருகின்றன. மற்றபடி, பாண்டியாறு, புன்னம்புழா விஷயத்திலும், ஆனைமலையாறு விஷயத்திலும் தனிப்பட்ட முறையிலும் நாம் கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம். இது குறித்து விரைவில் ஒரு முடிவு நாம் எடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் சார்ந்து இருக்கக்கூடிய இடது சாரி அணியினர்தான் கேரள மாநிலத்தில் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால், நாம் எல்லாம்சேர்ந்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண்பது நன்றாக இருக்கும். காரணம், 1,500 டி.எம்.சி. நீர் மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் மூலம் கடலில் சென்று விரயம் ஆகிறது. அந்த 1,500 டி.எம்.சி. யில் 82 டி.எம்.சி. தண்ணீர்தான் நாம் கேட்கிறோம். அதன் மூலம் 60,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும். 4 மாவட்டங்களின் வறட்சிப் பிரச்னை தீர்க்கப்படும். இதை கவனத்தில் கொண்டு நாம் பணியாற்ற முயற்

சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அந்த
முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே,
மேற்கு நோக்கிப் பல நதிகள் பாய்கின்றன. அதில் எந்த
நதிகளோடாவது உடன்பாடு ஏற்படுவதற்கு சாத்தியக் கூறு உண்
டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே தெரிவித்து இருக்கிறேன்.
பாண்டியாறு—புன்னம்புழா, ஆனைமலையாறு ஆகிய இந்த
இரண்டு விஷயங்களில் உடன்பாடு வருவதற்கு வாய்ப்பு இருக்
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்
களே, இப்போது அமைச்சர் சொன்ன பதில் ரொம்ப மகிழ்ச்சி
யைத் தருகிறது. மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத்
தமிழ் நாட்டிற்குக் கொண்டு வருவதில் நமக்கு நல்ல பயன்
அளிக்கும் நிலை இன்று ஏற்படுகிறது என்பதை நாம் அறிகி
றோம். தற்போது கேரளத்தில் முற்போக்கு அரசாங்கம்
உதவி செய்யும் உள்ளத்தோடு இருக்கிறது. (குறுக்கீடு) மத்தியில்
இருந்தாலும் சரி—ஆகவே அமைச்சர் அவர்கள் சொன்ன திட்டத்
தில்—நீண்ட நாட்களாக திருநெல்வேலி, இராமநாதபுரம்
மாவட்டத்திற்கு மிக வசதியாக இருக்கும் திட்டமாக உள்ள
கீரியாறு அதில் சேர்க்கப்படவில்லையே, என்ன காரணம்?
சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து அந்த மாவட்டத்து மக்கள்
கீரியாறு திட்டத்தை கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.
அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அந்த மாவட்டத்தில்
வறட்சியைப் போக்க முடியும். ஆகவே, அந்தக் கீரியாறு
திட்டத்தையும் அதிலே சேர்த்துக்கொள்வதற்கு வேண்டிய
முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்
களே, எனக்கு கொடுத்திருக்கிற குறிப்பிலே பம்பையாறு
தான் இருக்கிறது; கீரியாறைப் பற்றி தகவல் இல்லை.
அதைத் தெரிந்துகொண்டு தகவல் சொல்லுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இந்த
நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை விரைவில் தீருகின்ற வகையில்
நதிகளை தேசியமயமாக்க வேண்டும் என்று மத்திய அரசை
நம்முடைய அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே,
மாநிலங்களுக்கிடையே ஒரு சுமூகமான நிலையில் அது தீர்க்கப்
படவில்லை என்றால் அடுத்த கட்டத்தில் நதிநீர்ப் பிரச்
சனையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று மத்திய அரசை



வற்புறுத்துவதை யாரும் மறுக்க மாட்டார்கள். கொள்கை
அளவில் இந்தியா முழுவதும் ஓடுகின்ற நதிகளை தேசியமயமாக்க
வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவ,
வர்களே, ஏற்கெனவே அமைச்சரவர்கள் சொல்லும்போது
கேரள அரசுடன் சுமூகமாகப் பேச்சுவார்த்தை நடத்தி
னால் திருநெல்வேலி மாவட்டத்திற்கும் தண்ணீர் கிடைக்க
முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது சம்பந்த
மாக கேரள அரசுடன் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தி
யிருக்கிறார்களா? இல்லை என்றால் பேச்சுவார்த்தை நடத்த
முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1977 ஜுன் திங்கள்
30 ஆம் தேதி வந்ததற்குப் பிறகு பல்வேறு கட்டங்களில் கேரள
அரசோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது. குறிப்பாக, முன்
னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் தலைமையில்கூட
நம்முடைய முதலமைச்சரும், கேரள முதலமைச்சரும் பேசியிருக்
கிறார்கள். இப்போது புதிதாக ஆட்சிக்கு வந்தபிறகு கூட
இரண்டு முறை அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்
திருக்கிறது. வருகின்ற 10 ஆம் தேதிகூட கேரள அதிகாரி
களுக்கும் நம்முடைய அதிகாரிகளுக்கும் இடையே முதல் கட்டப்
பேச்சு நடக்க இருக்கிறது. பட்ஜெட் முடிந்த பிறகு அமைச்சர்
கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம்.
தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, இரு மாநிலங்களும் சுமூக
மாக இந்த பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்று விரும்பு
கின்றன. அதிலே இரண்டு நதிகள் பற்றிய பிரச்சனைக்கு உடனடி
யாகத் தீர்வு காணும் சாத்தியக்கூறு நிறைய இருக்கிறது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே,
என்னுடைய போடி தொகுதிக்கு அருகில் பண்ணையாறு அணை
இருக்கிறது. அதிலிருந்து மூன்று மைல் தூரத்திற்கு சுரங்கம்
அமைத்தால், ஏராளமான தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்
கிறது. அந்தத் திட்டத்தைச் சேர்த்துக்கொள்ள அரசு முன்
வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே.
மூலக் கேள்வி மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீரை கிழக்கே
திருப்பிவிட்டு, குறிப்பாக நான்கு மாவட்டங்களுக்கு, மதுரை
இராமநாதபுரம், திருநெல்வேலி,கோவை-பயன்படுத்திக்கொள்வது
பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், இங்கே ஒவ்
வொருவரும் ஒவ்வொரு நதியைப் பற்றி குறிப்பு கொடுக்கிறார்
கள். அதற்குத் தனி கேள்வி போடலாம் அல்லது என்னிடம்
கொடுத்தால் அடுத்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வாய்ப்பு
இருக்கிறதா என்று பரிசீலிக்கலாம்.

[1980 ஜூலை 5

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, வினாகக்
கூடிய தண்ணீரை தெற்கு மாவட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்
காக நீண்ட நாட்களாகப் பேசிக்கொண்டு வருகிறார்கள். கடந்த
இரண்டரை ஆண்டுக் காலமாக அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சிதான் இருந்தது. இது எப்போது முடிவடையும்?
பேச்சுவார்த்தையிலே நம்முடைய அரசாங்கத்திற்கு ஏதாவது
வெற்றி பெரும் வாய்ப்பு இருக்கிறதா? அதற்கு ஏதாவது காலக்
கெடு தெரிகிறதா? அல்லது மத்திய அரசு தலையிட்டால்தான்
பிரச்சனை தீரும் என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே,
வெட்ட வெட்ட தலை முளைக்கும் மயில் இராவணன் கதை
போல நடந்துகொண்டிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியில் மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி முதற்கொண்டு மேற்கே நதிநீர் போய்க் கொண்டிருக்கிறது
என்றுதான் நம்புகிறேன். அதை கிழக்கே திருப்பிவிட முயற்சி
செய்துகொண்டிருக்கிறோம். இது அரசியல் ரீதியாகத் தீர்க்க
படக்கூடிய விஷயம் அல்ல. இரண்டு மாநிலங்களும் பேசி, தீர்க்க
வேண்டிய பிரச்சனையாக இருக்கிறது. அதற்குத் தொடர்ந்து
முயற்சி செய்து வருகிறோம். இப்போது முக்கியமான சில பிரச்
சனைகள் முடிவுக்கு வரும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே
இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு,
உண்மையிலேயே மத்திய அரசு ஆர்வம் காட்டுகின்றதா அல்லது
தட்டிக் கழிக்கின்றதா என்பதைத் தெரியப்படுத்தும்படி கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவ
ரவர்களே, சமீபத்திலே நடைபெற்ற கூட்டத்திலே எடுக்கப்பட்ட
முடிவுகளைப் பார்க்கின்றபோது மத்திய அரசு இதிலே தீவிரமாக
ஆர்வம் காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, காவிரி நீர்ப்பிரச்சனையையே மத்திய அரசு தலையிட்டு
தீர்க்க முடியாத நிலை இருக்கின்றபோது மேற்கு நோக்கிப் பாய்
கின்ற நதி நீர்ப்பிரச்சனையைத் தீர்ப்பதில் கண்ணைப்போன்
றிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சி செய்கின்ற கேரள
அரசோடு கலந்து பேசி இங்கே தண்ணீர் கொண்டுவருவதற்கு
நடவடிக்கை எடுப்பதற்குரிய முயற்சிகளைத் தீவிரமாக இந்த
அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1980 ஜூலை 5]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, நதிநீரைப் பெறுவதற்காக இன்னொரு பாரதப்போரைத் துவக்க இந்த அரசு தயாராக இல்லை. ஆகவே, பேச்சுவார்த்தையின் மூலமாக சுமுகமாக இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கும்பகோணம் நகர காவல் நிலையத்தில் விசாரணைக் கைதி மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். "கும்பகோணம் நகர காவல் நிலையத்தில் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் அன்று செல்வராஜூ என்கிற இளைஞரை விசாரணைக்கு அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் அவர் இறந்துவிட்டதால் ஏற்பட்டுள்ள பதட்டமான நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. செ. இராமலிங்கம், திரு. இ. எஸ். எம். பக்கீர் முகம்மது, திரு. எஸ். இராசாராமன், திரு. பொ. விஜயராகவன், திரு. ஆர். சுந்தரமூர்த்தி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே தஞ்சை மாவட்டம், கும்பகோணம் நகரக் காவல் நிலையத்தில் கடந்த 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் அன்று செல்வராஜூ என்கிற வாலிபரை விசாரணை என்கிற பெயரால் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று அவர்மீது எந்த வழக்கும் பதிவு செய்யாமல் அவரைச் சட்டத்திற்குப் புறம்பாக காவல் நிலையத்தில் 3 நாட்கள் வைத்திருந்து ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், மூன்று கான்ஸ்டபிள்களும் சேர்ந்து 3 நாட்கள் தொடர்ந்து அடித்திருக்கிறார்கள். அவர் மீது எந்தவிதமான வழக்கும் பதிவு செய்யப்படாத நிலையில் அவரை அடித்திருக்கிறார்கள். அவ்வாறு அடிக்கப்பட்டு அவர் இறந்து வீழ்ந்த நேரத்தில் அவர் மீது இருக்கின்ற காயங்களைப் பார்த்து அந்தக் காயங்கள் குறித்து மருத்துவமனையிலே இருந்து புகார் வந்துவிடாமல் இருப்பதற்காக அந்தக் காயங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியிலே

மிகப் பெரிய பதட்ட நிலை ஏற்பட்டிருக்கின்றது. இன்றைய தினம் சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பேற்று இருக்கின்றவர்கள் என்ற நிலையிலே இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாளும் பார்க்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதிலும் குடந்தை போன்ற பகுதிகளில் சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாக இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்திருக்கின்றது. காவல் நிலையத்தில் ஒரு கைதி அடித்து கொல்லப்பட்டிருக்கின்றார். இது இரண்டாவது சம்பவமாகும். ஆக, ஜூன் மாதத்திலேயே இரண்டு சம்பவங்கள் குடந்தை காவல் நிலையத்தில் நடைபெற்றிருக்கிறது. இந்நிலையில் காவல் நிலையம் செல்வதற்கே பொதுமக்கள் அஞ்சுகிறார்கள். இப்படிப் பட்ட ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இது மிகப் பெரிய பதட்டமான நிலையை ஏற்படுத்தி இருக்கின்ற காரணத்தால் அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவரவர்களே, கடந்த 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் அன்று செல்வராஜை என்ற ஒருவரை குடந்தைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தக்க முறையில் விசாரணை செய்யாமல் அங்கு அவருக்கு பெருத்த இன்னல்கள் பல விளைவித்து அதன் காரணமாக அவர் இறந்துவிடுகின்ற அளவுக்கு காயம் அடைந்திருக்கின்றார் என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக தாங்கள் கவனிக்கும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதைப்போன்ற சம்பவங்கள் அந்த காவல் நிலையத்தில் இதற்கு முன்பும் நடந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, கும்பகோணம் காவல் நிலையத்தில் செல்வராஜ் என்ற ஒருவரை விசாரணைக்காக அழைத்துச் சென்று, அந்த காவல் நிலையத்திலேயே அவர் இறந்து விட்ட ஒரு சூழ்நிலையை நாம் காண்கிறோம். இது மிக முக்கியமான விஷயம். காயத்துடன் இருக்கிறவர் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார் என்ற அளவிற்கு செய்தி கொடுத்திருக்கிறார்கள். காவல் நிலையத்தில் லாக்-அப்பில் இருக்கிற சூழ்நிலையில் எப்படி மண்ணெண்ணெய் போக முடியும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால், இது ஏற்கெனவே திட்டமிட்டு செய்யப்பட்ட கொலை என்ற அளவில் சந்தேகத்திற்கு இடமளிக்கிற சூழ்நிலை இருக்கிறது.





இதை தீர விசாரித்து குற்றம் செய்தவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். குற்றவாளி யார், எந்த முறையில் தவறுகள நடைபெற்று இருக்கிறது என்பதைப் பற்றி யெல்லாம் தீர விசாரணை செய்தாக வேண்டும். இது போன்ற நிலைமை காவல் நிலையத்தில் அடிக்கடி ஏற்படுமானால் பொது மக்கள் சாதாரணமாக சாட்சி சொல்லக்கூட காவல் நிலையத்திற்கு செல்ல மறுப்பார்கள், பயப்படுவார்கள் என்ற சூழ்நிலை உருவாகும் என்று சொல்லிக்கொண்டு இது போன்ற நிலைமை அடிக்கடி ஏற்படாமல் தடுப்பதற்கு தகுந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அப்படி ஏற்பாடு செய்வதற்கான விவரங்களை மேற்கொண்டு விவாதிப்பதற்கும, இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு அமாகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு கிடைக்கப் பெற்றிருக்கிற தகவல்களின்படி 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் தேதி அன்று காலை 11—30 மணியளவில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம்—தெற்கு காவல் நிலையத் தில, மார்வாரி வகுப்பைச் சேர்ந்த செல்வராஜ் என்ற ஒருவர் 426/80 சம்பந்தப்பட்ட பிரிவின் கீழ், திருட்டுச் சொத்து வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். அங்கே அவரை உதவி ஆய்வாளர் விசாரணை செய்த பிறகு காவலர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் 2—45 மணிக்கு விட்டு விட்டு உணவு அருந்தச் சென்றார், பகல் 3 மணிக்கு கைதி செல்வராஜ், அங்கிருந்த காடா விளக்கிலிருந்த மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு, தீ வைத்துக் கொண்டார், அவர் உடனடியாக கும்பகோணம் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். அவர் அன்று மாலையே தஞ்சாவூர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். அங்கு அவர் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளன்று காலை 6.05 மணி அளவில் இறந்து விட்டார்.

கும்பகோணம் சப்-கலெக்டர் பிரேத விசாரணை செய்தார். பி.எஸ்.ஓ. 145-வது பிரிவின் கீழ் விசாரணையை நடத்தும்படி கும்பகோணம் சப்-கலெக்டரைப் பணித்திருக்கிறார்கள். இது பற்றி விசாரணை தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கிறது. இது பற்றிய முழு உண்மைகளை அறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சில பல தகவல்களைத் தந்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வந்திருக்கிற தகவல்கள் உண்மையா அல்லது மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற தகவல்கள் உண்மையா என்பதை விசாரணை மூலமாகத்தான் அறிய முடியும். ஆனால், 2, 3 நாட்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுவது தவறு. 29-ம் தேதி 11 மணியளவில்தான் அவரை அழைத்து வந்தார்கள் 2½ மணி வரையில் உதவி ஆய்வாளர் அவரை

[1980 ஜூலை 5

## 3. ஒழுங்குப் பிரச்சினை.

### எம். எல். ஏ.-க்களுக்கென விடுதியில் இருந்து கோட்டைக்கு வரும் உறுப்பினர்கள் பேருந்து.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், உங்கள் கவனத்தை ஈர்க்க—அமைச்சரின் கவனத்தை அல்ல—விரும்புகிறேன். எம். எல். ஏ.-க்களுக்கு மட்டும் என்று சொல்லி எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் இருந்து இங்கே வருவதற்கு பஸ் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அந்த பஸ் சாதாரண பாஸஞ்சர் பஸ்ஸாக மாறிப்போய் விட்டது. நாங்கள் இந்தச் சபைக்கு காலை ஒன்பது மணிக்கு முன்னால் வருவது என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அது ஒரு பெரிய ப்ராப்ளமாக இருக்கிறது. அதற்கு ஒரு 'ஸொல்யூஷன்' காணவேண்டும்.

உறுப்பினர்கள் மட்டுமே என்கிற பஸ்ஸில் நாங்கள் வருகிறோம், எங்களோடு கூட தொகுதிகளிலிருந்து வரக் கூடியவர்களும் வருகிறார்கள். உறுப்பினர்கள் சபைக்கு வருவதற்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது. ஆகவே நான சொல்ல விரும்புவது என்னவென்றால், எம்.எல்.ஏ.-க்கள் பஸ் என்று தனியாக ஒரு பாஸஞ்சர் பஸ் பின்னால் விடுவதற்கு போவதோடு கூட தொகுதிகளிலிருந்து வரக்கூடிய மக்களுக்கு ஏதாவது ஒரு அரேஞ்ச்மெண்ட் செய்தால் உறுப்பினர்கள் அந்த பஸ்ஸிலும், தொகுதிமக்கள் இந்த பஸ்ஸிலும் வரமுடியும். இல்லாவிட்டால் இது ஒரு ப்ராப்ளமாக இருக்கிறது. ஆகவே இதற்கு ஏதாவது அரேஞ்ச்மெண்ட் செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதியில் இருந்து வரும் மக்கள் எம். எல். ஏ. கூடத்தான் வரவேண்டும் என்று விரும்புவார்கள். அதை எம். எல். ஏ. மறுக்க முடியாது. நானும் ஒரு எம்.எல்.ஏ. தான், ஆகவேதான் சொல்கிறேன். எம்.எல்.ஏ கூடத்தான் வரவேண்டும் என்று தொகுதியிலிருந்து வரக்கூடிய மக்கள் விரும்புவார்கள், எம்.எல்.ஏக்களுக்கு உள்ள சௌகரியங்களைப் பார்க்க விரும்புவார்கள். ஆகவே, அவர்கள் கூட வருவதைத் தடுப்பது கடினம். இன்னொரு பஸ் வேண்டு மானால் போடுவதற்கு ஏற்பாடு செய்யலாம். கட்சித் தலைவர் கள் தனியாக வந்துவிட முடியும், மற்ற உறுப்பினர்களால் அப்படி வரமுடியாது. ஆகவே, உறுப்பினர்கள் அவர்களுக்குள்ளே அட் ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : ஹாஸ்டலிலிருந்து "டபிள் டெக்கர் பஸ்" வர ஏற்பாடு செய்யலாம்.



1980 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டபிள் டெக்கரில் எவ்வளவு கூட்டம் வருமோ அதே கூட்டம்தான் சிங்கிள் டெக்கரிலும் வருகிறது. ஆகவே, டபிள் டெக்கர் பஸ் போடுவதால் வசதி வந்துவிடாது. அது பயன்படாது. எம்.எல்.ஏ.க்களுக்குள்ளே அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும். நாங்கள் இன்னொரு பஸ் வேண்டுமானால் சேர்த்து விடலாம், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 4 பஸ்கள் அங்கிருந்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நடைமுறையில் இருக்கிறது. 15 நிமிடங்களுக்கு ஒரு முறை பஸ் வரலாம் என்றிருக்கிறது. இரண்டு வழிகளில் செய்யலாம். முதலில் பஸ்களில் பஸ்ட் பிரபரன்ஸ் என்ற அளவில் முதல் பாதியை எம்.எல்.ஏ.-க்களுக்கும், பின் பாதியை எம்.எல்.ஏ.க்கள் அல்லாதவர்களுக்கும் ஒதுக்க ஏற்பாடு செய்யலாம். அப்படி செய்கிறபோது எம்.எல்.ஏ.-க்களுடன் கூட வருகின்றவர்களுக்காக வாதாடும் எம்.எல்.ஏ.-க்களும் இருக்கின்றார்கள். அல்லது 2 பஸ்கள் எம்.எல்.ஏ.-க்களுக்கு ஒதுக்கிவிட்டு, வேறு 2 பஸ்களில் மற்றவர்கள் வரலாம். ஆக எம்.எல்.ஏ.-க்கள், எம்.எல்.ஏ.க்கள் அல்லாதவர்கள் என்ற பாகுபடுத்தி ஏற்பாடு செய்யலாம். ஆக எந்த அளவிற்கு செய்ய முடியும் என்பதை பேரவைச் செயலாளரோடு கலந்து, வேண்டுமானால் நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ தக்க முடிவு எடுக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே. தாங்கள் சொல்லியதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அவர்களால்தான் இங்கே வந்திருக்கிறோம். அவர்களை விட்டுவிட்டு வரமுடியாது. ஆக, அவர்களை நில்லுங்கள் என்று சொல்வதும், நாங்கள் உட்காருவதும் அல்லது அவர்களுக்கு வசதிகுறைவு ஏற்பட்டால், நாங்கள் தொகுதிக்குச் செல்லும் போது it will have its own reflection. ஆகவேதான், தாங்கள் சொன்ன ஆலோசனையோடு சொல்லுகிறேன். ஒரு பஸ்சில் 60 இடங்கள் இருக்கின்றன. முன் பகுதியில் உள்ள 30 இடங்கள் தனியாக ஒதுக்கி, அதிலே எம்.எல்.ஏ.-க்களைத் தவிர யாரும் உட்காரக் கூடாது என்றும், பின் பகுதியிலுள்ள 30 இடங்களில் எம்.எல்.ஏ.க்களோடு வரக்கூடியவர்கள் உட்காருவதற்கு தடுப்புகள், அதற்கான அடையாள ஏற்பாடுகள் செய்து விட்டால், இந்தப் பிரச்னை வராது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை கொஞ்சம் சிக்கலான பிரச்னைதான். நீங்கள் எம்.எல்.ஏ.-க்களுக்கு தனியாக இடம் ஒதுக்கினால், அதை யார் ரெகுலேட் பண்ணுவது ? அந்த கண்டக்டர் தான். அந்த கண்டக்டர் ஒரு நாளைக்கு அல்லது இரண்டு நாளைக்கு சொல்லுவார். அவர் அப்படிச் சொல்லும்போது அவர் பேரில் ஆத்திரம் ஏற்படும். வரக்கூடியவர்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய தொகுதியைச்

சார்ந்தவர்கள்தான். ஆகவே, இந்த நிலையை எம்.எல்.ஏ.க்களாகிய நீங்கள் சமாளித்துக்கொள்ளுங்கள் '', என்று சொன்னால், பேரவைத் தலைவரின் பாதுகாப்பு எங்களுக்கு இல்லை என்றுதான் அர்த்தம். நாங்கள் எங்கள் தொகுதியின் பிரச்சனைக்காக, கறாராக டைமோடு இங்கே வர வேண்டும். நீங்கள் இங்கே 9 மணிக்கு வருவது மாதிரி. அந்தப் பொறுப்புணர்ச்சி எங்களுக்கும் இருக்கிறது. சில சீட்டுகள் எங்களுக்கும், சில சீட்டுகள் அவர்களுக்கும் கொடுத்தால் சரியாகிவிடும். எங்களுக்கு ஒதுக்கப்படும் சீட்டுகளில் என்குரோச்மெண்ட் இல்லாமல் திட்டவட்டமான ஏற்பாடுகள் செய்தால் நல்லது. அப்படி இல்லையென்றால், எம்.எல்.ஏ.—க்களுக்கு இரண்டு பஸ்களும், மற்றவர்களுக்கு 2, 3 பஸ்களும் விடலாம். நாங்கள் வரக்கூடிய அந்த 1 மணி அல்லது 1½ மணி நேரம்தான் பஸ்கள் ஓவர் கிரவுடாக இருக்கும். அதற்குப் பிறகு தகராறு இருக்காது. அவர்களே, வருவார்கள். நாங்களும் கறாராக வரமுடியும். நீங்களே சமாளித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால், உங்கள் பாதுகாப்பு இல்லை. என்றுதான் அர்த்தம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 பஸ்கள் எம்.எல்.ஏ.க்களுக்காகத்தான் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த 4 பஸ்களிலும் அவர்கள்தான் உட்கார வேண்டும். ஆனால், கூட வருகின்றவர்களுக்கு வசதி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களையும் அழைத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், எம்.எல்.ஏ.-க்கள் குறிப்பிட்ட நேரத்தில் வந்து, தங்கள் பணிகளைச் செம்மையாக ஆற்ற வேண்டுமென்ற கடப்பாடு இருப்பதால், அவர்களுக்கு இந்த வசதி அதிகம் செய்து தரப்பட்டிருக்கிறது. ஆனால், கூட வருகின்றவர்கள் பின்னால் வருவதால் தவறு ஏற்பட முடியாது. ஆகவே, குறிப்பிட்ட ஒரு பஸ் அல்லது இரண்டு பஸ்களில் எம்.எல்.ஏ.-க்கள் அல்லாதவர்களை நீங்கள் அதிலே வரலாம் என்று கேட்டுக் கொள்ளலாம். அல்லது எல்லா எம்.எல்.-ஏக்களும்சேர்ந்து ஒத்துழைப்பு தருவதன் மூலமாக, குறிப்பிட்ட ஒரு பக்க சீட்டுகளை பெண்களுக்கு என்று தனியாக ஒதுக்குவதைப் போல் உறுப்பினர்களுக்கு ஒதுக்கிவிட்டால் பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால், காலை 8 மணிக்கே கிளம்பி வருவதற்கான ஏற்பாடுகளை எம்.எல்.ஏ.-க்கள் செய்துகொள்வார்களானால் வசதி இருக்கும். இப்போது அந்த 4 பஸ்கள் எம்.எல்.ஏ.-க்கள் மட்டும் என்றுதான் வந்துகொண்டிருக்கின்றன.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் விட இப்போது இந்தக் கூட்டம் ஆரம்பித்த பின்பு இரண்டு பேருந்துகள் அதிகமாக விடப்பட்டிருக்கின்றன. அந்தப் பேருந்து இங்கே தலைமைச் செயலகத்திலிருந்து நமது விடுதியின் வழியாக அண்ணா



சிலை சென்று அதற்குப் பின்பு அமைச்சர்களைப் பார்க்க சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதி செய்யவேண்டுமென்ற வகையில் கிரீன்வேஸ் ரோடுவரை விடப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக விட்ட பேருந்து அல்ல, பொதுவாக விட்ட பேருந்து. வருகிற நண்பர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அது வருஷம் பூராவும் ஓடிக்கொண்டிருக்கும் பேருந்து. எனவே, அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். தேவை என்றால் இன்னும் அதிக வசதி செய்து கொடுக்க நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம். உறுப்பினர்களுக்கு மட்டும் என்று ஓடுகிற ஒதுக்கப்படுகிற பஸ்களை அவர்களே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றப்படி சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க வருகிறவர்களை அவர்களுக்கான இடத்தில் அமரச் செய்தால் நிச்சயமாக ஒத்துழைப்பு கொடுத்ததாக ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதியிலிருந்து வருகிறவர்களை உறுப்பினர்கள் தங்களுடன் பேருந்தில் அழைத்துக் கொண்டு வந்தாலும், பேரவைக்குள் அவர்களை அழைத்துக் கொண்டு வராமல் இருந்தால் சரி.

## 4. தகவல் கோரல்.

### (அ) உர விலை உயர்வைத் தடுத்தல்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கெனவே பெட்ரோலியம் பிராடக்ட்ஸ் விலை ஏற்றத்தின் காரணமாக உரவிலை ஏறியிருக்கிறது. இந்தச் சபையின் மூலமாக பழைய விலையிலேயே உரத்தைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அத்தகைய தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுக்கலாம். அப்பொருள் குறித்து நிதிநிலை அறிக்கை பொது விவாதத்திலும் பேசலாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : விவசாயத் துறை அமைச்சர் மூலமாகத் தீர்மானம் வந்தால் சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பிரச்சினையை எழுப்ப வேண்டிய நேரம் இதுவல்ல.

### (ஆ) உறுப்பினரது கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு.

திரு. து. புருஷோத்தமன் : நான் 54—வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இதுவரை சபையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தள்ளுபடி செய்யப் பெற்றிருந்தால் அதுபற்றி தகவல் உங்களுக்கு வரும்.

[1980 ஜூலை 5

திரு. செ. இராமலிங்கம் : தஞ்சை மாவட்டம் தமிழ் நாட்டின் நெற் களஞ்சியம் என்று சொல்வார்கள். குறுவை சாகுபடி ஆரம்பித்திருக்கிறது. அரசாங்க விதைப் பண்ணைகளிலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து இதுபோல் தினசரி என்ன வாயிற்று என்று பேரவையில் கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

### (அ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத் தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## (5) 1980–81-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்—விவாதம் தொடர்ச்சி.

*திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வரவுசெலவுத் திட்டத்தின்மீது பேசுகின்ற தகுதியினை வழங்கிய மதிப்பிற் குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களுக்கும் நான் சார்ந்திருக்கிற பூங்கா நகர் தொகுதி மக்களுக்கும் என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரவுசெலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் அவர்கள்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்ற திருக்குறளோடு இங்கே சமர்ப்பித்தார்கள். அனைத் போலவே,



1980 ஜூலை 5] [திரு. என். வி. என். சோமு]

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்பதும் வள்ளுவரது வாய்மொழி. கொடுத்த வாக்குறுதி களை காற்றிலே பறக்கவிட்ட அவல நிலைமைகளை எடுத்துக் காட்டுவதும் என்னுடைய தலையாய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையின் முன்னாலே இங்கு வைக்கப்பட்டுள்ள பட்ஜெட் அண்ணா தி.மு.க. வின் வழக்கமான கொள்கைக் குழப்பங் களையும் ஏமாற்றுத் தந்திரங்களையும் கொண்டதாக இருக்கிறது. வரியே இல்லாத பட்ஜெட் என்று சொல்கிறார்கள். மகாராட்டிரத்திலே கூட காங்கிரஸ் நிதியமைச்சர் தாக்கல் செய்த பட்ஜெட்டிலே வரியே இல்லை. அவரும் வரியே இல்லாத பட்ஜெட்டைத் தான் தாக்கல் செய்து இருக்கிறார். வரியிருக்கிற பட்ஜெட்டா, வரியில்லாத பட்ஜெட்டா என்பது முக்கியமல்ல, பட்ஜெட்டிலே மக்களுக்கு என்ன செய்திருக் கிறார்கள் என்பதுதான் முக்கியமான பிரச்சினை.

10 ஆயிரம் போலீஸாருக்கு வேலை அளிக்கும் திட்டம் என்றார்கள், அது என்ன ஆயிற்று. 10 ஆயிரம் நர்ஸுகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம் என்றார்கள், அது என்ன ஆயிற்று? தேர்தலுக்கு முன்னாலே அவர்கள் என்ன என்ன சொன்னார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றைக்கு என்ன சொன்னார்கள்; அன்றைய முதலமைச்சர், அன்றைக்குத் தேர்தல் பிரச்சாரத்தை முடுக்கிவிட்ட எம். ஜி. இராமச்சந்திரன் என்ன சொன்னார்.

"வேலை கிடைக்காத காலத்திலே ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசியும், ஒரு ரூபாயும் வயது வந்த ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் கிடைக்கச் செய்வோம்" என்று மிகத் தெளிவாகத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார். அதாவது வேலை இல்லாத காலத்திலே வாழ்க்கை நிலையை மாற்றியமைப்பதற்காக பட்டினி கிடந்து சாகாமல் வேலை கிடைக்காத அந்தக் காலத்திலே ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசியும், ஒரு ரூபாயும் வயது வந்த ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கொடுப்போம் என்று முழக்கமிட்டார்கள். ஆனால் இப்போது என்ன சொல்கிறார்கள். இந்த பட் ஜெட்டிலே வாரம் ஒரு கிலோ அரிசி என்று சொல்கிறார்கள். இதைக் கொடுத்து பட்டினிச் சாவைத் தடுத்துவிட முடியுமா? ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசியும் ஒரு ரூபாயும், அதுவும் வயதுவந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏழையாக இருக்கிற வருக்குத் தருவோம் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு வாரம் ஒரு கிலோ அரிசி என்று சொன்னால் இது ஏமாற்றுத்தன

மான பட்ஜெட் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர வேறு எப்படி சொல்லமுடியும்? இதை வெட்கக்கேடான பட்ஜெட் என்று சொல்லமுடியுமே தவிர வெற்றிகரமான பட்ஜெட் என்று எப்படிச் சொல்ல முடியும்.

சென்னை நகரத்திலே உள்ள குடிசைப் பகுதிகளைப் பார்க்கிற போது, புரட்சிக் கவிஞர் பாடினாரே, புன்மைத் தேரைகளாய் பொட்டுப் பூச்சிகளாய் புழுக்களாய் என்று அப்படிப்பட்ட நிலையிலே தான் இன்றைக்கு அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குடிநீர் கூட கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது. அவர்களுக்குக் குடிநீர் கிடைப்பது, சொர்க்கலோகக் கனவாகத்தான் இருக்கிறது. ஆங்கிலேத்திலே பேரடைஸ் ட்ரீம் என்று சொல்வார்களே அப்படித்தான் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே புளியந்தோப்புப் பகுதியிலே பார்க்கிறபோது கக்கூஸ் குழாயிலே வருகிற தண்ணீரைப் பிடிப்பதற்கு ஆயிரக்கணக்கான தாய்மார்கள், கியூவில் நின்று, காலையிலே ஒரு மணி நேரம், மாலையிலே ஒரு மணி நேரம்தான் தண்ணீர் வருகிறது. அப்படி கியூவிலே நின்று தண்ணீரை, கக்கூஸ் குழாயிலே வருகின்ற தண்ணீரைப் பிடிக்கின்ற நிலைமை இருக்கிறது. மக்கள் அந்த அளவுக்கு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு பட்ஜெட்டிலே என்ன நிவர்த்தி செய்ய இருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

குடிநீர் வடிகால் வாரியம் என்று சொல்கிறார்கள். இந்த நாட்டு மக்கள் இன்றைக்கு சேற்றிலேயும் சகதியிலேயும் புரண்டு கொண்டு இருக்கிறார்கள், அவர்களுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று? அறிஞர் அண்ணா அவர்கள் எரியாத வீட்டைக் கட்டினார்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் கான்க்ரீட் வீட்டைக் கட்டினார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே சிலம் கிளியரன்ஸ் போர்டு என்று இருக்கிறது. 1972ஆம் ஆண்டு டில்லியில் நடந்த அகில இந்திய மேயர்கள் மாநாட்டிலே கலந்துகொள்வதற்காக நான் சென்றிருந்தபோது இன்றைய நிதியமைச்சர் அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார், அவரும் அப்போது அந்த மாநாட்டிலே கலந்துகொள்ள வந்தார். அப்போது மத்திய அமைச்சராக இருந்த உமாசங்கர தீட்சித் அங்கே பேசிய போது அகில இந்தியா முழுவதும் சிலம் இம்ப்ருவ்மென்ட் ஸ்கீம் இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே தான் சிலம் கிளியரன்ஸ் போர்டு இருக்கிறது என்று சொன்னார்கள். குடிசைகளை அப்புறப் படுத்துகிற திட்டம் தமிழகத்திலே தான் இருக்கிறது என்று திரு உமாசங்கர தீட்சித் பாராட்டினார்.





[முற்பகல் 10-00]

நாவலர் அன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்டார். அவருக்குத் தெரியும். அந்தக் குடிசைகளின் நிலைமை என்ன ? எங்கே விளக்கு எரிகிறது? எங்கே குடிநீர் இருக்கிறது? எங்கே சுகாதார வசதி இருக்கிறது? வாக்குறுதிகளை அள்ளி அள்ளிக் கொடுத்தீர்கள். ஆனால் அவற்றை இந்த பட்ஜெட்டிலே ஏன் மறந்து விட்டீர்கள்? ஒரு சுற்று சுற்றிப் பார்த்தால் தெரியும். இந்த நாட்டிலே உள்ள குடிசைப் பகுதி மக்கள், அதிலும் குறிப்பாகச் சென்னை மாநகரத்திலுள்ள குடிசைப் பகுதிகளிலே உள்ள மக்கள் எப்படி அல்லல் படுகிறார்கள், அவர்களது குடிசைகளைச் சுற்றிலும் சுகாதாரத் துறை வசதிகள் எப்படி இருக்கின்றன. தங்கள் காலைக் கடன்களை முடித்துக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் இரண்டு மூன்று பர்லாங் தூரம் செல்லுகின்ற அவல நிலையை கடந்த இரண்டரை ஆண்டுக்காலமாக வளர்த்திருக்கிறீர்கள், மேலும் வளர்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

அது மட்டுமல்ல, இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பலயிடங்களிலே நாங்கள் சென்று ஓட்டுக் கேட்கும்பொழுது அங்கிருக்கின்ற மக்கள் சொன்னார்கள், இதெல்லாம் கருணாநிதி கட்டிக் கொடுத்த வீடு, இந்த வீடுகளுக்கு விளக்குப் போட மாட்டோம், தண்ணீர் வசதி செய்து தர மாட்டோம், இந்த வீடுகளுக்கு சுகாதார வசதி செய்து தர மாட்டோம் என்று அங்கிருக்கின்ற அதிகாரிகள் சொல்வதாக மக்கள் சொன்னார்கள். ஏன் இந்தப் பாரபட்சம்? இரண்டரை ஆண்டுக்காலமாக நீங்கள் கட்டிய குடிசை மாற்று வாரியத் திட்டம் என்ன? எங்கேயாவது ஒரு குடிசையையாவது புதிதாக மாற்றி வீடு கட்டியிருக்கீறீர்களா? கலைஞர் முதலமைச்சராக இருந்து இறங்கியதற்கு பிறகு சென்னை நகரத்தில் புதிதாக வீடு கட்டும் திட்டங்களை இரண்டரை ஆண்டுக் காலத்தில் இந்த அரசாங்கம் செய்திருக்கிறதா? இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுருக்கமாகச் சொன்னால், இந்த இரண்டரை ஆண்டுக்கால ஆட்சியிலே அ.தி.மு.க. அரசின் மீது நான் குற்றச்சாட்டை சாட்ட விரும்புகிறேன். சென்னை நகரம் நகரமாக இல்லை., நரகமாக மாற்றி விட்டார்கள். இந்தக் குற்றச்சாட்டை நான் பகிரங்கமாகச் சாட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, வேலைவாய்ப்பைப் பற்றிச் சொல்கிறார்கள். பட்ஜெட் புள்ளி விவரம் கூறுகிறது. புள்ளி விவரத்தைப் படித்தால் இனிப்பாக இருக்கிறது. ஆனால் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. 23 லட்சம் பேர்களுக்கு மேல் பணியாற்றி, 142 லட்சம் உழைப்பு நாட்கள் (மேன் டேஸ்) என்று கணக்கு கொடுக்கிறார்கள். அப்படியானால் வருஷத்திற்கு 365 நாட்கள்

வேலை கிடைத்திருக்கிறதா? இதை வகுத்துப் பார்த்தால் வாரத் தில் ஆறு நாட்கள் தான் வேலை கிடைத்திருக்கிறது. இந்த ஆறு நாட்கள் வேலையை அவர்கள் எப்படி ஒழுங்காகச் செய்ய முடியும்? எப்படி ஒழுங்காகப் பணியாற்ற முடியும்? இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? பட்டியல் போட்டுக் காட்டுகிறார் கள், 142 இலட்சம் உழைப்பு நாட்கள் என்றும், 23 இலட்சம் பேர்களுக்கு மேல் பணியாற்றினார்கள் என்றும் பட்டியல் கொடுக் கிறார்கள். வேலை வாய்ப்புக்கான உருப்படியான பட்ஜெட் டாக இது இல்லை; அந்த முறையில் ஒன்றுமே இல்லை. இது கொடுத்த வாக்குறுதிகளை, பேசமான அவை றுக் காற்றில் பறக்க விடும் முறையில், இந்த அமைச்சர் பொருமக்கள் வழக்க யாகச் செய்வதைப்போல் காற்றிலே பறக்க விட்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, பிற்பட்டோர் நலனைப்பற்றி எடுத்துக் கொண்டால், அதற்கென்று அகில இந்தியாவிலேயே தனியாக ஒரு அமைச்சரை ஏற்படுத்திய அரசு கலைஞர் அவர்களின் அரசு, மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதன் முதலாக பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சராக என்னுடைய தந்தையார் அவர்கள் இருந்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களும் பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சராகச் சில காலம் இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென்று தனியாக ஒரு அமைச்சர் இருக்கிறாரா? இதைச் சிந்தித்துப் பார்த்தீர்களா? ஆனால் பட்ஜெட்டில் போடும்பொழுது மிக அழகாகச் சொல் கிறார்கள். "பிற்படுத்தப்பட்டோர் நலனை மேம்படச் செய்வதற் காகக் கல்விக்கூடங்கள், வேலை வாய்ப்பு வசதிகள் இவற்றில், அரசு, 50 சதவீத இட ஒதுக்கீடு செய்தது மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும்", என்று ஒரே வாக்கியத்திலே நிதியமைச்சரவர்கள் சுருக்கமாக முடித்து விட்டார்கள். இந்த 50 சதவீதம் என்பதை நிலைநிறுத்த, இதைப் பெறுவதற்கு, இதைச் சட்டபூர்வமாக ஆக்குவதற்கு எவ்வளவு பேர்கள் பணி யாற்றினார்கள், எவ்வளவு பேர்கள் போராடினார்கள், எவ்வளவு பேர்கள் எழுதினார்கள், என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்தன, எவ்வளவு பேர் கிண்டல் செய்தார்கள்? அந்தச் சாம்பலை வேறு எதற்கோ பயன்படுத்துவது என்பது பற்றி அவையிலே இருக்கின்ற நிதியமைச்சரவர்கள் அன்றைக்கு கேலி செய்தார்கள். கேலி செய்த நிதியமைச்சரவர்கள், பிற்படுத்தப்பட்டோர் நலனை மேம்படச் செய்வதற்காகக் கல்விக்கூடங்கள், வேலை வாய்ப்பு வசதிகள் இவற்றில், அரசு 50 சதவீத இட ஒதுக்கீடு செய்தது மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும் என்று சொன்னால், 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு, அந்தச் சாதனைக்கு உரியவர் டாக்டர் கலைஞர் அவர்களே தவிர வேறு யாரும் இல்லை என்பதை இந்த மன்றத்தில் கூறிக் கொள்ள விரும்பு கிறேன். அவர் போராடியதற்குப் பிறகுதான் பிற்பட்டோரின் நலன் பாதுகாக்கப்பட்டது என்பதை நான் மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





பெரியார், அண்ணா ஆகியோர்களின் இலட்சியங்களை எடுத் துப் பேசினால் மட்டும் போதாது. இன்றைக்குத் திராவிடர் இயக்க வரலாற்றில், பிற்பட்டோர் நலன் என்பது இலட்சிய தீபம் என்பதை நிதியமைச்சரவர்கள் கவனத்திற்கொள்ள வேண் டும். இன்றைக்கு, இந்தச் சட்டத்திற்கு எந்தச் சட்டப் பாதுகாப்பைக் கொண்டு வந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரிக்கத் தயங்காது என்பதை நான் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, ரூ. 58 கோடிக்கு விவசாயிகளுக்கு சலுகை என்று சொன்னார்கள்? அதை எப்படி ஈடுகட்டப் போகி றார்கள்? நம்முடைய பட்ஜெட்டிலே அந்த விவரமே கிடையாது. இது பற்றி தினமணி மிகத் தெளிவாக எழுதுகிறது. தினமணி எழுதியதை நான் படிக்கிறேன்.

"மேலும் ஏறக்குறைய ரூ. 58 கோடி சலுகை மூலம் ஏற் படும் நிதி இழப்பை சரிக்கட்டுவதற்கு வழிவகை என்னவென்று தெரியவில்லை. இது பொதுவான பணப்பிரச்னை. ஆதலால் இது பற்றி அறிவிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது". அதோடு மட்டுமல்ல, விற்பனை வரி விகிதத்தை அதிகப்படுத்தியதானது, அதனால் கிடைக்கும் நன்மைகளைக் குறைத்துவிடும் என்றும் கூறி யிருக்கிறார்கள்............

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்களே, இரண்டு நாட்களாக நடைபெறுகின்ற இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில், விவசாயிகளுக்காக, கடனை தள்ளுபடி செய்திருக்கிற ரூ. 58 கோடிக்கு நிதிநிலை அறிக்கையில் எங்கே வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்று பல்வேறு உறுப்பினர்களும், குறிப்பாக, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூடக் கேட்டார்கள். நீண்ட ... பெயர் திற்குமுன்பு நிதிநிலையிலேயிருந்து கொடுக்கப்பட்ட ... தான் கடன். ஆகவே, பல ஆண்டுகளுக்கு முன்னாலே கொடுத்த கடனை அரசு ரத்து செய்கிறது. அதற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே எதற்கு நிதி ஒதுக்க வேண்டும்? எங்கே ஒதுக்க வேண்டும்? ஏற்கனவே கையிலேயிருந்து கொடுக்கப்பட்ட பணத்தை ரத்து செய்கிற பொழுது, அதற்கு இந்த நிதிநிலையிலே வகை செய்ய வேண்டும், வகை செய்ய வேண்டும் என்கிறார்களே, எப் படி, ஏன் என்பதை தயவு செய்து உறுப்பினர்கள் விளக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அரசாங்கத்திற்குச் சேர வேண்டியதாக சொல்லப்பட்ட கடன், தக்காவிக் கடன் என்ற பெயரிலே வரக்கூடிய கடன், அந்தத் தொகை ஏறத்தாழ ரூ. 15,20 கோடி, அதிலே, 5, 6 கோடி தவிர, மிச்சத்தை தள்ளு படி செய்வதாகச் சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் தங்கள் மூலமாக வழங்கப்பட்ட கடன் என்று பதில் சொல்ல முடியும்.

மிச்சம் இருக்கிற கடனாகச் சொல்லப்பட்ட கடன் தொகையில் பெரும்பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டிருக்கின்ற கடன். அந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி வழங்கியது ரிசர்வ் வங்கி. அந்தக் கடனை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது என்று அறிவிக்கப்பட்டதற்குப் பின்னர், அந்த நிதியை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு வருகிற காரணத்தால், அரசாங்கம் எப்படி வழங்குகிறது? இவ்வளவு பெரிய தொகைக்கு எங்கு குறிப்பு உள்ளது என்றுதான் பத்திரிகை ஆசிரியர்களும் ஓரளவுக்கு நிதி நிலை அறிக்கையைப் படித்தவர்களும் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை, இப்பொழுது விளக்கம் கேட்டதற்கு பிறகு ஒரு பகுதியை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே, மற்ற பகுதியையும் எதிர்காலத்திலே இந்த அரசாங்கம், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய அந்தத் தொகையை, ரிசர்வ் வங்கியோடு பேசி எப்படித் தீர்த்துக் கொள்ளும் என்பதையும், அதற்கான வழிகளைப் பேசி முடிவெடுக்கும்போது, இந்த அவைக்கு அரசாங்கம் அறிவிக்கும் என்பதுதான் இந்த நிதி நிலை அறிக்கையிலே இருக்கிற அடக்கம்.

*திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, அறிக்கையை அரசாங்கத்திலே உள்ளவர்கள், அமைச்சர்கள், சரியாகப் படித்துப் பார்க்கவேண்டும்; இந்த ஆண்டு தள்ளுபடி செய்யும் என்று சொன்ன தொகைக்கு எப்படி வழி செய்யப்பட்டுள்ளது என்று அரசாங்கம் பதில் சொல்லியாக வேண்டும். எதிர்காலத்திலே, நீங்கள் தள்ளுபடி செய்யக்கூடிய தொகையைப் பற்றி இப்பொழுது பேச வேண்டியதில்லை (ஒரு தரப்பில் மேசையை தட்டல்.) இந்த ஆண்டு அரசாங்கம் தள்ளுபடி செய்வதாகச் சொன்ன தொகைக்கு—கடந்த ஆண்டு ரூ. 40 கோடி என்று சொன்னீர்கள். ரூ. 20 கோடி ரூ. 21 கோடிக்கு இங்கே கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மேல் தேவைப்படவில்லையென்று ஒரு வேளை பதில் சொல்லக்கூடும். இந்த ஆண்டு கணக்கிலே கூட ஏறத்தாழ ரூ. 20 கோடி, ரூ. 21 கோடி உள்ளே காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், சொல்லப்பட்டிருப்பது ரூ. 60 கோடி. 21 கோடி எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதையாவது எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த 60 கோடிக்கு என்ன வழி செய்யப்படும் என்று சொல்லவேண்டும். அரசாங்கம் பொறுப்பெடுத்துக் கொண்ட ஒரு தொகையை, அரசாங்கம், நிதி—வரவு—செலவு—திட்டத்திலே காட்டவில்லை என்பதுதான் இன்றையதினம் விவசாயிகள் மட்டும் அல்ல, பொருளாதாரத் துறையைச் சேர்ந்தவர்களும் சொல்கிற கருத்தாகும்.





மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, கடனைத் தள்ளுபடி செய்கிறோம் என்கிற ஒரு கொள்கையை அரசாங்கம் முடிவாக அறிவித்து விட்டது. ஆகவே, கடனை தள்ளுபடி செய்ததற்குப் பிறகு எந்த விவசாயினிடத்திலாவது அரசாங்கம் போய் கடன் கொடு என்று கேட்டால்தான் பிரச்னை எழும். கடனைத் தள்ளுபடி செய்துவிட்டபிறகு கடன் வாங்கியவருக்கும் கொடுத்தவருக்கும் உள்ள பிரச்னை தீர்ந்து விடுகிறது. அரசாங்கம் அதை எப்படி ஈடுகட்டப் போகிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டிய நேரத்திலே தெரிவிக்காமல் அந்தக் காரியம் செய்யப்பட மாட்டாது என்பதைத்தான் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, தெரிவிக்கவேண்டிய நேரமே இந்த நேரம்தான். தெரிவிப்பதற்குத் தொடங்கிய பின்னர் தெரிவிக்க வேண்டிய நேரம் இப்பொழுதுதான்.

மற்றொன்று விவசாயிகளுடைய கடன்களிலே ஒரு சாராருடைய கடன், ஒரு பகுதி தள்ளப்படுகிறது .எல்லாக் கடனும் தள்ளப்படவில்லை. தள்ளப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. வேறு கடன்களை வசூலிக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருப்பதை நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். அவர்களே ஒத்துழைத்து இந்தக் கடனை கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். ஆகவே, வசூல் வேலை வேறுவிதமான வடிவத்திலே இடம் பெறும்.

கூட்டுறவுச் சங்கத்திலே கடன் வாங்கியவர்கள் தங்களுடைய கடனை முழுவதும் திருப்பிச் செலுத்தாத பொழுது, அவர்கள் கடன் பெறமுடியாத துன்பமும் அவர்களுக்கு ஏற்படக் கூடும். அது வேறு பிரச்னை. ஆனால் அரசாங்கம் தெரிவித்த, தள்ளுபடி செய்வோம் என்று தெரிவித்த கருத்துக்கு ஈடுகட்ட வேண்டிய அவசியம் நிதி இலாகாவிற்கு இருக்கிறது. அதை ஈடுகட்டிக் காட்டாவிட்டால், நாங்கள் சொல்வதிலே பாதியோ கால் பங்கோ அவ்வப்பொழுது எங்களாலே முடிந்த அளவுக்குச் செய்வோம் என்றும் சொல்வது வேறு, செய்வது வேறு என்று அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது என்று அர்த்தம் ஆகும்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, ஈடுகட்டிக் காட்டாதபொழுதுதான் அந்தப் பிரச்னை எழும் என்பதையும் இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன் (கூச்சல்—குழப்பம்)

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையை நான் இந்த மன்றத்திலே வைத்திருக்கிறேன். உறுப்பினர்கள் வாதம் செய்து கொண்டு இருக்கிறார்கள். உங்களுக்கு இருக்கிற ஐயப்பாடுகளை எல்லாம் எழுப்புங்கள். நான் இறுதியில் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், திரு என். வி. என். சோமு அவர்கள் பேசுவார்கள்.

திரு. துரைமுருகன் : "தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். விவாதம் நடக்கிறது. அவை முன்னவர் அறிக்கை வைத்திருக்கிறார். அவர் பதில் சொல்ல வேண்டும். இடையிலே மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் பதில் சொல்லி இருக்க வேண்டாம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் சொன்னதற்கு நாங்கள் விளக்கம் சொல்ல வேண்டுமா, இல்லையா? (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே சொல்கிற வார்த்தைகளை பத்திரிகைகளில் போடக்கூடாது; நடவடிக்கை குறிப்பில் அவை ஏறாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும் போது அதிலே மற்ற உறுப்பினர்களுக்கு ஐயப்பாடோ, மற்றவைகளோ எழுந்தால், அந்த உறுப்பினர் இணங்கினால், அந்த உறுப்பினர் பதில் சொல்லலாம் என்று முறை இருக்கிறது. ஆகவே உறுப்பினர்கள் விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிற போது இடையிலே அமைச்சர்கள் இடைமறித்து விளக்கங்கள் கேட்கலாம், விளக்கங்கள் சொல்லலாம், அதேமாதிரி உறுப்பினர்கள் விளக்கங்கள் கேட்கலாம், விளக்கங்கள் சொல்லலாம். ஆனால் இறுதியாக விளக்கங்கள் சொல்ல வேண்டிய பொறுப்பு என்னுடையது என்று சொன்னேனே தவிர இடையிலே அமைச்சர்கள் சொல்லக் கூடாது என்றோ கேட்கக் கூடாது என்றோ அதற்கு உறுப்பினர்கள் பதில் சொல்லக் கூடாது என்றோ சொல்லவில்லை. ஆனால் உறுப்பினர் ஒருவர் எழுந்து பேசுகின்றபோது அவரைப் பொறுத்துத் தான் விளக்கங்கள் வரவேண்டுமே தவிர விளக்கத்திற்கு விளக்கம், என்று அவையில் ஒவ்வொருவராகச் சொன்னால் பேரவை நடக்காது.



மற்றொன்று இந்த அவையிலே அமைதியை நிலை நாட்ட வேண்டிய முழுப் பொறுப்பும் பேரவைத் தலைவரான தங்களைச் சார்ந்தது. ஆகவே தாங்கள் என்ன ஆணை இடுகிறீர்களோ அதை அத்தனை உறுப்பினர்களும் கேட்டு நடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே தாங்களே அந்தப் பொறுப்பைக் கொண்டிருப்பதனாலே—மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் ஆளுங்கட்சியினரையும் கேட்டுக் கொள்கிறேன், எதிர்க்கட்சியினரையும் கேட்டுக் கொள்கிறேன்—அமைதியை நிலைநாட்ட வேண்டியபொறுப்பு தலைவருக்கு இருக்கிற காரணத்தால், ஆணையிடவேண்டியதும், உட்கார வைக்க வேண்டியதும், பேச வைக்கவேண்டியதுமான பொறுப்பு தலைவரிடத்திலே இருப்பதால் உட்கார வைக்கிற பொறுப்பை உறுப்பினர்கள் யாரும் ஏற்றுக்கொள்ளவேண்டாம். பேச வைக்கிற பொறுப்பு, உட்கார வைக்கிற பொறுப்பு இரண்டும் தலைவர் அவர்களைச் சேர்ந்ததால், தலைவருக்கு இருசாராரும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகத்தான் பண்பாட்டோடு செம்மையாக இந்த அவையை நடத்திச் செல்ல முடியும். எனவே விவாதிக்கலாம், விளக்கங்களைத் தரலாம், ஐயப்பாடுகளை எழுப்பலாம், அதற்குப் பதிலும் சொல்லலாம். ஆகவே சுமுகமான முறையில் விவாதங்கள் நடைபெறவும், ஐயப்பாடுகள்—எழுப்புவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை—எழுப்பட்டும், பதிலுரை அளிக்கப்பட்டும் நம்முடைய செயல் முறைகள் தொடரவேண்டும்—நான் கடைசியிலே விடை தர இருக்கிறேன். அது என்னுடைய பொறுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சோமு அவர்கள் இன்னும் 2 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும். இது அவர்களுடைய கன்னிப் பேச்சு என்பதால் அவர்களை 15 நிமிடங்களுக்கு மேல் பேச அனுமதித்திருக்கிறேன். நேரம் அதிகம் இல்லை. தி. மு. க. வில் நிறையப் பேர்கள் பேச வேண்டும். ஆனால் திரு துரைமுருகன் தான் விடமாட்டேன் என்று குறுக்கிடுகிறார். இனி யாரும் குறுக்கிடுதல் கூடாது.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் மாண்புமிகு நாவலர் அவர்கள் அருமையான விளக்கம் அளித்தார்கள். அந்த விளக்கத்தை அவர் அளித்த இடம் தான் தவறான இடமாக இருக்கிறது. அவர்கள் எதிரில் இருப்பவர்களைப் பார்த்து அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. வலப்பக்கமாக இருக்கும் மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்களைப் பார்த்து அந்த அறிவுரையைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே அளிக்கப்பட்ட 58 கோடி சலுகைகளுக்கு கணக்கு சரிவரக் காட்டப்படவில்லை. எங்கே என்று கேட்கிற நேரத்தில், நேற்று சுட்ட 100 தோசை வேண்டாம் என்று தானம் செய்துவிட்டால், அந்த 100 தோசைக்கு எங்கே இருந்து மாவு

கிடைத்தது, எப்படிச் செய்தீர்கள் என்று சொல்லவேண்டியது சமையல்காரராக இருக்கும் நிதியமைச்சரின் கடமையாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதை ஏன் நீங்கள் சொல்லவில்லை என்று கேட்டால், ஏற்கனவே செய்த சமையல்காரன் செய்யவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதைத் தான் 'தினமணி' பத்திரிகை சரியான முறையில் கூறுகிறது 58 கோடி ரூபாய் சலுகை மூலம் ஏற்படும் நிதி இழப்பை சரி கட்டுவதற்கு வழி வகை என்ன என்று தெரியவில்லை. இது பொதுமக்களின் வரிப் பணம் பற்றிய பிரச்சினை, நிதி அமைச்சர் அவர்களின் வீட்டுப் பிரச்சினை அல்ல, என்னுடைய வீட்டுப் பிரச்னை இல்லை, அப்படி இருந்தால் கவலைப்படப் போவது இல்லை. இது பொதுப் பிரச்னையாக இருப்பதால் தான் அதைப் பற்றி அறிவிக்க வேண்டியது அரசின் கடமை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, இந்தப் பட்ஜெட்டில் வரியே போடவில்லை என்று சொன்னார்கள். வரியும் போட்டு இருக்கிறீர்கள். 4 சதவீதம் என்று இருந்ததை 8 சதவீதம் என்று ஆக்கியிருக்கிறீர்கள். ஒரு முனை வரி 8 சதவீதம் என்று ஆக்கப்பட்டு இருப்பதாலே வசதிகள் இருந்தாலும் அதில் வரி ஏற்றம் இருக்கிறது என்பதை யாருமே ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். ஆனால், உங்களை விழுந்து விழுந்து ஆதரிக்கிற 'தினமணி' விவரமாகச் சொல்லி இருக்கிறது. 'விற்பனை வரி விகிதத்தை அதிகப்படுத்தியதனால், அதனால் கிடைக்க வேண்டிய நன்மையும் குறைந்து விடும்' என்பதாக அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. ஆகவே, எந்தத் துறையிலும் யாருக்கும் நன்மை இல்லை இந்த நிதி நிலை அறிக்கையால் என்பதை மிகவும் தெளிவாக நான் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். புளியந்தோப்பு பகுதியில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது. அது என்னுடைய தொகுதியில் வருகிற பகுதியாக இருப்பதால் நான் உடனே சம்பந்தப்பட்ட எல்லா அரசு அதிகாரிகளோடும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர்களும் உடனடியாக வந்து ரூ. 100 உதவித் தொகை கொடுத்தார்கள். அதே போல், மற்றொரு தீ விபத்து மதுரையில் ஏற்பட்டது. அங்கே சென்ற மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் குடிசைக்கு ரூ. 200 உதவித் தொகை என்ற வகையில் கொடுத்தார்கள். இங்கே ஒரு குடிசைக்கு ரூ. 100 என்று கொடுத்து விட்டு, மதுரையில் ரூ. 200 கொடுத்து இருக்கிறார்களே என்று நான் ஒரு பொதுக் கூட்டத்தில் சொல்லி, இது என்ன பாரபட்சம் என்றும் கேட்டேன். உடனே, நேற்றைய தினம் அவசர அவசரமாக நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் இங்கே வந்து



எரிந்து போன குடிசைகளுக்கு உதவித் தொகை ரூ. 200 கொடுக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார்கள். இந்த ஆணை அவர்கள் பதவி ஏற்ற 9-ம் தேதியில் இருந்து அமலுக்கு வரும் என்றார்கள். நேற்று நான் பத்திரிகையில் பார்த்தேன். இங்கே சென்னையில் நடைபெற்றுள்ள தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடிசை ஒன்றிற்கு ரூ. 100 என்கிற விகிதத்தில் தான் உதவித் தொகை கொடுக்கப்பட்டதாக இருக்கிறது. மதுரையில் ரூ. 200 கொடுத்து இருக்கிறீர்கள். இங்கே மட்டும் ஏன் பாரபட்சமாக நடக்கிறீர்கள் என்று பொதுக் கூட்டங்களில் பேசுகிற மன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்திற்குள்ளே வந்து எங்கே அந்தக் கேள்வியைக் கேட்டு விடப் போகிறார்களோ என்ற அச்சத்தின் காரணமாக அவசர அவசரமாக அந்த அறிவிப்பை இங்கே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். ஆனால் அந்த அறிவிப்பு இங்கே நடை முறைப் படுத்தப்பட வில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட தீ விபத்துக்களைத் தடுப்பதற்காகத் தான் அண்ணா அவர்கள் அந்தக் காலத்தில் எரியாத வீடுகளைக் கட்டினார்கள். அதற்குப் பின்னால் கலைஞர் ஆட்சி காலத்தில் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டன. இந்த வகையில் நீங்கள் என்ன திட்டத்தை வைத்து இருக்கிறீர்கள், ஒரு திட்டமும் இல்லை. இப்படி திட்டங்களே இல்லாத பட்ஜெட்டை அவை முன் வைத்த நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களை எல்லோரும் பாராட்டுகிறீர்கள் என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்ததாக, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட் எப்படி இருக்கிறது என்றால், காற்றடைத்த தலையணையைப் போல் இருக்கிறது. பஞ்சு வைத்து அடைக்கப்பட்ட தலையணை அல்ல. மாண்புமிகு நாவலர் அவர்கள் அடிக்கடி வெளியூர் செல்வார்கள். அவர்கள் செல்லும் போது, காற்றடைக்கும் தலையணை வைத்து இருப்பார்கள். வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டதும், அதில் காற்றடைத்து தலையணையாக வைத்துக் கொள்வார்கள். திருச்சியில் போய் இறங்கியவுடன் காற்றை எடுத்து விட்டால் அந்தக் காற்று இறங்கிவிடும். அதைப் போல் பதவி என்ற ஊருக்குப் போய்ச் சேருவதற்காக, அந்த வாக்குறுதிகள் என்ற காற்றைத் தலையணைக்குக் கொடுத்து விட்டு, மீண்டும் காற்றை இறக்கி விட்டார் நாவலர்—மிகச் சாமர்த்தியமாக காற்றை இறக்கி விட்டு இருக்கிறார் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் பேச்சை முடிப்பதற்கு முன், நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய முதல் பேச்சிலே மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் குறுக்கிட்டு, அதிலே சற்று சூட்டையும் சுவையையும் ஏற்படுத்தியதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஒன்று சொல்வேன். ஒரு அமெரிக்கக் குடியரசுத்தலை
வர் சொன்னார். It will be a folly to argue that the people canno
make political mistakes மக்கள் எந்த அரசியல் குற்றங்களையு
செய்ய மாட்டார்கள் என்று சொல்வது தவறு. They can do th
same mistake மக்கள் பெரிய குற்றங்களை, மன்னிக்க முடியாத
குற்றங்களைச் செய்வார்கள். They knew they have to pay th
penalty அதற்கு உண்டான அபராதத்தையும், தண்டனையையும்
அவர்களே செலுத்துவார்கள் என்று அமெரிக்கக் குடியரசுத்
தலைவர் சொன்னார். மகத்தான தவறை மக்கள் செய்து விட்டு
இன்று அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த பட்ஜெட் பெரிதாக ஊதப்பட்ட பலூனைப் போன்ற
பட்ஜெட். ஒரு குண்டூசி குத்தினால் போதும், டம் என்று
வெடிக்கும். இது வெறும் காற்று அடைத்த தலையணை. இது
பஞ்சடைத்த தலையணை அல்ல என்று கூறி முடித்துக் கொள்
கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-20).

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, பல்வேறு சோதனைகளைத் தாண்டி, தமிழக
அரசு முதல் முறையாக தேர்தலுக்குப் பின்னால் நிதிநிலை
அறிக்கையை இங்கே சமர்ப்பிக்கின்ற வாய்ப்பு கிடைத்திருக்
கிறது என்றால் தமிழகத்தில் இருக்கிற மக்கள் கடந்த இரண்
டரை ஆண்டு காலத்தில் இந்த நாட்டிலே நடை பெற்ற அரசை
எந்த அளவுக்கு தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத்
தான் நடைபெற்ற தேர்தலை வைத்து நம்மால் காண முடி
கிற . ஆனால் இங்கே எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஏதோ
பத்திரிகை செய்திகளைப் பார்த்து விட்டு, 'இலவு காத்த
கிளியாக இருந்தார்கள். ஏமாந்து விட்டார்கள்' என்று சொன்
னார்கள். நான் அதையே திரும்பச் சொல்ல விரும்புகிறேன்.
டெல்லிக்குச் சென்று, தானே பாராளுகின்றவன் என்பதைப்
போல கருதிக் கொண்டு, முதலமைச்சர் பதவியை அங்கே
பெற்று விட வேண்டுமென்று கருதி, அங்கே சென்று அந்தப்
பதவியை விலைக்கு வாங்கியதைப் போல் பெற்றுக் கொண்டு
வந்தவர், இலவு காத்த கிளியாக இருந்து இன்றைய தினம்
ஏமாந்து விட்டார் என்பதை நண்பர் துரை முருகன் அவர்கள்
பத்திரிக்கைகாரர்களுக்குச் சுட்டிக் காட்டுவதைப் போல
கலைஞருக்கு இடித்துக் காட்டியிருக்கிறார் என்று கருதுகிறேன்
(மேசையைத் தட்டும் ஒலி). அதற்குப் பின்னாலே சொன்னார்:
ஏழு கடலையும் தாண்டி, திருப்பாற் கடலையும் தாண்டி, அங்கே
தாண்டிப் பார்த்தும் ஒன்றும் இல்லை என்று சொன்னார். இதி
லிருந்து காண முடிந்தது என்ன வென்றால் ஏதோ தேர்தலுக்கு
முன்னாலேயே அறித்து வருகின்ற பட்ஜெட்டை தயாரித்துக்
கொண்டு, அமைச்சராக உட்காரப் போகிறோம் என்று நினைத்து
அதற்காக தயாரித்த பேச்சை நேற்றைய தினம் நிதி நிலை
அறிக்கையில் பேசும் போது திருப்பி, திருப்பி வாசித்திருக்கிறார்
என்பதுதான்.





இன்றையதினம் எதிர்க்கட்சியிலே உட்கார்ந்திருக்கிறவர்கள் தங்களுடைய ஏமாற்றத்தின் காரணமாக, எரிச்சலின் காரணமாக இந்த நிதிநிலை அறிக்கைபற்றி ஏதோ பஞ்சு மிட்டாய் என்கிறார் ஒருவர்; காற்றடைத்த தலையணை என்கிறார் ஒருவர். அந்தத் தலையணை இன்றையதினம் தலைவலியைத் தீர்த்திருக்கின்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை வெளியான உடன் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஏதாவது கருத்துத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். முரசொலி பத்திரிக்கையில் என்ன செய்தி வந்திருக்கிறது என்று அன்றையதினம் தெரிந்து கொள்வதற்காக முயற்சி செய்தேன். ஆனால் அந்தப் பத்திரிக்கைதான் அப்போது கிடைக்காத சூழ்நிலை உருவாகி இருந்ததே தவிர, அது இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

இன்றையதினம் அவர்களுடைய முயற்சி எலலாம் மக்கள் மீது குறைகூறி, இன்னும் சொல்லப்போனால் மேல்தட்டிலே இருக்கிறவர்கள் என்று சிலரை நினைத்துக் கொண்டு, அவர்களைப்பற்றி குறை கூறி, நாட்டு மக்களை திசை திருப்ப எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தங்களுடைய தவறுகளைப்பற்றிச் சிந்திக்காமல், யார் யாரைக் குறை கூறலாம் என்ற முறையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி குறிப்பிட்டு, மக்களால் அடையாளம் காட்டப்படுபவர்கள் யார் யார் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, நாட்டிலே இருக்கிற மக்கள் என்ன நினைப்பார்கள்? தன்னை முதலமைச்சர் என்று அறிவித்துவிட்டு, இன்றைக்கு 48-ஆக இருந்தது 38-ஆகக் குறைந்து விட்டதைப்பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் (குறுக்கீடு)—38 அல்ல, 37 என்று சொல்கிறார்கள்—என்று சிறிதும் சிந்திக்காமல் இப்படியே போய்க்கொண்டிருந்தால் எதிர்காலத்தில் இந்த 37 ந்த 7-ல் போய் நிற்குமோ தெரியாது. அப்படிப்பட்டவர்கள் இன்றையதினம் எங்களைப்பார்த்து கேலியும் கிண்டலும் செய்கிறார்கள்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். அருமை நண்பர் திரு. துரை முருகன் அவர்கள் இங்கே பேசும்போது சிவராமனைப் பற்றிச் சொன்னார்கள். பக்கத்திலே வெங்கட்ராமனை அழைத்து வைத்து, தேர்தல் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டவர்கள் நீங்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு சிவராமனைப்பற்றி பேச * * * இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதைப்பற்றி எல்லாம் நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கறப் பெற்றது.

[திரு. கே. சௌந்திரராசன்] [1980 ஜூலை 5

தரப்பிலே அத்தனை பேரும் இந்த நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டி இருக்கின்றார்கள். என்று சொன்னால் கலைஞர் அவர்கள் கொஞ்சம் கவுரவமான முறையில் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி இருக்கிறார்கள் என்பதாகத்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன்.

[முற்பகல் 10–30.]

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சில பிரச்னைகளை எடுத்துக் கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். நகர்ப்புறங்களிலே இருப்பவர்களுக்கு குடி தண்ணீர் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு, கடந்த பல ஆண்டுகளாக இங்கே எடுத்துச் சொல்லப்பட்டும் இன்னமும் நிறை வேற்றப்படாமல் இருக்கிறது. நகராட்சி மன்றங்களிலே இருக்கிற அதிகாரிகளையோ, அல்லது அவர்களுக்கு மேலே இருக்கிற அதி காரிகளையோ அணுகி 'நகர்ப்புற குடிசை வாசிகளுக்கு குடி தண்ணீர் கிடைக்கும்படி செய்ய வேண்டும், என்று கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள், ''வேறு ஏதாவது ஒரு இடத்தில் குழாயை அடைத்தால்தான் இவர்களுக்குத் தர முடியும்'' என்று. இப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைய தினம் நகர்ப்புறங்களிலே இருந்து வருகிறது. எந்தக் கால கட்டத்திலே இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாக்கப்பட்டதோ, அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நகர்ப்புற குடிசைவாசிகளி டம் வாக்குகளுக்காக செல்கிறபோது அல்லது அம்மக்களைச் சந்திக்கச் செல்கிறபோது, அவர்கள் குடி தண்ணீர் பிரச்னையைத் தான் வலியுறுத்தி எடுத்துச் சொல்கிறார்கள். நகர்ப்புறத் திற்கு அப்பால் உள்ளவர்களுக்கு வெளியில் உள்ள நீர்நிலைகளிலி ருந்து புதிதாக தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்யச் சொல்லி கேட்கிறார்கள். ஆனால் இருக்கிற நீர்நிலைகளிலிருந்து தண் ணீர் கொடுப்பதற்கான நடைமுறைகள் இல்லை. அதிலும் குறிப்பாக நகர்ப்புறங்களிலே இருக்கிற குடிசைவாழ் மக்களுக்கு குடிதண்ணீர் பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. அவர் களுக்குக் குடிதண்ணீர் கிடைப்பதற்கான திட்டத்தை அரசு உட னடியாகத் தீட்டி நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக திருச்சி யில், பல ஆண்டுகளாக தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து கொண்டி ருக்கிறது. அங்கே இருக்கிற காவிரி நதியிலே எவ்வளவு தண் ணீர் போனாலும், அங்கே வசிக்கிற மக்களுக்கு குடிதண்ணீர் பிரச்னை மிகப் பெரியதாக இருக்கிறது என்று சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். அப்படி நகர்ப்புறங்களிலே வ ழும் குடிசைவாழ் மக்களுக்கும் தண்ணீர் கிடைப்பதற்கான சூழ்நிலையை, திட்டத்தை இந்த அமைச்சரவை கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக் கிறேன்.



[1980 ஜூலை 5] [திரு. கே. சௌந்திரராசன்]

அடுத்து குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு மிகத் தேவையானது இரண்டு, ஒன்று மின்சார விளக்குகள், இரண்டு சாக்கடை வசதி கள். இவை போன்ற பல்வேறு வசதிகள் அவர்களுக்குத் தேவை யாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்லி அவைகளுக்கு பரி காரம் காண வேண்டிய கடமை இந்த அமைச்சரவைக்கு இருக்கி றது என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த ஆளுநர் உரையிலே பெரியாருக்கும் அண்ணா விற்கும் நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்போவதாக அறிவித்தி ருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு நாவலர் அவர்களை யும், அவர் மூலமாக புரட்சித் தலைவர் அவர்களையும் கேட் டுக் கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் திருச்சி நகரத்தின் மையப் பகுதி யில் இருந்துதான் அந்த பழைய சநாதன கொள்கைகளை எதிர்த் தார். அதனால் அவருக்கு வைக்க வேண்டிய நினைவுச் சின் னத்தை, திருச்சி நகரத்திலேயே வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன் முதலாக தமிழக அரசின் ஆட்சி பீடத்திலே அமர்ந்தபோது, 18 ஆண்டு காலத்திற்குப் பின்னால் பெரியாரோடு இணைந்த இடமும் திருச்சி தான் என்பதைச் சுட்டிக் காட்டி, அந்த வரலாற்று நிகழ்ச்சியின் நினைவாக அண்ணா அவர்களுக்கும் நினைவுச் சின்னம் என் னுடைய தொகுதியிலேயே, திருச்சி நகரத்திலேயே வைக்க ஏற் பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இங்கே பேசுகிற வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி, இந்த ஆளுநர் உரை ஏழை எளியவர்களின் நலனை எண்ணி போடப்பட்டிருக்கிறது, மக்கள் அனைவராலும் வரவேற்கப்படு கிறது என்று வரவேற்று, இத்தகைய பட்ஜெட்டைத் தயாரித்த நாவலர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாய் இருந்த அதி காரிகளுக்கும் என்னுடைய நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சௌந் திரராசனுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி நகரத்திற்கு தண்ணீர் கிடைப்பதற்கு புதியதாக திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

<u>*திரு. எல். இளையபெருமாள்</u>: பேரவைத் தலைவர் அவர் களே, இன்று நடைபெறுகிற வரவு செலவுத் திட்ட விவாதத் திலே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற பட் ஜெட்டிலே 51-ம் பக்கத்திலே 1966–69-ல் 6·8 இலட்சமும், 1969–74-ல் 5·5 இலட்சமும், அடுத்து 1974–78-ல் 4.1 இலட்ச

மும் மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் திட்ட நிதியில் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்ட பங்காக குறிக்கப்பெற்றிருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு தமிழக அரசுக்கு, மத்திய அரசு ஒதுக்கிய நிதி உதவி குறைவாக உள்ளது என்றும் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. நான் வேண்டுவது எல்லாம், இது சம்பந்தமாக மத்திய அரசுடன் விவாதிக்கப்பட்டதா ? என்ன காரணத்தினால் மற்ற மாநிலங்களை விட தமிழகத்திற்கு அவ்வளவு குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ? அப்படி ஏதாவது காரணங்கள் இருக்குமேயானால் நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய பின் உரையில் நிச்சயமாக தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரவு-செலவு திட்டத்தில் இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையென மின்சாரத்திற்கு 155·76 கோடி ரூபாயும், பாசனத்திற்கு 32·74 கோடி ரூபாயும், வேளாண்மைக்கும் பிற சார்ந்த துறைகளுக்கும் 78·25 கோடி ரூபாயும், தொழில் துறைக்கு 23.22 கோடியும், சாலைகள், சாலை போக்குவரத்துக்கு 37·84 கோடி ரூபாயும், கல்விக்கு 20.73 கோடி ரூபாயும், மருத்துவத்திற்கு 12'28 கோடி என்றும் நிதி ஒதுக்கப்பெற்றிருக்கிறது.

நிதியமைச்சர் அவர்கள் முன்பு கல்வித் துறை அமைச்சராகவும் இருந்திருக்கிறார்கள். 1948 ஆம் ஆண்டு முதல் அவரை எனக்கு நன்றாகத் தெரியும். கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். ஆனால் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்குத்தான் மிகக் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நாட்டினுடைய மக்கள் நல்ல ஒழுக்கம் பெற்று, சிறந்த அரசை தேர்ந்தெடுத்து, அரசுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமேயானால் கல்வி அறிவு நிச்சயமாக வேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக் கொண்ட கொள்கை.

ஆனால் எந்தக் காரணத்தினாலோ மற்றத்துறைகளுக்கு ஒதுக்கியுள்ளதை விட கல்வித் துறைக்கு மிக மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. சாமான்ய மனிதனுக்கு உணவு தேவை, உடை தேவை, இடம் தேவை, நோய் வந்தால் மருந்து தேவை என்று நாம் எல்லாம் சொல்லி வருகிறோம். ஆனால் மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 12·28 கோடியாகும். குறிப்பாக நகரத்தை எடுத்துக் கொண்டால், என் தொகுதியில் இருப்பதை நான் பார்த்தமட்டில் கிராமங்களை விட நகரம் பல வகைகளில் மிகவும் சுகாதாரக்கேடாக இருப்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அமைச்சர் அவர்களும் அதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.



குறிப்பாக மருத்துவத் துறைக்கு குறைவாக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு நிறைந்த அனுபவம் இருக்கும். ஏனென்றால் அவர்கள் 1967-க்குப் பிறகு இந்நாள்வரை ஆளும் கட்சியில் அல்லது எதிர்கட்சியாக இருந்து பல்வேறு நிலைகளை உணர்ந்தவர்கள். அப்படியிருந்தும் மருத்துவத்துறைக்கு ரூ. 12·28 கோடி ஒதுக்கியிருப்பது என்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் இதை புனர் பரிசீலனை செய்து வருகிற காலத்திலாவது இந்த ஆண்டே மருத்துவத்துறைக்கு அதிகப்படியாக நிதி ஒதுக்கித்தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மருத்துவத் துறை மட்டுமல்ல. குழாய்த் தண்ணீர் அளித்தல், கழிவுநீர் அகற்றல் போன்றவற்றில் கிராமங்களைவிட நகரங்கள் மிகவும் சீர்கேடாக இருக்கின்றன. நிதி அமைச்சர் அவர்களுக்கு என்னை விட அதிக அனுபவம் உண்டு. இந்நிலையில் கார்ப்பரேஷன் தேர்தலும் இன்னும் ஓராண்டு ஒத்திவைக்கக் கூடிய நிலையில் இப்போது கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் நிறைவு பெறுகிற நிலையில் இருக்கிறோம். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் நிச்சயமாக பத்து காரியங்களில் ஐந்து காரியங்களையாவது செய்வதற்கு, அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அன்றாட வாழ்க்கையில் மக்களுக்கு வேண்டியவற்றைச் செய்வதற்கு முயல்வார்கள். தவறுகளைப் பற்றி மக்கள் மிக நெருங்கிய நிலையில் அவர்களைக் கேட்பார்கள்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

தேர்தலை நம்பி வாழ்கிற நாடு. இந்த நாடு. தேர்தல்களை வைத்துக் கொண்டு சமத்துவம், சகோதரத்துவம் என்றெல்லாம் சொல்கிறோமே தவிர சட்டத்தை வைத்து செய்ய சக்தியற்றவர்களாக இந்திய நாட்டிலே இருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே மாநகராட்சி தேர்தலை நாம் ஒத்திவைப்பது நிச்சயமாக மக்களுக்கு நன்மை செய்வதாகாது. அது மக்களுக்குக் கேடு செய்கிற நிலையத்தான் உருவாக்கிவிடும், ஆகவே அப்படி உருவாக்க வேண்டாம் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், குழாய்த் தண்ணீர், கழிவுநீரை அகற்றுவது என்பவை முன்பு கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது ஸூவரேஜ் போர்ட் என்று வைத்து கழிவுநீரை அகற்ற குடிநீர் அளிக்க அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் யார் உயர்வு, யார் தாழ்வு என்ற போட்டா போட்டி இருக்கின்றது. ஆகவே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் '' காப்பிட்டல் வொர்க்ஸை '' வாட்டர் போர்டிடம் கொடுத்துவிட்டு அன்றாட மெயின்டெனன்ஸ் பொறுப்பை கார்ப்பரேஷனிடம் கொடுப்போமானால் சுலபமாக,

நிச்சயமாக மக்களுக்கு வேண்டியதை கேட்டுச் செய்ய முடியும் மக்களின் குறைகளையும் உடனடியாக நீக்க முடியும். இதைச் செய்யத் தவறினால் நகரத்தில் வாழும் மக்கள் என்று சொல் வதற்குப் பதிலாக நரகத்தில் வாழும் மக்கள் என்றுதான் சொல்ல வேண்டும். பங்களாக்களில் வாழும் மக்களுக்கே இந்த நிலை என்றால் குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களைப் பார்த்தால் அவர்கள் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள்.

சுகாதாரத்தை காபந்து செய்வதாகச் சொல்லி மருத்துவத் துறைக்கு ரூபாய் 12·28 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் வேதனைக் குரிய விஷயமாகும். ஆகவே நிச்சயமாக இதை புனராலோசனை செய்து உடனடியாக கார்ப்பரேஷன் தேர்தலை சீக்கிரம் குறைத் தது ஆறு மாதத்திற்குள்ளே வைப்போம் என்ற உறுதிமொழி கொடுத்தாலொழிய இந்த நிலையை மாற்ற முடியாது. ஆகவே, வாட்டர் போர்ட்க்கு காப்பிட்டல் வொர்க்ஸைக் கொடுத்துவிட்டு மெயின்டெனன்ஸ வொர்க்ஸை கார்ப்பரேஷனி டம் கொடுத்தால் நல்ல முறையில் மக்களுக்கு வசதிகளைச் செய்ய முடியும்.

என் தொகுதியில் உள்ள ஒரு தெருவில் பதினைந்து நாட்களாக மின்சார விளக்கு எரிவதில்லை. அங்கே இருக்கிற உறுப்பினர் சொல்லியும் கூட 15 நாட்களாக அவை எரியவில்லை. அது ஸ்லம் அல்ல, ப்ரைவேட் நிலமும் அல்ல. மெயின் ரோடாக இருக்கிறது. மின்சார இலாகாவில் அதை எடுத்துச் சொல்லி ரிப்பேர் செய்ய வேண்டும் என்று சொன்னால், கார்ப்பரேஷன் அத்தாரிட்டியில் உள்ளவர்கள் ரோடை வெட்டக் கூடாது என்று சொல்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். இதில் யாருக்கு அதிகாரம். யார் உயர்வு யார் தாழ்வு என்ற பேதம் வருகிறது. இதை கார்ப்பரேஷன் அத்தாரிட்டியிடம் சொன்னபோது, முன்பு ஒரு உத்தரவு வந்தது அரசாங்கத்திலிருந்து.

(முற்பகல் 10-40)

**அத்தியாவசியமான அதாவது எஸ்ஸென்ஷியல் சர்வீசில் இருக்**கக்கூடியவர்கள் உடனடியாக அதுவும் குறிப்பாக மின்சார இலா காவில், அந்த வேலையைச் செய்துவிட்டு பின்னால் ராடிபிகேஷன் செய்யலாம். அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தால், அதை ஒத்துக் கொள்ளக்கூடிய ஒரு ஜி. ஓ. இருந்தது. தெரிந்தோ, தெரியாமலோ கடந்த 10 ஆண்டுகளாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், அரசியலில் உள்ளவர்கள், நிர்வாகத் தில் உள்ளவர்கள் அந்த உத்தரவை திருத்திவிட்டு, இப்போது மக்கள்தான் கடந்த 15 நாட்களாக அவதிப்பட்டுக் கொண்டிருக் கார்கள். எப்படியோ ஸ்பெஷல் ஆபீசரைப் பார்த்து முந்தின நாள் காலை அந்த வேலை செய்து முடிக்கப்பட்டது. அரசியல் வாதிகளாக இருக்கின்ற நாம், மக்களுக்கு நன்மை செய்கின்ற இந்த அரசு இதிலே கவனம் செலுத்தி, இதுபோன்ற அத்தியாவசிய



மான வேலைகளில் சட்டங்கள் எப்படி போடப்பட்டிருந்தாலும், அவைகளை உடனடியாகத் திருத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வதோடு, இதை யெல்லாம் இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் நிர்வாகம் பற்றி போலீஸ் டிமாண்டிலே பேச வேண்டு மென்றாலும், ஒரு விஷயத்தை நான் இப்போது சொல்ல வேண்டி யிருக்கிறது. என் தொகுதியிலே உள்ள ஒன்றை குறிப்பிடுவதற் காகச் சொல்லுகிறேன். 1952 ஆம் ஆண்டு முதல், இன்று வரை யிலும் போலீஸ்காரர்கள் குடியிருக்கின்ற வீடுகளில், இந்த நகரத்திலே கூட தண்ணீர் வசதி இல்லாத ஒரு பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. உண்மையிலேயே எனக்கு சற்று முன்பாக இந்தச் சபையிலே பேசுகின்றபோது சொன்னார்கள். போலீஸ் காரர்களுடைய நிலைமையை நான் மட்டும் சொல்லவில்லை. மனிதாபிமானத்தோடு பார்க்கவேண்டும். அவர்களும் மனிதர் கள்தான். அவர்கள் மனைவிமார்கள் தண்ணீர் எடுக்க வேண்டு மானால், பக்கத்துத்தெருவிற்கு போகின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப் போகும்போது, அவர்களுக்கும், அங்குள்ளவர்களுக்கும் சண்டை ஏற்படுகின்றபோது, சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய இந்த அதிகாரிகள் யார் பக்கம் போவார்கள் என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. சென்னை நகரத் திலே கடந்த 10 ஆண்டுகளாக முன்பு இருந்த மக்கள் தொகைக்கு ஏற்பட்ட பைப் சிஸ்டம் இன்றும் இருக்கிறது. இன்று இருக்கின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப அது விஸ்தரிக்கப்பட வில்லை. அதை நீட்டவும் இல்லை. அழுத்தச் சக்தியும் குறை வாக இருக்கிறது. இதையெல்லாம் மனதில் கொண்டு, தலை நகராக இருக்கின்ற இந்த இடத்திலாவது இந்த நிலைமையைச் சீர் செய்ய வேண்டும்.

உண்மையிலேயே, போலீஸ்காரர்கள் குடியிருக்கும் நிலை மையை எடுத்துக் கொண்டால் மிகவும் பாவமாக இருக்கிறது. இன்னமும் அவர்கள் நிலைமையைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோமே தவிர, எந்தவிதமான திட்டமும் அவர்களுக்குச் செய்யவில்லை. அவர்களால் எப்படி தங்கள் கடமையைச்செய்ய முடியும்? யாராவது ஏதாவது செய்தால், திருடு செய்தால், நமக்கு என்ன என்றிருக்கிறார்கள். அவர்களும் மனிதர்கள் தானே. எனவே, அவர்களுக்கு இருக்கின்ற நிலைமையை நாம் சரி செய்ய வேண்டும். இன்று இருக்கின்ற நிலைமையில் 1,000 பேர்களுக்கு ஒரு போலீஸ்காரர் என்று ரேஷியோ இருக்கிறது. 2,000 பேர்களுக்கு ஒருவர் என்றுகூட இருக்கலாம். மக்கள் கல்வி அறிவு பெற்று, சட்டத்தை மதித்து நடக்கக்கூடிய தன்மையை நாம் சுதந்திரம் பெற்று, இத்தனை ஆண்டுகள் ஆனபின்புகூட செய்யவில்லை. அப்படியிருந்தால், தமிழகத்திலே போலீஸ் இலாகாவே இல்லாமல் செய்கின்ற ஒரு பெருந்தன்மை வரலாம். ஆனால், இன்றிருக்கும் நிலைமையில் மனிதன் பேராசைக்

குட்பட்டு, மனிதன் சுயநலத்திற்குட்பட்டு, சட்டத்தை மதிக்காது, ஆண்டவனை மதிக்காது இருக்கின்ற ஒரு நிலைமையை அரசியல்வாதிகளாகிய நாம் உருவாக்கி இருக்கின்றோம். பகுத்தறிவு என்று சொன்னாலும், பகுத்தறிவு என்ற பெயராலே எதையெல்லாம் செய்யவேண்டுமோ, அதையெல்லாம் விட்டு, விட்டு, தங்களுக்கு சாதகமாக செய்து கொள்ளும் மனித குணம் அவ்வாறு இருக்கிறது.

இன்னமும் போலீஸ்காரர்களுக்கு கொடுக்க வேண்டிய வீடு கட்டும் திட்டம் நிச்சயமாக சரியான முறையிலே செய்யவில்லை. தற்போது அவர்கள் குடியிருக்கும் வீடுகளில், வயது வந்த 2 பெண்கள், வயது வந்த 2 ஆண்கள், கணவன் மனைவி ஆகியோர் அந்த இடத்தில் படுப்பதற்கு தகுதியற்றதாக இருக்கிறது. இது அரசாங்க வீடுகளே தவிர, அவர்கள் வீடல்ல. போலீஸ்காரர்கள் அந்த வீடுகளை எடுத்துக் கொண்டு போகப் போவதில்லை. இதையெல்லாம் மனதிலே கொண்டு, அந்தக் காலத்தில் 1952-ல் இந்த அமைச்சர் செய்தார். 1957-லே அந்த அமைச்சர் செய்தார், 1967-லே இந்த அமைச்சர் செய்தார் என்று குறைகூறுவதைவிட தற்போது நிதித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே ஒரு தனி கவனம் செலுத்தி....... (மணியடிக்கப்பட்டது).

It is my maiden speech. I want some more time. If the Chair permits, I will take. Otherwise.....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. எல். இளையபெருமாள் :</u> ஆகவே, இந்த நிலைமையிலே நாம் நிச்சயமாக அவர்களுக்கு விரைவிலே வீடுகள் கட்டித் தரவேண்டும். காவலர்களுடைய எண்ணிக்கையை அதிகம் செய்யவேண்டும்.

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் நலம் பற்றிய பிரச்சினை இன்று நேற்று எழுந்தது அல்ல. 1931 ஆம் ஆண்டு 1932 ஆம் ஆண்டுகளிலேயே அண்ணல் அம்பேத்கார் அவர்கள் வட்ட மேஜை மாநாட்டிலே பேசியிருக்கிறார்கள். லேபர் டிப்பார்ட்மென்ட் 1936-ல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகச் செய்திருக்கும் காரியங்களுக்கு நன்றி சொல்லுகிறேன். ஆனால் அவர்களுடைய ஜனத் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது செய்தது போதாது. முன்பு அந்த மக்கள் தங்கள் உரிமையைக் கேட்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் உரிமையைக் கேட்க ஆரம்பிக்கின்ற நேரத்தில் கேவலமான மிலேச்சத்தனம் நடக்கிறது. இந்தியா பூராவும் நடக்கிறது. எந்த அரசாக இருந்தாலும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல. பின்தங்கிய ஏழை மக்களாக இருந்தாலும் செய்வோம் என்று அரசு சொல்லியிருப்



பதை வரவேற்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவிக்கும், ஏழை மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உதவிக்கும் இடையே சற்று வித்தியாசம் இருக்கிறது. அதைக் கொஞ்சம் நிதானமாகக் கவனிக்க வேண்டும். ஏழைகள் ஏழை மக்களாக இருக்கக்கூடிய ஒரு பாவத்தில் இருக்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழை பிளஸ் தீட்டு என்ற நிலையிலே புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்.

தஞ்சை ஜில்லாவில் திருவோணம் அஅலது அருநல் பகுதியில் ஆலயம் ஒன்று இருக்கிறது. நான் தேர்தல் பிரசாரத்திற்காக அந்தப்பகுதிக்குச் சென்றிருந்தேன். தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தக் கோயிலுக்குள் போகக்கூடாது என்று சர்வ கட்சி மெம்பர்களும் சேர்ந்து தடுத்துக் கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் கட்சி சார்பில் நின்ற சகோதரருக்கு ஓட்டுக் கேட்ட போது "உங்கள் கட்சிக்காரர்களும் சேர்ந்துதான் தடுக்கிறார்கள்" என்று அங்குள்ள அரிசன மக்கள் கூறினார்கள். ஆக, காங்கிரஸ், கம்யூனிஸ்டு, தி.மு.க., அ.தி.மு.க. அனைத்து கட்சிக் காரர்களும் சேர்ந்து கோயிலுக்குள் அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் செல்லக்கூடாது என்று தடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இது பற்றி என்னைக் கேட்டபோது நிச்சயமாத் தேர்தலுக்குப் பின் வந்து சந்திக்கிறேன் என்று சொன்னேன். இந்த நிலைமையில் ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. சட்டம் இருக்கிறது. ஆயினும் அது வலிவாக அமல்நடத்தப்படவில்லை. அகில இந்தியாவிலேயே குஜராத் மாநிலமும், தமிழ் மாநிலமும்—அண்ணா அவர்கள் இருந்தபோது—அந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்தி வந்தார்கள். அப்போது அந்தக் குற்றத்தைத் தடுக்க என்ன உதவி கொடுக்கப்பட்டது? ஒரு சப்-இன்ஸ்பெக்டர், நான்கு கான்ஸ்டேபிள்கள் தான் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஊர் ஊராக செல்ல வண்டி வசதி கூடக் கிடையாது. அந்தந்தப் பகுதி மக்களுடைய ஆதரவும் கிடையாது. அரிசன மக்களுக்கும் பின் தங்கிய மக்களுக்கும் உதவி செய்வது என்பது அரசின் உண்மையான நோக்கமாக இருந்தால் அந்த போர்ட்போலியோ முதலமைச்சர் கையில் இருந்தால் கொஞ்சம் மரியாதையாக இருக்கும். அப்போது சட்டம் செயல்படும் முறை நல்லதாக அமையும்.

விவசாயக் கடன்களில் கோடிக் கணக்கான ரூபாயைத் தள்ளுபடி செய்திருப்பதாகச் சொல்லியிருப்பதில் ஒரு சந்தேகம் இருக்கிறது. கிராமக் கூட்டுறவு நாணய ஐக்கியச் சங்கங்களில் சிறு விவசாயிகள், சிறு குத்தகைதாரர்கள் ஆயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபாய் என்று கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்கள் தள்ளப்படுமா இல்லையா என்பது சரியாகச் சொல்லப்படவில்லை.

நிலச் சீர்திருத்தச் சட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.
காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சிக் காலத்திலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சிக் காலத்திலும் நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்திருக்கிறது.
காமராஜ் காலத்தில் 30 ஏக்கர் ; கலைஞர் காலத்தில் 15 ஏக்கர்.
நம்முடைய காலத்தில் என்ன கொண்டு வருகிறார்கள் ? ஐந்து
ஏக்கர் நிலம் என்பதை முடிவாக வைத்திருக்கிறார்கள். இளைய
பெருமாளுக்கு 50 ஏக்கர் நிலம் இருந்தால் மனைவி பெயரில்,
மக்கள் பெயரில், நாய் பெயரில் பூனை பெயரில் என்று யார்
யார் பெயரிலோ எழுதி வைக்கிறார்கள். அந்த 50 ஏக்கர்
நிலத்திலிருந்து வருகின்ற நெல்லும் ஒரே வீட்டுக்குத்தான் செல்
லும். இது ஊரிலிருக்கும் கர்ணத்திற்குத் தெரியும், வில்லேஜ்
முன்சீபுக்குத் தெரியும், தாசில்தாருக்குத் தெரியும்—தாசில்தார்
அரசின் பிரதிநிதியாக இருக்கிறார். ஆனால் இதுவரை, அ
யாருடைய ஆட்சியாக இருந்தாலும் கடுமையான முறையில் அவர்
கள் மேல் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வருந்தத்தக்கது.
இந்த அரசு அதைச் செய்யுமென்று நம்புகிறேன். அதைச்
செய்கிறவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும், எத்தனை
பெரிய பணக்காரர்களாக இருந்தாலும், நிலச்சுவான்தாரர்களாக
இருந்தாலும்.......

திரு. பி. முசிறிபுத்தன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
பினாமி நிலங்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் தமிழ்
நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகக் கொஞ்ச காலம் இருந்
தார்கள். அப்படி தமிழ்நாட்டில் யார் யார் பினாமி நிலங்களை
வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய அவர்கள் கட்சியின் சார்
பில் ஏதாவது குழு அமைத்து கண்டறிய ஏதாவது ஏற்பாடு
செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்த அவை
யிலே மரபுகள் மீறப்படுகின்றன என்பதற்குச் சாட்சியங்கள் பல
தடவைகள் இங்கே வந்திருக்கின்றன. பொதுவாகவே உறுப்
பினருடைய கன்னிப் பேச்சில், மெய்டன் ஸ்பீச்சில், குறுக்கிடு
வது மரபல்ல. ஆனால் இங்கே தொடர்ந்து உறுப்பினர்களு
டைய கன்னிப் பேச்சுகளிலேயே குறுக்கீடுகள் இருக்கின்றன.
இந்த நிலைமை ஏற்படாமல் இருக்க தாங்கள் ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்களும்
தான குறுக்கிடுகிறீர்கள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே,
அருமை உறுப்பினர் அவர்கள் இங்கே பினாமி டிரான்ஸாக்ஷன்ஸ்
பற்றிச் சொன்னார்கள் ; அதைப்பற்றிய விவரங்களை எல்லாம்





நான் சேகரித்ததுண்டு. நான் அரசுத் தலைவர்களிடத்தி
சொல்லியிருக்கிறேன். எல்லாத் தரப்பு அரசியல் தலை
களிடத்திலேயும் பேசியிருக்கிறேன். தைரியமாகச் சொல்
றேன், வருங்காலத்திலே சந்தர்ப்பம் கிடைக்குமானால் நிச்ச
மாக பெயர்களை எழுதிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வா கழகத்திலே
ஒரு சிறிய மாற்றம் தேவை. வேலையற்றோருக்கு அந்தத்
துறையிலே வாய்ப்புக் கொடுக்கின்ற முறையிலே 100 ருபாய்
சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சிதம்பரத்தை
எடுத்துக்கொள்ளுங்கள். பக்கத்திலே காட்டுமன்னார்கோயில்
என்ற ஊர், நிதியமைச்சர் அவர்களுக்கு மிகத் தெரிந்த ஊர்.
அங்கிருந்து 16கிலோ மீட்டர் தூரத்துக்கு பொருட்களை எடுத்துச்
செல்லவேண்டுமானால் அப்போது பொருளில்லை ஏற்படுகிற
குறைகளுக்கு, அதற்காக அவர்களுடைய சம்பளத்திலிருந்து
பிடித்தம் செய்யப்படுகிறது. அது சட்டமோ, ஆர்டரோ அல்லது
மனிதாபிமானமற்ற நிலையோ தெரியவில்லை. அவர்களு
டைய சம்பளத்திலே 30 ரூபாய் பிடித்தம் செய்வதால், அவர்
களுக்குக் கிடைக்கிற சம்பளம் 70 தான், அதனால் தவறான
காரியத்திலே இறங்கக்கூடிய நிலையிலே உத்தியோகஸ்தர்கள்
நடந்துகொள்வார்கள் என்பதை எண்ணிப் பார்த்து தகுந்த
முறையிலே கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காடுகள் வளர்ப்பிலே ஒன்று சொல்கிறேன்.
கடந்த 1952 ஆம் ஆண்டிற்குப் பிறகு யாராக இருந்தாலும்
காட்டை வெட்டி கொள்ளை
ஆக்கிரமிப்புச் செய்தவர்களை, அரசியல்வாதிகளுக்கும் அந்தந்தக்
லாபம் அடித்தவர்களைப் பற்றி தெரியும், அவர்களை
கிராமங்களிலே உள்ள அதிகாரிகளுக்கும் செய்யவேண்டுமென்று கேட்டுக்
உடனடியாகக் கவனித்து ஆவன
கொள்கிறேன்.

சாலைகள் அமைப்பதிலே அதிகமான கஷ்டங்கள் இருந்தாலும்
அரசாங்க உத்தியோகஸ்தர்கள், எக்ஸிகியூடிவ் எஞ்சினியர் இருக்
இருக்கிறார், சீப் எஞ்சினியர் இருக்கிறார், சூபர்வைசர்
கிறார், ஓவர்சியர் இருக்கிறார், அவர்கள் கூட்டுறவு இயக்கத்தின்
மூலமாகவோ அல்லது அரசாங்க சிப்பந்திகள் என்ற முறையிலே
பொறுப்பை ஏற்றிருந்து காரியங்கள் செய்திருந்தால் ஒரு பாலத்
தைக் கட்டியிருந்தால், பின்னாலே அந்தப் பாலம் உடைந்து
விட்டால் அவர்கள் 55 ஆண்டுக்காலம் வரை பதவியிலே இருப்
பவர்கள் ஏன் அந்தப் பாலம் உடைந்தது என்று கேட்டு அவர்கள்
மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் கான்ட்ராக்ட்
பற்றி உங்களுக்குத் தெரியும். கட்டிவிட்டு அவர்கள் பைனல் பில்
வாங்கிவிட்டால் பிறகு யாரும் சட்டத்தின்படிகூட அவர்களை

நெருங்கமுடியாது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு நீங்கள்
அப்படிப்பட்ட புரட்சியை செய்வீர்களானால் உங்களுக்கு அனை
வரும் ஒத்தாசையாக இருப்பார்கள் என்ற உறுதியை நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

கடைசியாக நான் உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.
தீண்டாமை ஒழிப்பு என்பது சட்டத்திலே சட்ட அளவிலே தான்
இருக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டிய நிலை எனக்கு
இருக்கிறது. அந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற மக்களுக்குச்
செய்யவேண்டிய கடமைகள் 1952 ஆம் ஆண்டு முதல் நிறை
வேற்றப்படவில்லை. அரசு உத்தியோகத்திலே இருக்கின்றவர்
களின் எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் கிளாஸ், 1, 2,
3, 4 இவைகளுக்கு ஒதுக்கப்பட்டது 15 சதவீதம், அதற்குப்
பிறகு அரசினுடைய நல்ல எண்ணத்தால் 18 சதவீதம் ஆகியது,
அது பூர்த்தி செய்யப்படவில்லை. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.
இவைகளுக்கு ஆட்கள் கிடைக்கிறார்கள், தமிழ்நாடு பப்ளிக்
சர்வீஸ் கமிஷனுக்கு ஆட்கள் கிடைக்கிறார்கள் என்கிறபோது
சாதாரண வேலைகளுக்குத்தானா ஆட்கள் கிடைக்காமல்
இருக்கிறார்கள், எனவே மனம் இருந்தால் மார்க்கம் உண்டு,
மனம் இல்லை, மார்க்கம் இல்லை, அவர்களுக்கு கொடுக்கப்
பட்ட உரிமை மாற்றப்படுகிறது, மறுக்கப்படுகிறது, வல்லவன்
வகுத்ததே வழி என்ற நிலையை உருவாக்கக்கூடாது என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன். டெல்லிக்குச் சென்றால்,
தமிழகத்தைத் தவிர வேறு எங்கு சென்றாலும் பேக்வர்ட் கிளாஸ்
டிபார்ட்மென்ட் என்று தான் சொல்வார்கள், ஹரிஜன் வெல்
பேர் டிபார்ட்மென்ட் என்று சொல்வதில்லை. பேக்வர்ட்
கிளாஸ் என்றால் ஹரிஜன் வெல்பேர் என்று புரிந்து கொண்
டார்களோ இல்லையோ தெரியவில்லை, அல்லது கெட்டிக்காரத்
தனத்தினாலே நடந்ததோ தெரியவில்லை ஷெட்யூல்ட் கேஸ்ட்
டுக்காகக் கொடுக்கப்பட்ட பணம், பேக்வர்ட் என்ற ஒரு இங்கி
லீஷ் வார்த்தையினால் ஒத்திவைக்கப்பட்டு அது டைவர்ட்
பண்ணப்பட்டு அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை, என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். promotion in service for scheduled castes
and tribes. என்ற உத்திரவை டெல்லிஹோம் டிபார்ட்மென்டிலிருந்து
1954, 1959, 1962 ஆண்டுகளிலே கொடுத்திருந்தும் தமிழகத்திலே
1952 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும் செய்யாமல் இருக்கிற
குறையை புரட்சி நிலையில் இருக்கிற நீங்கள் செய்யவேண்டு
மென்று இந்தச் சமுதாயத்தின் நலிந்த மகன் என்ற முறையிலே
தாழ்மையோடு நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையைத்
திருத்தத் தவறினால் நிச்சயமாக வருங்காலத்தில் பிரதி
நிதிகள் உண்மையைச் சொல்வதற்கு அஞ்சுவதில் பயன் இல்லை
என்றாலும், அரசாங்கத்தை நடத்துபவர்கள் எடுத்துச் செய்ய
வேண்டுமென்று கூறி, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த துணை
சபாநாயகரவர்களுக்கு நன்றிகூறி முடிக்கிறேன். வணக்கம்.



*திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியிலிருந்து என்
னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய சீர்காழி தொகுதி நல்ல உள்ளங்
களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான்
தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற தேர்தலில் வாய்ப்பை இழந்
தாலும், இந்தத் தேர்தலில் மீண்டும் நீங்கள் வர வேண்டுமென்று
சீர்காழி தொகுதி மக்களுக்கு அடையாளம் காட்டிய தானைத்
தலைவர். இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களுக்கு என்னு
டைய இதய பூர்வமாக நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்
கிறேன். இன்றையதினம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற
வாய்ப்பில் என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

புரட்சித் தலைவரின் ஆட்சி தமிழகத்திற்கு எப்படி வந்தது?
புரட்சித் தலைவரவர்கள் 1973-இலிருந்து வெற்றி வாகை சூடிக்
கொண்டு வந்தார்கள். 1980-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த
பாராளுமன்றத் தேர்தலில் ஒரு சிறு தோல்வியை அடைந்தார்கள்.
அப்படிப்பட்ட தோல்வியைக் கொடுத்த மக்கள் மீண்டும் எப்படி
புரட்சித் தலைவரவர்களை இங்கே தமிழக சட்டமன்றத்திற்கு
அனுப்பி மீண்டும் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தார்கள் என்
பதை நான் கொஞ்சம் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்பு
கிறேன்.

காரணம், தமிழகமும் சரி, இந்தியாவும் சரி தத்துவத்திலே
நம்பிக்கை கொண்டது என்பதை மன்ற உறுப்பினர்கள் அனை
வரும் அறிவார்கள். குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்தவரை
யில் இலக்கியத்தில் நம்பிக்கை கொண்டது. இலக்கியத்திலும்,
தத்துவத்திலும் நம்பிக்கை கொண்டது தமிழ்நாடு. அந்தத்
தத்துவத்தில் ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்பு
கிறேன்.

இங்கே யார் யாரெல்லாமோ தேர்தலில் போட்டியிட்டார்கள்
என்பதையும், தேர்தலில் போட்டியிட்டவர்கள் என்னென்ன
காரியங்களையெல்லாம் செய்தார்கள் என்பதையும் நான் சொல்
லித்தான் ஆக வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில்.
ஆட்சியிலிருந்து இறக்கப்பட்ட பிறகு, புரட்சித் தலைவரவர்களும்
அமைச்சர்களாக இருந்தவர்களும், நாங்களும் என்ன சொல்லிக்
கொண்டு நாட்டிலே ஓட்டுக் கேட்டோம் என்பதை நாட்டு மக்கள்
நன்றாக அறிவார்கள். அநியாயமாக எங்களைப் பதவியிலிருந்து
இறக்கி விட்டார்கள், நாங்கள் என்ன தவறு செய்தோம் என்று
தொண்டர்களாக இருந்து நாங்கள் ஓட்டுக் கேட்டோம். ஆனால்
நாட்டிலே அமைச்சர்களாக இருந்து கொண்டு ஓட்டுக் கேட்டவர்
கள் எத்தனையோ பேர். நான்தான் அடுத்த முதல்வர் என்று
சொல்லி நாட்டிலே நடமாடிக் கொண்டிருந்தார்கள், நான்தான்
சுகாதார அமைச்சர் என்று எத்தனையோ பேர்கள் சொல்லிக்

கொண்டிருந்தார்கள். நான்கூட நினைத்தேன், மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களுக்கு, ஒருகால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் நல்வாழ்வுத்துறை கிடைக்கும் என்றுகூட நினைத்தேன். ஆனால் பண்ருட்டியிலே போட்டியிட்ட வேட்பாளர் அவருக்கு வேட்டு வைத்தார் என்று தேர்தல் நேரத்திலே கேள்விப்பட்டேன், அதனால் வருத்தப்பட்டேன். காரணம், நாட்டு மக்கள் எந்த அளவிற்குப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நேரத்தில் சொன்னார்கள் 1954-ஆம் ஆண்டிலே பேசிய பேச்சு இது. ''டில்லி துரைத்தனத்தின் லட்சணத்தைத்தான் கூறுகிறோம்—ஒன்றல்ல இரண்டல்ல ; தொடர்ந்து பலப்பல ஊழல்கள் அம்பலத்துக்கு வருகின்றன ; கோடி கோடியாகப் பொருள் நஷ்டம் ஏற்படுகிறது ; கேடு களையக்காணோம் ; பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள் நாணித் தலை குனியக் காணோம் ; மாறாக வரிந்து கட்டிக்கொண்டு, ஊழலுக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது ஏறிக்கிடக்கும் அழுக்கைத் துடைத்திடக் கிளம்புகிறார்கள்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைத் தமிழ் நாட்டு மக்கள் சென்ற தேர்தலில் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

மீண்டும் அண்ணா அவர்கள் சொல்கிறார்கள், ''ஊழலோ நாற்றமடிக்கிறது ; ஊரார் உழைத்து வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி மிச்சப்படுத்தித் தரும் வரிப்பணமோ பாழாக்கப்படுகிறது'' என்று சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல, ''பொதுமக்களுக்குக் கணக்களிக்கும் புனிதத் தன்மையைத் துச்சமென்று எண்ணி, ஊழலை அம்பலப்படுத்துபவர்களை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுகிறார்கள்; ஏசுகிறார்கள்'' என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதோடு ''பொது மக்கள் பணத்தைச் சூறையாடும் போக்கு மக்களாட்சியிலே மலிந்து விட்டால் உலகம் இந்த நாட்டை மதிக்கவா செய்யும்?'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆயாசப்பட்டதை நாட்டு மக்கள் இன்றைக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

அது மட்டுமல்ல, நான் முன்னதாகவே சொன்னேன், இலக்கியத்தாலேதான் தமிழகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது, என்று. நான் பண்டைய இலக்கியங்களை உங்களுக்குச் சான்றாகச் சொல்ல முடியும். ஆனால் தற்கால இலக்கியத்திலே உங்களுக்கு சான்றுகளை எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.



பவளமணி மாளிகையில்
பனிமலரின் பஞ்சணையில்
வாழ்ந்து செழித்த மகன்
வழிதவறிச் சென்றதனால்
தாழ்ந்து — தரமிழந்து
தன்னையே தான் இழந்து
தப்பித்து வந்தானம்மா—பாவம்
தனியாக நின்றானம்மா—காலம்
கற்பித்த பாடத்தின் அடிதாங்க முடியாமல்
தப்பித்து வந்தானம்மா.

அடுத்து

கிளைவிட்டு கிளைதாவி—குடிவைத்துக் கொண்டவன்
முறிபட்டு வந்தானம்மா—இன்று
மனங்கெட்டு குணங்கெட்டு மதிகெட்டு நிதிகெட்டு
நிலைகெட்டு வந்தானம்மா—இங்கு
நேராக வந்தானம்மா
பொய்நெல்லைக் குத்தியே—பொங்க நினைத்தவன்
கைநெல்லும் விட்டனாம்மா.

இது தற்கால இலக்கியமே தவிர, பண்டைக்கால இலக்கியம் அல்ல.

பொய்நெல்லைக் குத்தியே—பொங்க நினைத்தவன்
கைநெல்லும் விட்டானம்மா—கொடும்
பள்ளத்தில் வீழ்ந்து எழுந்த பின் பல்லக்கைத்
தேடி நடந்தானம்மா—இங்கு
தேடி நடந்தானம்மா—இங்கு
இவன் போட்ட கணக்கொன்று
அவள் போட்ட கணக்கொன்று
இரண்டுமே தவறானது
யார் போட்ட புதிருக்கோ—இருவரும் விடையாகி
நின்றதே முடிவானது மனிதகுலத்துக்கே கதையானது.

என்ற கதை இன்றைய தினம் நாட்டு மக்களிடத்திலே தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, இங்கே சொன்னார்கள். இப்படிப்பட்ட தற்
இலக்கியங்கள் சங்க காலத்திலேயும் இருந்திருக்கின்றன. இதை நான்
காலத்திலேயும் இருந்து கொண்டிருக்கின்றன. ஏனென்றால், இது உலக
இன்னும் தெளிவாகச் சொல்வேன். ஆகவேதான் அந்த இலக்
மகா காவியத்தினுடைய ஒருஅங்கம். தேர்ந்தெடுப்ப
யங்கள் நாட்டு மக்கள் நம்மைத் தெளிவாகத்
க்கு வழிவகை செய்திருக்கின்றன.

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1980 ஜூலை 5

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அருமை நண்பர் சொக்கலிங்கம் அவர்கள்; ஜனநாயகக் காவலர், சோஷலிசப் பிதா என்று எம். ஜி. ஆர். அவர்களை, அவருடைய கட்சிக்காரர்கள் சொல்கிறார்களே, என்று ஆயாசப்பட்டுக் கொண்டார்கள். நான் தெளிவாகச் சொல்வேன், அவர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களுக்கும் இந்திய மக்களுக்குமே புரட்சித் தலைவர் அவர்கள் ஜனநாயகக் காவலர்தான், புரட்சித் தலைவர் அவர்கள் புரட்சித் தலைவர்தான். புரட்சி என்றால் எப்படிப்பட்ட புரட்சி என்பதை நான் இங்கே விளக்க வேண்டும். ஜனநாயகத்திலே எப்படி புரட்சி இருக்க முடியும் என்று கருதுவார்கள். இங்கே இருக்கிற அருமை பேரவை நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் நான் சொல்ல விரும்புவது நாமெல்லாம் படித்த ஆபிரகாம் லிங்கன் அவர்கள் கெட்டிஸ்பர்க் ஸ்பீச்சில் பேசுகின்ற பொழுது அளித்த ஜனநாயக விளக்கம் நமக்குத் தெரிந்ததுதான். ஆனால், மாமேதை அம்பேத்கார் கொடுத்த ஜனநாயக விளக்கத்தை இப்பொழுது இந்த அவை முன் எடுத்து வைப்பது என்னுடைய. கடமை என்று நினைக்கின்றேன்.

What is democracy என்பதற்கு பேரறிஞர் அம்பேத்கார், அவர்கள் சொல்கிறார்கள்

''A formand method of Govetment whereby revolutionary changes in the econmic and sccial life of the people are brought about without blcod-shed''.

ஆக, புரட்சிகரமான திட்டங்கள், Revolutionary changes எதற்காக, புரட்சிகரமான திட்டங்கள் ?

Economic and soscial life of the people—
பொருளாதார சமூகத் துறையிலே, புரட்சிகரமான திட்டங்களைப் போட்டு, மக்களை முற்போக்கு வாழ்க்கைக்கு, முன்னேற்றமான பாதைக்கு கொண்டு செல்வதற்கு எந்த ஒரு தனி மனிதனோ, எந்த ஒரு அரசாங்கமோ திட்டம் போடுகிறதோ அதுதான் ஜனநாயகம் என்று மாமேதை அம்பேத்கார் அவர்கள் அன்றையத் தினம் சொன்னார்கள். அந்தத் தத்துவத்தைத்தான் இன்றையத் தினம் புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையானது அந்த தத்துவத்தின் அடிப்படையிலே ஏற்பட்ட அறிக்கையே தவிர, ஏதோ சாதாரணமாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், '' சப்ஜக்ட் '' இல்லாத '' பட்ஜெட் '' என்று சொன்னார்களே, '' ஆப்ஜக்ட் '' இல்லாமல் சொன்னவர்களுக்கு சொல்லிக் கொள்வேன், அவர்களுக்கு ஆப்ஜக்ட் என்பதே கிடையாது. ஆகவே, இதிலே உள்ள சப்ஜக்ட் தெரியாது. அதுமட்டுமல்ல, இங்கே பல நண்பர்கள் சொன்னார்கள், இதிலே ஒன்றுமே இல்லையென்று. அவர்களுக்கு ஒன்றுமே இருக்காது. ஆனால், ஏழை எளியவர்கள், இலட்சோபலட்சம் ஏழைகள் பஞ்சையாய் பராரியாய் பாமர மக்களாய் இருக்கிறார்களே, அவர்களுக்கு இதிலே விஷயம் இருக்கிறது. அவர்களுக்கு இதிலே நல்ல கருத்துக்கள் இருக்கின்றன.



1980 ஜூலை 5] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

அதோடு மட்டுமல்ல, இங்கே புரட்சித் தலைவர் அவர்கள் சில புரட்சிகரமான திட்டங்களைப் போடுவதற்காக, நாட்டு மக்கள் அவரிடத்திலே பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களிலே, குறிப்பிடத்தக்கது, நான் ஒன்றை மட்டும் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு, புரட்சித் தலைவருடைய ஆட்சி என்ன செய்தது என்று கேட்டார்கள். இங்கே எனக்கு முன்னதாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், இந்த தமிழ் நாட்டில் அரசியல்வாதிகள் தான் தமிழகத்து மக்களை திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள், என்று. தமிழகத்திலே உள்ள மக்களுக்கு 1952-லேயிருந்து எவ்விதமான முற்போக்கு திட்டங்களும் இல்லை. அதற்குக் காரணம், அவர்களுக்கு மனம் இல்லை. மனம் உண்டு என்றால், மார்க்கம் உண்டு என்று சொன்னார்கள்.

நான் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். மனம் உண்டு என்றால் மார்க்கம் உண்டு என்பது நம்முடைய புரட்சித்தலைவருக்கு மட்டுமா அல்லது 1952 முதல் ஆட்சியிலே இருந்தவர்களுக்கும் சேர்த்தா? நீங்கள் தயவு செய்து சிந்திக்க வேண்டும். நல்ல திட்டங்கள், சட்டங்கள் இருக்கின்றன. அவைகள் செயல்படவில்லை என்றால் அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் ஆட்சி மட்டுமா, ஆனால் முந்தைய ஆட்சிகள் என்ன ? ஒன்பது ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்ததே. அப்போது எங்கே போனீர்கள், 1967-க்கு முன்னதாக காங்கிரஸ் ஆட்சி நடந்ததே அப்போது இந்தத் திட்டம் எங்கே போயிற்று? அது மட்டுமல்ல, மாமேதை அம்பேத்கார் அவர்கள், இன்னும் ஒரு கருத்தைச் சொல்லுகிறார். 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26-ந் தேதி, இந்தியா குடியரசு நாடாக மாற்றப்பட்டது. அதற்கு முன்னதாக 1949 நவம்பர் 26 ந்தேதி ஒரு எச்சரிக்கை விடுகிறார்கள். அதிலே என்ன சொல்லுகிறார் என்றால்

"On 26th January, 1960 we will have equality in politics and inequality in social and economic life. We must remove this contradiction at the earliest moment. Or else, hose who suffer from inequality will blow up the structure of political democracy which this Assembly has laboriously built up."

இவ் அசெம்பிளி என்றால் இந்த அசெம்பிளி அல்ல. கான்ஸ்டிடியூவன்ட் அசெம்பிளியாகும். 1950 ஆம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந் தேதி, நமக்கு அரசியல் சமத்துவம் இருக்கும். ஆனால், பொருளாதாரத்திலேயும், சமூகத் துறையிலேயும் ஏற்றத் தாழ்வு இருக்கும். அந்த முரண்பாடு இருந்து கொண்டே இருக்கும். அந்த முரண்பாட்டை நாம் விரைவிலே களைய வேண்டும். அப்படி களைய வில்லை என்றால், அந்த முரண்பாட்டினால் பாதிக்குண்டு தவிக்கின்ற மக்கள் கொடுக்கின்ற அடியினால், அரசியல் பாராளுமன்ற ஜனநாயகம் சுக்குநூறாகப் போய்விடும் என்று மாமேதை அம்பேத்கார் அவர்கள் எச்சரிக்கை செய்தார். ஏற்பட்ட அரசியல் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்.

ஏழை எளிய மக்களுக்கு நல்ல திட்டங்கள் போட வேண்டும். புரட்சிகரமான திட்டங்களைப் போட வேண்டும். அவர்களை மேம்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இன்றைய தினம் 1980—81 ஆண்டினுடைய நிதி நிலை அறிக்கையை எங்களுடைய நாவலர் இந்த மன்றத்தின் முன் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அரசியல் வாதங்களையும், இலக்கிய தத்துவங்களையும் ஏற்றுக் கொண்டு தான் எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது.

அருமை நண்பர்களே, இங்கே நான் இன்னும் ஒன்றைச் சொல்லுகிறேன். 1973-லே இருந்து வெற்றியை அடைந்து வந்த நமது புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு தோல்வி ஏற்பட்டது. அந்தத் தோல்வி இலக்கியத்திலே நமக்குச் சான்றாக அமைகிறது. (மணி அடிக்கப்பட்டது). அந்தத் தோல்வி நமக்குச் சோர்வைத் தரவில்லை. அது என்ன சான்று என்றால், மகாபாரதத்திலே உள்ள கருத்துக்கு இணங்க....

''தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும் ;
தருமம் மறுபடி வெல்லும்'' எனு மியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேட விதி இந்த செய்கை செய்தான்.
கருமத்தை மேன் மேலும் காண்போம்—இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம் ; காலம் மாறும்.
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுவுண்டு, காண்டீபம் அதன்பேர் என்றான்''.

என்று அர்ச்சுனன் சொல்கிறான். பீமன் அண்ணன் கையை வெட்டி எறிந்துவிட வேண்டுமென்று சினந்து ஆயாசப்பட்ட போது, பீமனது அருகில் இருந்த அர்ச்சுனன் பீமனது வேகம் எல்லாம் மாறக் கூடிய வகையில் அங்கே அர்ச்சுனன் சொன்னான்

''தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்'' .. .. ..

அது பொய்த்து விடாது. சூது கொஞ்ச நாளைக்குக் கவ்வும் அவ்வளவுதான். அது மீண்டும் வெல்லும் என்பதனை இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் வந்ததை அன்றைய தினமே பாரதத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட தருமத்தின் தலைவன், தருமத்தின் நாயகன், புரட்சித் தலைவர் ஏழைகளின் பங்காளன், இன்றைய தினம் ஆட்சியிலே இருப்பவர்கள் தான், அரிசனங்களுக்கு, அவர்கள் இறந்தால் 50 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது). இதை மட்டும் சொல்லி விடை பெற்றுக் கொள்கிறேன். காரணம் காந்திஜி அவர்கள் சொன்னார்கள். அரி என்றால் கடவுள், சன் என்றால் குழந்தை. கடவுளின் குழந்தை தான் அரிஜன் என்று சொன்னார்கள், ஆனால் இந்த நாட்டிலே உள்ளவர்கள் யாருமே அவர்களை மனிதனுடைய பிள்ளைகள் என்று கூட மதிப்பதில்லை. ஆனால்





புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களை 'கவர்ன்மென்ட் சன்' என்று மாற்றி பல புதிய திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அரிஜன் இறந்தால் அவர்கள் பிள்ளைகள் கடன் படக்கூடாது அவர்கள் பெண்டாட்டிகள் கடன் படக் கூடாது, அரசே கடன் பட வேண்டும் என்ற வகையிலே திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது, இன்னும் பல விஷயங்களை பேச வேண்டும் என்றாலும், நேர மில்லாத காரணத்தால், அடுத்து என்னுடைய பேச்சிலே நான் சொல்வேன் என்பதைக் கூறிக் கொண்டு, புரட்சித்தலைவர் அவர்கள், இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே நான் அவர்களைப் பார்க்கும் போது, அம்பேத்கார் அவர்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டவன் என்ற முறையிலே, சொல்வேன் புரட்சித் தலைவர் அவர்களின் சாயலிலே அம்பேத்கார் நடமாடிக் கொண்டிருக்கிறார் என்பதையும், அம்பேத்கார் கொள்கையைத் தான் இன்றைய தினம் சட்டமன்றத்திலே இந்த நிதி நிலை அறிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், கூறிக் கொண்டு, என்னுடைய கன்னிப் பேச்சுக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-10)

<u>திரு. ஜி. மூர்த்தி :</u> மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; அவையின் முன்னவரும், நிதி அமைச்சருமான நாவலர் அவர்கள் தாக்கல் செய்து இருக்கிற நிதி நிலை அறிக்கை மீது பேசுவதற்கு நல் வாய்ப்பினைத் தந்த இந்த மாமன்றத் தலைவருக்கு என் முதற் கண் நன்றியறிதலைத் தெரிவித்து என் உரையை ஆரம்பிக்கிறேன்.

இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிற விவசாயப்பெருங்குடி மக்களை தமிழகத்தில் இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பெரும்பான்மையாக கவனத்தில் கொண்டு, அந்த மக்களின் உயிர்ப் பிரச்னையாக இருந்து கொண்டு இருக்கிற கடன் பளுவைக் குறைக்கிற விதத்தில் கடன்களை ரத்து செய்து இருப்பதற்காக அந்த மக்களின் சார்பாக என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவான நில உடைமை உள்ள சிறிய விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலுவையில் அசலாகச் சுமார் ரூபாய் 35 கோடியும், இது வரை செலுத்த வேண்டிய வட்டி நிலுவையாகச் சுமார் 7 கோடியும், ஆக மொத்தம் 42 கோடி ரூபாய் கடன் பாக்கியையும், தக்காவி கடன் ரத்து 16 கோடி ரூபாய் அளவிலும், ரத்து செய்து இருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இன்றைக்கு அந்த மக்கள் ஏதோ ஊர்வலம் நடத்துவதாகப் பத்திரிக்கையில் செய்தி வந்து இருக்கிறது. 5 ஏக்கருக்கு உள்ளே நிலவுடைமை வைத்துள்ள

[திரு. செ. செம்மலை] [1980 ஜூலை 5

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உன்னதமான பட்ஜெட் இது என்
பது புலனாகும். இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன சொல்
லப்பட்டிருக்கின்றது என்று படித்துப் பார்க்காத உறுப்பினர்க
ளுக்கு வேண்டுமானால் இது ஒரு கை கொட்டிச் சிரிக்கின்ற அள
விலே இருக்கின்ற பட்ஜெட்டாகக் காட்சி அளிக்கலாம். ஆனால்
இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த மாண்புமிகு
நிதியமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே பேசியபோது அனைத்து
உறுப்பினர்களும் கைதட்டி வரவேற்ற காட்சியைக் கண்ணாரக்
கண்டோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை
முருகன் அவர்கள் சொன்னதுபோல் இது கைகொட்டிச் சிரிக்
கின்ற பட்ஜெட் அல்ல என்பதையும் இது ஒரு கைதட்டி வர
வேற்கின்ற பட்ஜெட் என்பதையும் நான் சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்தையும் ஒரே நிதிநிலை அறிக்கையில் சொல்லிவிட
வேண்டும் என்பது உள்ளபடியே இயலாததொன்றாகும். அப்
படிச் செய்துவிட்டால் அடுத்த ஆண்டு இந்த மாமன்றத்திலே
ஒரு நிதிநிலை அறிக்கை படிக்க வேண்டிய அவசியம் இல்லாமல்
போய்விடும். அதனால்தான் இந்த நிதிநிலை அறிக்கையில்
மாண்புமிகு நாவலர் அவர்கள் தமிழ்நாட்டின் உடனடித் தேவை
கள், குறுகிய காலத் தேவைகள், நீண்டகாலத் தேவைகள் ஆகிய
வற்றைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன
என்று சொல்லி இருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பி
னர் திரு. சித்தன் போன்றவர்கள் கவனத்தில் கொள்ள இந்த
நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

யானைப்பசிக்குச் சோளப்பொறி என்று அரசரப்பட்டு
அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். பசிக்கின்ற யானைக்கு
முதலில் சோளப்பொறி கொடுத்து பின்னர் கவளம் சோற்
றைக் கொடுத்தால் அந்த யானை மறுத்துவிட்டுப் போவதில்லை.
எதையும் படிப்படியாகத்தான் செய்யவேண்டும் என்பதை
மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிந்து கொண்டிருப்பார்கள்
என்ற நம்பிக்கையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை அரசு பதவி
ஏற்றுக்கொண்ட குறுகிய காலத்தில் தயார் செய்யப்பட்டது என்
பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் போன்றவர்கள்
உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கி
றேன்.

தொடர்ந்து இனி வரும் ஆண்டுகளில் புரட்சித் தலைவர்
அவர்களுடைய தலைமையிலுள்ள அரசுதான் நிதிநிலை
அறிக்கையை இங்கே வைக்க இருக்கின்றது என்பதையும் மன்ற
உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகி
றேன். அந்த சந்தர்ப்பங்களில் உறுப்பினர் சித்தன் போன்ற
வர்கள் வயிறு புடைக்க சாப்பிடும் சாப்பாட்டை எதிர்பார்க்க
லாம் என்பதையும் இந் நிதிநிலை அறிக்கை ஒரு முடிவானதல்ல
[illegible]தையும் இந்த அரசாங்கத்தினுடைய முதல் முயற்சி என



1980 ஜூலை 5] [திரு. செ. செம்மலை]

பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டி
ருக்கிறேன். இருந்தபோதிலும் எவை எவற்றிற்கு முக்கியத்து
வம் அளிக்கப்பட வேண்டுமோ அந்தந்த வகைக்கு முக்கியத்து
வம் கொடுத்து நிதிநிலை அறிக்கையில் நிதிகள் ஒதுக்கப்பட்டி
ருப்பதையும் நாம் நன்கு அறிவோம்.

'' தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு ''

என்று வள்ளுவப்பெருந்தகை சொல்லி இருக்கிறார்.

அதாவது செய்யத்தக்க வேலைகளை அறிந்து கொள்ளுதலும், அவைகளுக்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும். தெளிவாக துணிவாக கருத்தைச் சொல்வதும் ஒரு வல்லவனான அமைச்சனின் கடமை என்ற பொருளில் சொல்லியிருக்கிறார். அப்படியே செய்யத்தக்க செயல்களை ஆராய்ந்து, எப்படிச் செய்ய வேண்டும் என்று அதற்கான வழி முறைகளை கண்டு இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒவ்வொரு தன்மையையும் உணர்ந்து, ஆராய்ந்து துணிகரமாக இந்த பட்ஜெட் போடப்பட்டிருக்கிறது என்பதை உள்ளபடியே நல்லகுணம் உள்ளவர்கள், உள்ளம் திறந்து பாராட்டித்தான் ஆக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கூட இந்த மாமன்றத்தில் கூறியது போல, குறிப்புணர்ந்து குழந்தையை பேணி காக்கும் நல்ல தாய்க்கு எடுத்துக்காட்டாக புரட்சித் தலைவர் அவர்கள் விளங்கி வருகிறார்கள். அவரிடத்திலேதான் தமிழகம் இன்றைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே நினைவூட்ட கடமைப்பட்டவனாவேன்.

பொதுவாக தொகுதி மக்களுக்கு நன்றி சொல்கிறபோது. அவர்கள் கேட்பது எல்லாம், குடிதண்ணீர் வசதி, சாலைகள் வசதி, மின்சார வசதி ஆகிய மூன்றும் தான். இந்தப் பிரச்னைகள் இந்தத் தொகுதிக்குத்தான் என்றில்லாமல், ஒரு நாடு தழுவிய பிரச்னையாக இருக்கிறது. அதை நாம் நன்றாக உணர்ந்துதான் இருக்கிறோம். இந்தப் பணிகளை நாடு முழுவதும் விரைந்து முடித்து, மக்களுக்கு தேவையான வசதிகள் கிடைக்க அரசு அலுவலர்களுக்கு இந்த அரசு உத்தரவு இட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 60 கோடி ரூபாய் விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்றெல்லாம் கேட்கிறபோது, விவசாயிகளுடைய தலையில் சுமத்தப்பட்ட சுமை இன்றைக்கு இறக்கப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. மேலும் அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு மத்திய அரசின் உதவியை கோரியிருக்கிறது தமிழக அரசு. அத்தகைய முயற்சிகளுக்கு. தேவையான முழு ஒத்துழைப்பையும் எதிர்க்கட்சியினர் தரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகாரம் மாநில அரசுக்கு இல்லா விட்டாலும் கூட நாம் நம் குரலை மத்திய அரசுக்கு தெரிவித்தாக வேண்டும். அடுத்து, கைத்தறித் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் எங்கு பார்த்தாலும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மீட்டர் துணி விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிறது. ஆகவே அவைகளை எல்லாம் அரசாங்கம் நேரடியாக கொள்முதல் செய்தோ அல்லது அவர்களுக்கு வேறு வகையில் நிவாரணம் காணக் கூடிய முறையில் அப்பிரச்னையில் அரசாங்கம் தனது கவனத்தை திருப்பியாக வேண்டும். அடுத்து, தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சியை எடுத்துக் கொண்டால், மத்திய அரசிடமிருந்து 96 தொழில்களுக்கு விண்ணப்பித்தும் 16 தொழில்களுக்கு மட்டும் அரசு அனுமதித்திருப்பதாகவும் மீதி 80 தொழில்களுக்கு மத்திய அரசு இன்னும் அனுமதி வழங்காமல் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது, நிதி நிலை அறிக்கையில்.

மத்திய அர்சாங்கத்திடம் எந்த விதமான தயக்கமும் காட்டக் கூடாது. ஏனென்றால் மத்திய அரசாங்கத்தின் சவாலை ஏற்று இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கக்கூடிய நீங்கள் அவர்களிடம் பயப்பட வேண்டியதில்லை. இன்றைய தினம் இந்த அரசாங்கத்திற்கு பக்கபலமாக இந்தியாவில் இன்று நான்கு மாநிலங்களில் ஆட்சி இருந்து கொண்டிருக்கிறது. கேரளா, மேற்கு வங்காளம், திரிபுரா போன்ற இடது சாரி கட்சிகள் இன்று மேலோங்கி வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய நேரத்தில் தமிழ்நாடும் அவர்களோடு சேர்ந்து கொண்டு மத்தியில் அவர்களால் புறக்கணிக்கக் கூடிய திட்டங்களை பெற அவர்களோடு போராடி நம் உரிமைகளை பெற்றாக வேண்டும். அதே போல் கிராமங்களிலுள்ள ரோடுகள் எல்லாம் சீர்குலைந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய திரு. இளையபெருமாள் அவர்கள் கூட சொன்னார்கள். நகரங்களின் நிலை கிராமங்களை விட மோசமான நிலையில் இருப்பதாகச் சொன்னார்கள். நகரத்தில் இருப்பவர்களுக்கு உடனடியாக அதிகாரிகளை சந்தித்து குறைகளைச் சொல்லக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் கிராமங்களில் இருக்கக் கூடிய ஏழை எளிய மக்களுக்கு யார் அந்த அதிகாரி, எதைச் சொல்வது என்று தெரியாமல் திசை தெரியாத நிலையிலிருக்கிறார்கள். இன்று கிராமங்களில், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி இவை நிதி வசதி இல்லாமல் எந்தவித வேலையும் செய்ய முடியாதபடி ஒரு நிலை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரங்கள் கொடுத்து அதிக நிதியும் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு வரக் கூடிய வருமானத்திலிருந்து சிப்பந்திகளுக்கு சம்பளம் போடக்கூட நிதி போதாமல் இருக்கிறது. ஆகவே ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசாங்கம் அதிக நிதி உதவி கொடுத்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும். அடுத்து, மின்சார இலாகாவிலிருந்து சென்ற ஆண்டு காலி இடங்கள்



நிரப்ப ஒரு நேர்முகத் தேர்வு நடத்தினார்கள். பல்லாயிரக்கணக்கான பேர்கள், படித்தவர்கள், வேலை கிடைக்கும் என்று அந்த நேர்முகத் தேர்வில் பங்கெடுத்து விட்டு வந்தார்கள். இன்று வரை தேர்வு என்னவாயிற்று, அவர்களுக்கு வேலை போடப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை. நாங்கள் வெளியே சென்றால் நேர்முகத் தேர்வுக்குச் சென்றவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் எங்களிடம் வந்து முறையிடுகிறார்கள். ஆகவே அது என்னவானது என்பதை கவனித்து உடனடியாக அரசாங்கம் அவர்களுக்கு வேலை போட்டுக் கொடுக்கவேண்டும். அடுத்து, விவசாயத் தொழிலாளர்கள் கூலிச் சட்டம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. அந்தக் கூலி சட்டத்தைப் பொறுத்து, யார் கண்காணிப்பது, எப்படி கூலி கொடுப்பது, யாரிடம் சொல்வது என்பதையெல்லாம் அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு தனியாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அல்லது தாசில்தாரர் அளவிலாவது அதிகாரிகளை நியமித்து அந்த விவசாயத் தொழிலாளர் கூலிச் சட்டம் முழுமையாக நிறை வேற ஆவன செய்ய வேண்டும். வேறு பல தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, அதற்கான அதிகாரிகள், லேபர் ஆபிஸர்ஸ் இருக்கிறார்கள். ஆனால் இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அப்படி யார் இருக்கிறார் என்று தெரியவில்லை. ஆக, விவசாயத் தொழிலாளர்களுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

அதே போல், தொழில்கள் தொடங்குவதற்கு அரிசனங்களுக்கு பல துறைகளில் வாய்ப்பளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அவர்கள் அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கான உரிய பங்கைப் பெற முடியாமல் போகின்றது. ஒரு தொழிலைத் துவங்குவதற்காக ஒரு அரிசன் அந்தப் பகுதியிலே சென்றால், இன்றிருக்கக்கூடிய சமுதாயத்தில் அதிலே ஒரு பெரும் பணக்காரன் மோத, அவர்கள் அந்த உரிமையைப் பெற முடியாமல் போகின்றது. ஆகவே, உரிய முறையில் அவர்களுக்கு கறாராகக் கிடைக்கச் செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அதே போல், அறநிலையத் துறை என்று ஒரு துறை இருக்கிறது. இந்த அறநிலயத் துறையிலே அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பதில் வருகிறது. அது என்ன சட்டமோ, தெரியவில்லை. சுதந்திரம் பெற்று 30, 33 ஆண்டுகள் ஆகியும் இந்த அறநிலயைத் துறையிலே மட்டும் இன்னும் இந்தச் சட்டம் உள்ளது. ஆகவே, தயவு செய்து பகுத்தறிவு கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்த அரசு, இந்த அறநிலயைத் துறை நிர்வாகத்திலே தலையிட்டு, சட்டத்தை திருத்தி அரிசனங்களுக்கு உரிய இடங்கள் கிடைப்பதற்கு வசதிகள் செய்தாக வேண்டும்.

அதே போல், ஏழை எளிய மக்கள் ஜாதி வித்தியாசம் இல்லாமல் கிராமங்களிலே வாழ்வதற்கு வசதி செய்தாக வேண்டும். மேல் ஜாதியில் பிறந்து விட்டான் என்ற ஒரே காரணத்திற்காக, எந்தவிதமான உரிமையும் அனுபவிக்க முடியவில்லை. அவனுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொல்லாமல், 3 அடி நிலத்திலே குடிசை போட்டுக் கொண்டு அதற்கு மேல் சக்தியில்லாத ஒரு நிலைமையிலே வாழ்ந்து கொண்டிருந்தால், அதை அவனுக்கே நிரந்தரமாக்க வேண்டும். அரிசனங்களுக்கு உதவுவது போல், அவர்களுக்கும் அந்த வீட்டுமனைகள் சொந்தமாக்குவதற்கு புதிய சட்டங்களை நாம் கொண்டுவந்து, அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். ஏனெனில் அவர்களும் இந்தச் சமுதாயத்திலே பிறந்தவர்கள். இந்த நாட்டிலே பிறந்து அவர்களும் நமக்கு ஓட்டளித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதிலும் இந்த அரசு முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மேல் நிலைப் பள்ளிகளிலே அரிசன மாணவர்கள் போய்ச் சேரும் போது, ஸ்பெஷல் பீஸ் ரூ. 75, 80 என்று கட்ட வேண்டியிருக்கிறது. எல்லா வகையிலும் அவர்களுக்கு இலவசம், உதவித் தொகை கொடுக்கிறோம், இலவசமாக புத்தகம் கொடுக்கிறோம் என்று சொன்னாலும், அதற்கு சட்டம் போட்டிருந்தாலும், மேல் நிலைப் பள்ளியிலே மட்டும் ஒரு அரிசன மாணவன் போய்ச் சேரும் போது, இன்னமும் இந்த நிலைமை இருக்கிறது. ரூ. 75,80 ஸ்பெஷல் பீஸ் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த கல்வி ஆண்டிலிருந்தே அரிசன மாணவர்கள் மேல் நிலைப் பள்ளிகளிலே அனுமதிக்கப்படுகின்ற போது, இந்த ஸ்பெஷல் பீஸ் கட்டாமல் அனுமதிக்கப்பட வேண்டுமென்கிற உத்தரவை இந்த அரசு கல்வி இலாகாவிற்கு உடனடியாக போட்டாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், இந்த மேல் நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு பல பாடங்களுக்கு ஆசிரியர்களே இல்லை. போன ஆண்டே இதைப் பார்த்தோம். என்னுடைய பிள்ளைகளே இதிலே படிக்கிறார்கள். 3, 4 பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள், தனியாக ஆசிரியர்களை டியூஷன் வைத்து படித்து பாஸ் ஆகிவிடுகிறார்கள். ஏழை எளிய மக்களுடைய நிலைமை என்னவாகும்? ஆகவே, எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இருக்கிறார்களா என்பதை அரசு கண்காணிக்க வேண்டும்; இதற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

அதேபோல் உதவித் தொகை கொடுக்கிறார்கள். இந்த உதவித் தொகையை இந்த வருடம் படிக்கின்றவர்களுக்கு அடுத்த வருடம் கொடுக்கப்படுகின்றது. அப்படியில்லாமல், இந்த வருடம் படிக்கின்றவர்களுக்கு உதவித் தொகை இந்த வருடமே கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் இந்த அரசாங்கம் கவனித்தாக வேண்டும்.





அதேபோல், மலைக் கிராமங்களிலே உள்ள மக்கள் செல்லும் பாதைகளை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு மிகவும் மோசமாக இருக்கிறது. உள்ளபடியே அவர்கள் காட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக, பாச்சலூரில் இருந்து வடகவுஞ்சி வரை 20 கிலோ மீட்டர் தூரமிருக்கிறது. அங்கே பாதை வசதி அமைத்துத் தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அங்கே அரசியல்வாதிகளும் அதிகமாகப் போவது கிடையாது. அதிகாரிகளும் போவது கிடையாது. 6 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது ஒரு வருடத்திற்கு ஒருமுறை யாராவது பிரமுகர்கள் போவார்கள். அப்படியிருந்தும் அது கவனிக்கப்படவில்லை. 1,500 மக்கள் வாழ்கின்ற இடங்களுக்கு சாலை வசதிகள் செய்து தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையிலே இந்த பாச்சலூரிலிருந்து வடகவுஞ்சி வரை, பெரும்பள்ளம் வழியாக ஒரு சாலையை இந்த ஆண்டாவது ஏற்பாடு செய்தாக வேண்டும்.

ரூபாய் 12·50 கொடுத்து மின் இணைப்பு கிடைக்கின்ற இந்தத் திட்டம் வரவேற்கக்கூடிய திட்டம். ஆனால், இந்தத் திட்டத்தை மேஜர் பஞ்சாயத்துக்களிலும், நகரசபைகளிலும் வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் பெற முடியாது. மைனர் பஞ்சாயத்துக்களிலே இருக்கக்கூடிய மக்கள் பெற உரிமை இருக்கிறது. ஆனால், நகரசபைகளிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் இந்த வசதியைப் பெற முடியாது. இந்த உரிமை கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-40]

ஊராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும், மாநகராட்சியாக இருந்தாலும் அனைத்துப் பகுதிகளிலும் ரூபாய் 12·50 கட்டினால் உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்ற திட்டத்தை இந்த அரசு அமலுக்குக் கொண்டு வர வேண்டும்.

மருத்துவ மனைகளை எடுத்துக் கொண்டால் ஏழைகள் பயன் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. காலை 7 மணிக்குப்போய் 12 மணி வரை காத்திருந்து ஏதோ ஒரு மாத்திரையை வாங்கி கொண்டு போகிறான். உருப்படியாக வைத்தியம் பண்ணும் நிலைமை இல்லை. அங்கு போதுமான மருந்துகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். ஏழைகள் என்று சொன்னால் மரியாதையோ, மதிப்போ கிடையாது. மருத்துவத்திற்குத் தாய்மார்கள் சென்றால் எழு நாட்கள் வைத்து மருத்துவம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தாய்மார்கள் போனவுடன் எத்தனையாவது பிரசவம் என்று கேட்கிறார்கள்.

[திரு. என். பழனிவேல்] [1980 ஜூலை

இரண்டாவது என்று சொன்னால் ஓரளவு
ஐந்தாவது ஆறாவது என்று சொன்னால் யாரும் கவனிக்கிறார்கள்.
கிடையாது என்னுடைய தொகுதியில் ஒரு பெண்மணி மருத்துவ கவனிப்பதே
மனைக்குச் சென்று ஆறாவது பிரசவம் என்று சொன்ன
காரணத்தால் டாக்டர்களால் கவனிக்கப்படாமல் மூன்று
மணிக்கு அட்மிட் ஆனவர் காலையில் பிணமாக கிடந்தார்
ஆறு பிள்ளைகளைப் பெறுவது பாவமா? சோஷலிச நாட்டில்
பத்து பிள்ளைகளைப் பெற்றால் பதக்கம் கொடுக்கிறார்கள்
இறந்து போன பெண்மணியைப் போன்றவர்களின் தலையெழுத்து
அவர்கள் இந்த நாட்டில் பிறந்திருக்கிறார்கள். இது போன்ற
நிலை ஏற்படாதவாறு கண்காணிக்கவேண்டும்.

இந்த பட்ஜெட்டைப் பொருத்தவரை இன்றைக்கு மாநில
அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தில் இதற்குமேல்
ஒன்றும் செய்ய முடியாது என்பது நமக்குத் தெரிகிறது. விவ
சாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் திட்டம் வந்திருக்கிறது.
அது முதியோர் பென்ஷன் மாதிரி இருக்கிறது. முதியோர் பென்
ஷன் வாங்குவதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பது
தெரியும். நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
போட்டோ எடுக்க வேண்டும். நாட்டாண்மையிடம் சர்டிபிகேட்
வாங்க வேண்டும். அவருக்கு யாரும் சொந்தக்காரர் இருக்கக்
கூடாது. அந்த நிலை இல்லாது விவசாயிகள் பென்ஷனைப்
பொருந்தவரை அவர்கள் விவசாயத் தொழிலாளியாக இருந்
தால் போதும் என்று கூறவேண்டும். இந்த மாதிரி கேரளாவில்
மாதம் 50 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்
பின்பற்றி இந்த அரசாங்கம் அந்த உதவித் தொகையைக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தை
அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி
முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் பேசுகின்ற போது "அறநிலயத் துறை என்று
ஒன்று இருக்கிறது, அந்தத் துறையில் அரிசனங்களுக்கு வேலை
வாய்ப்பு அளிப்பதில் சட்டம் இடம் தரவில்லை என்று மறுக்கப்படு
கிறது" என்று தெரிவித்தார்கள். அப்படி சட்ட விதிகளைக்
காட்டி மறுக்கப்படவில்லை. எவ்வளவு வேலை வாய்ப்புக்கள்
கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நிச்சயமாக அரிசனங்களுக்கு
கொடுக்க வேண்டுமென்று அறநிலயத் துறைக்கு அறிவுறுத்தப்
பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: நான் இதை வேண்டுமென்றே
பேச்சுக்காகச் சொல்லவில்லை. என்னுடைய தொகுதியில் மிகுந்த
செல்வாக்கான பழனி தேவஸ்தானம் இருக்கிறது. அந்த தேவஸ்
தானத்தில் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு
இருக்கிறது. இந்தச் சட்ட விதி தேவஸ்தானத்திற்குப் பொருந்
தாது என்று சொல்லுகிறார்கள்.



980 ஜூலை 5]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மதிப்பிற்குரிய பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்ன
ர் அவர்களால் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை
ழு மனதோடு ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல
ரும்புகிறேன்.

முதலில், ஏழை விவசாயிகளுக்கு ஐந்து ஏக்கருக்கு கீழ்
வைத்திருக்கக் கூடியவர்களுக்கு கடன் நிவாரணம் செய்திருப்ப
தைப் பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சியும் பெருமையும் அடை
கிறேன். இதை நாம் செய்ததோடு இன்னமும் சிலவற்றையும்
செய்ய வேண்டும். பத்து ஏக்கர் அதற்குக்கீழ் உள்ள விவசாயிகள்
ரத்திற்குக் கடன் பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு வட்டி
யைத் தள்ளுபடி செய்து கொடுப்பதோடு மட்டுமல்லாமல்
குறுகிய காலக் கடனை மத்திய தரக் கடனாகவும், மத்தியதரக்
கடனை நீண்ட காலக் கடனாகவும் மாற்றிக் கொடுக்க வழிவகை
செய்தால் நிச்சயமாக அந்த விவசாய மக்கள் பயன் பெறுவார்கள்.

மின்சாரத்தைப் பற்றி இங்கே பேசிய நம்முடைய மதிப்பிற்
குரிய கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்றை
க்தினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது
விவசாயிகளுக்கான மின் கட்டணத்தை 12 பைசாவாக்கியபோது
ட்சக்கணக்கான விவசாயிகள் போராட்டத்தில் இறங்கி ஜெயி
லுக்குச் சென்றும் ஒரு பைசா கூட குறைக்கவில்லை. அதைக்
குறைக்காமல் மறுபடியும் 16 பைசா என்று ஆக்கினார்கள்.
அப்படிப்பட்டவர்கள் இன்று விவசாயிகளுக்காகப் போராடுகி
றோம் என்று சொல்வது வேதனைக்குரியதாக இருக்கிறது.

மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே நம்முடைய அரசிலே
பைசாவை 12 பைசாவாக ஆக்கியிருக்கிறார்கள். தமிழகத்
தைப் பொறுத்தவரையிலே 60 இலட்சம் விவசாயிகள் இருக்கி
றார்கள். 8 இலட்சம் பம்பு செட்டுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்
ன. ஆகவே, 14 பைசா என்றும் 12 பைசா என்றும் பாகுபாடு
இல்லாமல் எல்லோரும் 12 பைசா மட்டும் கொடுத்தால் போதும்
என்று செய்தால் சிறந்ததாக இருக்கும் என்பதைக் தெரிவித்துக்
கொள்கிறேன்.

விவசாயிகளிடமிருந்து மீட்டர் சார்ஜ் வசூலிக்கப்படுகிறது.
விவசாயிகள் 10 ஆண்டுகளுக்கு மீட்டர் சார்ஜ் கட்டிவிட்டால்
றகு மீட்டர் சார்ஜ் வசூலிக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தவிர, விவசாயிகள் சர்சார்ஜ் கட்ட வேண்டுமென்று
சொல்லப்படுகின்றது. அதாவது 5 ஹார்ஸ் பவராக இருந்தால் 3 ரூபாய்
ரூபாய் என்றும், 3 ஹார்ஸ் பவராக இருந்தால் இருக்கின்றது. அந்த
றும் கட்ட வேண்டுமென்று

சரியாகப் போடப்படாத அவல நிலைமை இருக்கிறது. இந்த அவல நிலையை மாற்ற, அதிகாரிகளுக்கு உடனடியாகத் தகவல் கொடுத்து, இத்தனை நாட்களுக்குள் இந்த வேலையை முடிக்க வேண்டும் என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

மக்கள் இப்பொழுது நடந்து செல்வதற்குத் தயாராக இல்லை. நம்முடைய காருண்ய அரசாங்கம் மக்கள் விரும்புகிற பக்கமெல்லாம் பஸ்களை விடுகிறார்கள். ஆகவே, இந்த நெடுஞ்சாலை ரோடு இருக்கிறதே, தேசீய சாலை, ஹைவேஸ் ரோடு, அந்த ஹைவேஸ் ரோட்டிலேகூட, என்னுடைய தொகுதியிலே அணைப்பட்டியிலிருந்து பேரணை வரை, நிலக்கோட்டையிலே உள்ள அதைப்பற்றி எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன் -- அதிலே ஆளேகூட நடக்க முடியாது அப்படிப்பட்ட மோசமான நிலைமை இருக்கிறது—எப்பொழுது பார்த்தாலும் பூட்டியிருக்கிறார்கள். அந்தப் பாலத்தை விரிவுபடுத்தி அதிலே பஸ் போகக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கினால், அந்தப் பகுதியிலே, ஆண்டிப்பட்டியிலிருந்து தேனி வரைக்கும் போகக்கூடிய நிலையில் வாய்ப்பிருக்கும். ஆகையினாலே அதை விரிவுபடுத்தி அந்தப் பாலத்தை நல்லமுறையில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, வத்தலக் குண்டிலே, சாந்திபுரம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த சாந்திபுரம் பிரிவிலேயிருந்து புள்ளிமான்காம்பை வழியாக ஆண்டிப்பட்டிக்குச் செல்லக்கூடிய நல்ல ரோடு, அங்கே நிறையக் காய்கறிகள், பழங்கள் உற்பத்தி செய்கிறார்கள். அவர்களெல்லாம் வத்தலக்குண்டிற்கு வர முடியவில்லை அந்த ரோடு கிட்டத்தட்ட செம்மேட்டுப்பட்டி நாதபட்டி சந்தையூர், ரெங்கப்பநாயக்கன்பட்டி, காமாட்சிபுரம் புள்ளிமான் கோம்பை ஆண்டிபட்டி என்று இருக்கிறது. அதை ஹைவேஸிலே போட்டு இடையிலே அரைகுறையாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, பணம் ஒதுக்கி அந்த ரோட்டை முழுமையாக போட்டுக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். 1964—65-லே இரண்டாம் முறையாக நான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கும்பொழுது, ராமையநாயக்கன் பட்டி முதல் ரங்கப்ப நாயக்கன் பட்டி வரையில் வைகையின் குறுக்கே பாலம் கட்டுவதற்காக அன்றைக்கே கேள்வி போட்டு, சட்டமன்றத்திலே சொல்லி, அதை ஆய்வெல்லாம் செய்து மேலே எஸ்டிமேட் போட்டு அனுப்பினார்கள். பிறகு நாங்கள் சபைக்கு வர முடியாத ஒரு நிலை ஏற்பட்ட காரணத்தாலே, வர முடியவில்லை. அது அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. அதிலே ஒரு பாலத்தைக் கட்டி அந்தப் புள்ளிமான்கோம்பை வழியாக அந்த ரோட்டைப் போட்டுக் கொடுப்போமேயானால், அந்த விவசாயிகளுக்கு மிகப்பெரிய உதவி செய்தவர்களாக ஆவோம் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.





அடுத்தாற்போல, மருத்துவம். இந்த மருத்துவத்திலே என்னுடைய வத்தலக்குண்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். கனம் சுகாதாரத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கின்றார்கள். அங்கே 185 ஆயிரம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 185 ஆயிரம் யானைப்பசிக்கு சோளப்பொறி போட்டதைப் போன்றுதான் இருக்கும். அங்கே ஆயிரக்கணக்கான மக்கள் தினசரி வந்து கொண்டு இருக்கிறார்கள். அங்கே நான்கு டாக்டர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். வத்தலக்குண்டு ஒரு மிகப் பெரிய சென்டர். அந்த ஊரிலே 32 படுக்கைகள் கொண்ட வசதியுள்ள கட்டிடத்தைக் கட்ட வேண்டும். இடம் வாங்கித் தருகிறேன். அதற்கு 185 ஆயிரம் ரூபாய் குறைந்த பணம். ஆகையினாலே நல்ல மனம் படைத்த நம்முடைய அமைச்சரவர்கள், மறு பரிசீலனை செய்து, அமைச்சரவையை முழுதும் கலந்து, இன்னும் கொஞ்சம் அதிகமாக பணத்தை ஒதுக்கி, அங்கே 32 படுக்கை வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் நான் மிகப் பணிவன்போடு தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேமாதிரிதான், அங்கே உள்ள நீண்ட நாள் கோரிக்கை, மட்டப்பாறை சிங்கம் என்றால் அந்தக் காலத்திலே இந்த நாட்டுக்காகப் பாடுபட்ட பெரிய உத்தமத் தலைவர். அந்த மட்டப்பாறை ராமராஜபுரத்திலே நீண்ட நாட்களாக பிரைமரி ஹெல்த் சென்டர் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்யத் தவறி விட்டோம். தயவு செய்து அங்கே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரை உருவாக்குவதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கெல்லாம் கிராமப்புறங்களிலே ஆஸ்பத்திரிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் டாக்டர்களுக்கு உடனடியாக வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை போன்ற இடத்திலே நாங்கள் அன்றைக்கு, சட்டமன்றத்திலே இருக்கும்போது அந்த ஆஸ்பத்திரிக்காக கட்டிடத்தைக் கட்டினோம். அங்கே தண்ணீர் வசதி சரியாக இல்லை. ஆகவே, தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, அரிசன மக்களுக்கு கிட்டத்தட்ட நாம் 30,000 வீடுகள் கட்டுவதற்கு வழிவகை செய்திருக்கிறோம். எனக்கு முன் பேசிய அங்கத்தினர்களெல்லாம் பேசினார்கள். சிமென்ட் 26 ரூபாய் விற்கக்கூடிய இந்தக் காலத்தில், ஒரு கன அடி மரம் அதிகமாக விற்கும் இந்த நேரத்தில், 3,000 ரூபாயில் எப்படி வீடு கட்ட முடியும் என்பதைப் பார்த்து, அதை மறுபரிசீலனை செய்து, அதை 5,000 ரூபாயாக உயர்த்த வேண்டும். 5,000 ரூபாய்க்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். நாம் கடன்தான் கொடுக்கிறோம். இனாமாக ஒன்றும் கட்டிக்கொடுக்கவில்லை.

கடன் கொடுக்கும் நிலைமையிலே இருக்கக்கூடிய நாம், அதை ஒரு இலட்சம் வீடுகளாக உயர்த்து வோமேயானால், நிச்சயமாக பல கிராமங்களுக்கு இந்த வீடுகளை நாம் கட்டிக் கொடுக்க முடியும் அரிசன மக்கள் மட்டுமல்ல, ஏறத்தாழ பெரும்பாலாக இருக்கிறார்கள் பின்தங்கிய மக்கள். குடியிருப்பதற்கே வசதியில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த வட்டியிலே வீடு கட்டுவதற்கு பணம் ஒதுக்கிக் கொடுத்து உதவினால் அவர்கள் கடனைத் திருப்பி கொடுக்க தயங்க மாட்டார்கள். ஆகையால், குறைந்த வட்டிக்கு அவர்களுக்கும் பணத்தைக் கொடுத்து வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஒரு வழியைச் செய்தோமேயானால் நாம் அந்த மக்களுக்கு நல்ல உபகாரம் செய்தவர்களாக ஆவோம் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

குடி தண்ணீர் பிரச்சனை. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக வாட்டர் போர்டு என்று வைத்திருக்கின்றோம். அந்த வாட்டர் போர்டிலேயிருந்து ஒவ்வொரு ஊருக்கும் போர்கள் போடுகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் அந்த போர்களின் மூலம் தண்ணீர் கிடைக்கவில்லை. போர்கள் பிரச்சனையானால், மக்கள் கமிஷனருக்குச் சொல்லி, அவர்கள் எக்ஸிகியூடிவ் இன்ஜினியருக்குச் சொல்லி, அவர் மெக்கானிக்குக்கு தகவல் கொடுத்து, அதற்குப் பிறகு, வேலைகளை ஆரம்பிக்கும்போது, 3, 4 மாதங்கள் ஆகிவிடும். ஆகவே, வாட்டர் போர்ட் போர் போடும் வேலையைச் செய்யுமானால், under the control of the Panchayat Union என்று இருக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் மேற்பார்வையிலிருந்தால்தான் உடனுக்குடன் வேலை செய்ய முடியும். ஆகவே, குடிதண்ணீர் பிரச்சனையில் உடனுக்குடன் கவனம் செலுத்தி, மக்களுக்கு தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அந்த மெக்கானிக் பஞ்சாயத்து யூனியன் கண்ட்ரோலில் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் தண்ணீர் கிடைக்க வாய்ப்பிருக்கும் என்று கூறி, தலைவருக்கு மீண்டும் நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பேச இந்த மாமன்றத்திலே கலந்துகொள்கின்ற வாய்ப்பை நல்கிய என்று திருவெறும்பூர் தொகுதிவாழ் மக்களுக்கும் இந்த மாமன்றத்திலே கலந்துகொள்கின்ற சந்தர்ப்பத்தை அளித்த, ஜனநாயகப் பாதுகாப்பு முற்போக்கு அணியைச் சேர்ந்த அருமை தோழர்களுக்கும், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயக்கனி, எங்களுடைய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





இங்கே சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்பேரில் நேற்றைய தினமும், இன்றைய தினமும் பேசிய நாட்களிலும் பாராட்டுகிறவர்கள் பாராட்டியும், தூற்றுகிறவர்கள் தூற்றியும் இந்த மாமன்றத்திலே தங்கள் கருத்துக்களை வைத்திருக்கிறார்கள். வாதங்கள் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே, நான் எனது சிறிய கன்னிப் பேச்சை இங்கே நிகழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்—தலைமை.)

மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஆரம்பத்திலே ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். இங்கே எல்லோரும் சொன்னதைப் போல, யானைப் பசிக்கு சோளப் பொறி போட்டதைப் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆம், இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையை, யானை போன்ற பெரும் விவசாயிகளுக்காக தயாரிக்காமல், சோளப் பொறி சாப்பிடுகின்றவர்களைப் போன்ற, சிறு விவசாயிகளுக்காகத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அவர்கள் எண்ணுவதைப் போல, பெரிய பெரிய நிலச்சுவான்தார்களுக்காகத் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை இதுவல்ல என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்த நிதிநிலை அறிக்கையிலே, எங்களுடைய ஆளுங்கட்சி சார்பிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே என்ன குறிப்பிட்ட ஒன்றை நான் விளக்க விரும்புகிறேன். விவசாயி சேற்றிலே கால் வைக்கவில்லையென்றால், நாம் சோற்றிலே கை வைக்க முடியாது என்பதை உணர்ந்து, உணர்ந்து ஒரு கவிஞர் சொன்ன கருத்துக்களை உணர்ந்து, நிதிநிலை அறிக்கையிலே விவசாய ஏழைப் பெருங்குடி மக்களுக்கு ரூ. 60 கோடிக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே மறந்து விடக்கூடாது என்று நினைவுபடுத்துகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர்கள் எல்லாம், இங்கே பாட்டுடன், ஆட்டுடன், அபிநயங்களுடன் பேசினார்கள்.

[நண்பகல் 12—00.]

ஆனால் ஆடுவதாலோ, பாடுவதாலோ, அபிநயங்கள் போடுவதாலோ இந்த அரசின் திட்டத்தை இந்த நாட்டு மக்கள் மத்தியில் அவல நிலையில் படம் பிடித்துக் காட்டிவிடலாம் என்று தயவு செய்து யாரும் எண்ண வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிற நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் யாருக்காக, எந்த மக்களுக்காக, சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று விரும்பினார்களோ, அந்த மக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் இங்கே தந்து இருக்கிறார்களே, தவிர, நீங்கள் ஆதரித்துக் கொண்டு இருக்கிற, நீங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கின்ற மிட்டா, மிராசுகளுக்கு, அவர்களைப் போன்ற மக்களுக்கு இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வேன். உங்களுடைய காலத்தில் அதாவது நீங்கள் ஆண்ட 7 1/2 ஆண்டு காலத்தில்— மிகப் பெரிய மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு இருந்தீர்களே——அப்போது இந்த ஏழை விவசாயிகளின் கோரிக்கையை மதித்தீர்களா? மரியாதைக்குரிய நாராயணசாமி நாயுடு அவர்கள் கொடுத்த குரலைக் கேட்டீர்களா, அவர் கேட்ட சலுகைகளை நிறைவேற்றினீர்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆனால் புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் கடன்களை ரத்து செய்து, இந்த அறிக்கையில் அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, அந்த வகையில் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியுமோ அவற்றை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை நீங்கள் அறியத் தவறலாம். அது உங்களுடைய வாடிக்கையான வழக்கம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் இந்த நாட்டு மக்கள் புரட்சித் தலைவர் அவர்கள் தான் இந்த மன்றத்தில் வந்து முதலமைச்சராக வரவேண்டும் என்று பெருவாரியான வாக்குகளை அளித்து, ஆதரித்து இருப்பதன் காரணமாக, அவர்களுக்குச் செய்யவேண்டியவற்றைச் செய்து கொண்டு இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன். அவர்கள் தெரிவித்த ஆதரவையும், அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும் நாங்கள் மறந்து விடமாட்டோம் என்பதையும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், நீங்கள் எல்லாம் கலைஞர் அவர்களை மிகப் பெரிய திட்டத்தின் சிறப்பிடம், பிறப்பிடம் என்றெல்லாம் புகழ்ந்தீர்கள். நான் அந்த மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியான திருவெறும்பூர் தொகுதி தமிழ் நாட்டில் மிகப் பெரிய தொழிற்சாலைகள் உள்ள தொகுதி. வெளிநாட்டினரை வரவேற்கக் கூடிய தொகுதி. அந்தத் தொகுதியில்தான் பாய்லர் தொழிற்சாலை, சிறு தொழில் நிறுவனங்கள், காட்டேஜ் நிறுவனங்கள்,





சிட்கோ, ஆன்சிலரி நிறுவனங்கள், ஐ. டி. ஐ., ரீஜினல் இன்ஜினீரிங் காலேஜ் என்று ஒட்டு மொத்தமாக எல்லா நிறுவனங்களும் இருக்கின்றன. நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் 1950-ம் ஆண்டில் இருந்து என்னை ஈடுபடுத்திக்கொண்டு, தஞ்சை மாவட்டத்தில் இருந்து, கன்னியாகுமரி மாவட்டம் வரைக்கும் சென்று செயலாற்றி இருக்கிறேன். அப்படியிருந்தும், கலைஞர் அவர்களால் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டு இருக்கிறேன் என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள் இருந்த 7 1/2 ஆண்டு காலத்தில் நான் ஒரு நிறுவனத்தில் ஊழியனாக இருந்தேன். அங்கே தொழிலாளியாக இருந்தேன். அப்படி தொழிலாளியாக இருந்த நேரத்தில், உங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இந்த அவை நடந்து கொண்டு இருந்த நேரத்தில், நான் பணிசெய்து கொண்டிருந்த அந்த நிர்வாகத்தில் செய்யப்பட்ட அநீதி காரணமாக நான் அதில் தலையிட்டேன் என்று காரணம் காட்டி, என்னை சஸ்பெண்ட் செய்தார்கள். 2 1/2 ஆண்டு காலம் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருந்தேன். அந்த 2 1/2 ஆண்டு காலத்தில் எந்த விதமான விசாரணையும் செய்யப்படவில்லை. பின்னர் ஒரு காரணமும் இல்லாமல் பழி வாங்கப்பட்டு வெளியே விரட்டப்பட்டேன். இந்தக் கொடுமையைத் தடுக்க முடியாத உங்கள் தலைவரின் பெருமையைத்தான் நீங்கள் இங்கே சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். இன்னும் நான் இதனை விவரமாகச் சொல்லப்போனால் கண்ணீர் வடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். கலைஞர் அவர்களை நான் கேட்கவில்லையா, முன்னாள் அமைச்சராக இருந்த மாண்புமிகு அன்பில் அவர்களைக் கேட்க வில்லையா, யாரைக் கேட்கவில்லை, எல்லோரையும் கேட்டேன். தயவு செய்து நீதி, நியாயத்தைக் கேளுங்கள் என்று கேட்டேன். அந்த நேரத்திலே இருந்த மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் நாகசுந்தரம் அவர்கள் தெளிவாக சொன்னார்கள். அதற்கு என்னிடம் போதுமான ஆதாரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதற்குப் பின்னாலே உங்களுடைய தலைமை அந்த நிர்வாக அதிகாரியை தட்டிக்கேட்டதா ? கிடையாது. அப்பேர்ப்பட்ட இழிவான, கேவலமான ஆட்சி நடத்தி வந்த நீங்கள் இன்றைக்கு புனித ஆட்சி நடத்துகின்ற புரட்சித் தலைவரைப் பார்த்து ஏளனம் செய்கிறீர்கள் ; எக்காளமிடுகிறீர்கள். இது தேவைதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு ஏழை எளிய விவசாயிகளுக்காக நல்லதொரு திட்டத்தைத் தீட்டி, இங்கே அறிவித்திருக்கிறார்கள். பணக்காரர்களுக்கு இதிலே ஒன்றுமே இல்லையே என்று கவலைப்படுகிறீர்கள். பணக்காரர்களாக இருப்பவர்களுக்கு, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, 50 ஏக்கர் நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் இல்லை

[திரு. குருசாமி என்கிற அண்ணாதாசன்] [1980 ஜுலை 5

தான். அவர்களுக்காக திட்டம் தீட்டப்படவில்லை. ஏழை
விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், 5 ஏக்கருக்கு குறைவாக
நிலம் வைத்திருக்கிற விவசாயிகள் மேம்பாடு அடைய வேண்டு
மென்ற முறையிலே நிதியமைச்சரவர்கள் இந்த அறிக்கையை
இங்கே சமர்ப்பித்திருக்கிறார்களே தவிர நீங்கள் சொல்
வதைப்போல, எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதைப்போல,
மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்வதைப்போல அல்ல, அவர்
கள் யானை போன்றவர்களுக்கு பக்கபலமாக இருக்கிறார்கள்;
யானைகளாக அவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் சோளப்
பொரி கூட கிடைக்காமல் வருந்திகொண்டிருக்கிற ஏழை எளிய
விவசாயிகள் பக்கம் இருக்கிறோம். முதலிலே அவர்களுக்கு
சோளப்பொரி தருவோம். அவர்கள் யானைக்கு நிகராக
உயர்வுபெற்று வரவேண்டும். அதற்குப் பின்னால் பிரச்
னையே இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே தாழ்த்தப்பட்ட சமுதாயம், ஜாதி
ஒழிப்பு என்றெல்லாம் பேசினார்கள். ஜாதியை எங்கே ஒழித்
தீர்கள் 7 அரை ஆண்டு கால உங்களுடைய ஆட்சியிலே? அன்
றைக்கு உங்களால் ஒழிக்க முடியவில்லையே; இன்றைக்கு மட்
டும் என்ன வாழ்கிறது? அன்றைக்கு நான் வேட்பாளராக நின்ற
போது என்னைப் பற்றி என்ன சொன்னீர்கள்? உங்களால்
நிறுத்தப்பட்டவரும் ஒரே இனம், நானும் ஒரே இனம்தான்.
ஆனால் நீங்கள் அங்கேயும் ஜாதியைத்தான் பறைசாற்றினீர்கள்.
முக்குலத்து சமுதாயம் என்று சொல்லுகின்றவர் கள்ளர் சமு
தாயத்தைச் சேர்ந்தவரல்ல; இந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்று
எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னீர்கள். உங்களால்
நிறுத்தப்பட்ட மாஜி உறுப்பினர் அங்கே பிரச்சாரம் செய்தார்.
ஜாதிப் பிரச்சாரம் செய்தார். நான் திராவிட முன்னைற்றக்
கழகம் என்று மார்தட்டி சொன்னார். நடந்த சட்டமன்றத்
தேர்தலிலே, அங்கே என்ன பேசப்பட்டது என்று நீங்கள்
அறிவீர்களா? அங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்
தவர் இதை அறிந்தார்கள். அதனால்தான் சாதாரணமான நான்
12,000 வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிக்க முடிந்தது. உங்க
ளுடைய கொள்கையின் நோக்கத்தை, உங்களுடைய சுயநலத்தை
அந்த மக்கள் நன்றாக அறிந்து கொண்டார்கள்.

உங்களுடைய காலத்திலேயே நலிந்தோர் திட்டம் என்று
உங்கள் தலைவர் பிறந்த நாட்களிலே சொன்னீர்கள். பிறந்த
நாளைக்கு கண்ணொளி வழங்கு திட்டத்தைச் சொன்னீர்கள். பிறந்த
பிறந்த நாளைக்கு ரிக்சாத் திட்டத்தைச் சொன்னீர்கள்.
நாளைக்கு நல்வாழ்வுத் திட்டத்தைச் சொன்னீர்கள். பிறந்த
யெல்லாம் விளம்பரப்படுத்தினீர்கள். ஆனால் எங்கள் தலைவர்
அப்படியெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. ஏழையின் நலனுக்காக
உண்மையிலேயே நல்ல திட்டங்களைப் போட்டார்கள். குறிப்



1980 ஜுலை 5] [திரு. குருசாமி என்கிற அண்ணாதாசன்]

பாக, விவசாயிகள் தொல்லைகளைத் தீர்க்க முடிவு செய்தார்கள்.
கடனைக் கட்ட முடியாத விவசாயிகளை பயமுறுத்தி, அவர்களை
துன்புறுத்தி. ஜப்தி செய்து வந்த நடவடிக்கைகளைப் பார்த்து,
மக்களுடைய குறைகளை அறிந்து அந்தக் கடன்களை ரத்து
செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அதையும் இந்த
சட்டமன்றத்திலே, இந்த முதல் நிதிநிலை அறிக்கையிலே செய்து
காட்டியிருக்கிறார்கள் நிதியமைச்சர் நாவலர் அவர்கள். ஆனால்,
இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இது வழவழா,
கொழகொழா என்று இருக்கிறது என்று சொல்கிறீர்கள்.
நீங்கள் வழவழா, கொழகொழா. நீங்கள் அதிலேதான் உழல்
கின்றவர்கள். அதனால் உங்களுக்கு வேறு வார்த்தை வராது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளபடியே பிற்பட்டோர் நலனுக்கு இந்த அரசு என்ன
செய்திருக்கிறது என்று கேட்டால், தேர்தல் காலத்திலே
கொடுத்த வாக்குறுதிகள், சொன்ன திட்டங்கள் என்ன; அப்
படிச் சொன்னவைகளிலே இந்த பட்ஜெட்டிலே என்ன இல்லை
என்று சொன்னால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள்
என்பது தெரியும். நீங்கள் எதையும் எந்த நேரத்திலும் ஏற்றுக்
கொள்ள மாட்டீர்கள். மக்கள் நலனிலே எப்போதும் அக்கறை
கொண்டிருக்கிற உள்ளதை உள்ளபடி சொல்லும் மனத்திடம்
படைத்த நன்றாக விவரம் தெரிந்திருக்கிற மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியினர் ஏற்றுக் கொள்கிறார்கள்: இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியினர் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறார்கள்.
மற்றுள்ள தேசிய பாரம்பரியத்திலே வந்தவர்கள் எல்லாம்
பாராட்டி இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் விவரம்
தெரியாதவர்கள்: நீங்கள் மட்டும்தான் விவரம் தெரிந்தவர்கள்
என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக இந்த
நாட்டு மக்கள் உங்களை எதிர்காலத்தில் புரிந்து கொள்வார்கள்.

(பிற்பகல் 12–10)

அடுத்து என்னுடைய தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த
பகுதியாகும். அங்கு அவர்கள் காலத்திலே தொழிற்சாலை ஆரம்
பிக்கப்பட்டது. அந்தத் தொழிற்சாலை இருக்கின்றது. பத்து
ஆண்டு காலத்திற்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்ட அத் தொழிற்
சாலையின் தொழிலாளர்கள் கண்ணீர் விட்டு கதறி அழுதார்கள்.
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்
பொறுப்பிலே இருக்கின்ற நேரத்திலே நான் தொழிற்சங்கத்
துணைத் தலைவராக இருந்த போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகமும் ஒன்றாகச் சேர்ந்து பெரிய தொரு ப்ரொசஷன் நடத்தி
ஒரு மனுவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தோம்.
அதற்குப் பின்னாலே புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே
அமைந்திருந்த அன்றைய அரசு ஒரு கமிட்டி அமைத்தது. அந்தத்
தொழிலாளர்களுக்கு ஈ. எஸ். ஐ. திட்டத்தை அமல் படுத்த

வேண்டும் என்று நாங்கள் கேட்டதற்கிணங்க மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் அந்தத் திட்டத்தை அந்தத் தொழிலாளர்களுக்குக் கொண்டு வந்ததற்காக நான் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை அங்கே ஏற்றுக் கொள்வதற்கு அந்த சிறு தொழில் பேட்டை நிறுவனங்களின் உரிமையாளர்கள் மறுத்துக் கொண்டு வருகிறார்கள். அதற்கு விரைவிலே இந்த அரசு ஒரு கமிட்டியை முடுக்கிவிட்டு அந்தத் தொழிலாளரின் நலன் காப்பதற்கு அந்தத் தொழிலாளரை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் தொழிலாளர்கள் நிரம்ப இருக்கிறார்கள். அங்கு வேலை செய்கிறவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. 7½ ஆண்டு காலம் ஆட்சி நடத்தியவர்கள் அந்தப் பகுதி மிக முக்கியமானது என்று தெரிந்தும்கூட, போட்ட திட்டத்தை ரிஜெக்டட் என்று திருப்பி அனுப்பி விட்டார்கள். பொன்மலை, செம்பட்டு, அரியமங்கலம், ஆலத்தூர் பேரூராட்சி, துவாக்குடி பேரூராட்சி, திருவெறும்பூர் பேரூராட்சி போன்ற இடங்களில் குடிநீர் பஞ்சம் அதிகமாக இருக்கின்றது. ஆனால் பக்கத்திலே காவிரி ஆறு இருக்கின்றது. துப்பாக்கித் தொழிற்சாலையும், பாய்லர் தொழிற்சாலையும் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் தண்ணீரில் மிதக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு காவிரியாற்று நீர் சப்ளை செய்யப்படுகின்றது. ஆனால் அங்கே இருக்கின்ற பொதுமக்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே 7½ ஆண்டுக் காலம் ஆட்சி செய்த நீங்கள் என்ன செய்தீர்கள் ? ஆனால் இன்றைக்கு ஆரம்பக் கட்டமாக குடிநீர் வடிகால் வாரியத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற மானியம் மிகவும் வரவேற்கக்கூடிய மானியம். ஆகவே ஒன்றன் பின் ஒன்றாக, ஸ்டெப் பை ஸ்டெப்பாக நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து நான் கடைசியாக ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கின்றது. நான் அதை மிக மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். " தொண்டு செய்து பழுத்த பழம், தூய தாடி மார்பில் விழும், மண்டைச் சுரப்பை உலகு தொழும், மனக்குகையில் சிறுத்தை எழும் " இப்பேர்ப்பட்ட ஒரு பொருளுக்கு உகந்தவராக விளங்கியவரும் அதற்கே



நடந்தவரும் ஆகிய தந்தை பெரியார் அவர்களுக்கு இந்த நாட்டிலே நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு இந்த அரசு முன் வந்ததை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

அடுத்து பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நினைவுச் சின்னம். அன்புப்புனல், அறிவுக் கனல், செந்தமிழ்ப் பாவலன், சீர்திருத்தக் காவலன், எழுச்சியின் கீதம், புரட்சியின் நாதம், அறம்பாட வந்த அறிஞன், ஆற்றலின் பெருக்கு, சாதி சமயத்தைச் சாய்க்க வந்த சண்டமாருதம், நாதியற்றோர் நலம் காண வந்த நல் வேந்தன், வீதியில் அலைவோரின் வேதனை தீர்க்க வந்த விடி வெள்ளி, பண்புப் பெட்டகம், பாசக் கோயில், இதய தெய்வம் இளையவர்க்கு அண்ணன், எந்நாளும் ஏழையர்க்கு மன்னன் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இந்த அரசு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு முன்வந்ததை நான் பாராட்டி வரவேற்கின்றேன்.

அதேபோல், இன்னொன்றும் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன். ஈகைக்கோர் எடுத்துக் காட்டு, இன் முகத் திற்கோர் அடையாளம், வாகைக்கோர் இலக்கணம், வறியவர்க் கோர் காவலன், கொடுத்துச் சிவந்த கொற்றவன், நற்றமிழ் பண்பாளன், நல்லவர்க்கே அவர் நண்பன், தூய அரசியலுக் கோர் வழிகாட்டி, தொண்டர்களுக்கோர் தூய தலைவன், தீய மனம் படைத்த துரோகிகளையும் திருத்திவைத்த திருமகன், தர்மத்தாயின் தலைமகன், தாயகத்தின் வேதனை தீர்க்க வந்த வேந்தன், சாதனை படைத்து வரும் சரித்திர நாயகன், கொதித்தெழுந்தால் சிங்கம், குணத்திலோ மாற்றுக் குறையாத் தங்கம், தொண்டராம் நாங்களெல்லாம் அவருடைய அங்கம், சாதியை வென்றவர், சதியைக் கொன்றவர், வீதியிலே நிறுத்திடு வோம் என வீறுடன் முழங்கியவரை வெட்கப்படச் செய்தவர், எழில் மன்னன், எங்களின் அண்ணன், புரட்சித் தலைவர் அவர் களுடைய புகழ் பாட, அவர்களுடைய அரசு சீறிய முறையிலே திட்டங்களைத் தீட்டி செயல்பட அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

நலிந்தோர் நலம் பெற, மெலிந்தோர் மேன்மை பெற, வாடியவர் வளம் பெற, வறியவர் வாழ்த்துக் கூற, படித்தவர் பாராட்ட, பண்புள்ளவர் வாழ்த்துக் கூற, ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற, எழில் மிகு தமிழகம் பொலிவு பெற, நாடும் வீடும் மற்றோரும் போற்ற, எதிரிகள் எரிச்சல் அடைய, என் போன்ற தோழர்கள் உற்சாகம் பெற, நாவலர் அவர்கள் தமிழகத்திற்கு அளித்திருக்கிற பட்ஜெட் என்று வாழ்த்தி, மக்கள் வாழ்க, அனைவரும் வாழ்க, வளம் பெறுக என்று கூறி உரையை முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

[1980 ஜூலை 5

திரு. மு. அப்பாதுரை : பெருமதிப்பிற்குரிய அவையினுடைய
மாற்றுத்தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுவதற்கு
எனக்கு வாய்ப்பளித்த ஒட்டப்பிடாரம் தொகுதி சட்டமன்ற
வாக்காளர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை தெரி
வித்து இந்த உரையை ஆரம்பிக்கிற நேரத்தில், இந்திய கம்யூ
னிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த நிதி நிலை அறிக்கையின் மீது
என்னுடைய சில கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட்டிருக்
கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள்
எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். இருப்பினும் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்
தலுக்கு முன்னால், அந்த தேர்தல் நடைபெற்ற காலத்தில்,
அதன் இடையிலே, ஒரு இண்டரிம் பட்ஜெட் என்று சொல்வார்
களே, அந்த இடைக்கால பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள்.
அதற்குப் பின்னால், இந்த நாட்டிலே இருக்கக் கூடிய 64 கோடி
மக்களுடைய அரசு, பாரத அரசு, மத்திய அரசாங்கம் ஒரு
பட்ஜெட்டை சமர்ப்பித்தார்கள். இப்போது தமிழகத்திலே
இருக்கக்கூடிய 4½ கோடி மக்களுக்காக இந்த அரசாங்கம் ஒரு
பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்
கைக்கு முன்னால் 2 நிதிநிலை அறிக்கைகள் வந்திருக்கின்றன.
இந்த நிதிநிலை அறிக்கை நம்முடைய தமிழகத்தினுடைய
ஓராண்டு கால நிதிநிலை அறிக்கையல்ல என்று சொன்னால்,
8 மாத கால அறிக்கை என்று வைத்துக் கொள்வோம்.

முழுமையாக இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் வர
வேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இதிலே கொடுக்கப்
பட்டிருக்கிற பல்வேறு அறிவிப்புகளெல்லாம் முழுமையாக செயல்
பட்டேயாக வேண்டும் என்று நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்.

குறிப்பாக விவசாய பெருங்குடி மக்களுக்கு அவர்களின் கூட்
டுறவு வங்கியின் கடன்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே
தள்ளுபடி செய்திருக்கிறார்கள். மொத்தம் 60 கோடி ரூபாய்
என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடன் தள்ளுபடி என்று சொல்
கிறபோது, இன்றைக்கு நாட்டிலே நடைபெறுகிற பல்வேறு
போராட்டங்களும் நினைவுக்கு வருகின்றன. அவைகளைச்
சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

150 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டை வெள்ளைக்
காரன் ஆண்டு கொண்டிருந்தபோது அவன் வரி கேட்டதற்கு
வீர பாண்டிய கட்டபொம்மன் ''வானம் பொழிகிறது, பூமி
விளைகிறது உனக்கு ஏன் கொடுக்க வேண்டும் வரி'' என்று
முழங்கியதை நாமெல்லாம் அறிந்திருக்கிறோம். இன்றைக்கு
சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகியும் கூட விவசாயப் பெருங்
குடி மக்கள் வரிகொடா இயக்கத்தை நடத்திக் கொண்டி



1980 ஜூலை 5] [திரு மு. அப்பாதுரை]

ருக்கிறார்கள். அப்படி கால சூழ்நிலையை சுட்டிக் காட்டுகின்ற
நேரத்தில், அவைகளை ஆண்டு முடித்தவர்களுக்கும், ஆள்கின்ற
வர்களுக்கும் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இருப்
பினும் இன்றைக்கு ஆட்சி பீடம் ஏறியிருக்கிற அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசு 60 கோடி ரூபாய் விவசாயக் கடன்
களை ரத்து செய்திருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம்.
அதே நேரத்தில் அந்தக் கடன் ரத்து என்பது ஏழை எளிய
விவசாயிகளுக்கு, 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் அல்லது
குறைவாக இருப்பவர்களுக்குத்தான் என்று குறிப்பிட்டிருக்
கிறார்கள். அது நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா என்று குறிப்
பிடவில்லை. அவற்றையும் தெளிவாகச் சொல்ல வேண்டும்.
இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், தென்
மாவட்டங்கள் என்று கூறக்கூடிய திருநெல்வேலி, இராமநாதபுரம்
மாவட்டங்களில் உள்ள நிலங்கள் வறட்சியானவை.
புஞ்சை நிலங்கள் தான் அங்குள்ளன. அங்கு 5 ஸ்டாண்டர்ட்
ஏக்கர் என்று வரையறை குறிப்பிடுவது, அங்குள்ள எந்த
விவசாயிகளுக்கும் பயன் படாது. ஆகவே, வறட்சிப் பகுதியான
திருநெல்வேலி, இராமநாதபுரம் பகுதி விவசாயிகளுக்கு,
5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை உயர்த்தி வரையறை செய்ய
வேண்டும் என்று சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-20].

அதே போன்று விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடன்
களைப் பொறுத்து, எந்த விவசாயியாக இருந்தாலும் சரி எந்தக்
கடனாக இருந்தாலும் சரி வட்டியை தள்ளுபடி செய்து, இருக்கக்
கூடிய முதலை பல்வேறு தவணைகளில், ஜப்தி போன்ற கெடுபிடி
நடவடிக்கைகள் இல்லாமல் வசூலிக்க வேண்டும் என்று சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டில் தொழிலாளர் வர்க்கமும், விவசாயிகள்
வர்க்கமும் போராடி பெற்றவை கூட்டுறவுத்துறையும், கூட்டுறவுச்
சங்கங்களுமாகும். இன்று கூட்டுறவுத் துறையை, கூட்டுறவுச்
சங்கங்களை நிர்மூலமாக்கக்கூடிய அளவிற்கு நடக்கக்கூடிய முயற்சி
யை தடுப்பதற்கு பெரிய போராட்டத்தை நடத்த வேண்டிய
கட்டத்தில் இருக்கிறோம். இன்று கிராமப் புறங்களில் இருக்கக்
கூடிய, அடிமட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயத்
தொழிலாளர்கள் வாழ வேண்டும் என்றால் கூட்டுறவுத் துறை
யைப் பாதுகாக்க வேண்டும். அப்படி பாதுகாக்க வேண்டிய
பொறுப்பு நமக்கிருக்கிறது.

அதே போன்று இன்று நெல்லுக்கு எங்களைப் பொறுத்த
வரையில் ரூ. 130 கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம்
க்வின்டாலுக்கு. கடந்த பட்ஜெட் கூட்டத்தில் இதுபோன்று
அ.தி.மு.க. அரசு அறிவித்ததை மீண்டும்
வருகிறது என்று

ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
விலையை உயர்த்துவதாக அறிக்கையில் மட்டும் சொல்லிவிட்டால்
போதாது. அந்த விலையில் அரசு நெல்லை கொள்முதல் செய்ய
வேண்டும். ஏனென்றால் அறிக்கைகள் வருகின்றன, அரசாங்கத்
தின் கொள்கைகள் பற்றிக் கூறப்படுகின்றன. ஆனால் அறுவடை
காலங்களில் விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த விலைதான்
கொடுக்கப்படுகிறது. க்விண்டாலுக்கு ரூபாய் 60, ரூ. 65,
என்றளவிற்குப் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைப்
போக்க வேண்டும் என்று சொன்னால் இன்றைக்கு நிர்ணயித்
துள்ள விலையை கொடுப்பதோடு கூட காலத்திலேயே அர
சாங்கம் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்றும்
கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் தொழில்வளம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள்.
நம்முடைய மதிப்பிற்குரிய நிதிஅமைச்சர் அவர்கள்சொன்னார்கள்
தொடர்ந்து மத்திய அரசின் மாற்றாந்தாய் போக்கினால் தமிழ்
நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கியிருக்கிறது என்று.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. அம்பிகாபதி அவர்
களும் சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். தொழில்கள் துவங்குவதற்கான உரிமங்கள்
வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்
கள். மத்திய அரசோடு மாநில அரசை தொடர்புபடுத்தக்கூடிய
பிரதிநிதியிடம் அதற்கான பொறுப்பை கொடுத்து இந்தக் கால
தாமதத்தைப் போக்க வேண்டும். மாநில அரசுக்குரிய தொழில்
நிறுவனங்கள், டிட்கோ, சிப்காட் போன்றவை உள்ளன.
இவற்றிற்கிடையே பெரிய இடைவெளி இருக்கிறது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், தொழில் உரிமம்
பெற பல மாதங்கள் அலைய வேண்டியிருக்கிறது. அதைச்
பெற்றுவிட்டால் அதற்கான மூலப் பொருள்களைப் பெற
வேண்டும். சிமென்ட் வாங்க வேண்டுமென்றால் அதற்காக
தனியாக லைசென்ஸ் வாங்க வேண்டும். இரும்பு வாங்க வேண்டு
மென்றால் அதற்காக தனியாக லைசென்ஸ் வாங்க வேண்டும்.
அதற்காக ஆறு மாதங்கள் அலையவேண்டியிருக்கிறது. தொழில்
தொடங்க நினைப்பவர்கள் கூட இந்த காலதாமதம் காரணமாக
விட்டுவிட்டுப் போகிற நிலை இருக்கிறது. அதைப் போக்க
இந்த அரசு முயலவேண்டும். டிட்கோ, சிப்காட் இவற்றிற்
கிடையே ஒரு நெருக்கம் வேண்டும்.

அடுத்து, இந்த அறிக்கையில் பல்வேறு திட்டங்களைப் பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். ஆக்கப்பூர்வமான திட்டங்களை உரு
வாக்க வேண்டும். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், எங்கள்
நெல்லை மாவட்டத்தில் எடுத்துக் கொண்டால் தூத்துக்குடி
யில் மிகப் பெரிய சால்ட் பேக்டரீஸ் இருக்கின்றன. ஏறத்தாழ





50,000 தொழிலாளர்கள் உப்பளத்தில் வேலை செய்கிறார்கள்.
அங்கிருக்கக்கூடிய உப்பு வெளி நாடுகளுக்குக்கூட ஏற்றுமதியா
கிறது. இந்த உப்பை மூலதனமாக வைத்து பல்வேறு இரசாயனத்
தொழிற்சாலைகளை ஏற்படுத்தமுடியும். தூத்துக்குடியில்
இருக்கக் கூடிய நிறுவனமாகிய ஸ்பிக் பெரிய நிறுவனமாக இருக்
கிறது. அதையொட்டி இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய நிறுவனம்
டாக் என்னும் நிறுவனம். சென்னைக்கு அடுத்தபடியாக தொழில்
நிறுவனங்கள் அதிகமாக வளரக்கூடிய பகுதி தூத்துக்குடி.
இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் கொண்ட
பெரிய பொதுத் துறை அங்கு வந்துகொண்டிருக்கிறது.

அடுத்து, தூத்துக்குடியில் உள்ள புதிய துறைமுகத்தை
விரிவுபடுத்தினால் அந்தத் துறைமுகத்தை கப்பல்களை பழுது
பார்க்கக்கூடிய துறைமுகமாக மாற்றலாம். அப்படி மாற்றினால்
ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை
வாய்ப்பு தரக்கூடிய உத்தரவாதம் கிடைக்கும். அதையும்
இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள், பாரபட்சம் பாராமல்,
மத்திய அரசிடம் கோர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்று, 36 புது மில்களைத் தொடங்கவும் இருக்கக்கூடிய 16
மில்களை நவீனப்படுத்தவும் இந்த அரசு தீர்மானித்திருக்கிறது.
அந்த 36 மில்களை மீண்டும் தனியாரிடம் கொடுக்காமல்
பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ நிர்
மாணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால், இன்றைக்கு நாட்டிலே இருக்கக்
கூடிய பல்வேறு ஆலை முதலாளிகள் விவசாயிகள் உற்பத்தி
செய்யக் கூடிய பருத்தியை குறைந்த விலைக்கு வாங்கி,
கொள்ளை லாபம் அடிக்கின்றார்கள். கூட்டுறவுத் துறையை
எடுத்துக் கொண்டால், அதிலும் குறிப்பாக கைத்தறித்துறையை
வளப்படுத்த வேண்டுமென்பதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.
ஆனால், இந்த நிதி மூலதனங்கள் எல்லாம் தனியார்களாலும்,
மில் முதலாளிகளாலும் நூல் விலை ஏற்றத்தால் வீணாக பாழ
டிக்கப்படுகின்றது. இந்த கைத்தறி இயக்கத்தை வளப்
படுத்த வேண்டுமென்றால், தமிழகத்திலே இருக்கக் கூடிய
$7\frac{1}{2}$ லட்சம் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வை வளப்
படுத்த வேண்டுமென்று சொன்னால், இந்த 36 மில்களையும்
கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று நான்
இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, குடி நீர் திட்டங்கள், குறிப்பாக சொல்ல
வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியாகிய ஒட்டப்
பிடாரம் சட்ட மன்றத் தொகுதியைப் பற்றி சொல்ல வேண்டு
மானால், இந்த நாட்டிலே சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்
பதற்காக இதே மண்ணிலே பிறந்து, இதே மண்ணிலே
இறந்த வீரபாண்டிய கட்டபொம்மன் - பிறந்தமண்ணும், இறந்த

மண்ணும் இது. அதே போன்று, இந்த நாட்டிலே பிரிட்டிஷ்
சாம்ராஜ்யத்திலே வெள்ளையன் செய்கின்ற தொழிலை நாமும்
செய்ய வேண்டுமென்று கப்பல் ஓட்டிய செக்கிழுத்த சிதம்பர
னார் பிறந்த மண்ணும் இதுவே. அதே போன்று, இந்த
நாட்டை ஆண்ட வெள்ளையர் சாம்ராஜ்யத்தை கைத்தறி
யாலோ, ராட்டையைச் சுற்றுவதாலோ, வந்தே மாதரம் என்று
சொல்வதாலோ முடியாது. அவன் செய்த செயலாலேயே
செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்த வாஞ்சிநாதன் பிறந்த
மண்ணும் இதுவே. இப்படிப்பட்ட பெருமைகள் எல்லாம்
அங்கிருக்கக் கூடியவர்களுக்கு இருந்தும், சுதந்திரம் பெற்று
32 ஆண்டுகள் ஆகியும், அங்கிருக்கின்றவர்கள் குடிக்க
நீர் கேட்கின்றார்கள். சாலைகள் கேட்கின்றார்கள். வாழ்
வதற்கு இந்த இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்றாலும்,
சாவதற்கு அதாவது செத்த பிறகு சுடுகாட்டிற்குப் போவதற்
கும் இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த நிலைமை
களுக்கு எல்லாம் மிகவும் வெட்கத்தோடு, சுதந்திரம் பெற்று
32 ஆண்டுகள் ஆன பிறகும் கூட அதற்கெல்லாம் பதில் சொல்ல
வேண்டியவர்களாக இருக்கிறோம்; பதில் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம்
அங்கே இருக்கின்றன. குடி தண்ணீரைப் பொறுத்த வரையில்,
அங்கே ஆழ் கிணறுகள் தோண்டினாலும், ஒரு வருஷத்தில்
அவைகள் உப்பு நீராகக் கூடிய நிலைமை இருக்கின்றது.
விளாத்திகுளம், கோயில்பட்டி ஆகிய தொகுதிகளில் இப்படி
சிறு சிறு குடிநீர் திட்டங்களை போடுவதன் மூலம் நிவர்த்தி
ஏற்படாது என்றும், பெரிய குடி தண்ணீர் திட்டங்களை உரு
வாக்குவதன் மூலம்தான் அதாவது தாமிரபரணியில் தண்ணீர்
வற்றாத ஒரு நிலைமை இருக்கிறது; இதைக் கருத்தில் கொண்டு
இந்தத் தொகுதி மக்கள் குடிப்பதற்கு குடிநீர் கிடைக்க மிகப்
பெரிய அளவில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டுமென்று நான்
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போன்று, என்னுடைய தொகுதியிலே எவ்வளவோ
பெருமைகள் இருந்தாலும், என்னுடைய தொகுதியிலே ஒரு
தொழிற்சாலைகூட கிடையாது. ஆகவே, நான் கேட்டுக்
கொள்வதெல்லாம், இவ்வளவு தேசிய பாரம்பரியம் உள்ள
இந்தத் தொகுதியில் ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டும்.
குறிப்பாக, கடம்பூரிலே ரயில் வசதி இருக்கிறது, அங்கே
ஒரு கூட்டுறவு தொழிற் பேட்டையை அமைக்கவேண்டுமென்று
கேட்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை
நிறைவேற்றுவதற்காக, நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்து
தர வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நான் சார்ந்திருக்
கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்
கிறேன். நாங்கள் அத்தனை பேரும் அதற்கு வாதிடுவதற்கும்
தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நல்ல சந்தர்ப்பத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன்.





இருக்கக் கூடிய 4½ கோடி
இன்றைக்கு நம் தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய அரிசன மக்கள்,
மக்களில், ஒரு கோடி மக்கள் தாழ்த்தப்பட்ட தாழ்த்தப்பட்ட
பிறந்த பிறப்பாலும், செய்கின்ற தொழிலாலும் தாழ்த்தப்பட்ட
மக்கள். அப்படி இருக்கக் கூடிய ஒரு கோடி ரூபாய்
மக்களுக்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது 21 கோடி அதை வர
இந்த ஆண்டு 24 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பசிக்கு
வேற்கிறேன்; பாராட்டுகிறேன். இது யானைப் வருங்
சோளப் பொரிபோல் இருக்கின்றது என்றிருந்தாலும், பிறந்த
காலத்திலாவது இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மக்க
பிறப்பாலும், செய்கின்ற தொழிலாலும் தாழ்த்தப்பட்ட ஆதாரங்
ளுக்கு வாழ்வதற்கு வழி செய்கின்ற வகையிலே நிதி அதே
களை இன்னும் அதிகமாக கூட்டித் தரவேண்டும். அரசு
நேரத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இந்திய
இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்வதற்கு இருக்
கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் தொண்டர்களும் தயாராக அமர்
கிறோம் என்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி
கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12-30).

*திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் புதிதாக நுழைந்
திருக்கிற நான் இந்த இந்த மன்றத்தில் பேச வாய்ப்பை ஏற்
படுத்திக் கொடுத்த, நான் வணங்குகின்ற புரட்சித் தலைவர்
அவர்களுக்கும், தர்மபுரி தொகுதியைச் சேர்ந்த வாக்காள
பெரு மக்களுக்கும், இரட்டை இலை வெற்றி பெற தொகுதியில்
பாடுபட்ட அனைத்து மக்களுக்கும் நன்றி சொல்லிக் கொள்
கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்
பினை அளித்ததற்காக உளமார நன்றியைச் சொல்லி இரண்
டொரு கருத்துக்களை நான் சபை முன் வைக்கலாம் என்று
நினைக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு சபை முன்வைத்
எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக பொதுச் செயலாளரும், தமிழகத்தின் நிதியமைச்சருமான
டாக்டர் நாவலர் அவர்கள் அனைத்து மக்களும் போற்றிப் புகழக்
கூடிய மகிழக் கூடிய அளவில் கொண்டு வந்திருக்கிறார்கள்.
ஒவ்வொரு அம்சத்தையும் நான் போற்றி பாராட்ட வேண்டு
மென்றால் நேரம் போதாது என்ற காரணத்தால் இரண்
டொன்றைச் சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா,
பெரியார் பாரம்பரியத்தில் வந்தவர்கள், அரசியலில் நீண்ட
காலமாக இருந்து வருபவர்கள், நீண்ட காலம் சட்ட மன்றத்
தில் பணியாற்றியவர்கள் என்ற நிலையில் குறுகிய காலத்தில்

சிறப்பான நிதி நிலை அறிக்கையை அவர்கள் கொண்டு வந்
தற்காக நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னால் 40 கோடி
ரூபாயும், இந்த நிதிநிலை அறிக்கையில் 60 கோடி ரூபாயும்
ஆக மொத்தம் 100 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி
செய்யப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு
களுக்கு முன்னாலேயே கூறினார்—

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''.

அந்தக் குறளுக்கொப்ப உழவர்களின் கண்ணீரைத் துடைக்க
வேண்டும், ஏழை எளிய விவசாயிகளின் துன்பத்தை நீக்க
வேண்டுமென்ற அடிப்படையில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய்
வட்டியும் அசலும் சேர்த்து தள்ளுபடி செய்திருப்பதற்காக
நான் மனமார நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆனால் அந்தக் கடனைக் கட்ட முடியாத நிலையில் இருப்பவர்
கள் கட்ட முடியாத நிலையிலும் கட்டியவர்கள் உண்டு.
கட்டிவிட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு கட்டியிருக்
கிறார்கள். அப்படி ஐந்து ஏக்கருக்கு உள்ளே இருப்பவர்கள்
கட்டியிருந்தால் அவர்களுக்கு ஏதாவது சலுகை கொடுக்க சட்ட
டத்தில் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அப்படி இல்லையென்று சொன்னால் கட்டக் கூடிய
வர்களும் கட்டாமல் இருக்க எதிர் காலத்தில் தூண்டுதலாக
ஆகிவிடும்.

அடுத்து, நான் என்னுடைய தொகுதியிலுள்ள பிரச்சினை
களைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தர்மபுரி
தொகுதியில் சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. காச நோயி
லிருந்து பராமரிக்க டாக்டர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும்
அங்கே வருகின்ற நோயாளிகளை கவனித்து அவர்
களுக்கு பெட் கொடுத்து பராமரிக்க வசதியில்லாமல் இருப்
பதால் அவர்களுக்கு மருந்துகளை கொடுத்து அனுப்பக் கூடிய
நிலைமை இருக்கிறது. எங்களுடைய ஜில்லாவின் தலைநகர
மாக இருக்கிற அந்த இடத்தில் மக்கள் வந்து தங்கி சிகிச்சை
பெற்றுச் செல்வதற்கான வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பசுமையாக்குவதற்காக கர்நாடகத்திலிருந்து
ஓடி வந்து கண்ணம்பாடி டாம் நிரம்பி வழிந்து எங்களுடைய
மாவட்டத்தின் வழியாக ஓடி தஞ்சை மாவட்டத்தையும் வளர்க்
கின்ற அந்தத் தண்ணீர் ஒகேனக்கல் என்ற இடத்திலே வருகிற
போது, நாம் எல்லாம் போற்றுகின்ற பெருந்தலைவர் காமராஜ்
அவர்கள் காலத்திலே, கர்நாடக மாநிலத்திலே அப்போது
ஆண்டு கொண்டிருந்த திரு. நிஜலிங்கப்பா அவர்கள் காலத்திலே,
இருவரும் கூடிப் பேசி தமிழகத்தின் எல்லைக்குள் வடமலை
ரசாயனிமணல் என்னுமிடத்தில் ஒரு அணை... கட்





அதிலே கிடைக்கின்ற மின்சாரத்தை பங்கிட்டுக் கொள்ளலாமென்ற முறையிலே திட்டம் தீட்டப்பட்டு அதற்காக எஸ்டிமேட் போடப்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் மூலமாக ஏறத்தாழ ஆயிரம் மெகா வாட் மின்சாரம் கிடைக்குமானால் அதிலே 500 மெகாவாட் கர்நாடக மாநிலத்திற்கும் 500 மெகாவாட் தமிழகத்திற்கும் எடுத்துக் கொள்கின்ற முறையிலே ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக குறிப்பு இருக்கிறது. அதை மேற்கொண்டு தொடர்ந்து செய்வதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே பேசிய என் அருமை அண்ணனாகவும் அவர் இருக்கலாம் என்று நினைக்கிறேன், வழக்கறிஞர், சிலர் அறிஞராக இருக்கலாம் வழக்கு இருக்காது, சிலர் வழக்கறிஞர்களாய் இருந்தும் வழக்கு இல்லாமல் இருக்கிற நிலைமை இருக்கலாம். வழக்கறிஞர் பட்டம் பெற்று வழக்கு இல்லாமல் இருக்கிற நம்முடைய சோமு அண்ணன் நிதி நிலை அறிக்கை காற்று அடித்த தலையணியாகத்தான் இருக்கிறதே தவிர பஞ்சடைத்ததாக இல்லை என்று குறிப்பிட்டார்கள். நான் கூறுகிறேன், இது காற்றடைத்த தலையணி அல்ல, வரலாறு படைத்த பெட்டகமாக இருக்கிறது. அவருடைய கண்ணுக்கு மட்டும் காற்றடைத்த தலையணியாகத் தெரிகிறது, ஆனால் நான் சொல்கிறேன், இது வரலாறு படைத்த பெட்டகமாக இருக்கிறது. அருமை அண்ணன் சோமு அவர்கள் தலையணி என்று உதாரணத்திற்குச் சொல்லி இருந்தாலும்கூட நிதியமைச்சர் நாவலர் அவர்கள் எங்கு சென்றாலும் காற்றடித்துத் தான் எடுத்துச் செல்வார் என்று சொன்னால் அது மரபுக்கு ஏற்றது அல்ல என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். வி. என். சோமு : கனம் உறுப்பினர் பேசும் பொழுது வழக்கு இருக்கிறதோ இல்லையோ என்று குறிப்பிட்டார்கள். அவர்களால் போடப்பட்டிருக்கிற ஆயிரக்கணக்கான வழக்குகளை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். என் அறையிலே அவர் வந்து காத்திருந்தால் தெரியும், எத்தனை வழக்குகள் இருக்கின்றன என்பதை அவர் பார்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அரங்கநாதன் : அவர் அறையிலே போய் நிற்கிற நிலை எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1980—81 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது நான் என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று இருக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை பார்க்கும்

போது எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற முறையில் அல்லது கிராமங்களும் நகரங்களும் வளர்ச்சியடைய வேண்டுமென்ற முறையில் எந்தவிதமான நிலையும் இல்லை. ஆளுங் கட்சித் தரப்பிலே இருந்து உறுப்பினர்கள் பேசிய போது 60 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்து இருக்கிறோம் என்று பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-40.]

அப்படி 60 கோடி ரூபாய் விவசாயப் பெருங்குடி மக்களின் கடன்களை ரத்து செய்திருந்தால் இன்றைக்கு நடக்கவிருக்கின்ற விவசாய பேரணி நிகழ்ச்சி நடக்காமல் போயிருக்கும். அதாவது இன்று நம்முடைய சென்னை மாநகரத்திலே மாலை மூன்று மணி அளவிலே, விவசாயப் பெருந்தலைவர் மதிப்பிற்குரிய திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் தலைமையிலே இன்று மாபெரும் பேரணி நடக்க இருப்பது அவர்கள் எல்லோருக்கும் தெரியும். கடன்களை ரத்து செய்திருந்தால் விவசாயிகளின் எல்லாக் கடன்களையும் ரத்து செய்திருந்தால், இன்று இப்படிப் பட்ட மாபெரும் பேரணி இந்தச் சென்னை மாநகரத்திலே நடக்காது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளின் கடன்களை ரத்து செய்கிறோம் என்று கூறிக் கொள்ளும் இந்த அரசாங்கம் விவசாயிகளின் சங்கத்தில் பொறுப்பிலே இருக்கின்றவர்களை அழைத்துவைத்தும், மற்றும் எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களையும் அழைத்து வைத்து, விவசாயிகளின் கடன்கள் எந்த நிலையில் இருக்கின்றன, அவைகளை எப்படி ரத்து செய்ய வேண்டுமென்று விவசாயச் சங்கத் தலைவரை வைத்து, மற்றும் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற தலைவர்களையும் வைத்து முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையிலே அரசாங்கம் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்திருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமையாக 60 கோடி ரூபாய் கடன்கள் ரத்து என்று சொல்கிறார்கள். பொதுவாகக் கிராமப்புறங்களிலே, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கண்மாய் இருப்பது உண்டு, அதில் தண்ணீர் வெளியே வருவதற்குப் பல கோடிகள் அமைக்கப்பட்டிருக்கும். அப்படிக் கண்மாயில் இருக்கின்ற கோடிகளாகத்தான் இவைகள் இருக்கின்றனவே தவிர, கடன் ரத்து செய்யும் கோடியாக—பணமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு நம்முடைய சபையிலே கூறினார்கள். மின்சாரத் துறைக்கு மின்சார வெட்டு இல்லை என்றெல்லாம் சொன்னார்கள்.





துறைக்கு வெட்டு இல்லை என்று கூறுவது இங்கு சபையிலே தான் அறிக்கைகளாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர கிராமங் களிலே இந்த மின்சாரத்துறை வெட்டு தளர்த்தப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதிகாரிகள் அதற்குரிய வகையில் நடவடிக்கை எடுக்க எங்களுக்கு உத்தரவுகள் வரவில்லை என்று கிராமங்களில் சொல்கிறார்கள். ஆகவே, இப்படி பட்ஜெட்டின் வாயிலாக பல நல்ல காரியங்களை சொல்வதும், சட்டமன்றத்திலே பல நல்ல உபகார்ணசொற்களைச் சொல்லி கிராமங்களில் இருப்பவர்களுக்கு ஏமாற்றம் தரக்கூடிய ஒரு சொல்லாகச் சொல்கிறீர்களே தவிர, நல்ல பலனளிக்கும் நிதிநிலை அறிக்கையாக இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள்,எங்கள் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவைப் பற்றி. ஒவ்வொரு ஆண்டும் அவருடைய பிறந்த தினத்திலே பல விழாக்களை எடுத்திருக்கிறார்கள்,நாங்கள் அப்படி விழாக்கள் எடுப்பதில்லை என்ற கருத்தை சொன்னார்கள். எங்கள் தானைத் தலைவரவர்கள் அப்படி விழா எடுத் தார் என்றால் அது மக்களுக்கு பலன் அளிக்கும் விழாவாகத்தான் இருக்கும். குறிப்பாக, கண்ணொளி வழங்கும் திட்டம் இருக்கிறது, அதை யார் மறுக்க முடியும்? பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் இருக்கிறது, அதை யார் மறுக்க முடியும்? இப்படிப் பல திட்டங்களை கிராம மக்களுக்குப் பலன் கிடைக்கும் அளவிற்கு எங்கள் தானைத் தலைவர் திட்டங்களைத் தீட்டினார்கள், செயல்படுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே பல நிதிநிலை அறிக்கைகளையெல்லாம் இங்கே நாங்கள் பார்த்திருக்கிறோம், இரண்டரை ஆண்டுக்கால ஆட்சியிலே நீங்கள் கிராமப் புறங்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும், எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கு வேடிக்கையாக, ஆளுங்கட்சியிலே அமர்ந்திருக்கிறோம் என்ற எண்ணத்தோடு பாராட்டிப் பேசுவது நல்லது அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன், இந்த நிதிநிலை அறிக்கையிலே பல திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பாசன வசதியைப் பொறுத்த வரையில், சாத்தனூர் அணை வலப்புறக் கால்வாய்த் திட்டம் இவ்வாண்டு முழுமையாக நிறைவேற்றப்படும் என்றும், திட்ட மிட்டபடி மொத்தம் 20,000 ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதிகள் பெற்றுவிடும் என்று இங்கே கூறப்பட்டிருக்கிறது. அதிலே நான் சில குறைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே பாசன வசதி தரும் வலதுபுறக் கால்வாயினால்

பயன்பெறும் பல கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் அந்தக் கால்வாயில் இருக்கும் முதல் கிராமத்தை விட்டுவிட்டு கடைசிப் பகுதியில் இருக்கின்ற கிராமங்களை எடுத்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியைச் சார்ந்த தொண்டமானூர் கிராமம் போன்ற பாசன வசதி பெறக்கூடிய கிராமத்திற்கு பாசன வசதி வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அந்தக் கிராமத்திற்கு தண்ணீர் பாசன வசதி கொடுப்பதற்கு வேண்டிய வசதி வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணையின் மேல்மட்டக் கால்வாய் ஆய்வுகள் செய்யப்பட்டு, நீண்ட காலமாக நிலுவையிலே இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆய்வுகள் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்றன. அந்தக் கால்வாய் வேலை நிறைவேற்றப்பட்டால், பல கிராமங்கள் தண்ணீர் வசதி பெறும். (1) கோவிந்தப்பாடி, (2) தரடாப்பட்டு, (3) தண்டராம்பட்டு, (4) மேல்செட்டிப்பட்டு, (5) மெய்யூர், (6) மேல்கச்சிராப்பட்டு போன்ற கிராமங்களுக்கும் திருவண்ணாமலை நகர மக்களுக்கும் குடிநீர் வசதி கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். இதற்குமுன் பலமுறை நான் இந்தச் சட்டமன்றத்திலே, நிதிநிலை அறிக்கையில் பேசும்போதுகூட கூறியிருக்கிறேன், அந்த மேல்மட்டக் கால்வாய் வேலையைத் துவக்க வேண்டுமென்றும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்திலும் கூறிக்கொள்கிறேன்.

அதோடு, 1,800 புதிய பேருந்துகள் எல்லா கிராமங்களுக்கும் புதிதாக, பேருந்து வண்டிகளை விடப் போகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே கூட இப்படி பல பேருந்து வண்டிகளை பல பகுதிகளிலே விடவேண்டுமென்று கோரிக்கைகள் உள்ளன. நான் ஏற்கனவே அறிவித்தபடி, எனது தொகுதி, கிராமங்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அத்துடன் மலைப் பகுதியாகவும் இருக்கிறது. ஆகவே, சாலை வசதிகள் வேண்டும், பேருந்து வசதிகள் வேண்டுமென்று பல மனுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் அனுப்பப்பட்டு, பலமுறை பஸ் முன் மறியல்கள் போன்ற போராட்டங்கள் எல்லாம் நடத்தப்பட்டு, அவைகளின்மீது எந்த முடிவும் எடுக்கப்படாமல் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளன. தற்போது, பல பேருந்துகளைப் புதிதாக விடுகின்றபோது, எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே நிறைய விட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, புதிய சாலைகள் அமைக்கும் திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிய சாலைகளை அமைப்பதாகக் கூறுகிறோமே தவிர, பல





பின்தங்கிய, 1,500 மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்குப் புதிய சாலைகள் போடுகிறோமா என்றால் போடுவதில்லை; என்னுடைய பகுதியிலே பல கிராமங்கள் அப்படியிருக்கின்றன. பல புதிய சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் விண்ணப்பம் கொடுத்தும் அனுமதிக்கப்படவில்லை. அப்படி அனுமதிக்கப்படாத பல கிராமங்கள் இருக்கின்றன. பல கிராமங்கள் அப்படி இருக்கின்றன. (1) கண்ணகந்தல், (2) நெடுங்காவடி, (3) பீமாப்பட்டி, (4) முத்தானூர். அந்தக் கிராமங்கள் எல்லாம் மலைப் பகுதியைச் சேர்ந்த கிராமங்கள். மலைவாழ் மக்கள் வாழ்கின்ற கிராமங்கள். ஆகவே, ஊராட்சி நிதிநிலையை எதிர்பார்த்து, வசதியைப் பொறுத்து சாலையைப் போடலாம் என்றால், அது இயலாத காரியம். இருந்தாலும், மக்கள் வசதியை மனதிலே கொண்டு, அந்தக் கிராமங்களுக்கெல்லாம் சாலை வசதியை செய்து தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

அதேபோல், மருத்துவ வசதி, சென்ற நிதிநிலை அறிக்கையிலே கூட குறிப்பிடப்பட்டிருந்தது. 5,000 ஜனத்தொகை உள்ள கிராமங்களுக்கு ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவப்படும் என்று கூறினார்கள். ஆனால், 5,000 ஜனத்தொகை கொண்ட கிராமங்களுக்கு ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் கிராமத்திற்கும் நிறுவப்படவில்லை. ஆகவே, நிதிநிலை அறிக்கையிலே மட்டும் அறிவித்தால் போதாது. ஆகவே அறிக்கையில் கூறியதைப் போல், 5,000 ஜனத்தொகை கொண்ட என் தொகுதியில் (1) அண்டம்பள்ளம், (2) பெருமனம், (3) சாத்தனூர் ஆகிய எல்லா கிராமங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட, பின்தங்கியோர் என்ற தலைப்பு கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு விடுதிகட்டித் தருவோம் என்று கூறப்பட்டிருக்கிறது. பல குறிப்பிட்ட இடங்களுக்கு விடுதி கட்டித் தருவதாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய மக்களுக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், அல்லது ஒவ்வொரு தொகுதியிலும் தாழ்த்தப்பட்ட அல்லது பின்தங்கிய மாணவர்களுக்கான விடுதி நிறுவ வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டோருக்கு தி.மு.க. ஆட்சியிலே நல்ல தரமான கான்கிரீட்வீடுகள் 40,000 கட்டித் தரப்பட்டன. ஆனால், இன்று அரசாங்கம் ரூ. 3,500 கடன் தருவதாகச் சொல்கிறது. ரூ. 3,500 கொடுத்தால் ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் எப்படி ஒரு வீட்டைக் கட்ட முடியும்? அதைச் சற்று சிந்தித்து பார்த்து, 3,500 என்பதை ரூ. 5,000 ஆக உயர்த்திட வேண்டும். ஒவ்வொருவரும் கடன் பெற மனுவைக் கொடுத்துவிட்டு

[திரு. த. வேணுகோபால்] [1980 ஜூலை 5

எவ்வளவு சிரமத்திற்கிடையே கடன் பெறுகிறார் என்பதை
எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, கடன்
தருகிறோம் என்று கூறுவது பெரிய காரியம் அல்ல என்பதை
இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, கடன் தொகையை ரூ. 5,000
ஆக உயர்த்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். பின்
தங்கியவர்களும் வீடு கட்டிக் கொள்வதற்காகக் கடன் கேட்டு
மனு செய்தால், உடனடியாக கடன் தர ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12·50]

எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் ஆட்சிக் காலத்தில்
40,000 வீடுகள் கட்டித் தந்து இருக்கின்றோம் என்றால் அது
எவ்வளவு பெரிய சாதனை என்பதைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது கட்டப்பட்ட
அந்த 40,000 வீடுகளின் தரம் என்ன, இப்போது நீங்கள் கட்டிக்
கொடுத்துள்ள வீடுகளின் தரம் என்ன என்பதைச் சுட்டிக் காட்டக்
கடமைப்பட்டிருக்கின்றேன்.

எல்லா ஊராட்சிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க
நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையில்
குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். நான் பார்த்து இருக்கிறேன்.
எப்படி பாதுகாக்கப்பட்ட குடி நீர் கொடுக்கப்படுகிறது என்று
சொன்னால், ஏதோ ஒரு சில கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட
மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டி, அதன் கீழே இரண்டு மூன்று
குழாய்களைப் போட்டு, அந்த வகையில் தான் குடிநீர் வசதி
செய்து தரப்பட்டு இருக்கிறது. அது சரியான முறையல்ல.
பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஒவ்வொரு தெருவிற்கும் விஸ்
தரிக்கப்பட்டு, அந்த கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள்
வசிக்கும் பகுதிகளுக்கும் அது விஸ்தரிக்கப்பட்டு, அந்த கிராமத்
தில் உள்ள அனைத்து மக்களும் நல்ல நீர் குடிப்பதற்கு வசதி
செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்
களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் இந்த நிதி நிலை
அறிக்கையில் எந்த விதமான ஊதிய உயர்வோ, பஞ்சப்படி
உயர்வோ, அல்லது வேறு சலுகைகளோ அறிவிக்கப்படவில்லை
என்பதை நான் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு உடனடியாக
பஞ்சப்படி உயர்வு அறிவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு நல்ல
முறையில் விவசாயம் செய்வதற்குத் தேவையான விதைகள்,
ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றின்
விலை உயர்ந்து கொண்டே போகின்றன. ஆகவே, அவர்கள்
சாகுபடி செய்து விளைச்சல் பெறக்கூடிய பயிர்களுக்கு—குறிப்பாக



1980 ஜூலை 5] [திரு. த. வேணுகோபால்]

நெல், கரும்பு, மணிலா போன்றவற்றிற்கு—நல்ல விலை
கொடுத்து வாங்கி, விவசாயிகளை உற்பத்தி செய்வதற்கு ஊக்கு
வித்து, விவசாயப் பெருங்குடி மக்கள் நல்வாழ்வு வாழ உதவி
செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு
நன்றி கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு சட்டப்பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, என்னை மீண்டும் இம்மாமன்றத்
திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய என் தொகுதியான பேரா
ஆரணித் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், குறிப்பாகத்
தாய்க் குலத்திற்கும் நான் வெற்றி பெற உதவிய புரட்சித் தலை
வர் அவர்களுக்கும் நன்றி கூறி என் பேச்சைத் துவக்குகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா):**
உறுப்பினர் இரண்டாவது முறையாக வந்து இருக்கிறார்;
பொதுவாக தலைவரைப் பார்த்துத்தான் இந்த அவையில் எல்
லோரும் பேச வேண்டும் என்பது அவருக்குத் தெரியும் என்று
நினைக்கிறேன்.

**திரு. எம். ஆர். கோவேந்தன்:** இரண்டாவது முறையாகத்
தேர்ந்தெடுத்ததற்காக தாய்க் குலத்திற்கு நன்றி கூறி பேச்சைத்
துவக்குகிறேன். நாலரைக் கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை
நட்சத்திரமான எங்களது இதய தெய்வம் பொன்மனச் செம்மல்
புரட்சித் தலைவர் கண்ட அண்ணாவின் அரசின் சார்பில், நட
மாடும் பல்கலைக் கழகமாம் டாக்டர் நாவலர் அவர்களால்
இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை
எல்லாத் தரப்பட்ட மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் எல்லா
எதிர்க்கட்சித் தலைவர்களும் பாராட்டும் வகையில், நாளேடுகள்
அனைத்தும் புகழும் வகையில், ஏன் நமது எதிர்க்கட்சித் தலைவர்
டாக்டர் கலைஞர் அவர்களாலேயே " வாக்களித்தவர்கள் திருப்தி
அடைந்தால் எனக்கும் திருப்திதான் " என்று கூறுகின்ற அளவுக்கு
சிறப்பான நிதிநிலை அறிக்கையை அளித்திருப்பதற்கு என்னு
டைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
நிதிநிலை அறிக்கையில் குறைகள் இருக்கிறதா என்று தேடிப்
தேடிப் பார்த்தும் குறைகளே இல்லை என்ற அளவிற்கு நிதிநிலை
அறிக்கை தயாரித்து இருப்பதோடு சில பொருள்களுக்கு வரிகளை
விலக்கி புதிய வரிகள் ஏதும் போடாமல் உபரி நிதிநிலை அறிக்
கையைத் தயாரித்து அளித்ததற்காக எவ்வளவு பாராட்டினாலும்
தகும். இந்த நிதிநிலை அறிக்கையில் பெரியார் — அண்ணா
நினைவுச் சின்னங்கள் அமைத்தல்.

5 ஏக்கர் நிலத்திற்கு குறைவான உடமைகள் உள்ள விவசாயிகள்
கடன் நிலுவைகள் அனைத்தும் ரத்து செய்தல்.

ரூபாய் 45 கோடியில்
500 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க
திட்டம்.

தாழ்த்தப்பட்டோருக்கு 30,000 வீடுகள்.
பிற்பட்டோர் நலனுக்கு 7·61 கோடியில் திட்டம்.
மீனவர் குடிநீர் வசதிக்கு ரூபாய் 5.43 கோடியில் திட்டம்.
மீனவர் குடியிருப்பு சாலை வசதிக்கு ரூபாய் 30 இலட்சம்.
மீனவர்களுக்கு வீடுகள் கட்ட ஒரு கோடி ரூபாய்.
நீர்ப்பாசன வசதிக்கு 33 கோடி ரூபாய்.
தென்னை நாற்று பண்ணைகள் அமைக்க ரூபாய் 54 இலட்சத்தில்
திட்டம்.
மின்சாரத்திற்கு 155.76 கோடியில் திட்டம்.
1,800 புதிய பேருந்துகள் விடும் திட்டம்.
பட்டினிச் சாவைத் தடுக்க ஏழைகளுக்கு 100 ரூபாய் உதவித்
திட்டம்,

விவசாயத் தொழிலாளிக்கு பென்ஷன்.

தேர்தல் அறிக்கையில் கூறியபடி கர்ப்பிணி பெண்களுக்கு சத்து
உணவுத் திட்டம் இதைப் போன்று பல்வேறு சிறப்பான திட்டங்
கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தியத் துணைக் கண்டத்தின் முதுகெலும்பாம் விவசாயி
களுக்கு இந்த அரசால் அளிக்கப்பட்ட சலுகைகளை தமிழகத்தின்
நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்ட விவசாயிகளின் சார்பில்
மனமார பாராட்டுகிறேன். இந்தியாவில் எந்த ஒரு மாநில
அரசும் இதுவரை செய்யாத பெரும் சாதனை இதுவாகும்.
நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்த விவசாயிகளுக்கு
காணிக்கையாக புரட்சித் தலைவர் அவர்கள் இந்த 60
கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால்
சென்ற பாராளுமன்றத் தேர்தலில் விவசாயிகள் சம்பந்தப்பட்ட
எல்லாக் கடன்களையும் ரத்து செய்வதாக வாக்களித்து விவசாயி
களை ஏமாற்றியவர்கள் இன்று புரட்சித் தலைவரின் கடன் தள்ளு
படியை பாராட்ட மனமில்லாமல் இருந்தாலும் குறையாவது
சொல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஒரே வரியில் ''யானைப்
பசிக்கு சோளப் பொரி'' என்று வர்ணித்து இருக்கிறார்கள். அது
மட்டுமல்ல. இந்த விவரத்தையும் தமிழக மக்கள் தெரிந்து
கொள்வது அவசியம் என்று கருதுகிறேன்.

புதுடெல்லியிலிருந்து வெளிவரும் '' டைம்ஸ் ஆப் இந்தியா ''
வில் ஜூன் 21-ந் தேதி வெளிவந்த செய்தியின் தமிழாக்கத்தை
அப்படியே படிக்கிறேன். இந்திய நிதித்துறை துணை அமைச்சர்
எம். பரோட் அவர்கள் ஜூன் 20-ந் தேதி பார்லிமெண்டில் தந்த
அதிகாரப்பூர்வமான அறிவிப்பில், '' விவசாயிகளுக்குத் தரப்
பட்ட கூட்டுறவு கடன்களை குறைப்பதோ, முழுவதுமாக ரத்து
செய்வதோ சாத்தியம் அல்ல ; அதுமட்டுமல்ல, வாங்கிய கடன்
அதுவும் பொதுப் பணத்திலிருந்து வாங்கிய கடனை திருப்பித் தர
வேண்டாம் என்று சொல்வது தார்மீக அடிப்படைக்கு விரோத
மான கொள்கையாகும் ; அதை ஏற்க இயலாது ; கூட்டுறவு
கடன்கள் மீது நிலுவையாக இருக்கும் வட்டியான சுமார் 40





கோடியை ரத்து செய்ய வேண்டும் என்று எம். ஜி. ஆர். அரசு
மத்திய அரசுக்கு எழுதியது ; இந்தக் கோரிக்கையை ஏற்க
இயலாது என்றும் விவசாயக் கடனை ரத்து செய்ய மாநில அர
சுக்கு எந்த உதவியும் மத்திய அரசு செய்வதற்கு இல்லை என்றும்
மத்திய அரசு பதில் அனுப்பிவிட்டது '' என்று கூறிவிட்ட பின்பும்
பசிக்கு உணவளித்து பழக்கப்பட்ட புரட்சித் தலைவர் அரசு
விவசாயிகளின் பெரும் கடன் சுமையை நீக்கி இருக்கிறது.
ஆகவே, இம்மாமன்ற உறுப்பினர்கள் ஒத்த கருத்துடன் இம்
மாமன்றத்தின் வாயிலாக மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து
விவசாயிகளுக்கு கட்டுப்படி ஆகக்கூடிய வகையில் நெல் விலையை
நிர்ணயம் செய்யுமாறும், விவசாயிகள் கடன் சுமை அனைத்தும்
தள்ளுபடி செய்யவும் தேவையான நிதி உதவியை மத்திய அரசு
வழங்க வேண்டுமென்று குரல் கொடுக்க இம்மாமன்ற உறுப்பினர்
கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அண்மை காலத்தில் புரட்சித் தலைவர் அண்ணாவின் அரசு
அமைத்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன் திருச்சி, மதுரை,
கரூர், சென்னை மாநகரிலும் குடிசைகள் தீயினால் அழிக்கப்பட்டு
வரும் துயர சம்பவங்கள் சங்கிலித் தொடர் போல் தொடர்ந்து
நடைபெற்று வருகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப்
பொறுப்பினை ஏற்றபொழுதும் இதே போன்று தீ வைப்பு
சம்பவங்கள் நடைபெற்றதை நாடறியும். குடிசைகள் கொளுத்
தப்படுவதற்கு முழுக்க முழுக்க அரசியல் காழ்ப்பு உணர்ச்சிதான்
காரணமாகும். இச்சதிக்கு காரணமானவர்கள் யாராக இருந்
தாலும் கண்டுபிடித்து மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட
வேண்டும். தீ விபத்துக்களுக்கு '' பாஸ்பரஸ் '' பயன்படுத்தப்படு
கிறது என்று மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகின்றது.
ஆகவே, இவர்களை கண்டுபிடித்து மக்களுக்கு அடையாளம்
காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையில் தீயினால் வீடு இழந்தவர்களுக்கு *ரூபாய் 100
தான் உதவித் தொகையாக அளித்து வந்தார்கள். இதை
மாற்றி, இந்த புதிய அரசு 200 ரூபாய் என்று உயர்த்தி
நேற்றையதினம் நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் எனது பாராட்டுக்
களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1—C0]

நான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராவூரணி தொகுதியைப்
பொறுத்த வரையில் இதற்கு முன்னால் இருந்த அரசு நிர்வாக
யந்திரம் சரியாக இயங்காததால் மின் விளக்கு இல்லாமல் கிராமங்
கள் இருளில் மூழ்கி உள்ளன. சாலைகள் பழுதுபார்க்கப்படாமல்
போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. குடி தண்ணீர் கிணறுகள்
ஆழ்குழாய் கிணறுகள், மேல் நிலை நீர்த் தொட்டிகள் அனைத்
தும் பழுதுபட்டு குடி தண்ணீருக்கு மக்கள் அவதிப்பட்டுக் கொண்

டிருக்கிறார்கள். தண்ணீர் எடுத்துவர தாய்மார்கள் அலையும்
காட்சி மிகுந்த பரிதாபமாக இருக்கிறது. இந்த குறைகளை
எல்லாம் உடனடியாக நிவர்த்திக்க அரசு முயற்சி எடுத்துக்
கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதியைப் பொறுத்தவரையில் சுமார் 10
ஆண்டுகளுக்கு மேலாக பள்ளிக் கட்டிடங்கள், குழந்தைகள்
காப்பகங்கள், பாலங்கள், இவைகளை எடுத்த ஒப்பந்தக்காரர்
கள் வேலைகளை முடித்துத் தரவில்லை. இந்த வேலைகளை
உடனடியாக முடித்துத் தர அரசு துரித நடவடிக்கையை மேற்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேராவூரணி
தொகுதியில் பல காட்டாறுகள் போக்கு வரத்தை தடைபடுத்தி
வருவதால் அந்த ஆறுகளின் குறுக்கே பாலங்கள் கட்டித் தருமாறு
கேட்டுக் கொள்கிறேன.

பட்டுக்கோட்டை பேராவூரணி சாலையில் மகராஜ சமுத்திர
ஆறு, அக்கினி ஆறுகளுக்கு குறுக்கே பண்ணவயல், கட்டயங்காடு
என்னுமிடத்தில் உயர் மட்ட பாலங்கள் கட்டித் தரவும், அக்கினி
ஆற்றில் வாட்டாத்திக் கோட்டையில் ஒரு பாலம் கட்டித்
தரவும் வேண்டுகிறேன்.

பூனைக்குத்தி ஆற்றில் சிவன் குறிச்சி என்னுமிடத்திலும்,
மேற்படி ஆற்றில் மாவடு குறிச்சியில் ஒரு பாலமும், கொரட்டூர்
ஆற்றில் ஆதனூருக்கும், நெல்லியடிக் காட்டுக்கும் இடையில் ஒரு
பாலமும் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இத்துடன் பெருமகளூர் பெரிய ஏரி வடிகால் வாரியில்
கல்யாண ராமநாதபுரத்திலும் முதுகாடு விளாங்குளம் சாலையில்
பூலாங்கொல்லை வாரியிலும் பாலங்கள் கட்டித்தர வேண்டு
கிறேன்.

பேராவூரணி தொகுதியில் உள்ள மீனவர்கள் வாழும் கணேசர்
புரம், பந்தர் பட்டிணம், செந்தலைவயல் அடைக்க தேவன்
சம்பை பட்டினம், சேதுபாவாசத்திரம், புதுப்பட்டிணம்,
அந்தோணியார்புரம், கீழ்த் தோட்டம் ஆகிய கிராமங்களில்.
மீனவர்கள் குடியிருப்புக் காலனி கட்டித்தர வேண்டுகிறேன்.
அத்துடன் உடனடியாக கணேசர்புரம், புதுப்பட்டினம், பந்தர்
பட்டினம், நெந்தலைவயல், அடைக்கத் தேவன் சம்பை பட்டினம்,
கீழத் தோட்டம் ஆகிய ஊர்களில் புயல் பாதுகாப்பு கட்டிடங்கள்
கட்டித்தர வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் தஞ்சையில் மீன்களமாக விளங்குகின்ற
மல்லிப்பட்டினத்தில் ஒரு இறால் பதனிடு நிலையம் ஏற்பாடு
செய்து அரசே அப்பகுதியில் கிடைக்கும் இறால் மற்றும் மீன்களை





நேரடியாக கொள்முதல் செய்து மீனவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு
நல்ல, நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்துத் தர
கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களில் முன்னால் ராணுவத்தினர்களாக இருப்பவர்
களுக்கு விசைப்படகுகள் வழங்குவது அரசின் குறிப்பில் இருப்ப
தாக அறிகிறேன். உடன் இவர்களுக்கு விசைப்படகுகள் வழங்க
தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணி தொகுயில் உள்ள சுமார் நூற்றுக்கு மேற்பட்ட
கிராமங்களில் வாழும் அரிசன மக்களுக்கு காலனிகள் கட்டித்தர
வேண்டுகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

தமிழகத்தின் தலைசிறந்த அரசியல் சின்னமான '' மனோரா''
என்னும்எழில் மிகு ஏழடுக்கு மாளிகை ஒன்று பேராவூரணி தொகுதி
சரபேந்திரராசன் பட்டினத்தில் தொல்பொருள் ஆய்வுத்துறை
யினரிடம் உள்ளது. மனோராவைச் சுற்றுலாத் துறையில் எடுத்
துக் கொண்டு, தினந்தோறும் மனோராவைக் காணவும், ஓய்வுக்
கும் வருகின்ற ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளின் தேவை
யாகிய சுற்றுலா ஓய்வு விடுதி, உணவு விடுதி, நீச்சல் குளம்,
உல்லாசப் படகுப் பயணம், பூங்கா ஆகியவை அமைத்து மனோ
ராவையும் புதுப்பித்துத் தரவேண்டுமென்று நான் இம்மாமன்
றத்தில் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளேன்.
ஆனால், இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை,
ஆகவே மனோராவை சுற்றுலாத் துறையில் எடுத்துக் கொண்டு
சுற்றுலாப் பயணிகள் தேவைகளை பூர்த்தி செய்துத் தர கேட்டுக்
கொண்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. சி. பழனிமுத்து : பேரவைத் தலைவரவர்களே,
1980-81-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பற்றி
என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த
நிதிநிலை அறிக்கையில் தொழில் வளம் பெருகக்கூடிய வகையில்
எந்தவிதமான திட்டமும் இல்லை. அதுபோல் வேலைவாய்ப்புக்
களை அதிகப்படுத்துவதற்கும் எந்தவிதமான திட்டங்களும்
இந்த அறிக்கையிலே கூறப்படவில்லை. மின்சார உற்பத்தியை
அதிகரிப்பதற்கும் அதிகமான அக்கறை எடுத்துக்கொள்ளப்பட
வில்லை என்று நினைக்கிறேன். பட்ஜெட் தாக்கல் செய்யும்
முன்பாக தி எக்கானமிக்கல் அப்ரெய்ஸல் — தமிழகத்தின்
பொருளாதார மதிப்பீடு என்பது பற்றி ஒரு புத்தகம் கொடுக்கப்
படும். அதை 1978-ஆம் ஆண்டு கொடுத்தார்கள். கடந்த
இரண்டு ஆண்டுகளாக அதுபோன்ற ஒரு புத்தகம் கொடுக்கப்
படவில்லை.

[திரு. சி. பழனிமுத்து] [1980 ஜூலை 5

மேலும் பாசனத்திற்காக என்று 34.7 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள். சேலம் மாவட்டத்திலே கடந்த 7, 8, ஆண்டு காலமாக பாசனம் என்பது மிகத் தேவையான ஒன்றாகிவிட்டது. ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் ஏதோ கொஞ்சம் மழை பெய்ததின் காரணமாக இப்போது நிலைமை அவ்வளவு மோசமில்லை என்றாலும் கூட, பாசனம் என்பது தேவையான ஒன்றாகத்தான் இன்றும் இருக்கிறது. பாசனத்திற்காக, அங்கே ரெட்டி அணைக் கட்டு என்பது நீண்ட காலமாக இருந்து வருகிற ஒரு திட்டம். அந்த திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்த திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று தயவுசெய்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் 1976 ஆம் ஆண்டு சேலம் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலே ஒரு மருத்துவ மனையை பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் நிறுவ வேண்டும் என்று மாவட்ட மருத்துவ அதிகாரி ஒருவர் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார். 4 ஆண்டு காலமாகியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே பெத்தநாயக்கன் பாளையம் பேரூராட்சியில் மருத்துவ மனை என்பது கட்டாயம் வேண்டும் என்ற அளவில், பேரூராட்சியாக இருக்கிற ஒரு இடத்திற்கு 20,000 மக்கள் ஜனத்தொகை கொண்ட ஒரு இடத்திற்கு மருத்துவ மனை அவசியம் என்ற அளவில் அந்த இடம் காணப்படுகிறது.

(பிற்பகல் 1-10)

ஆகவே அந்த வகையில் தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தன்னிறைவுத் திட்டத்திலாவது மருத்துவ மனை கட்டுவதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் அதற்கான வேலையை இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஆஸ்பத்திரிகள், பள்ளிகள், கட்டடங்கள், சாக்கடைகள் போன்றவை செய்வதற்கு அத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளிலிருந்து மின்சார இலாக்கா தெருவிளக்குகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏழு லட்சம் விளக்குகள் இருக்கின்றன. அவற்றில் நான்கு லட்சம் விளக்குகள் எரியாமல் இருண்ட கண்டமாக இருக்கிறது. ஆகவே அவற்றிற்கு பல்புகள் போடுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆத்தூர், குடிநீர் பிரச்னை இரண்டு மூன்று ஆண்டுகளாக இருந்து வருகிறது. மேட்டூரிலிருந்து கொண்டுவர ஒரு திட்டம் ஆய்வில் உள்ளது. அதை உடனடியாகச் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும். மேலும் ஆத்தூரில் ஒரு முனசிப் கோர்ட் நிறுவ வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.



1980 ஜூலை 5]

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னை இம்மாமன்றத்திற்கு தங்களின் பிரதிநிதியாக அனுப்பி வைத்த பெண்ணாகரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயக மரபுப்படி ஐந்தாண்டுக் காலத்திற்கு மக்களால் அனுப்பப்பட்ட அரசை இரண்டரை ஆண்டுக் காலத்திலேயே சர்வாதிகார செயலால் கலைக்கப்பட்ட நேரத்தில் படையிருந்தும் பலமிருந்தும் சர்வாதிகார கொடும்பாவிகளை ஏன் என்று கேட்காமல் நீதியே வெல்லும் அதை காலமே சொல்லும் என்ற தத்துவத்தை முதன்மையாகக் கொண்டு காந்திகண்ட கனவுகளையும், பெருந்தலைவர் காமராசரின் இலட்சியத்தையும் ஏந்தி, அண்ணா வழி நிற்கின்ற புரட்சித் தலைவர் புதிய நல்ல திட்டங்களைத் தந்து வலிவோடும் பொலிவோடும் வீறு நடைபோடுவதைக் கண்டு உளமாற என் சார்பாகவும், நான் சார்ந்திருக்கின்ற காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாகவும் வரவேற்கின்றேன்.

அவைமுன் வைக்கப்பட்டுள்ள இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் கொடுத்துள்ள நல்ல பல திட்டங்களோடு மேலும் சில திட்டங்களை சேர்த்தால் நாங்களும், அடிமட்டத்தில் உள்ள மக்களும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனநாயகத்தை நம்புகின்ற நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்தவர்கள் எல்லாம் பெரும்பாலும் அடிமட்டத்தில் வாழ்கின்ற சாதாரண மக்களே. அவர்கள் வாழ்க்கை நிலை உயர பல திட்டங்களை சேர்க்க வேண்டும். முதன்மையாக விலைவாசியைக் கட்டுப்படுத்துவது. அது மத்திய சர்க்கார் கடமை என்று தட்டிக்கழிக்கக் கூடாது. உதாரணமாக, சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பதுக்கல் எண்ணெயின் மதிப்பு சுமார் நான்கு கோடி ரூபாய் பெறும் என்றார்கள். பதுக்கி வைத்திருந்ததே நான்கு கோடி ரூபாய் அளவிற்கு என்றால் கணக்கில் கொண்டு வந்தது சுமார் ஐந்து கோடி ரூபாய் அளவிற்காவது இருக்கும். எனவே ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்கு ஒருவரிடமே இருப்பதாகக் கொண்டால் இதுபோல் பலரிடம் இருக்குமேயானால் விலைவாசி ஏறாமல் என்ன செய்யும்? இதில் தீவிர நடவடிக்கை எடுப்பது நல்லது, எடுக்கவேண்டும்.

பஸ் கட்டணத்தை உயர்த்தியது டீசல் விலை உயர்வு காரணமாகத்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது எனினும் சாதாரண மக்களும் நடுத்தர மக்களும்தான் பெரும்பான்மையாக பயணம் செய்கிறார்கள். எனவே அக்கட்டண உயர்வை நிறுத்தி வைப்பது நல்லது என கருதுகின்றேன்.

விவசாயக் கடன்கள் ரத்து விஷயத்திலே பெரிய விவசாயிகள் என்று சொல்லக்கூடிய ஐந்து ஏக்கருக்கு சற்று அதிகமானவர்கள் கூட உண்மையிலேயே கட்டமுடியாத நிலையில் இருக்கின்றனர். கரடுமுரடான நிலம், களர் நிலம் போன்ற நிலங்களை வைத்துக் கொண்டு பெரிய விவசாயிகள் வரிசையிலே நிற்கின்றனர். எனவே அவர்களுக்கும் வட்டியிலே சலுகை கொடுத்து கடனை மேலும் நீண்ட காலக் கடனாக மாற்றிக் கொடுக்கலாம் என்ற கருத்தினையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் ஒரு பொருளில் விலையைச் சற்று கூடுதலாக விற்றால், அதையே அனைவரும் சாகுபடி செய்து, அதைக் கேட்பாரற்ற நிலைக்கு கொண்டு வந்து விடுவதோடு, நட்டமும் அடைகின்றார்கள். இந்நிலை மாற இன்று இருக்கின்றபுள்ளி விவரத் துறையை பயன்படுத்தி, ஒரு பொருளின் தேவை என்ன? அப்பொருள், இருப்பில் எவ்வளவு உள்ளது? அது போக இன்னும் எவ்வளவு தேவை? இதற்கு எவ்வளவு பயிரிட வேண்டும் என்பதனை கிராம அளவில் விளம்பரப்படுத்தினால் விலையும் சரியானபடி இருக்கும்: விவசாயியும் நட்டமடைய மாட்டார்கள் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து மாவட்டங்களில் இருந்து வந்திருக்கின்ற உறுப்பினர்களும் தங்கள் மாவட்டங்களை பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லுகின்றார்கள். ஆனால், உண்மையிலேயே அரசால் பின்தங்கிய மாவட்டம் என அறிவிக்கப்பட்டிருப்பது எங்களின் தர்மபுரி மாவட்டம்தான். எனவே, எங்கள் மாவட்டதிற்கு நிதி நிலை அறிக்கையிலே சிறப்பு அம்சமாக ஒதுக்கப்படவில்லை.

தரணி போற்றும் தஞ்சையை செல்வத்திலே கொழிக்க செய்யும் காவிரி எங்கள் மாவட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம். அது எங்களின் வறுமையையும், வாழ்நிலையையும் கண்டு களித்துதான் செல்கின்றதே தவிர எங்கள் வாழ்க்கையை வளமாக்க நினைக்கவில்லை. புரட்சி தலைவர் அவர்கள் முன்பிருந்த ஆட்சிக் காலத்திலேயே முயற்சி எடுத்தார்கள். எனவே, இத் திட்டத்தை கைவிடாமல் முயற்சித்து காவிரி நீர் மின் திட்டத்தை ஏற்படுத்தினால், எங்கள் மாவட்டம் மட்டுமல்ல மாநிலமே செழிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது நாங்களும் பின்தங்கிய மாவட்டம் என்னும் சாதியை நீக்கி, உங்களோடு இணைந்து விடுவோம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், எங்கள் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதி, மலைகளும் காடுகளும் நிறைந்த பகுதி. இங்கு விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் அதிகமுள்ளார்கள். அதிலும் நீர்வளம் இல்லாத





காரணத்தால் கம்பு, சோளம், ராகி போன்ற எளிய பயிர்களைத் தான் பயிர் செய்கின்றார்கள். போதிய வருமானம் இல்லாத காரணத்தால், நமது அண்டை மாநிலமாகிய கர்நாடகத்திலுள்ள பெங்களூர் சென்று கூலி வேலை செய்து வாழும் நிலை உள்ளது. அவ்வாறு சென்றுள்ளவர்கள் எங்கள் தொகுதியிலும், மாவட்டத்திலுமாக சேர்ந்து 25 சத விதத்திற்கு குறையாமல் இருக்கும் என்பதை அழுத்தமாகச் சொல்ல முடியும். அவர்களின் வாழ்நிலையை நிலைபடுத்த சிறு தொழில் அபிவிருத்தி செய்து, எங்கள் தொகுதியை மேம்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பென்னாகரம் தொகுதியை பொறுத்த வரையில் 75 சத விகிதம் போக்குவரத்து வசதியில்லாத, சாலைகள் இல்லாத பகுதிதான். இதை நமது அமைச்சர் அவர்கள் பல்வேறு முறை தொகுதிக்கு வந்திருப்பதால் நன்றாய் அறிவார்கள். சாலை வசதி இல்லாத காரணத்தால், போக்குவரத்துக்கு வழியில்லை. அதனால், மருத்துவ வசதி இல்லை. மின்சார வசதியில்லை. எனவே, அங்கே இருக்கக்கூடியவர்கள், நாங்களும் மனிதர்கள் தானே என்று கேட்கின்ற அளவிற்கு மோசமான நிலையில் உள்ளது. உதாரணமாக, நான் ஒருமுறை தொகுதிக்கு சென்றபோது, கர்ப்பிணி சகோதரி ஒருவர் பிரசவ வேதனையிலே அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மருத்துவத்திற்காக துணியாலே ஊஞ்சல் கட்டிதூக்கி வருகின்றார்கள். பாதி வழியில் பிரசவம் நடக்கின்றது. இதை கண்கொண்டு பார்க்க முடியாத அவல நிலை. எனவே, சாலை வசதி எங்கள் தொகுதியிலே மிக முக்கியம். அங்கே சாலை வசதி இல்லாமையால், போக்குவரத்து கிடையாது. அப்படி போக்குவரத்து அங்கே இல்லாத காரணத்தால், மின்சார வசதி இல்லை. ஏனென்று சொன்னால், அந்த மின்சாரக் கருவிகளை ஏற்றிச் செல்லுகின்ற வாகனங்கள் செல்லுவதற்கான வசதியில்லை. அப்படி வாகன வசதியில்லாத காரணத்தால், டிரான்ஸ்பார்மர்களை ஏற்றிக்கொண்டு செல்லமுடியாத நிலைமை இருக்கிறது. அப்படி மின்சார தொடர்பு இல்லாமல் இருப்பதால் அரசாங்கக் கடனோ, மற்ற வசதிகளோ செய்ய முடியாமல் இருக்கிறது. இந்த நிலை எங்கள் தொகுதியிலே 100-க்கு 75 சத விகிதம் இருக்கிறது. எனவே, முக்கியமாக இந்த சாலை வசதிகள் செய்துகொடுத்தால்தான், அரசாங்கத்தின் மற்ற நல்ல பல திட்டங்கள் நிறைவேற்ற முடியும். எனவே, இந்த சாலை வசதியை செய்துகொடுக்கவேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தியாகி சுப்பிரமணி சிவா வாழ்ந்த பாப்பாரப் ட்டிக்கு அருகில் ஓடி காவிரியில் கலக்கின்ற சின்ன ஆற்றுக்கு ருசேவராயன் மலையின் அருகே ஒரு சிறிய அணையை கட்டும் ட்டம் ஏற்கனவே இருப்பதாகக் தெரிய வருகிறது. அதை

இந்த நிதி நிலையிலே சேர்த்து கூடிய விரைவில் முடித்தால் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத வறண்ட பகுதியில் உள்ள மக்களுக்கு வளம் பெருகும். இதனால் சுமார் எங்கள் தொகுதியில் பாதி செழிக்கும்.

அடுத்து, எங்கள் மாவட்டத்திலே வன இலாகாவை வளப்படுத்துகிறேன் என்று சொல்லி அந்த திட்டத்தை வைத்துக் கொண்டு, ஏழை விவசாயிகள் பல ஆண்டுகளாக பயிர்செய்து வரும் விளைச்சல் நிலங்களில் செடிகளை வைத்து, நீண்ட நாட்களாக அதையே நம்பி வாழ்க்கை நடத்தி வருபவர்கள் வாழ வழியின்றி தவிக்கின்றனர். ஆனால் இந்தக் திட்டத்தை நான் மோசம் என்று சொல்லவில்லை. எனவே, விளைச்சல் நிலத்தை நீக்கிவிட்டு, மற்றப் பகுதிகளில் வனத் துறையினர் வனத் துறையை, காட்டைப் பெருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழுக்காக பாடுபடும் இந்த அரசு, தமிழின் முதல் தாய் ஔவையை வாழவைத்த அதியமானுக்கு ஒரு மண்டபமும் ஔவைக்கு ஒரு கோட்டமும் கட்டி, தமிழில் சிறந்த தகடூரை அழகுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.20]

மேலும், ஆடு மாடு, மக்களோடு தொடர்பு கொண்டுள்ள கிராம அதிகாரிகளுக்கு அரசு கொண்டு வந்துள்ள கட்டாய ஓய்வின் காரணமாக கட்டாய ஓய்வு கொடுக்கப் படுகிறது. கிராம அதிகாரிகள் முன்போல் மிட்டா மிராசு நிலையில் இல்லை. மக்களை ஏய்க்கவோ ஏமாற்றவோ முன்புபோல் மக்களும் தெளிவில்லாமல் இல்லை. எனவே, அவர்கள் மிகவும் சாதாரண நிலைமையில் நான் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கும்பொழுது அவர்களின் வாழ்வுக்கு ஏதாவது வழி செய்து தருவது நல்லது எனக் கருதுகிறேன்.

இந்த அரசை யாரும் அசைக்க முடியாது என்று கூறி இந்த நல்ல நிதிநிலை அறிக்கையை பாராட்டி வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என்னுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் எனக்குத் தகுதியினைத் தந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த கடலாடி சட்டப் பேரவைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.



இந்த அவைமுன் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் 1980–81-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் லட்சியங்கள் பிரதிபலிக்கின்றன என்ற காரணத்தால் நாட்டின் நலம் கருதும் அனைவரும் இன்று பாராட்டும் ஒலியை நாம் கேட்கிறோம் என்பதை நான் மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே பிரதிபலிக்கிறது. ' ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் '' என்று அண்ணா அவர்கள் சொல்லியது இன்று இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் பிரதிபலிக்கிறது என்பதை உணரும்போது நான் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்பதிலே பெருமிதம் கொள்ளுகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்து ஏக்கர் நிலத்திற்கும் குறைவாகக் கொண்டுள்ள ஏழை விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் அத்தனையும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்ற அறிவிப்பை இந்த நிதிநிலை அறிக்கையில் கண்ட உடனே ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவம் புரட்சித் தலைவர் அரசின் நிதிநிலை அறிக்கையில் பிரதிபலிக்கிறது என்பதை உணரவேண்டுமென்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் முதல்வர் முதல் முதலாகப்பொறுப்பேற்கும் போது தன்னை சாமான்யன் என்று சொல்லிக் கொண்டு பணபலம் படைத்தவர்கள் தன்னை வசைமாரி பொழிவதாக மேடை தோறும் பறைசாற்றி வந்தார்கள். அந்தச்சாமானியருக்கும், அந்த சாமானியரைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைகள் யார் என்று புரியவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு என்ன காரணம் ? அன்று சாமானியர்களாக இருந்தவர்கள் எல்லாம் இன்று கோமான்களாக மாறிவிட்டார்கள் என்று கருதுகிறேன். அதனால்தான், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்பதற்கு இலக்கணம் என்ன என்று கேட்கிற, பேசுகிற துணிவு ஏற்பட்டிருக்கிறது. தங்களைச் சாமானியர்கள் என்று கூறிக் கொண்டவர்கள் அந்தச் சாமானியர்கள் என்பதற்கு இலக்கணம் கூற முடியுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறையையும், விவசாயத் துறையையும், சுகாதாரத் துறையையும் மற்றத் துறைகளையும் பற்றி திட்டங்கள் வகுக்கும் போது நலிவுற்ற இந்தத் தமிழக ஏழை மக்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. வ. சத்தியமூர்த்தி] 1980 ஜூலை 5]

இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்ட மனம்
இல்லாதவர்கள், ஏழை மக்களின் நல்வாழ்விலே
செலுத்த நாட்டம் இல்லாதவர்கள் என்றுதான் கருத்தைச்
கிறது. இன்றைய தினம் எதிர்க்கட்சியாக உணர முடி
கள் தங்களுடைய கொள்கையைத் தெளிவாகச் வீற்றிருக்கின்றவர்
யிருக்கிறார்கள். மதுவிலக்குக் கொள்கையைச் சொல்லத் தவறி
னிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த பற்றி கம்யூ
வாக்கியிருக்கிறார்கள். அதே மாமன்றத்திலே தெளி
சேர்ந்தவர்கள் அவர்களுடைய சமயத்தில் எதிர்க்கட்சியைச்
மல்ல, எந்த இடத்திலேயும் கொள்கையை இங்கே மட்டு
ஆண்டுகளுக்கு முன்பு இதே மாமன்றத்திலே தெளிவாக்கவில்லை. இரண்டு
செய்தவர்கள், தமிழகத்திலே சாராயம் மாபெரும் முழக்கம்
கிறது, அதைத் தடுத்து மாபெரும் ஆறாக ஓடு
வேண்டுமென்று பேசினார்கள். நடைமுறைகளைத் தீவிரப்படுத்த
அதற்குப் பிறகு மதுவிலக்குச் சட்டத்தைச் புரட்சித் தலைவர் அவர்கள்
தண்டனையை அதிகப்படுத்தியபோது சுற்றுத் தீவிரப்படுத்தி,
குய்யோ முறையோ என்று கத்தியதை அவர்கள் இங்கே
சாராய குற்றத்திற்கு இவ்வளவு நாம் பார்த்திருக்கிறோம்.
கள். இந்த அரசு மதுவிலக்குக் பெரிய தண்டனையா என்றார்
ஏழை எளியவரும் அந்தக் கொள்கையைத் தெளிவுபடுத்தி
கும் வகையில் 25 ரூபாய் கொள்கையின் பலனை அனுபவிக்
என்று உத்திரவு பிறப்பித்தவுடன் கட்டி அனுமதி பெற்று குடிக்கலாம்
கூறுகிறார்கள். அந்த மாண்புமிகு இன்றைக்கு அதையும் குறை
நான் கேட்டுக் கொள்வது, உறுப்பினர்களை எல்லாம்
கொள்கை என்ன என்று தெளிவாகச் மதுவிலக்கு பற்றி எதிர்க்கட்சியின்
விட்டுவிட்டு வீணாகக் குழப்பவேண்டாம். சொல்ல வேண்டும். அதை
குழப்பிக்கொண்டிருக்கவில்லை. மத்திய அதை மட்டும் நீங்கள்
உறவு எந்த அளவுக்கு இருக்கிறது அரசுடன் உங்கள்
போது தெளிவுபடுத்தியாக வேண்டும். என்பதையும் நீங்கள் இப்

உரிமைக்குக் குரல் கொடுப்போம், மாநில சுயாட்சி
கேட்போம் என்று சொன்னீர்கள். நடந்து முடிந்த
பேரவைத் தேர்தலிலே நீங்கள் என்ன சட்டமன்றப்
கள்? மத்தியில் ஆளுங்கட்சியோடு கோரிக்கையை வைத்தீர்
மாநிலத்தில் கூட்டாட்சி அமைக்கவேண்டுமென்ற கூட்டு சேர்ந்து இந்த
வைத்து நீங்கள் தேர்தல் பிரச்சாரம் கோரிக்கையை
கொள்கை இன்றைக்கு என்ன? செய்தீர்கள். உங்கள்
சொல்லவேண்டும். உங்கள் நான் ஒரு உதாரணத்தைத்தான்
என்றால் கையிலே நிலைமை எப்படி இருக்கிறது
விலாங்கு மீனைப் பிடிக்க விளக்கெண்ணையைத் தேய்த்துக்கொண்டு
நிலைமைதான் என்பதைத் முயற்சி செய்தவர்களைப் போன்ற
தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சி உறுப்பினர் திரு துரைமுருகன் இந்த மாமன்றத்
திலே நேற்றைய தினம் நிதிநிலை அறிக்கையைப்பற்றி பேசிய
போது பொருத்தமான புள்ளி விவரங்களை எடுத்துவைப்பார்
என்று எதிர்பார்த்தேன். மூன்று முறைகள் இந்த மன்றத்திற்குவ



1980 ஜூலை 5] [திரு. வ. சத்தியமூர்த்தி]

ந்தெடுக்கப்பட்டவர் பல புள்ளி விவரங்களை எடுத்து
த்து நிதிநிலை அறிக்கையை குற்றஞ்சாட்டுவார் அல்லது
ாட்டுவார் அல்லது பழி சுமத்துவார் என்று எதிர்பார்த்
ன். ஆனால் சுமார் அரை மணி நேரம் நையாண்டி மேள
ழ்ச்சியைக் கேட்டதாகத்தான் எனக்கு நினைவுக்கு வரு
து. கருத்தாழத்தோடு, நிதிநிலை அறிக்கையிலுள்ள புள்ளி
ரங்களைக் காட்டி அவர் பேசியதாக நான் கருதவில்லை.
ர்க்கட்சித் தலைவர் கைகட்டாரியாகப் பயன்படுத்திவரும்
துரைமுருகன் நல்ல சிந்தனையோடு உரையாற்றினாரா
று நான் சந்தேகப்படுகிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள்
சியலைப்பற்றியே நான் இங்கே தொடர்ந்து பேசவிரும்ப
லை. இது சட்டமன்றம், தேர்ந்தெடுத்த மக்களுக்கு வேண்டி
த மாமன்றத்திலே சொல்லவேண்டும். அந்த முறையிலே அந்த
ளுக்கு நலன்கள் கிடைக்கக்கூடிய முறையிலே சில கருத்துக்
ள் நான் வைத்து அதை நிறைவேற்றிக்கொடுக்கவேண்டு
ன்று இந்த அரசை வலியுறுத்துகிறேன். என்னுடைய
லாடி தொகுதியில்.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1½ ஆகிவிட்டது. முடியுங்

[பிற்பகல் 1—30]

திரு. வ. சத்தியமூர்த்தி அடுத்து என்னுடைய தொகுதியான 86
லாடியில் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆழ்துளைக்
மங்கள் பலனடையக்கூடிய வகையில் எதிர்பாராத
றுகள் எல்லாம் தோண்டப்பட்டது. ஆனால் அப்படியே நின்று விட்டது.
ாக தடங்கல் ஏற்பட்டு மதிப்புள்ள
த் திட்டத்தின் கீழ் இலட்சக்கணக்கான ஏற்பாடுகளும் நடந்திருக்
ருள்களையும் வாங்கி அமைத்து கிடைக்காமல்
றன. அந்தத் தொகுதி மக்கள் குடிநீர் வாரிய அமைச்சர்
ப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடிநீர் கொண்டு வருகிறேன்.
ர்கள் கவனத்திற்கு இதை நான் கடலாடி தொகுதிக்கு
னவே தீட்டப்பட்டத் திட்டத்தின்படி பொருள்களை வீணாக்காமல்
ஒதுக்கி, வாங்கப்பட்ட தரவேண்டும் என்று பணி
ர் பிரச்சனையை தீர்த்துத்
டு கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே திட்டமிட்டபடி குறிப்பிட்ட இடத்திலே தண்
எடுக்காவிட்டாலும் 20 மைலுக்கு அப்பால் வைகை
ஓடுகிறது. அதிலிருந்து தண்ணீர் எடுக்கக் கேட்டுக்
ள்ளுகிறேன். கடலாடி தொகுதியில் மலட்டாறு ஒன்று
றது. அந்த ஆற்றில் மழைக் காலத்தில் வெள்ளம் புரண்டு
கடலில் சென்று கலக்கிறது. அந்தத் தண்ணீரை இந்தப்
த்திற்குப் பயன்படுத்தினால் சுமார் 25 ஆயிரம்
பயன்படும். அதில் இருந்து சப் சேனல் மூலம் 20
த்திற்குத் தண்ணீர் தருவதற்காக தி.மு.க. ஆட்சிக்

[திரு. வ. சத்தியமூர்த்தி] [1980 ஜூலை 5

காலத்தில் சுமார் 1¼ கோடிக்கு திட்டமிட்டு அது நடக்காமல் நின்றுவிட்டது. அதையும் கவனிக்கவேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7—7—1980 திங்கள் கிழமை காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## (6) அவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

29. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கல்வித் துறையின் 3—12—1979ஆம் தேதியிடப்பெற்ற 2234 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 29/1974) 57 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

30. சென்னை மாநகரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் காற்று ஊத்த ஒலிப்பான் பயன்படுத்தப் பெறுவதை தடைசெய்து தமிழ்நாடு 1938 ஆம் ஆண்டு போக்குவரத்து விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 12—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 95 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் IV/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

31. ஏற்பளிக்கப்பெற்ற வங்கியாக பஞ்சாப்–சிந்து வங்கியினை (வரையறுக்கப்பெற்றது) சேர்த்துக் கொள்வது குறித்து வணிக வரிகள்–அறக்கட்டளைகள் துறையின் 27—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 288 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



1980 ஜூலை 5]

32. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தப்பெற்று மாநிலங்களுக்கிடையே நடைபெறுகின்ற அறிவிக்கப் பெற்ற பொருள்களைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரி விதிப்பில் இருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்–அறக் கட்டளைகள் துறையின் 308 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

33. தமிழ்நாடு மீன்கான் நிறுவனத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*12. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1980).

*13. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980).

---

*8-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

123876